முதல்
மணி நேரம்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக *(E-Books)* இலவசமாக (மத்தேயு *10:8*) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் *(Download)* செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: *www.WordOfGod.in*

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் *(E-Book)* வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய *WhatsApp* எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ *(Email)* எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

முதல் மணி நேரம்

சகோ. ஜோஸ்பின் மேரி ஸ்டெல்லா **FSAG**
சகோ. திரேசா ஞானமணி **FSAG**
சகோ. மார்கிரேட் பெட்சி **FSAG**
சகோ. மேரி ஸ்டெல்லா **FSAG**
சகோ. சகாயம் **FSAG**
சகோ. ரபேக்காள் **FSAG**
சகோ. அந்துவான் ரெக்லின் **FSAG**
சகோ. பிரான்சிஸ்கா **FSAG**

அலோசியஸ் மாநில வெளியீடு

கோட்டைமேடு சாலை,
தா. வாடிப்பட்டி
மதுரை — 625 218

நுலின் பெயர் : முதல் மணி நேரம்

மொழி : தமிழ்

முதற்பதிப்பு : 12-12-12

பக்கங்கள் : 136

விலை : 60/-

உரிமை : அலோசியஸ் மாநிலத்திற்கு

அச்சாக்கம் : admedia, Dindigul - 624 003.

கிடைக்குமிடம் : புனித அலோசியஸ் மாநிலம்
கோட்டைமேடு சாலை,
தா. வாடிப்பட்டி,
மதுரை – 625 218.

Imprimatur
Most Rev. Peter Fernando D.D., Ph.D.,
Archbishop of Madurai

அர்ப்பணம்

75 ஆண்டுகளில் மதுரை உயர் மறை மாவட்டத்தை இறைபணியில் தூக் **நிறுத்திய பேராயர்கள், அருட்பணியாளர்களுக்கு இந்நூல் அர்ப்பணம்**

MOST REV. PETER FERNANDO D.D., Ph.D.
Archbishop of Madurai
Archbishop's House, K.Pudur, Madurai - 625 007, Tamilnadu, INDIA.

ஆசியுரை

பேராயர் டாக்டர் பீட்டர் பெர்னாண்டோ
பேராயர், மதுரை உயர் மறைமாவட்டம

1987 ஆம் ஆண்டு வரை புதுச்சேரியை தலைமையகமாகக் கொண்டு இயங்கி வந்த புனித அலோசியஸ் கொன்சாகா பிரான்சிஸ்கன் சபை, 1988 ஆம் ஆண்டிலிருந்து தமிழக தென் மாவட்டங்களை ஒருங்கிணைத்து வாடிப்பட்டியை மையமாக கொண்டு தனி மாநிலமாக கிறிஸ்துவின் அருளால் இயங்கி வருவது போற்றுதற்குரியது.

அலோசியஸ் மாநிலத்தின் வெள்ளி விழா ஜீபிலி நினைவாக இம்மாநில அருட்சகோதரிகளால் வெளியிடப்படும் 'முதல் மணி நேரம்' என்னும் தியான நூல் மிகவும் அருமையான நூல். பல்வேறு தலைப்புகளில் ஆன்மீக வாழ்வுக்கு அடிப்படையாயுள்ள கருத்துக்களை பல்வேறு நிகழ்வுகள், ஜெபங்கள், சிந்தனைகள் என்னும் தலைப்பில் கட்டுரை ஆசிரியர்கள் தொகுத்துக் கொடுத்திருப்பது ஆன்ம விருந்தாகும். தியானிக்க செறிவான கருத்துக்களை விவிலியத்தின் பின்னணியில் வழங்கியிருப்பது நன்றாக உள்ளது. வாழ்க்கை அனுபவங்களை இறை ஒளியின் பின்னணியில் சீர் தூக்கிப் பார்க்கும் பார்வை இச்செப புத்தகத்தில் இழைந்தோடுகின்றது. எழுதிய ஆசிரியர்கள் அனைவரையும் நான் மனமுவந்து வாழ்த்துகின்றேன், பாராட்டுகின்றேன்.

இந்நவீன உலகில் புனிதர்களின் எடுத்துக்காட்டான வாழ்க்கையின் அவசியம் உணர்ந்து, சபையோடு தொடர்புடைய புனிதர்களின் வாழ்க்கையை தியானப் பொருளாக வழங்கியுள்ளமை இறைமக்களுடைய உள்ளங்களை

செழுமைப்படுத்தும் என்பதில் ஐயமில்லை. எனவே புனித கொன்சாகா அலோசிய மாநிலம் வழங்கியுள்ள ‘முதல் மணி நேரம்’ என்னும் இத்தியான நூலை இறைமக்க அனைவரும் வாசித்து பயன்பெற அன்புடன் அழைக்கின்றேன். மதுரை அலோசிய மாநில கொன்சாகா பிரான்சிஸ்கன் சபை அருட்சகோதரிகளின் அருட்பணிகளை ஆண்டவர் நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

இறை ஆசிர் வழங்கும்,

+ Peter Fernando

மேதகு பேராயர் பீட்டர் பெர்ணான்டோ
(மதுரை உயர் மறை மாவட்டம்)

☎ 0452 (Off) 2563330, (Resi) 2566198, Fax : 0452-2566630 E.mail : abssecretarymdu@gmail.com

வாழ்த்துரை

Sr. A. Mary StellaF. S. A.G
Superior General
Franciscan Sisters of St. Aloysius Gonzaga
Puducherry

வாழ்த்துரை

மனித வாழ்வு கொண்டாட்டத்துடன் ஆரம்பித்து, கொண்டாட்டத்துடன் முடிகிறது. எனவேதான் கொண்டாட்டங்கள், விழாக்கள், மனித வாழ்வில் ஒரு முக்கிய இடத்தை வகிக்கிறது.

கொண்டாட்டங்கள்,

அன்பர்கள் அனைவரையும் சந்திக்கும் வாய்ப்பு
ஆற்றலை, திறமைகளை பயன்படுத்தி வளர்த்துக்கொள்ளும் வாய்ப்பு
இன்முகத்துடன், மகிழ்வுடன் இருக்க வாய்ப்பு
ஈகை செயல்களை செய்யும் வாய்ப்பு
உறவுகளை வலுப்படுத்தி, புதிய உறவுகளை வளர்த்துக் கொள்ளும் வாய்ப்பு
ஊக்கம், உற்சாகம் ஆகியவைகளை தெரிந்து கொள்ளும் வாய்ப்பு
எண்ணங்களை, மாற்று சிந்தனைகளை தெரிந்து கொள்ளும் வாய்ப்பு
ஏணிப்படிகள் மேலே செல்ல உதவுவது போல், இருக்கும் நிலையிலிருந்து வளர வாய்ப்பு
ஐயப்பாடுகளில் தெளிவுகாணும் வாய்ப்பு
ஒற்றுமையை வளர்த்துக் கொள்ளும் வாய்ப்பு

எத்தனை வாய்ப்புக்கள் கொடுக்கப்பட்டாலும், இறைவனோடு இணைந்திருக்கும் வாய்ப்புக்கு ஈடாக, இணையாக எதை சொல்ல முடியும்?

எனவே எல்லாக் கொண்டாட்டங்களிலும் இறைவனை மையப்படுத்தி இறையருளை பெற்று மகிழும், வாழும் போதுதான் கொண்டாட்டங்கள் அர்த்தமுள்ளதாகிறது என்ற கருத்தை மையப்படுத்தி முதல் மணி நேரம் என்ற தலைப்பில் இப்புத்தகத்தை எழுதி வெளியிடும் அலோசியஸ் மாநில வெளியீட்டு குழுவினர் மாநிலத்தலைவி சகோ. F. ஜோஸ்பின் மேரி ஸ்டெல்லா, மாநில உதவித்தலைவி சகோ. M. திரேசா ஞானமணி மற்றும் நிர்வாகக்குழுவினர் அனைவரையும் வாழ்த்துகிறேன்.

இப்புத்தகத்தை படிக்கும் அனைவரும் ஒரு மணி நேரத்தை ஒவ்வொரு நாளும் இறைவனுக்கு அர்ப்பணித்து, அர்த்தமுள்ள வாழ்வு வாழ வாழ்த்துகிறேன்.

உங்கள் எழுத்து பணி நாளும் வளரட்டும்!

கிறிஸ்துவில் அன்புள்ள,

Sr. A. Marystella. FSAG.

சகோ. ஆ. மேரி ஸ்டெல்லா, FSAG

சபைத்தலைவி

அணிந்துரை

Rev. Fr. Jebamalai Raja S.J
Rector
St. Mary's

அன்பே இறைவன். நாம் இறை சாயலில் படைக்கப்பட்டது இறை அன்பின் வெளிப்பாடு. நமது வாழ்வு இறைவனின் கொடை. நமது வாழ்வை வளமாக்க ஒவ்வொரு நொடிப்பொழுதும் பிறர் வழியாக. இயற்கை வழியாக. நமது வாழ்வு மற்றும் செயல்பாடுகள் வழியாக நம்மோடு இறைவன் உறவாடுகிறார். "அவரைச் சார்ந்துதான் நாம் வாழ்கின்றோம். இயங்குகின்றோம். இருக்கின்றோம்" (திருத்தூதர் பணிகள். 17.28). நாம் இறைவனிலும் இறைவன் நம்மிலும் இணைந்திருப்பதும். "இறையாட்சி நம் மத்தியில் இருப்பதும்" (லூக் 17:12) இறை பிரசன்னத்தின் வெளிப்பாடுகள்.

"நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன்
நினையாது ஒருபோதும் இருந்தறியேன்"
\- திருவாசகம்

இறை பிரசன்னத்தை நம்மில் எப்போதும் நினைவூட்டுவதோடு இறைவனோடு நம்மை ஒவ்வொரு நொடியும் இணைக்கும் பாலமே செபம்.

இன்றையக் காலச்சூழலில் செபமும் வாழ்வும் வெவ்வேறாகப் பார்க்கப்படும் நிலை வளர்ந்து வருகிறது. "இம்மக்கள் உதட்டினால் என்னைப் போற்றுகின்றனர். இவர்கள் உள்ளமோ என்னைவிட்டு வெகுதொலைவில் இருக்கிறது" (மத். 15:8) என்ற எதார்த்த நிலை குருக்கள். துறவியர். பொதுநிலையினர் என நம் மத்தியிலே வளர்ந்து வருகிறது.

அன்பும் - சிவமும் இரண்டென்பார் அறிவிலார்
அன்பே சிவமானது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமானது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருப்பாரே!
\- வள்ளலார்.

நாம் இறைவனைச் சார்ந்து இருக்கிறோம். வாழ்கிறோம். இயங்குகிறோம் என்பதை வலுவூட்டக்கூடியதும். அத்தோடு இறையாட்சிக்கான செயல்பாடுகளில் ஈடுபாட்டுடன் உழைக்க ஊக்கமூட்டுவதும் செபமே.

ஒவ்வோரு நாளும், நம் செயல்பாடுகளைத் தொடங்குமுன் ஒருசிறு மணித்துளிகள் இறைவனோடு இணைந்திருப்பது எத்துணை மகிழ்வான நிகழ்வு என்பதை உணர்த்தும் செப ஏடுதான் "முதல் மணி நேரம்" என்ற இந்நூல்.

ஆம், ஒவ்வொரு செபமும்
கொடியோடு இணைந்த கிளைகளாக நம்மை இறையில் இணைக்கிறது.
நமது மனக்கண்களைத் திறக்கவைக்கிறது,
பார்வையை விசாலமாக்குகிறது,
சோதனைகளைச் சாதனைகளாக்குகிறது,
தடங்கல்களைத் தடங்களாக்குகிறது,
வீழ்ச்சியிலிருந்து எழுச்சிக்கு அழைத்துச் செல்கிறது,
வாழ்க்கைப் போராட்டத்தை எதிர்கொள்ள உதவுகிறது,
சாட்சிய வாழ்வுக்கு இட்டுச் செல்கிறது.

கிறித்தவ விழாக்கள், பொதுவான விழாக்கள் என 27 விழாக்களைத் தேர்வு செய்து, இவ்விழாக்களில் இறை ஈடுபாட்டையும் அர்த்தமுள்ள வகையில் கொண்டாடுவதற்கான வழிகாட்டுதல்களையும் உணர்த்தும் வகையில் இச்செப ஏடு தயாரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு செபமும் இன்றைய காலச்சூழல் நமக்குப் புகட்டும் சிந்தனைகளில் தொடங்கி, இறைவனைப் புகழ்ந்து பாடி, அதற்கேற்ப விவிலிய விளக்கம் தந்து, இறைவேண்டல் செய்து, வாழ்க்கைச் சூழலைச் சந்திப்பதற்கான வழிகாட்டுதலாக அமைந்துள்ளது இந்நூலின் தனிச் சிறப்பு.

இச்செப ஏடு, நம்மை ஒன்றிணைய வைக்கிறது, மனமாற்றத்தைத் தூண்டுகிறது, வாழ்க்கைச் சூழலில் பிறருக்காகச் செயல்பட இட்டுச்செல்லும் ஆயுதமாக உருவாக்கப்பட்டுள்ளது. இச்செபங்களை உருவாக்கிய ஒவ்வொரு கொன்சாகா அருட்சகோதரியும், தங்களது ஆன்மீகப் பயணத்தின் ஆழத்திலிருந்து கண்டெடுத்த முத்துக்களாக நமக்கு தந்திருக்கிறார்கள் என்பதை இச்செபங்கள் கூறும் சிந்தனைகளிலிருந்து எளிதாக உணரமுடிகிறது.

இச்செபங்களை வடித்த ஒவ்வொருவருக்கும் என் நெஞ்சார்ந்த வாழ்த்துக்கள்! பாராட்டுக்கள்! நாம் ஒவ்வொருவரும் இச்செபங்கள் வழியாகத் தொடர்ந்து இறையில் இணைவோம், இறையாட்சிக்காய் செயல்படுவோம்!!



அதிபர்
தூய மரியன்னை இல்லம்
மதுரை

முன்னுரை

சகோ. F. ஜோஸ்பின் மேரி ஸ்டெல்லா F.S.A.G
மாநில தலைவி,
புனித அலோசியஸ் மாநிலம்,
T. வாடிப்பட்டி,
மதுரை - 625 218.

இருளினின்று ஒளிபிரியும் இளம்காலையின் முதல்மணிநேரத்தில் ஆண்டவரை வழிபடுவது மனித உடலுக்கும், உள்ளத்திற்கும், வளமை சேர்க்கும் என்றெண்ணியே நம்முன்னோர்கள் இல்லறத்தாராயினும், துறவறத்தாராயினும் காலை வழிபாட்டில் தம்மை இறைவனுடன் இணைத்துக் கொண்டனர். இன்றும் சில பங்குகளில் 5 மணிக்கு திருப்பலி நடைபெறுவதையும் அதில் ஆர்வமாய் பெரியோர்கள் பங்கு கொள்வதையும் நாம் காண முடிகிறது.

கடவுளிடம் வேண்டுதல் செய்வதில் இரவெல்லாம் செலவிட்ட (லூக் 6/12) இயேசுவைப் போல சிலர் திருவிழிப்பு செப வழிபாட்டில் பங்கேற்பதையும், கருக்கலில் எழுந்து இறைவனை வேண்டிய (மாற் 1:35) இயேசுவைப் போல எனது பெற்றோர் அதிகாலையில் 3 மணிக்கு செபித்ததையும் கண்கூடாக பார்த்திருக்கின்றேன்.

நம்பிக்கை ஆண்டில் இறைவனே நமது முதல் தேடலாக அமைய, இறைவனோடு பிறரை இரண்டறக் கலக்கும் விதத்தில் புனித அலோசியஸ் மாநில நிர்வாகக் குழுவினர், அருட்சகோதரிகள் யாம் இணைந்து முதல் மணி நேரம் என்ற வழிபாட்டு நூலினை படைத்துள்ளோம்.

கடவுளை மகிமைப்படுத்த (யோ 17) சோதனைக்குட்படாமலிருக்க (மாற் 14:38) போர்க்கருவியான செபத்தைக்கொண்டு (எபி 5:7) மன்னிக்க (மாற் 11:25) மன்றாட, தொடர்ந்து கேட்க (லூக் 11:9-10) கனிகொடுக்க, (யோ 15:16) விடியற்காலை கருக்கலில் வாழ்வைத் தொடங்கும் முதல் மணி நேரத்தில் செபிக்க, இந்த நூல் உதவியாய் இருக்கும் என்ற நம்பிக்கையில் இதனை உருவாக்கிய சகோ. திரேசா

ஞானமணி மாநில உதவித்தலைவி. சகோ. மார்கரேட் பெட்சி மாநில ஆலோசகர். சகோ. S மேரி ஸ்டெல்லா மாநில ஆலோசகர். சகோ. S சகாயம் மாநில ஆலோசகர். சகோ. ரபேக்கா மாநில செயலர். சகோ. அன்துவான் ரெக்லின் மாநில பொருளர். சகோ. பிரான்சிஸ்கா முதல்வர். புனித சூசையப்பர் ஆசிரியர் பயிற்சி பள்ளி. இவர்கள் அனைவருக்கும் நன்றிகளை உரித்தாக்குகிறேன்.

அற்புதமான ஆசியுரை வழங்கியுள்ள மதுரை பேராயர் டாக்டர் பீட்டர் பெர்னாண்டோ ஆண்டகை அவர்களுக்கும். அருமையான வாழ்த்துரை வழங்கியுள்ள எமது சபைத்தலைமை அன்னை அருட்சகோ. A. மேரி ஸ்டெல்லா அவர்களுக்கும். சிறப்பான அணிந்துரை எழுதிய அருட்பணி செபமாலை இராசா சே.ச அவர்களுக்கும். என் இதயம் கனிந்த நன்றிகள்.

"முதல் மணி நேரம்" - புத்தக வடிவம் பெறுவதற்கு உறுதுணையாயிருந்த சகோ. திரேசா ஞானமணி அவர்களுக்கும். கணினி வழி உதவி செய்த S விஜயா அவர்களுக்கும். அச்சிட உதவியோருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

காலைப்பொழுதில் கடவுளை தரிசிக்க. காலம் முழுவதும் உத்வேகம் அளித்து. உதவிக்கரம் நீட்டும் இறைவனுக்கு என் கரம் குவித்த நன்றிகள்.

மதுரை-வட்டாரமாக பிரிக்கப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவுறும் இவ்வாண்டில் முதல் வட்டாரத் தலைவியாக பொறுப்பேற்று பணி செய்த மதர் பார்பரா அவர்களுக்கும் நிர்வாகம் பரவலாக்கப்பட வழிவகை செய்த மதர் நம்பிக்கை மேரி (முன்னாள் சபைத்தலைவி) அவர்களுக்கும் இந்நூல் சமர்ப்பணம்.

சகோ. F. ஜோஸ்பின் மேரி ஸ்டெல்லா F.S.A.G
மாநில தலைவி.
புனித அலோசியஸ் மாநிலம்.
T. வாடிப்பட்டி.
மதுரை - 625 218.

உள்ளே

	பக்கம்
01. புத்தாண்டு (ஜனவரி 1)	12
02. தமிழர் திருநாள் (ஜனவரி 15)	16
03. பவுலின் மனமாற்றம் (ஜனவரி 25)	19
04. பெண்கள் தினம் (மார்ச் 8)	24
05. புனித சூசையப்பர் தினம் (மார்ச் 19)	29
06. பரிசுத்த ஆவி பெருவிழா	34
07. இயேசுவின் திருவுடல் திருஇரத்த பெருவிழா	37
08. இயேசுவின் திருஇருதய நாள்	41
09. புனித அலோசியஸ் கொன்சாகா பெருவிழா (ஜுன் 21)	46
10. சுதந்திர தினம்	56
11. ஆசிரியர் தினவிழா (செப்டம்பர் 5)	59
12. தீபாவளி – ஒளிவிழா	63
13. புனித பிரான்சிஸ் அசிசி (அக்டோபர் 4)	68
14. குழந்தைகள் தினம் (நவம்பர் 14)	77
15. இறந்தோர் இறைவனில் அமைதி பெற	81
16. அமலோற்பவ அன்னை விழா (டிசம்பர் 8)	83
17. கிறிஸ்து பிறப்பு விழா (டிசம்பர் 25)	87
18. வெள்ளி விழா, பொன்விழா	91
19. பிறந்த நாள்	95
20. தேர்வு முன் தயாரிப்பு	99
21. இளையோர் நலன்	103
22. விவிலிய ஞாயிறு	109
23. திருமண வார்த்தைப்பாடு	112
24. புதுமனை புகுவிழா	118
25. நிதி மேலாண்மை	122
26. தவக்காலம்	126
27. உயிர்ப்பு விழா	132

1. புத்தாண்டு

தந்தை, மகன், தூய ஆவியின் பெயராலேயே – ஆமென்.

முன்னுரை

புதிய ஆண்டு புதிதாய் புலர்ந்திருக்கின்றது. விதை ஒன்று மண்ணில் புதைக்கப்பட்டு, தேவையான சூழல்களை பெற்றுக் கொண்டு இலையாய் துளிர் விடுகையில் மகிழ்ச்சி. புதிய துளிர் மண்ணை கிழித்து வெளி வந்துள்ளதென்று பெரும் மகிழ்ச்சி. ஒன்பது மாதங்கள் தாயின் கருவறையில் வளர்ந்த சிசு, பத்தாவது மாதத்தில் பாதுகாப்பாய் இருந்த கருவறையை விட்டு வெளியே அழுது கொண்டே வரும் போது, அழுகுரல் கேட்ட அனைவரும், புதிய உயிர், அன்பின் பரிசாய் உருபெற்றுள்ளதை எண்ணி பரவசம் கொள்கின்றனர். புதிய உறவு, புதிய நட்பு, புதிய இடங்கள், புதிய அனுபவங்கள், என அனைத்தும் புதிதாய் ஒருவர் சந்திக்கையில் உள்ளத்திற்கு இனம் புரியாத மாபெரும் மகிழ்ச்சி பிறக்கிறது. புலரவிருக்கும் புதிய ஆண்டு, பழையன கழித்து, புதியன புகுத்தி, மகிழ்வை வழங்க காத்துக் கொண்டிருக்கின்றது.

புதிய உயிர்	- பெற்றோர், உற்றார் உறவினருக்கு மகிழ்ச்சி
புதிய வகுப்பு	- மாணவருக்கு மகிழ்ச்சி
புதிய படைப்பு	- படைப்பாளிக்கு மகிழ்ச்சி
புதிய நெல்லு, புதிய நாத்து	- விவசாயிக்கு மகிழ்ச்சி
புதிய வாய்ப்பு	- காத்துக் கொண்டிருப்பவருக்கு மகிழ்ச்சி
புதிய கதை	- எழுத்தாளருக்கு மகிழ்ச்சி
புதிய சிற்பம்	- சிற்பிக்கு மகிழ்ச்சி
புதிய ஆண்டு	- மானிடருக்கு மகிழ்ச்சி

இராசா காத்திருந்தான், தாய் இனிப்பு செய்து தருவாள் என்றோ, அண்ணன் சுற்றுலா செல்ல பணம் தருவான் என்றோ, ஆசிரியை தேர்வு மதிப்பெண் வழங்குவார்கள் என்றோ அல்ல மாறாக தன் தந்தை புதிய சட்டையும், புதிய மிதிவண்டியும் வாங்கி வருவார் என்றே! ஆம் புதியது ஒன்று கிடைக்க இருக்கிறது என்ற எண்ணமே பலருக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. அத்தகைய ஒரு சிறப்பான தருணம் தான் புத்தாண்டு (புதிய ஆண்டு) இறைவனின் ஆசீரால் மட்டுமே அதிகமாக ஆட்கொள்ளப்பட வேண்டும் என்ற எண்ணமும், நினைப்பதெல்லாம் நடக்க வேண்டும், தொட இருப்பது எல்லாம் துலங்க வேண்டும் என்ற விருப்பமும் மேலோங்கியிருக்கும். புதிய ஆண்டின் செப வழிபாட்டில் பங்குபெறுவோம்.

மூவொரு இறைவனுக்கு வாழ்த்து

ஆதியே எம் இறைவா அனைத்துக்கும் காரணர் நீரே! உம்மைப் போற்றுகின்றேன். அகிலத்தைப் படைத்த நீர் அன்பான உம் மைந்தர் இயேசுவை எமக்களித்தீர் அதற்காய் உம்மை வாழ்த்துகின்றேன்!

புதிய படைப்பாய் மானிடர் மாற வேண்டும் என்று உம் தந்தையின் விருப்பத்திற்கு உம்மையே கையளித்து மானிடராய் இவ்வுலகில் வந்ததோடு, எளிய அப்ப வடிவில் நொறுங்கிய எம் நெஞ்சில் குடி கொள்ள வந்த இம்மானுவேலரே, இயேசய்யா உம்மைப் போற்றுகின்றேன். வாழ்த்துகின்றேன்.

புதிய ஆண்டின் மகிழ்வில் நான் திளைத்திட அன்றாடம் அருட்பொழிவு செய்து, ஆவியின் கனிகளாலும், கொடைகளாலும் நிரப்பி, செய்யும் அனைத்திலும், பேசும் பேச்சிலும், நினைக்கும் சிந்தனையிலும் புது வாழ்வு ஒன்றையே பெற்றுக் கொள்ளச் செய்த புத்துயிரான ஆவியே உம்மை போற்றுகின்றேன். வாழ்த்துகின்றேன்.

மூவொரு இறைவா. உலகின் உயிர்மூச்சாய் இருந்து ஒவ்வொருவரும் அவரவர் பணியை செய்திட அருள் வழங்கும் உம்மை நெஞ்சார வாழ்த்துகின்றேன்.

தொடர்ந்து இறை அருளில் இரண்டறக் கலந்திட பாடப்படும் பஜனையை மீண்டும் பாடி பரவசமடைவோம்.

பஜன்

புகழ்ந்திடு மனமே புகழ்ந்திடு இயேசுவை
புகழ்ந்திடு காலையிலே (2).....

மனத்துயர்

இறைவனை புகழ்ந்த நம் மனது. அவரோடு தொடர்ந்து உறவு கொள்வதற்கு தடையாய் இருக்கும் தவறுகள், சிறு, சிறு குற்றங்களை நினைத்து, மனம் வருந்தி, மன்னிக்கும் அருளை நம் மீது பொழிந்திட வேண்டுவோம்.

புதியன உருவாக்க நீர் கொடுத்த அழகியத் தருணங்களை நான்
அலட்சியப் படுத்தியமைக்காக – ஆண்டவரே இரக்கமாயிரும்..
புதியவைகள் வேண்டும் என்பதற்காக பழமையை அறவே வெறுத்து
வாழ்ந்த என் நிலைக்காக – கிறித்துவே இரக்கமாயிரும்.
புதியவைகளால் மட்டுமே வாழ்வு உண்டு என்று நினைத்து
அவைகளை அடைவதற்காக தவறானப் பாதையை தேர்ந்தெடுத்த எனது
முறன்பாடான வாழ்வுக்காக – ஆண்டவரே இரக்கமாயிரும்.
புதுமையை அதிகமாய் விரும்பியதால், அயலாரைப் புறக்கணித்து,
ஆணவம் கொண்டு வாழ்ந்த எனது 'நான்' என்ற மனநிலைக்காக –
கிறித்துவே இரக்கமாயிரும்.

நமது மனத்துயர் மூலம் ஆண்டவரின் அருள் அணைகடந்து நம்மை நிரப்பிக் கொண்டிருப்பதை உணர்வோம். எல்லாம் வல்ல இறைவனின் அளவற்ற அன்பு, இரக்கத்திற்காக, அவரை புகழ்வோம், வாழ்த்துவோம், நன்றி கூறுவோம்.

புகழ்ச்சி

பதில் : உம்மை போற்றுகிறோம், நன்றி கூறுகிறோம்.

புதிய அருளினால் எம் உச்சந்தலை முதல், உள்ளங்கால் வரை நிறைத்தமைக்காக.....

புதிய ஒவ்வொரு செயலிலும் உம் படைக்கும் ஆற்றலை உணர வைத்தமைக்காக....

ஆண்டவரே படைப்பில் உம்மை கண்டுக்கொண்டு, நன்றி கூறாத என் நன்றியற்ற மனநிலையை நினைக்காது எம் குற்றங்களை நீக்கியதற்காக....

கேட்கின்ற அனைத்தையும், பெற்றுக் கொண்டீர்கள் என்ற விசுவாச உண்மையை புரிந்து யாம் வாழ அருள் புரிந்தமைக்காக....

(சில நிமிடம் அமைதி)

பாடல்

எந்தக் காலத்திலும் எந்த நேரத்திலும்
நன்றியால் உம்மை நான் துதிப்பேன்

இறைவனை புகழ்ந்து துதித்த நாம் விவிலிய வாசகத்தை கவனத்துடன் கேட்போம்.

விவிலிய வாசகம்

2 கொரி 5 : 17 – 18.

விவிலிய விளக்கம்

கிறிஸ்துவோடு இணைந்திருக்கும் போது, ஒருவர் புதிதாகப் படைக்கப்பட்டவராய் இருக்கிறார். ஆம் கிறிஸ்து என்ற நல்லவரோடு வல்லவரோடு இணையும் போது, குறையுள்ள மனிதனின் நிலை முழுமை அடைகிறது.

வஞ்சகம், கோபம், பொறாமை, அநீதம், பொய், திருட்டு என்ற அல்லாதவைகள் கழுவப்படுகின்றது. உண்மை, அன்பு, அமைதி, நீதி, பொறுமை, பரிவு, நன்னயம் என்பவை அணிகலன்களாக அணிவிக்கப்படுகின்றது.

பாத்திரத்தின் அடியில் இருக்கும் நீர், புதிய நீரால் நிரப்பப்படும்போது பழையது வெளியேறி, புதிய நீர் பாத்திரம் முழுவதும் நிரம்பி விடுகிறது.

விதை மண்ணோடு முட்டிமோதி, தன்னைக் கீறிக்கொண்டு, தன் நிலையை இழக்கும் போது புதிய தளிர் பிறக்கின்றது.

பெரிய பாறை உளியால் உடைப்பட்டு தன் பாகங்களை இழக்கும் போது அழகிய சிற்பமாக வடிவெடுக்கிறது.

அரிசி, கொதித்த நீரில் தன்னை இழக்கும் போது தான் வெந்த சாதமாக உருவாகிறது.

ஒன்று, தன் நிலையை இழக்கும் போது மற்றொரு நிலை புதியதாய் பிறப்பெடுக்கிறது. எனவே விவிலிய வாசகம் சொல்வது போல் கிறிஸ்துவோடு

இணையும் போது புதியதாய் படைக்கப்படுவோம். புதியதாய் படைக்கப்பட்டால் பழைய நமது தேவையற்ற வாழ்வு அழிந்து, புதிய அருளின் வாழ்வு புத்தாண்டில் புதுத்தெம்பை நமக்களிக்கும். இவ்வாறு நாம் புதிய படைப்பாய் ஆவது எல்லாம் வல்ல கடவுளின் செயலாகும். இதை நம்புவோம். நம்பி வாழ்வு பெறுவோம்.

(ஆண்டவர் அருளில் எவைகளை இழந்து, புதிய உரு பெற இருக்கிறோம் என்பதை அமைதியில் தியானிப்போம்)

திருப்பாடல் 15

இறைவா உம் இல்லத்திலே தங்கி வாழ்வோர் யார்
இறைவா உம் திருமலையில் குடியிருப்போர் யார் - 2

புதிய ஆண்டு நம் வாழ்வில் இறை அருளை அதிகமாய் பெற்றுத்தந்திட இறைவேண்டல் செய்வோம்.

மன்றாட்டு

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டை கேட்டருளும்

புதிய ஒளி (கைகளில் ஏந்தி)

அன்பின் இறைவா, ஒளி மறைவாயிருக்க முடியாது, ஒளி இருந்தால், இருள் இல்லாமல் போகும். அதுபோல் ஒளியாகிய நீர் எம்மை முழுவதும் ஆட்கொள்ள, எம் பாவநிலைகள் எம்மைவிட்டு முற்றிலும் நீக்கப்பட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

நீர் நிறைந்த பாத்திரம்

இரக்கத்தின் இறைவா! வெறுமையான பாத்திரம் நீர் ஊற்றப்பட்டு நிறைவைப் பெற்றுள்ளது. திருச்சபையை ஆளும் எம் திருந்தந்தை, ஆயர்கள், குருக்கள், சகோதர, சகோதரிகள், பொதுநிலையினர், நாட்டுத்தலைவர்கள் அனைவரையும் உம் தூய ஆவியின் கனிகளால் நிரப்பிட வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்.

இளம் செடி

படைப்பின் பரம் பொருளே தரமுள்ள விதை, மண்ணில் தன்னை இழக்கும் போது இளம் செடி பிறர் பயனடைய புது பிறப்பெடுக்கிறது. உம் அருளால் தரம் பெற்று தேவையில்லாத குணங்கள் இழக்கும் போது புதிய பிறப்பெடுக்க முடியும் என்பதை இளம் உள்ளங்கள் உணர்ந்து வாழ, இளஞ் செடி வழி இளையோரை உம்மிடம் அர்ப்பணித்து அருள் கேட்டு மன்றாடுகின்றோம்.

புதிய வாழ்வை, புதிய அருளை, புதிய உறவை கொடுத்த இறைவனுக்கு நன்றி கீதம் இணைந்திசைப்போம்.

பாடல்

தந்த உந்தன் அருளுக்காக நன்றி கூறுவேன்
தரப்போகும் ஆசிக்காக நன்றி பாடுவேன்
இயேசுவே இயேசுவே
இயேசுவே நன்றி இயேசுவே

கர்த்தர் கற்பித்த செபம்

இறுதி செபம்

அனைத்தையும் புதியனவாக்கும் இறைவா, புத்தாண்டின் தொடக்க நாளாகிய இந்நாளில் வாழ்வளிக்கும் உம் திருமகனை கொடையாக அளிக்க அன்னை மரியாளை கருவியாகத் தேர்ந்தெடுத்த உம்மை நினைத்து மகிழ்கின்றோம்.

தாயிடமிருந்து குழந்தை புதிய வாழ்வையும், புதிய நம்பிக்கையையும் பெற்றுக் கொள்வது போல இந்த முதல் மணி நேர வழிபாட்டின் கொண்டாட்டத்தின் வழியாய் புது வாழ்வையும், புது நம்பிக்கையையும் இந்த ஆண்டு முழுதும் பெற்று மகிழ்ந்திட எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.

ஆண்டவர் நம்மை ஆசீர்வதித்து, தீமை அனைத்தினின்றும் பாதுகாத்து, முடிவில்லா வாழ்வுக்கு அழைத்துச் செல்வாராக - ஆமென். ஆண்டவரைப் போற்றுவோம். இறைவா உமக்கு நன்றி.

சகோ. மோ. திரேசா ஞானமணி, FSAG

உ. தமிழர் திருநாள்

முன்னுரை

இறையேசுவில் இனியவர்களே! இன்று தைப் பொங்கல் திருவிழா! தமிழர் பெரு விழா! உழவர் விழா! பழைய ஏற்பாட்டு காலத்திலேயே இஸ்ராயேல் மக்கள் இறைவனுக்கு நன்றி கூறி அறுவடை பெருவிழாவைக் கொண்டாடினர். அது போலவே தமிழகத்தில் நம் மூதாதையரும் பன்னெடுங்காலமாக அறுவடை விழாவை கொண்டாடி வருகின்றனர்.

உழவுத் தொழிலில் எப்போதும் நமக்கு துணை நிற்கும், இறைவனின் படைப்புகளாகிய கதிரவனுக்காகவும், நில வளத்திற்காகவும், நீர் வளத்திற்காகவும், கால் நடைகளின் உழைப்பிற்காகவும் நன்றி செலுத்துவோம்.

உழைக்கும் மக்கள் அனைவரும் இரவு, பகல், மழை, வெயில், குளிர், காற்று என்று பாராது அயராது உழைத்து இறையருளை வேண்டியதன் பயனாக இறையருளின் வடிவமாய் நமக்கு கிடைத்தது தானிய மணிகள். இவ்வாறு மக்களின் உழைப்பிற்கு, தக்க ஊதியத்தை அளித்துள்ள இறைவனுக்கு நன்றி செலுத்தும் வகையில் அமைகின்ற இவ்விழாவில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து இறைவேண்டல் செய்வோம்.

மூவொரு இறைவனுக்கு வாழ்த்து

எல்லா வளங்களுக்கும் ஊற்றாம் இறைவா! எம்மை வழிநடத்தும் தந்தையே! பல்வேறு அருட்கொடைகளால் எம்மை நிரப்பும் தூய ஆவியே! உம்மை நாங்கள் வணங்கி ஆராதிக்கின்றோம்.

மனிதன் மகிழ்வுடன் வாழ இயற்கையைப் படைத்தீர். நீர் படைத்தவற்றை தொடர்ந்து வளம் பெறச் செய்ய மனிதனுக்குள் ஆற்றலை வைத்தீர். இதற்காக நாங்கள் உம்மை வாழ்த்துகின்றோம்.

எங்களை அன்புடன் ஆதரிக்கும் நல்ல தந்தையே! உமது உன்னத பராமரிப்பினால் நீர் எங்களுக்குப் போதுமான மழையையும் விளைச்சலையும் அளித்தது போல் எங்கள் உள்ளமாகிய நிலத்தில் நீதி தளிர்விட்டு, அன்பின் நற்கனிகளை விளையச் செய்வதற்காக உம்மை புகழ்கின்றோம்.

பஜனை

இறை சமூகமாய் நாங்கள் வாழவே
இறைவா இறைவா உந்தன் அருள் புரிவாயே

மனத்துயர்

பதில் : இறைவா எங்களை மன்னித்தருளும்

நலன்களின் உறைவிடமாம் இறைவா! எமது வாழ்வில்
நீர் செய்த எண்ணற்ற நன்மைகளை மறந்து நன்றியில்லாமல் வாழ்ந்ததற்காக...

உழைத்து வாழ பணித்தவரான இறைவா! நாங்கள்
கடினமாகவும், உண்மையாகவும் உழைக்கத் தவறியதற்காக....

மாண்போடும், மதிப்போடும் எங்களைப் படைத்த
இறைவா! நாங்கள் எங்கள் உழைப்பாளிகளை மாண்போடும், மதிப்போடும்
நடத்தத் தவறியமைக்காக....

உழைப்பின் மேன்மையை அறிந்தவராய் இவ்வுலகைப்
படைத்த இறைவா! பல்வேறு சமயங்களில் உழைக்க மனமின்றி எங்கள்
பொழுதைக் கழித்தமைக்காக....

மக்கள் மகிழ்வுடன் வாழ வேண்டி பல்வேறு இயற்கை
வளங்களை எமக்களித்த இறைவா! உம் படைப்புப் பொருட்களை வளரச்
செய்வதற்குப் பதிலாக இயற்கையை அழித்த குற்றத்திற்காக....

விவிலிய வாசகம்

மத் 6 : 25 — 34

விவிலிய விளக்கம்

இன்றைய நற்செய்தியில், இறைவன் நமக்கு வலியுறுத்துவது யாதெனில், கவலையை விட்டு இறை நம்பிக்கையில் வாழ வேண்டும் என்பதே. நாளை எவ்வாறு இருக்குமோ என்பதைப் பற்றி அறியாத வயல்வெளி மலர்களுக்கும், புல் பூண்டுகளுக்கும் பல விதமான அழகினைக் கொடுத்து காத்து வரும் இறைவன் தமது சாயலாக படைக்கப்பட்ட மனித இனத்தைக் காப்பதில் எவ்வளவு அக்கறை உள்ளவராக இருப்பார்! ஆகவே இறைவன் விரும்புவது ஒன்றே ஒன்று தான். அது யாதெனில், அனைத்திற்கும் மேலாக இறைவனுக்கு உகந்தவற்றையும், அவரது

இறையாட்சியையும் நாடுவது. நாம் அவ்வாறு நாடினால் நமக்குத் தேவையான அனைத்தையும் இறைவன் தருவார் என்ற நம்பிக்கையை உறுதிபடுத்துகின்றது.

நமது தனிப்பட்ட வாழ்க்கையில் இறைவன் மீது கொண்டுள்ள நம்பிக்கை எத்தகையது என சிந்திப்போம். கடந்த நாட்களில் அடைந்த துன்பங்களும், வேதனைகளும் நிகழ்கால வாழ்க்கைக்குத் தடையாக இல்லாமல் இயேசுவே நம் வழி, வாழ்வு என அவர் காட்டும் வழியில் நடப்போம்.

அடையாள மன்றாட்டு

இளம் செடி:

இறைவா! விசுவாசத்தின் ஆணிவேர் நம்பிக்கையில் தான் அடங்கியுள்ளது என்பதைப் புரிந்து கொண்டு இவ்விளம் செடியை உம்பதம் அர்ப்பணிக்கிறோம். திருச்சபையை வழிநடத்தும் எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் மற்றும் பொது நிலையினர் உணர்ந்து செயல்பட வேண்டுமென்று....

பதில் : இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

மஞ்சள்:

மகிழ்வின் ஊற்றாம் இறைவா! மங்களகரமான நிகழ்வுகளில் பயன்படுத்தும் மஞ்சள் வழியாக எம் நாட்டை ஆளும் தலைவர்களையும் மக்களையும் உம்பதம் நினைவுகூர்கின்றோம். நாடுகளிடையே நம்பிக்கையை வளர்த்து போர்களைத் தவிர்க்கவும், நாட்டு மக்களுக்கும் தலைவர்களுக்கும், நம்பிக்கையைத் தந்து வழிநடத்தவும் வேண்டுமென்று...

கரும்பு:

இனிமையின் உறைவிடமே இறைவா! உழைத்து தேய்ந்து போன உழவர்களை உம்பதம் அர்ப்பணிக்கின்றோம். இவர்களுடைய குடும்பங்களை ஆசீர்வதித்து இவர்களின் வாழ்வை வளப்படுத்தி வழி நடத்தவும், தித்திக்கும் கரும்பைப் போன்று எங்கள் வாழ்வு உம்மோடும், பிறரோடும் நாங்கள் கொண்டுள்ள அன்பு, இனிமையாய் அமைந்திட வேண்டுமென்று....

பொங்கல்:

அருளின் ஊற்றே இறைவா! உமது அருளும் ஆற்றலும் ஆசீரும் உலக மக்கள் அனைவரிலும் பொங்கி வழிந்திட வரம் வேண்டி பொங்கல் வழியாக அர்ப்பணிக்கின்றோம். இவர்கள் அனைவரும் உமது அன்பினை ஒவ்வொரு நாளும் சுவைத்து சான்று வாழ்க்கை வாழ்ந்திட....

பாடல்: ஒளியான என் தெய்வமே....

கர்த்தர் கற்பித்த செபம்

இறுதி செபம்

வாழ்வின் ஊற்றாம் இறைவா! நிலத்தின் விளைச்சலுக்காக நாங்கள் உமக்கு நன்றி செலுத்துகின்றோம். நிலம் பண்படுவது உழவனால். அது போல எங்கள்

நம்பிக்கை பலப்படுத்தப்படுவது பொங்கல் திருநாளால் என்பதை நாங்கள் உணர்ந்துள்ளோம். எங்கள் இதயத்தில் இருந்து எழுந்த அளவிட முடியாத நன்றி பெருக்கை உமக்கு சமர்ப்பிக்கின்றோம். இதன் வழியாக உமது நம்பிக்கையை நாங்கள் முன் மாதிரியாகக் கொண்டு வாழும்படி எங்களை ஆசீர்வதித்து வழிநடத்திட இறைவா உம்மை இறைஞ்சி மன்றாடுகின்றோம்.

ஆண்டவர் நம்மை ஆசிர்வதித்து, தீமை அனைத்தினின்றும் பாதுகாத்து, முடிவில்லா வாழ்வுக்கு அழைத்துச் செல்வாராக. - ஆமென். ஆண்டவரைப் போற்றுவோம். இறைவா உமக்கு நன்றி!

சகோ. S மேரி ஸ்டெல்லா FSAG

௩. பவுலின் மனமாற்றம். (ஜனவரி ௨௫)

முன்னுரை

புனித பவுலடியாரின் மனமாற்றம், திருச்சபையின் ஒரு மாபெரும் கொண்டாட்டம். பிற இனத்தாரின் திருத்தூதரான புனித பவுலடியாரை இறைவன் தடுத்தாட்கொண்ட ஒரு மாபெரும் நிகழ்வு. யூதரான சவுல் சிலிசியாவிலுள்ள தர்சு நகரில் பிறந்து, எருசலேம் நகரில் வளர்க்கப்பட்டார். கமாலியேலை குருவாகக் கொண்டு திருச்சட்டத்தை நுணுக்கமாய் கற்றார். கிறித்தவ நெறியைச் சேர்ந்தவரை சிறையில் அடைத்தும், சாகும் வரை அவர்களை துன்புறுத்தியும் சித்திரவதை செய்தவர். தமஸ்கு நகரிலுள்ள கிறித்தவர்களை அழைத்து வந்து துன்புறுத்த அழைப்புக்கடிதம் பெற்றுச் சென்றவர், பேரொளியான இயேசுவால் தடுத்தாட்கொள்ளப்படுகின்றார் "சவுலே, சவுலே நீ ஏன் என்னைத் துன்புறுத்துகின்றாய்? என்ற குரலைக் கேட்டவுடன்: ஆண்டவரே நீர் யார்? என்று கேட்டு, நீ துன்புறுத்தும் நாசரேத்து இயேசு நானே! என்ற பதிலைப் பெற்றவர். காலம் தாழ்த்தாது இறைத்திட்டத்திற்கு தன்னை முழுவதும் அர்ப்பணித்து மகிழ்ந்தவர். ஆண்டவர் மாபெரும் புதுமை செய்பவர், என்பது மீண்டும் ஒரு முறை மெய்ப்பித்துக்காட்டப்படுகிறது. ஒரு பாவமனிதனின் வாழ்வை அடியோடு மாற்றிப் போட்டுவிட்டார். கிறித்துவின் பொருட்டு அனைத்தையும் குப்பை என கருதினார். சவுலாக வலம் வந்தவர் 'பவுல்' என்பவராக மாறி இயேசு தாசனாக மாறிப் போனார். நிரந்தர மாற்றம், சுனாமி பேரலை வந்து உலகின் பல பகுதிகளை புரட்டிப் போட்டது. பேரழிவுகள் உருவாயின, ஆனால் வீழ்ந்து போகவில்லை மனிதம், மாற்றத்துக்கு தங்களை பக்குவப்படுத்திக் கொண்டது. 'மனமாற்றம்' பெற்று கிறித்துவால் அருள் வாழ்வு பெற்ற புனிதர்கள் பலர் உள்ளனர். தீய வாழ்வு போய், தூய வாழ்வு மட்டுமே வாழ்ந்தார். இன்றைய நம் விழா நாயகரும் இயேசு என்ற மனிதரை நம்பி தன் பழைய வாழ்வுக்கு முற்று புள்ளி வைத்து, புதிய இயல்பை அணிந்தவராய் புதுவாழ்வுக்குள் புனிதம் கண்டார்.

இயேசுவுக்குள் நிரந்தர மன மாற்றம் பெற்று, புனித வாழ்வு வாழ இன்றைய வழிபாடு நமக்கு அழைப்பு விடுக்கிறது.

மூவொரு இறைவனுக்கு வாழ்த்து

புற இனத்தாரின் திருத்தூதரான புனித பவுலடியாரை உம் அன்பு மகன் வழியாக தடுத்தாட்கொண்ட உம் அரும் செயல்களை நினைத்து உம்மைப் போற்றுகின்றோம்.

இயேசுவே, அன்பு தெய்வமே, துன்புறும் இயேசு நான் தான் என பகிரங்கமாகக் கூறி பேரொளியால், பாவியான சவுலை பவுலாக மாற்றிய உம் எல்லையில்லா அன்பை நினைத்து உம்மை வாழ்த்துகின்றேன்.

உள்ளங்களை ஒளிர்வித்து, இறை நற்செய்தி உலகின் எல்லா மக்களுக்கும் உரியது என்ற மகிமையை பறைசாற்ற புனித பவுலடியாரை இடையறாது தூண்டிய தூய ஆவியே உம்மைப் போற்றுகின்றோம்.

மூவொரு இறைவா திருச்சபையின் எதிரி என அனைவராலும் அறியப்பட்ட 'சவுலை' உண்மையான தடுத்தாட் கொண்ட நிகழ்வால் 'பவுலாக' மாற்றி திருச்சபையின் போதனையை புறவினத்தாருக்கு வழங்குவதில் அவரை ஒரு நற்கருவியாய் பயன்படுத்திய உம் வல்லமையை எண்ணி வியந்து உம்மை வாழ்த்துகின்றோம்.

புனித பவுலடியார்க்கு நிரந்தரமான மனமாற்றத்தினை பரிசாக வழங்கிய இறைவன் நம்மையும் தடுத்தாட்கொள்ள இப்பஜனையைப் பாடுவோம்.

பஜன்

எல்லாமாய் இருக்கின்ற இறைவா நீ வேண்டும்
எல்லார்க்கும் துணையாகும் வரம் ஈய வேண்டும்
மெய்யான வழி சென்று மகிழ்ந்தாட வேண்டும்
எந்நாளும் உன் நாமம் நான் பாட வேண்டும்

(சில நிமிடம் அமைதி)

இறைவனுக்குள் இன்னும் ஆழமாய் நம்மை இணைத்துக் கொள்ள தடையாய் இருக்கும் தடைகளை தகர்த்தெறிய துணிவு கொள்வோம்.

மனத்துயர்

என் இதயம் உம் ஆலயம் என்பதை மறந்து வாழ்ந்த தருணங்களுக்காக....

பதில் : மனம் வருந்தி, மனம் திருந்தி உம்மை சரணடைந்தேன் மன்னிப்பாய் இறைவா.

உம்மை நம்பாமல், என்னை மட்டுமே நம்பி, 'நான்' என்ற அகந்தைக் கொண்டு வாழ்ந்த என் பாவ வாழ்வுக்காக....

தூய ஆவியின் குரல் பல நேரங்களில் நல்லவைகளை எடுத்துரைத்த போதும் அதை ஒரு பொருட்டாக கருதாமல் உலகின் காரியங்களால் ஈர்க்கப்பட்டு தீய இச்சைக்குள் மடிந்துப் போன என் வெறிச் செயல்களுக்காக....

நான் வாழ்வு பெற வேண்டும் என்ற இலக்கை மட்டுமே கண்முன் கொண்டு, கிறித்து என்பவரை ஓரம் கட்டி விட்டு, அதற்காக பலர் வாழ்வை அழித்த என் சுயநலத்துக்காக....

பவுலடியாரின் உண்மையான மனத்துயர், நிரந்தரமான மனமாற்றத்திற்கு அவரை கொண்டு போனது எனவே இயேசுவுக்காய் பைத்தியமானார், நமது மனம் வருந்திய நிலையும் நம்மை ஆண்டவருக்குள் அழைத்து சென்றிருப்பதை உணர்ந்து ஆண்டவரைப் புகழ்வோம்.

புகழ்ச்சி

எல்லாம் வல்ல இறைவா! இருளடைந்த என்வாழ்வில் ஒளியேற்றிய உம்மைப் போற்றுகின்றேன்.

பதில் - போற்றி (2) இயேசுவே போற்றி!

பாசம் நிறைந்த பரமனே! பகைமைக் கொண்ட என் இதயத்தினை உம் பாசத்தால் நிறைத்து பரிவுள்ளவனாய் மாற்றிய உம்மைப் போற்றுகின்றேன்.

உலகின் மாய பிடிக்குள் என்னையே இழந்து, தவித்துக் கொண்டிருந்த வேளையில் பேரின்பமே நீ என்பதை புனித பவுலடியார் வழியாக உணர்த்திய உம்மைப் போற்றுகின்றேன்.

இயேசப்பா உனக்காக எல்லாவற்றையும் குப்பை என்று கருதக் கூடிய மனநிலையை எனக்கு கொடுத்தமைக்காகவும், உயர்வான உம்மை பற்றிக் கொள்ள துணிவு தந்தமைக்காகவும், உம்மைப் போற்றுகின்றேன்.

பாடல்

ஆண்டவரைப் புகழ்வது நல்லது
அவர் பெயரைப் பாடுவது நல்லது நல்லது

விவிலிய வாசகம்

திருத்தூதர் பணி 9 : 1 — 22

விவிலிய விளக்கம்

தமஸ்கஸ் என்றவுடன் பவுலின் மனமாற்றம் என்பது உடனடியாக நம் நினைவுக்கு வருவது இயல்பு. ஆனால் அதையும் தாண்டி புனிதமான நிகழ்வு கட்டாயம் நினைவுக்கு வர வேண்டும். அது தான் கிறித்தவர்களைக் கொன்றவன், இன்னும் அதிகம் பேரை கொல்ல வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டு அலைந்த வரை இயேசு ஆண்டவர் தடுத்தாட் கொண்ட நிகழ்வு. அதனால் விலை மதிப்பில்லா இயேசு என்ற முத்தை பவுல் சொத்தாக மாற்றிக் கொண்ட ஒரு பேரதிசயம் நடந்தது. இந்நிகழ்வு பல உண்மைகளை கட்டாயம் நமக்கு புலப்படுத்தும். நாம் அதற்கு எப்போதும் திறந்த புத்தகமாய் இருக்க வேண்டும்.

இன்றைய போலி இன்பம் நிறைந்த உலகம், எல்லாமே சுகம் என்று பறைசாற்றிக் கொண்டிருக்கின்றது.

உழைக்காமல், உழைப்பது போல் பாசாங்கு செய்து விட்டு சாப்பிடலாம். எல்லாமே இலவசம் இன்று துன்பப்படாமல் பிறந்து, வேதனைப்படாமல் வளர்ந்து படித்து, வெற்றி பெற நினைக்கும் நிலை.

புனித பவுலடியாரைப் போல் இந்த உலகில் இருந்து நாம் உண்மையான மனமாற்றம் பெற்றவர்களாக தூய வாழ்வு வாழ வேண்டும்.

ஆடம்பர அதிகார மோகத்தில் ஆட்பட்டு, சட்டம் படித்தவன், எனக்கு நிகர் வேறு யாருமில்லை என்று மார்த்தட்டி வாழ்ந்த 'சவுல்' அடியோடு மாற்றப்பட்டு பவுலானார். புதுத்தெம்பு பெற்று உலகின் பல்வேறு திசைகளில் இயேசுவை அறிவித்தார்.

சக்கேயு உண்மையான மனமாற்றம் பெற்றான், தான் மக்களிடம் ஏமாற்றி சம்பாதித்தவைகளைக் காட்டிலும் நான்கு மடங்காக கொடுத்தான்.

மரிய மகதலேனாள் இயேசு என்ற மாமனிதரை சந்திக்காத வரை வழி தவறி வாழ்ந்தவர், இயேசுவைக் கண்டபின் அவர் மீது பைத்தியம் கொண்டு, முதல் பெண் நற்செய்தி தூதுவராக இயேசுவால் அங்கீகரிக்கப்பட்டார்.

அப்படியென்றால் மனமாற்றம் தற்காலிகமானதாக இருக்கக்கூடாது. நிரந்தரமானதாக இருக்க வேண்டும் இயேசுவே எனக்கு வாழ்வு, அவருக்காக இறப்பது தனக்கு ஆதாயம் என்று பகிரங்கமாகக் கூறிய பவுலடியாரின் வாழ்வு நமக்கு நல்ல முன்னுதாரணமாய் அமையட்டும். உண்மையான மனமாற்றம் பெற்று உலகின் சீரழிவுக்கு உட்படாமல் தப்பித்துக் கொள்வோம். அமைதியாய் சில மணித்துளிகள் செலவிட்டு, உண்மையான மனமாற்றத்திற்கு ஏறெடுப்போம்.

(சில நிமிடம் அமைதி)

திருப்பாடல்

ஆண்டவரே நீரே எனக்குப் புகலிடம் - 2

மன்றாட்டு

பதில் : இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

தாயும், தந்தையுமான இறைவா இன்றைய புனிதரின் மனமாற்ற விழாவை சிறப்பிக்கும் தாய்திருச்சபை, அதனை வழி நடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், திருச்சபையின் பிற தலைவர்கள், தங்கள் வாழ்வின் முன் மாதிரியாக பவுலடியாரை ஏற்று, பிறவினத்தார்க்கும் இயேசுவை வழங்கிய நற்செய்தியாளரான பவுல் போன்று நற்செய்தி அறிவிப்பதிலும், நற்செய்தி வாழ்வு வாழ்வதிலும் ஆர்வமிக்கவர்களாய் வாழ....

பரலோகத் தந்தையே திருச்சபையின் பணிகளை தேவையற்றப் பணியாக நினைத்து கிறித்தவர்களை துன்புறுத்தி, பணிகளை அவமானப்படுத்துவோரை நினைவுகூருகின்றோம். உமது இறை அருள் பவுலைத் தொட்டது போன்று, இவர்களையும் தொட்டு, இவர்களும் நற்செய்தி அறிவிக்கும் பணியில் தங்களை இணைத்துக் கொள்ள வரம் தர வேண்டுமென்று.....

நற்செய்தி அறிவிப்பவரின் மலரடிகள் இனிமையானது என்றுரைக்கச் செய்த உன்னத இறைவா! நற்செய்தியை தங்கள் சொல்லால், செயலால், வாழ்வால் அறிவிக்கும் ஒவ்வொருவரையும் ஆசிர்வதியும். குறிப்பாய் காலத்தின் தேவை உணர்ந்து புதிய வழிகளை கையாள போதுமான ஞானத்தையும், பொருளாதார உதவிகளையும் தந்திட.....

நற்செய்தியை அறிவிக்காவிடில் ஐயோ எனக்கு கேடு! என்பதை வெளிப்படுத்த புனித பவுலடியாரை ஒரு கருவியாய் தேர்வு செய்தீர். நாட்டின் தேவைகளையோ, மக்களின் தேவைகளையோ ஒரு பொருட்டாக எண்ணாது சுயநலத்துடன் வாழும் தலைவர்களின் அவலநிலைகளை எடுத்துரைக்க, பரிசுத்த ஆவியின் அருள் துணையை நற்செய்தி அறிவிப்போர்க்கு தந்திட....

(பவுலடியாரின் உண்மையான மனமாற்றம் நம் அனைவருக்கும் வழங்கப்பட்டதை எண்ணி வல்ல செயல்கள் செய்த ஆண்டவர்க்கு நன்றிப் பாடல் பாடுவோம்.)

பாடல்

நன்றி நன்றி இறைவா, நன்றி நன்றி தலைவா

கர்த்தர் கற்பித்த செபம்

இறுதி செபம்

நாயகனே எம் இறைவா

நல்வாழ்வின் பரிசான வெற்றி வாகையை நீதியுள்ள நடுவர் இறுதி நாளிலே எனக்கு கைம்மாறாக அருள்வார் என்று உறுதியாய் நம்பின புனித பவுலடியாரை எம் வாழ்வுக்கு முன் உதாரணமாய் தந்ததற்காக நன்றி நவில்கின்றோம். அவரது போதனையால் உலகிற்கு விசுவாசத்தை கற்பித்தீர். அதே விசுவாத்தைப் பெற்றவர்களாய் நாங்கள் வாழவும், புனிதரின் அடிச் சுவட்டினை பின்பற்றி உண்மைக்கு சான்று பகரவும், புனிதரைப் போன்று உம்மீது கொண்ட அன்பினால் அன்றாடம் பற்றியெரிந்து எல்லா மக்களுக்கும், எல்லா நலன்களும் கிடைத்திட உழைக்கும் நல்ல மனதினை தந்திட வேண்டுமென்று எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாய் உம்மை மன்றாடுகின்றோம்.

ஆண்டவர் நம்மை ஆசிர்வதித்து, தீமை அனைத்தினின்றும் பாதுகாத்து, முடிவில்லா வாழ்வுக்கு நம்மை அழைத்துச் செல்வாராக. - ஆமென். ஆண்டவரைப் போற்றுவோம். இறைவா உமக்கு நன்றி!

சகோ. மோ. திரேசா ஞானமணி FSAG

4. பெண்கள் தினம்

மார்ச் 8

முன்னுரை

எத்தனையோ தினங்கள் வருகின்றது. போகின்றது அவைகளில் சில தினங்கள் ஒன்றை அழுத்தமாய் சொல்ல நினைக்கின்றது. சொல்வதை முழுமையாய் சாதிக்க முடியவில்லை என்றாலும், ஏதோ சிறிதளவாவது செய்திருக்கின்றோமே என்று ஆழமான பதிவை விட்டுச் செல்கிறது.

அது தான் பெண்கள் தினம் - மகளிர் தினம் ஒவ்வோராண்டும் வருகிறது. திருச்சபையும் இதனை கொண்டாடி மகளீரை கௌரவப்படுத்தி மகிழ்கிறது. அமெரிக்காவின் ஒரு பகுதியில் வட அமெரிக்காவில் பெண்களால் எழுப்பப்பட்ட ஒரு கிளர்ச்சி தான் இந்த பெண்கள் தினக் கொண்டாட்டத்துக்கு வழிகோலியது. உழைப்பதெங்கள் உரிமை என்றாலும், உழைப்புக்கேற்ற ஊதியம் பெற்றுக் கொள்ள உரிமை இருக்கிறது என்பதை உரக்கச் சொல்லி மற்றவர்களை தங்கள் பக்கம் திரும்பி பார்க்க வைத்த அந்த நாளை ஒவ்வொரு ஆண்டும் 'பெண்கள் தினமாய்' கொண்டாடி வருகின்றோம். "பெண்கள் தினம்" என்பது 'இதை என்நினைவாய் செய்யுங்கள்' என்று இயேசு சொன்ன அதே நற்கருணைக் கொண்டாட்டத்தின் நினைவு கொண்டாட்டம் போல் 'வட அமெரிக்காவின் உரிமை கிளர்ச்சி' ஒவ்வோராண்டும் நினைவு கூறப்பட்டும். ஆண்டுகள் மறைந்தாலும், புதிய, புதிய காயங்கள் உண்டாகின்றது. அதன் வடுக்கள் மறையாது இருக்கின்றது என்பதை அகில உலகுக்கு அடையாளப்படுத்த 'பெண்கள் தினம்' கொண்டாடப்படுகின்றது. இன்னும் அதே எதிர்ப்பும், அதே சாடல், அதே ஊதியக் குறைப்பு, பாலியல் வன்முறை, வன்கொடுமை, வரதட்சனை கொடுமை, சம்பளமில்லா வேலைக்காரி என்ற இழிநிலைகள் தொடர்ந்து பெண்கள் சமமாய் கருதப்படவில்லை என்பதை உணர்த்திக் கொண்டு தான் இருக்கின்றன.

இயேசு தான் வாழ்ந்த காலங்களில் பெண்கள் இழிவாக கருதப்பட்டாலும், தன் இறையாட்சிப் பணியில் அவர்களுக்கு பங்களித்தார். மகளீர், தம் உறவுகளை மதித்தார். அவர்களது தாய்மை, நேர்மை, பொறுமை, சகிப்புத்தன்மை, துணிவு ஆகியவற்றை சமூகத்திற்கு ஊதாரணமாக்கி பாராட்டி அங்கீகாரம் வழங்கினார். இயேசு நம் மேய்ப்பன் என்று கூறினால் மட்டும் போதாது. இயேசுவின் பாதை அடிச்சுவடுகளை முழுதுமாய் பின்பற்றுவது எப்போது? அதனால் தான் பெண்கள் சார்பான இழி நிலையை கொஞ்சாமாவது மாற்ற வேண்டும். பெண்ணுக்கு உரிய இடத்தை மீட்டெடுக்க வேண்டுமென்று ஒவ்வோராண்டும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இயேசுவை பின்பற்றுவது உண்மை என்றால், பெண்கள் சார்பாக அவர் எடுத்த அதே முன்னெடுப்புக்கள் இப்போது எடுக்கப்பட வேண்டும். ஆனால் அந்தோ பரிதாபம் நாட்டிலும், வீட்டிலும், போலித்தனமே மலிந்து விட்டது. போலித்தனத்தை

னவெடுக்கவே மீண்டும் பெண்கள் தினம் நினைவு கூறப்படுகின்றது. பெண்களுக்கு முக்கியத்துவம் அளித்த மூவொரு இறைவனை வாழ்த்துவோம்.

மூவொரு இறைவனுக்கு வாழ்த்து

விவிலியத்தின் முதல் பெண்ணாக ஏவாளை உண்டாக்கிய இறைவா, ஆணுக்கு நிகர் சமமாய் அவள் இருக்க திருவுளம் கொண்ட உம்மை வாழ்த்துகின்றோம். ஆராதிக்கின்றோம்!

அன்னை மரியா என்பவரை மண்ணகத்தாயாகக் கொண்டு எளிமையோடு வாழ்ந்து சாதாரண மனுவுரு எடுத்த மனிதரான இயேசுவே உம்மை வாழ்த்துகின்றோம். ஆராதிக்கின்றோம்.

மீட்புத்திட்டத்தில் அன்னை மரியா இறைத்தந்தையின் திட்டத்திற்கு விருப்பத்துடன் அமைந்து நடக்க உறுதுணையாய் உடனிருந்து வழி நடத்திய தூய ஆவியே உம்மை வாழ்த்துகின்றோம். ஆராதிக்கின்றோம்.

மூவொரு இறைவா தாயாக, தந்தையாக, உயிராக, சக்தியாக இருந்து இவ்வுலகத்தை இயங்க வைக்கும் போது உமது மேலான நன்மைத்தனங்களை எண்ணி வியந்து உம்மை வாழ்த்துகின்றோம். ஆராதிக்கின்றோம்.

மகளிர் தின கொண்டாட்டம், பூவுலக மகளிர்க்கு மகிழ்ச்சி தரும் ஒன்றாக அமைய தொடர்ந்து இந்த வழிபாட்டில் பக்தியுடன் பங்கேற்போம். அதற்கு பாடப்படும் பஜன் உதவி செய்யட்டும்.

பஜன்

ஆவியாம் இறைவா இணையற்ற தலைவா
புது வாழ்வெனக்குள் பொழிந்தருளும் - 2

(சில நிமிடம் அமைதி)

பெண்களுக்கெதிராக நிகழும் ஒவ்வொரு அவமானங்கள், செயல்கள், வன்கொடுமைகள், பலாத்காரங்கள் ஆகியவைகளை எண்ணிப்பார்த்து துயரப்படுவோம். மனம் வருந்துவோம். மன்னிப்பு வேண்டுவோம்.

மனத்துயர்

பிள்ளை வரம் கேட்டு கோவில் பல சுற்றினாள், பத்தியமிருந்தாள், தவமேற்கொண்டாள், பட்டினி கிடந்தாள், பேர் சொல்ல நான் பிறந்தேன், எனக்காய் பாடுகள் பட்ட என்தாயை அனாதை என்று முத்திரையிட்டு முதியோர் இல்லத்தில் தள்ளி விட்ட என் கொடூர செயலுக்காக மனம் வருந்துகிறேன்....

பதில் - மன்னிப்பு (3) தேவா மன்னிப்பு தாருமே இறைவா (2)

குழந்தைகளை பெற்றெடுத்தால் மட்டும் போதாது, பண்புள்ளவர்களாகவும், பக்தி உள்ளவர்களாகவும் வளர்க்க வேண்டும் என்ற என் கடமையை சரிவர செய்யாது பொறுப்பற்றத் தாயாக, தொலைக்காட்சிகளுக்கும் ஊடகங்களுக்கும் முதலிடம் கொடுக்கும் என் இழி செயலுக்காக மனம் வருந்துகிறேன்.....

மனைவி என்பவள் உடல் சுகம் தரும் ஒரு போகப் பொருள் என்பதை மட்டுமே எண்ணி பொருளாக பயன்படுத்தி, அவளது உண்மை நிலையையும் விருப்பு, வெறுப்புகளையும், உணராது வாழ்ந்த என் காட்டு மிராண்டி தனத்திற்காக மனம் வருந்துகின்றேன்.....

நான் பெண்ணாக இருந்தாலும், வரதட்சணை என்ற பேய் பிடித்து என்னை தாயாக எண்ணி வீடு நுழைந்த மருமகளுக்கு எமனாக இருந்து செயற்பட்ட ஒவ்வொரு செயலுக்காகவும் மனம் வருந்துகின்றேன்....

மனம் வருந்தி மன்னிப்பு கோரும் ஒவ்வொருவரையும் இறைவன் அன்பின் போர்வைக்குள் அரவணைத்து மகிழ்கிறார். இவ்வீட்டிற்கு சமாதானம் என்று நிலைத்த மகிழ்வை தருகின்றார். அத்தகைய வல்லமைப் பொருந்திய இறைவனை, போற்றி மகிழ்வோம்.

புகழ்ச்சி

பதில் : உம்மைப் போற்றுகின்றோம்.

நான் பெற்ற பெண்மை என்ற சிறப்புக்காக....

நான் பெற்ற தாய்மை என்ற பேற்றிற்காக....

நான் பெற்ற முதுமை என்ற அனுபவத்திற்காக....

அன்னை மரியாள் போன்று அமைந்த மனநிலையில் வாழ ஆசீர் அளித்தமைக்காக.....

அன்னை மரியாளின் உள்ளத்தை ஊடுருவிய வாள் போன்று குடும்ப பொறுப்புகளினால் துன்பப்பட்டாலும், அவள் பெற்ற அதே அனுபவத்தை நான் பெற்றுக் கொள்ள வாய்ப்பு ஏற்படுத்தியதற்காக....

கல்வி அறிவால், பெண் உயர்வடைவாள் என்பதை உணர்ந்து பெண்கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கும் நிலைக்காக....

பெண்மைக்கு புகழ் சேர்க்கும் இறைவனை தொடர்ந்து புகழ்பாடல் மூலம் புகழ்வோம்.

பாடல்

என் விளக்கு சுடர் விட்டு எரியச் செய்கின்றீர்
என் வாழ்வை அகல்விளக்காய் இறைவா மாற்றினீர்

விவிலிய வாசகம்

லூக் 1 : 46 – 55

விவிலிய விளக்கம்

லூக்காஸ் நற்செய்தியிலிருந்து எடுத்து வாசிக்கப்பட்ட பகுதி மரியாளின் பாடலாக உள்ளது. மரியாளின் இப்பாடல் கூறும் செய்தி இறைவன் வலிமையுள்ளோரை தாழ்த்தி, எளிமையானவரை உயர்த்துகிறார். அவர் தாழ்ந்தோரின் கடவுள் என்பதை வெளிப்படையாக எடுத்துரைக்கிறார், தான் ஏழைகளின் இறைவன் என்பதையும்

எடுத்தியம்புகின்றார். ஒடுக்கப்பட்டவர்க்கு நம்பிக்கை ஒளி வீசச் செய்யும் சக்தி பெண்கள் என்பதனை இந்நற்செய்தி வழியாக மரியா சான்றாக விளங்குகின்றார்.

பெண்ணுக்குள் ஞானத்தை வைத்தான் - புவி

பேணி வளர்த்திடும் ஈசன் - என்றார் பாரதி.

பெண்ணின் பெருமையை பாரதி இயம்புவதற்கு விவிலியம் ஒரு காரணமாயிருந்திருக்குமோ!

முதல் பெண் ஏவாள் பழம் உண்டாள் அறிவுணர்வு பெற்றாள். எண்ணாகமத்தில் அதிகாரம் 27-ல் செலொபுகாத்துவின் புதல்வியர் மக்லா, நோகா, ஒக்லா, மில்கா, திர்சா ஆகியோர் மோசே, எலியாவிடம் சென்று தன் தந்தையின் நிலத்திற்காக போராடி சொந்தமாக்கிக் கொண்டனர். மண்ணைக் காப்பதில் பெண்ணின் பங்கு பேசப்பட்டது. வீரம் பாராட்டப்பட்டது.

விடுதலைப்பயணம் 1 ஆம் அதிகாரத்தில் பாரவோன் மன்னன் எபிரேய ஆண் குழந்தைகளை கொன்றுவிட கட்டளையிட்ட போது அவன் தம் கட்டளைக்கெதிராக சிப்ரா பூவா என்ற பெண்டிர் மனித உயிர்களை காத்து வளர்த்தனர். தாய்மை போற்றப்பட்டது.

புதிய ஏற்பாட்டில் மகதலா மரியாள் என்ற 'பாவி' அனைவராலும் ஒதுக்கப்பட்டவளாயிருந்தும். இயேசுவால் அரவணைக்கப்பட்டாள் இயேசு உயிர்த்தார் என்ற நற்செய்தியை சீடருக்கு எடுத்துச் சொல்லும் பெண் திரு தூதுவராக உயர்த்தப்பட்டார்.

நெறிதவறி பிடிப்பட்ட பெண், சமாரியப் பெண் இருவருமே இயேசுவிடம் மன்னிப்பை பெற்றனர். இயேசு என்ற இறை செய்தியை தன் மக்களுக்கு எடுத்துச் சொல்லும் திருத்தூதுவராக மாற்றப்பட்டனர். மேலும் கனானேயப் பெண்ணின் பொறுமையும். பெரும்பாடுள்ள பெண்ணின் நம்பிக்கையும். விதவைப் பெண்ணின் உதவி செய்த நல் மனதும், பெண்களின் சிறந்த பண்புகளாக எல்லோர்க்கும் எடுத்தியம்பப்பட்டது. ஒரு பெண் மகளாய், சகோதரியாய், மனைவியாய், தாயாய், தோழியாய், துணிச்சல் மிக்க சமூகப் போராளியாய் சமாளிக்க முடியும் என்பதை பெண்கள் சார்பாக நின்று பெண் சமூகத்திற்கு எடுத்தியம்பினார் இயேசு. '**பெண்கள்**' சமூகத்தின் ஒப்பற்ற மூலதனம், வாழ்வில் எதிர்கொள்ளும் அனைத்தையும் அன்பு என்ற அணிகலன் கொண்டு மேற்கொள்வார் எனவே பெண்ணினம் வாழட்டும். பெண்கள் நாட்டின் கண்களாக சிறக்கட்டும். மரியா இதற்காய் இறைவனிடம் பரிந்து பேசுவாராக. விவிலியம் கோடிட்டுக்காட்டிய பெண்கள் தம் பெருமைகளை அமைதியில் தியானிப்போம். அந்த பண்புகள் நம்மிடம் இருந்தால் இறைவனுக்கு நன்றி கூறுவோம். குறைவாய் இருந்தால் இன்னும் வளர்ந்திட அருள் கேட்போம்.

(சில நிமிடம் அமைதி)

பாடல்

என் ஆன்மா எந்நாளுமே
ஆண்டவரை ஏற்றி ஏற்றிப் போற்றுகின்றது
என் மீட்பரை நினைத்து நினைத்து
எந்தன் நெஞ்சம் மகிழுகின்றது – 2

மன்றாட்டு

அம்மையும் அப்பனுமான இறைவா பெண்கள், தங்களிடமுள்ள அச்சத்தை தாழ்வு மனப்பான்மையை அடியோடு அகற்றி சமூகத்தில் சாதிக்க பிறந்தவர்கள் தாங்கள் என்ற உண்மையை உணர்ந்து வாழ்ந்திட அருள் தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்.

பதில் : ஆண்டவரே எம் கூக்குரல் உம்மிடம் வருவதாக.

நல்லவரே என் இறைவா! திருச்சபை, நாடு ஆகியவற்றில் உள்ள தலைவர்கள் பெண்கள் வலிமையுறும்போது ஒட்டு மொத்த சமூதாயமும் நன்மைப் பெறும் என்பதை உணர்ந்து பெண்களுக்கான இடஒதுக்கீட்டை நிலை நாட்டிட மனமுவந்து செயல்பட வரம் தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்.

இரக்கமே உருவான இறைவா! ஊடகங்களில் புரட்சிப்பெண்கள் மற்றும் சாதனைப் பெண்களின் செயல்கள் பேசப்பட்டாலும், சமூகத்தின் அவலங்களுக்கு விடைத்தேடி அலையும் பெண்களின் பணிகளில் துணை நிற்க தயங்கும் போக்கையே அதிகமாகப் பார்க்கின்றோம். மாறாக ஆண், பெண் சமத்துவம் என்பதும், பெண் விடியல் என்பதும் பெண்கள் தனித்து நிற்பதால் வருவதல்ல, மாறாக ஆண்களோடு இணைந்த தோழமையில் உண்டாகும் என்பதை உணர்ந்து நாங்களும் செயல்பட வரம் தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்.

நீதியின் இறைவா பெண்கள் அதிகமாய் உழைக்கும் நிலையை காணும் நாங்கள், உழைப்புக் கேற்ற நியாயமான ஊதியம் பெறாது செயல்படும் அநீதி நிலையால் அன்றாடம் அல்லல் படுகின்றோம். பெண்களின் உழைப்பு சுரண்டப்படும் போது, மாண்பு மறுக்கப்படுகிறது என்று உணர்ந்து உழைப்புக்கேற்ற நியாயமான ஊதியம் வழங்க ஒவ்வொருவரும் முன் வர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

(பெண்களின் தேவைக்காய் அமைதியான முறையில் தொடர்ந்து மன்றாட்டுக்களை எழுப்புவோம்)

(சில நிமிடம் அமைதி)

தொடர்ந்து நம்முடனிருந்து நம்மை வழிநடத்தும் இறைவனுக்கு நன்றிப் பாடல் இசைப்போம்.

பாடல்

நெஞ்சில் சுரக்கும் நன்றி ஸ்வரங்கள்

நானிலமெங்கும் நான் பாட

கர்த்தர் கற்பித்த செபம்

புகழ்ச்சி செபம்

படைப்பை படைத்து, அதனை மனிதர் அனுபவித்து மகிழ திருவுளம் கொண்ட இறைவா! ஆணும், பெண்ணும் உம் சாயலாகப் படைக்கப்பட்டவர்கள். உம்படைப்புக் கொடைகளின் கண்காணிப்பாளராய் உள்ளனர். உடல், ஆன்மீக ரீதியாக உம் வாழ்வுக் கொடையினை உலகுக்கு வழங்குவதில் பங்காளிகளாகப் பணியாற்றுகின்றனர். இதற்காக உம்மை போற்றுகின்றோம். புதுமையான சிந்தனைகளைக் கொண்டு, சக்தியான சமூகம் படைப்பதிலும், குழந்தைகளை பராமரிப்பதிலும், மானிட சமூகத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு ஆக்கபூர்வமாக பங்களிக்கும் பெண்கள் அவர்தம் செயல்களுக்காக சமூகத்தின் நேர் மறையான அங்கீகாரம் பெற்று சிறப்பாய் செயல்பட உம் மகன் இயேசு கிறிஸ்து வழியாய் உம்மை மன்றாடுகின்றோம். - ஆமென்.

ஆண்டவர் நம்மை ஆசிர்வதித்து தீமை அனைத்தினின்றும் பாதுகாத்து முடிவில்லா வாழ்வுக்கு அழைத்துச் செல்வாராக. - ஆமென். ஆண்டவரைப் போற்றுவோம். இறைவா உமக்கு நன்றி.

சகோ. மோ. திரேசா ஞானமணி. FSAG

5. புனித சூசையப்பர் விழா

முன்னுரை

புனித சூசையப்பர் இயேசுவின் வளர்ப்பு தந்தை. மரியாளுக்கு மண ஒப்பந்தம் ஆனவர். இவரைப்பற்றி அதிகம் விவிலியத்தில் கூறப்படவில்லை. ஆனால் இவர் ஒரு நீதிமான், உத்தமர், உழைப்பாளர், கடவுளுக்கு முழு மனதுடன் பணிந்து நடந்தவர். முனிவருக்குரிய வாழ்வை மேற்கொண்ட புனிதர். இறைமகன் இயேசு என்பதை அறிந்து அவருக்கு வளர்ப்பு தந்தையாய், அவரை காப்பவராய், அவருக்கு பணிவிடைபுரிபவராய் வாழ்ந்தார். கன்னி மரியாளுக்கு பாதுகாப்பு அளித்து எந்த விதத்திலும் இறைத்திட்டத்திற்கு பங்கம் ஏற்படாவண்ணம் நடந்ததால் தான் அவரை உத்தமர், முனிவர் என்றெல்லாம் அழைக்கப்படுகின்றார். இயேசு தனக்கு பிறக்கவில்லை என்றாலும் கனவில் இறை உண்மையை அறிந்து அவரைக்காத்து வந்ததால் ஆதரவற்றோரின் பாதுகாவலர் என்றும் அழைக்கப்படுகின்றார். வளர்ப்பு மகன் இயேசுவும், கன்னி மரியாளும் உடனிருந்த போது உயிர் துறந்ததால் இறந்தவர்களுக்கு பாதுகாவலர் என்று கூறப்பட்டார். மிகப் பொறுப்புள்ள குடும்பத்தலைவராய் இருந்து செயல்பட்டதால் குடும்பங்களின் பாதுகாவலர் என்று சொல்லப்படுகின்றார். ஏரோது குழந்தையை கொல்லத்தேடுகின்றான் என்பதை அறிந்தவுடன் தாய் மரியாவையும்,

குழந்தையையும் பாதுகாக்கும் விதமாக, கடவுளின் திட்டம் நிறைவேற வேண்டும் என்பதில் ஆர்வம் கொண்டவராய் எகிப்துக்கு ஓடிப்போனார். அதனால் உண்மையான தபசு மேற்கொண்ட உத்தமர் என்று அழைக்கப்படுகின்றார். இறைத்திட்டத்தை அறிந்தவராய் மிகுந்த பணிவை, தாழ்ச்சியை வாழ்வாக்கிக்கொண்டதால் உத்தம துறவி என்றும், இறைவன் கொடுத்தப்பணியை முழுமையாய் செய்து முடித்ததால் அவரை உத்தம பிரமாணிக்கம் உடையவர் என்றும், தச்சுத்தொழில் செய்து குடும்பத்தை நடத்தி வந்ததால் தொழிலாளருக்கு பாதுவாலர் என்றும் பலவாறு அழைக்கின்றோம். இத்தகைய சிறப்பு மிக்க புனிதரை உண்மையாய் கடைபிடித்து வந்தால் இறைவன் நம்மையும் நலன்களால் ஆசிர்வதிப்பார். ஆசிர்வாதங்களால் நிரப்பப்பட்ட புனிதரை நாம் முன்னுதாரணம் என கொண்டு வாழ்ந்து, அனைத்து நலன்களையும் முழுமையாய் பெற்று மகிழ்வோம், ஆசிர்வாதங்களும், மகிழ்வும் நமக்கு சொந்தமாக, சாக்குப் போக்கு கூறாது நம்பிக்கையுடன் துணிந்து செயல்படுவோம். இறை அருள் நம்மை சூழ்ந்திட வரம் வேண்டி இந்த முதல் மணிநேர வழிபாட்டில் பக்தியுடன் பங்கேற்போம். சூசையின் வாழ்வை நோக்குகையில் இறைவன் பிரமாணிக்கமாய் நடப்போரை கனவில் கூட விட்டு பிரிவதில்லை என்பது புரியும். நீதிமானுக்கு இறைத்துணை எப்போதும் உண்டு இத்தகைய சிறப்பு மிக்க புனிதரை நமக்கும், திருச்சபைக்கும் அளித்த மூவொரு இறைவனை வாழ்த்துவோம்.

மூவொரு இறைவனுக்கு வாழ்த்து

வான் படைகளின் ஆண்டவரே! உமது பேரன்பு எவ்வளவு உயர்ந்தது நீர் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நிமிடமும் எங்களை உம் அன்பின் பாதையில் வழிநடத்தி வந்தமைக்காக உம்மை வாழ்த்துகின்றோம்.

இயேசுவே, புனித சூசையின் வளர்ப்பு மகனே! நீர் எங்களுக்கு கேடயமாக இருந்து நற்கருணையின் மூலமாகவும், ஆராதனையின் மூலமாகவும், ஜெப வழிப்பாட்டின் மூலமாகவும் மற்றும் நாங்கள் சந்திக்கும் ஒவ்வொருவரின் வழியாகவும் உம்முடைய அருளையும், ஆசீரையும், மேன்மையையும் தந்து கொண்டிருக்கிறீர் என்பதை இந்நேரத்தில் உணர்கின்றோம் இறைவா! உமது இரக்கத்தாலும், கருணையினாலும் எங்களின் குற்றங்களை மன்னித்து, எங்களின் அடைக்கல பாறையாக இருந்து, வழிநடத்தி வருகின்ற, உம்முடைய எல்லையில்லாத அன்பை நினைத்து உம்மை வாழ்த்துகின்றோம்.

ஆவியை அருவிப் போல் பொழியும் ஆவியாம் இறைவா! இறை மகனின் வளர்ப்பு தந்தையான புனித சூசையப்பரின் திருவிழாவை சிறப்பிக்கும் இந்த வேளையில் அவரின் பண்புநலன்களை எமதாக்கி வாழ உம்முடைய அபரிமிதமான அருளாசீரை எங்களுக்கு பொழிந்து கொண்டிருக்கும் கிருபைக்காய் உம்மை வாழ்த்துகின்றோம்.

மூவொரு இறைவா தனக்கென்று எந்த விருப்பு, வெறுப்பு கொள்ளாது தூய்மையான உள்ளம் கொண்டு, கற்பு நெறிதவறாது வாழ ஆசையோடு கூட நீர் இருந்த செயலுக்காய் உம்மை நாங்கள் வாழ்த்துகின்றோம்.

புனித சூசையப்பர் எவ்வாறு இறைவனின் வார்த்தையை வாழ்வாக்கினாரோ அதுபோல நாமும் இறைவனின் வார்த்தையை வாழ்வாக்கும் நோக்கத்துடன் இந்த அழைப்பாடலை பக்தியுடன் திரும்ப பாடுவோம்.

பஜன்

என் வாழ்வில் என்றும் நீ இயேசுவே

எல்லாமும் நீயே என் இயேசுவே

(சில நேரம் அமைதி காப்போம்.)

புனித சூசையப்பரின் திருநாள் கொண்டாடும் இந்நாளில் அவரது உயர் பண்புகளை கடைப்பிடிக்காமல் வாழ்ந்த தருணங்களை எண்ணி ஆண்டவரிடம் மன்னிப்பு கோருவோம்.

மனத்துயர்

நீதியின் இறைவா! புனித சூசையிடம் விளங்கிய நீதித்தன்மையை நான் கடைப்பிடிக்கத் தவறிய தருணங்களை எண்ணி மனம் வருந்துகின்றேன்.

பதில் : ஆண்டவரே இரக்கமாயிரம்.....

உழைக்க மனமில்லாதவன் உண்ணலாகாது என்று மொழிந்த இறைவா, பிறரின் உழைப்பை சுரண்டி, அநீதியாய் நான் வாழ்ந்த நிலையை எண்ணி மனம் வருந்துகின்றேன்.

நேர்மையின் இறைவா! இறைவனின் திருவுளம் என்பதை உணராது மனைவியின் தவறாக இருக்குமோ என்று ஐயுற்றாலும், அதை பெரிதுப்படுத்தாது, இறை சித்தம் என்று பெருந்தன்மையுடன் வாழ்ந்த புனித சூசையப்பரைப் போல வாழாமல், மனைவியின் சிறு, சிறு குற்றங்களை எல்லாம் பெரிதாக்கி பிளவுப் பட்ட உள்ளத்துடன் வாழ்ந்த என் செயலுக்காக மனம் வருந்துகின்றேன்.

திருக்குடும்பத்தினை ஆசிர்வதிக்கும் அன்பு இறைவா! திருக்குடும்பத்தின் தலைவரான புனித சூசையப்பரின் வாழ்வை உணர்ந்த போதும், அவரைப் போல் பொறுப்புள்ள குடும்பத்தலைவராய் இல்லாது, குடும்பத்தை கவனிக்காது, தான் தோன்றித் தனமாய் வாழ்ந்த என் பாவ நிலைக்காக மனம் வருந்துகின்றேன்.

(மன்னிப்பு கேட்ட நாம் அமைந்த உள்ளத்துடன் சிறப்பாய் சில நேரங்களில் வாழ்ந்த சூழல்களை எண்ணி சூசையின் வழி ஆண்டவரைப் புகழ்வோம்.)

புகழ்ச்சி

பதில் : இறைவா! புனித சூசையின் தோழமையில் உம்மைப் புகழ்கின்றோம்.

பொறுப்புள்ள பெற்றோராய் வாழ்ந்திட வாய்ப்பு தந்த....

உழைப்பே வாழ்வின் முன்னேற்றம் என்பதை உணர்ந்து, தொடர்ந்து உழைக்க நல் மனதையும், உடல் வலிமையையும் தந்த....

குழந்தைகளை பாதுகாப்புடன் வளர்க்கும் இச்சூழலில், நல்ல பாதுகாவலராய் இருந்து, குழந்தைகளின் தேவையை உடனுக்குடன் நிவர்த்தி செய்ய போதுமான பொருளாதார வளத்தை தந்த....

நேரத்தின் அருமைக் கருதி, நேரத்தோடு அனைத்து செயல்களையும், குறிப்பறிந்து செய்வதற்கு போதுமான ஞானத்தையும், விவேகத்தையும், கொடுத்து வழி நடத்தும்....

(நாம் அனைவரும் வாசிக்கப்படும் வாசகத்திற்கு செவி கொடுப்போம்.)

விவிலிய வாசகம்

மத் 1 : 18 — 25

விவிலிய விளக்கம்

இன்றைய நாளில் நாம் புனித சூசையப்பரின் திருவிழாவை சிறப்பிக்கும் இந்த வேளையில், அவரின் பண்புநலன்களை நமதாக்க நாம் அழைக்கப்படுகிறோம்.

புனித சூசையப்பரின் தூய்மைக்கும், நற்பேற்றிற்கும் நிகரானவர் யாரும் இல்லை. அவர் மூவொரு கடவுளால் மகிமைப்படுத்தப்பட்டவர், மேலும் தேவ மகனின் தாயான மரியாவின் கணவராக தேர்ந்தெடுக்கப்பட்டவர் இவர் இயேசுவின் வளர்ப்பு தந்தை, மேலும் இவர் கன்னியர்களின் புகலிடமாகவும், படிக்கும் ஒவ்வொருவருக்கும் பாதுகாவலராகவும் இருந்து வருகின்றார். தாவீது அரசரின் புகழ்பெற்ற மைந்தரான இவர் நீதியின் தூதன், உத்தம கீழ்ப்படிதலும், பொறுமையும் கொண்டவர். திருக்குடும்பத்தின் தலைவரான இவர் நம்முடைய குடும்பத்திற்கும், கல்விக்கும் பாதுகாவலராக இருந்து வருகின்றார். இவ்வாறு நீதி, நேர்மை, உண்மை, அமைதி, கீழ்ப்படிதல் என்னும் தலை சிறந்த பண்புகளுடன் சிறந்து விளங்கினார். எனவே இத்தகைய பண்பு நலன்களைக் கொண்ட தந்தையிடம் அருள் ஆசீர் வேண்டி அமைதியில் தியானிப்போம்.

பாடல்

மாநிலம் போற்றிடும் மாவளனே திருமாமரி காவலனே

(புனித சூசையை தன் மகனுக்கு வளர்ப்புத்தந்தையாய் அளித்த இறைவனிடம் நமது விண்ணப்பங்களை சமர்ப்பிப்போம்.)

மன்றாட்டு

அமைதியின் தூதரே இறைவா!

உலகெங்கிலும் பரவியுள்ள எம் திருச்சபையையும் இத்திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், அருட்சகோதரிகள் ஒவ்வொருவரையும் நிறைவாக ஆசீர்வதியும். அவர்களுக்கு உடல் உள்ள சுகம் தர வேண்டுமெனவும், தங்கள் பணியை நிறைவாக செய்து அதில் மகிழ்வை கண்டிடவும், ஒவ்வொரு நாளும் திருச்சபையின் வளர்ச்சிக்கு எதிராக வரும் அனைத்து தடைகளையும் தகர்த்தெறிந்து அமைதியான முறையில் தொடர்ந்து பயணிக்க வேண்டிய வரங்களை தந்தருள உம்மை மன்றாடுகிறோம்.

நீதியின் வடிவே இறைவா!

எம் நாட்டை ஆளும் தலைவர்களுக்காக மன்றாடுகின்றோம். அவர்கள் அனைவரும் மக்கள் நலனில் அக்கறைக் கொண்டு நாட்டுக்காக உழைக்கவும், தாங்கள் எதற்காக தேர்தெடுக்கப்பட்டார்களோ, அதனை உணர்ந்து பிறர் நலத்துடன் வாழவும், புனித சூசையினுடன் உம் மகன் கிறித்து, தனது வாழ்வையே காணிக்கையாக்கி, அன்பு செய்து பகிர்ந்து வாழ்ந்தது போன்று நல்ல மனதினை நாங்களும் பெற வேண்டும் என்று உம்மை மன்றாடுகிறோம்.

படிப்பின் பாதுகாவலரே எம் இறைவா!

இயேசுவின் வளர்ப்புத்தந்தையின் பெயரை தாங்கி இயங்கிக் கொண்டிருக்கும் நிறுவனங்களையும், அந்த நிறுவனங்களில் தங்கி படிக்கும், பணிபுரியும் ஒவ்வொருவரையும் உமது கரங்களில் காணிக்கையாக்குகின்றோம். அவர்கள் அனைவரும் அன்பில் வளர்ந்து அமைதியாக வாழவும் பண்பிலும், பகிர்விலும் சிறந்திடவும் படிப்பில் ஓங்கிடவும் தேவையான வரம் தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

கன்னியர்களின் காவலரான அன்பு இறைவா!

உலகெங்கிலும் பரவியுள்ள குடும்பங்களையும் அவர்களால் வளர்த்தெடுக்கப்படும் ஒவ்வொரு குழந்தையையும் நிறைவாக ஆசீர்வதித்து, அவர்களுக்கு நல்லதொரு எதிர்காலத்தை தந்திடவும் தங்களுக்கு கிடைக்கும் வாய்ப்புகளை பயன்படுத்தி வாழ்வில் வளம் பெறவும் தேவையான வரங்களை தந்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்.

பாடல்

வான் போற்றும் மலரே சூசை முனியே
என் தெய்வத் தந்தையென்றும்

கர்த்தர் கற்பித்த செபம்

இறுதி செபம்

எல்லாம் வல்ல இறைவா! அனைவர்க்கும் மீட்பராகிய இயேசுவை, புனித சூசையப்பரின் பொறுப்புமிக்க அருட்காவலில் ஒப்படைத்து உம் திருமகனின்

மீட்புப் பணியில் அவருக்குப் பங்களித்தீரே. புனித சூசையப்பரின் வழிகாட்டுதலாலும் வேண்டுதலாலும் உமது திருச்சபை உலகில் அந்த மீட்புப் பணியை தொடர்ந்து ஆற்றச் செய்தருளும். எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

ஆண்டவர் நம்மை ஆசிர்வதித்து. தீமை அனைத்தினின்றும் பாதுகாத்து முடிவில்லா வாழ்வுக்கு அழைத்துச் செல்வாராக. - ஆமென். ஆண்டவரைப் போற்றுவோம். இறைவா உமக்கு நன்றி!

சகோ. S. சகாயம் FSAG

6. பரிசுத்த ஆவி பெருவிழா

முன்னுரை

தந்தையின் அன்பை வெளிப்படுத்த இயேசு இவ்வுலகிற்கு வந்தது போல தந்தையும் மகனும் நம்மேல் கொண்ட அன்பை. வார்த்தையால் விவரிக்க முடியாத உன்னத அன்பை. இந்த ஆவியானவர் நம்மேல். நம் இதயத்தில் ஊற்றுகிறார்.

நாம் நம்முடைய மனித எண்ணத்தில் இல்லாமல். தூய ஆவியாரின் எண்ணத்தில் இருக்க வேண்டும். நம்முடைய எண்ணம் என்பது எல்லாம் தனக்கு தனக்கு என்று நம்மை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கும். ஆனால் தூய ஆவியாரின் எண்ணமோ பிறரின் தேவையை. பிறரின் நலனைக் கருதியே இருக்கும். ஆகவே நாம் சோர்ந்த வேளையில். வியாதியில் குழப்பத்தில். மனச் சோர்வில். மரண வேளையில் தூய ஆவியானவரிடம் செபிக்கும் போது நமக்குத் தேவையான ஞானம். புத்தி. அறிவு. விமரிசை. திடம். பக்தி. பற்றுறுதி போன்ற வரங்களையும் அன்பு. மகிழ்ச்சி. பரிவு. இரக்கம். பொறுமை. நன்னயம். தன்னடக்கம் போன்ற கனிகளையும் பெற்று நமக்கும். பிறருக்கும் பயன்படும் வழியில் வாழ தூய ஆவியாம் இறைவனிடம் வரம் கேட்போம்.

மூவொரு இறைவனுக்கு வாழ்த்து

பாரினை ஆளும் பரம் பொருளே எம் இறைவா! உம்மை ஆராதிக்கின்றோம். எல்லா படைப்புக்களையும் எங்களுக்காகவே படைத்து எங்களை ஆளச் செய்ததற்காக உம்மை வணங்குகின்றோம். எங்கள் எண்ணங்களில் எழும் விண்ணப்பங்கள் அனைத்தையும் அறிந்து அதனை நாளும் நிறைவு செய்து வருகின்றமைக்காக உமக்கு நன்றி செலுத்துகின்றோம். நிலையற்ற இவ்வுலகில் நிலைத்து நிற்பது உம் பேரன்பு மட்டுமே என்பதை உணர வைத்தவரே உம்மை புகழ்கின்றோம்.

அன்பும். பாசமும். பரிவும் நிறைந்த இயேசுவே இந்த நாளுக்காக உம்மை ஆராதிக்கின்றோம். தந்தையின் கட்டளைகளுக்கு கீழ்படிந்து நடந்தவரே உம்மை வணங்குகின்றோம். உமது பணியை தொடங்குவதற்கு முன் தந்தையோடு ஒன்றித்தவரே உம்மை புகழ்கின்றோம். எல்லா நேரங்களிலும் தந்தையிடம் எங்களுக்காக பரிந்து பேசி எங்களின் விண்ணப்பங்களை நிறைவேற்றியவரே உம்மை புகழ்கின்றோம்.

பரிசுத்த ஆவியே. எங்களின் தேவைகளில் துணையாக வந்தவரே உம்மை ஆராதிக்கின்றோம். என்ன பேசுவது. எப்படி பேசுவது? என்று திகைப்புற்ற வேளைகளில் எங்களுடன் உடன் நடந்தவரே உம்மை வணங்குகின்றோம். வழியும். ஒளியும். வாழ்வும் வழியுமானவரே உம்மை புகழ்கின்றோம் உமக்கு நன்றி செலுத்துகின்றோம்.

பஜனை

பரிசுத்த ஆவியே வாரும் - எங்கள்
பரம் பொருள் தெய்வமே வாரும்

மனத்துயர்

அன்பின் ஆண்டவரே தூய ஆவியின் துணையால் தான் நாங்கள் வாழ்கின்றோம் என்பதை உணர மறந்தமைக்காக ஆண்டவரே மனம் வருந்துகிறோம்.

பாசமிக்க ஆண்டவரே ஒருவருக்கொருவர் மனத்தாங்கலை ஏற்படுத்திக் கொண்டு. பிறரின் மனதை காயப்படுத்திய குற்றத்திற்காக மனம் வருந்துகிறோம்.

கருணையின் ஊற்றாம் இறைவா. தூய ஆவியின் கொடைகளுக்கும். கனிகளுக்கும் எதிராக செய்த குற்றத்திற்காக மனம் வருந்துகிறோம்.

இரக்கம் நிறைந்த எம் இறைவா. தூய ஆவியை நாங்கள் பழித்த தருணங்களை எண்ணி அதற்காக மனம் வருந்துகின்றோம்.

மன்னிப்பால் நிறைந்த நமது இதயம் அமைதியில் மகிழ்வதை உணர்ந்த நாம். இறைவனைப் புகழ்வோம்.)

புகழ்ச்சி

ஆவியாம் இறைவா எங்கள் ஒவ்வொருவருக்கும் வாழ்வு கொடுத்து. அமைதி. அன்பு இரக்கத்தை தந்தமைக்காக

பாடல் : உம்மைப் போற்றுகின்றோம். உம்மை புகழுகின்றோம். நன்றி கூறுகின்றோம்.

உழைத்திட நல்ல கரங்களையும். பார்த்திட நல்ல கண்களையும். நேசித்திட நல்ல இதயத்தையும் தந்தவரே உம்மை போற்றுகின்றோம்.

கல்லான எம் இதயத்தை எடுத்துவிட்டு கனிவுள்ள இதயமாக எம்மை மாற்றியவரே உம்மை புகழ்கின்றோம்.

தாய் எம்மை மறந்தாலும் நீர் எம்மை மறக்காமல். உமது ஆவியால் எம் உள்ளத்தை நிரப்பியவரே உம்மை புகழ்கின்றோம்.

விவிலிய வாசகம்

எபேசியர் 4 : 3 — 6

விவிலிய விளக்கம்

மூவொரு இறைவன் ஒற்றுமைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. நாம் அனைவரும் ஒரே குறிக்கோளுடன் வாழ அழைக்கப்பட்டிருக்கின்றோம். நமது உடல். தூய

ஆவி, நம்பிக்கை, திருமுழுக்கு அனைத்தும் ஒன்றே. தந்தையும், மகனும், தூய ஆவியும் ஒன்றாக இணைந்து செயலாற்றுவது போல நாமும் நம்முடைய வாழ்வில் இம்மூன்று ஆட்களையும் பிரதிபலிக்க வேண்டுமென்றால் நமக்குள்ளும் ஒற்றுமையுணர்வு இருக்க வேண்டும். நாம் பல மொழிகள், சாதிகள், இனங்கள் வாழும் நாட்டில் வாழ்கின்றோம். நம்முடைய எடுத்துக்காட்டான வாழ்வு பிறருக்கு ஒரு வெளிச்சமாகவும், துணையாகவும் இருக்க வேண்டும். கடவுள் எல்லோருக்கும் மேலானவர்: எல்லோர் மூலமாகவும் செயலாற்றுபவர்: எல்லோருக்குள்ளும் இருப்பவர் என்பதை நமது வாழ்வின் மூலம் வாழ்ந்து காட்டுவோம். தூய ஆவியின் அருளால் நிரப்பப்பட்டவர்களாய் தூய்மையான வாழ்வை வாழ்வோம். ஆவியின் வழிகாட்டுதலில் வெளிச்சமானப் பாதையில் தடம்பதிப்போம்.

(அமைதியாக செபித்தல்)

பாடல்

கலங்காதே என் நெஞ்சமே – 2
கர்த்தர் இயேசு அன்பு செய்ய
காலமெல்லாம் காத்திருக்க
கலக்கம் ஏன் நெஞ்சமே – நெஞ்சமே
கலக்கம் ஏன் நெஞ்சமே

மன்றாட்டு

அன்பின் ஆவியானவரே எங்கள் அனைவரையும் இருளில் இருந்து ஒளிக்கு அழைத்துச் செல்லும். நாங்கள் வெறுப்புணர்வை அகற்றி அன்பாக வாழவும், கவலையை மறந்து மகிழ்ச்சியுடன் வாழவும் தேவையான வரத்தை தர வேண்டும் என்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

பதில் : தந்தாய் உந்தனின் ஆசீர் எம்மேல் தங்கிடுக.

தூய ஆவியானவரே நாங்கள் ஒவ்வொருநாளும் புத்துணர்வு பெற்று புதுவாழ்வு வாழவும் பிறரையும் வாழவைக்கவும் உமதருளை தரவேண்டும் என்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

ஆண்டவரே நீர் உமது தூய ஆவியை திருத்தூதர்களின் மேல் ஊதி பாவமன்னிப்புக்கான அதிகாரத்தை வழங்கினீர். இன்னும் பாவ நிலையிலே உழன்று கொண்டிருக்கும் உமது மக்களை மீட்டருள வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

பரிவுள்ளம் கொண்ட எம் இறைவா. உலகெங்கும் சென்று படைப்புக்கெல்லாம் நற்செய்தி அறிவித்து, நம்பிக்கை அற்ற மக்கள் மத்தியில் உமது அன்பையும், நம்பிக்கையையும் தருகின்றவர்களாக வாழ அருள் தரவேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

துன்புற்று, துயரினில் வாடும் ஒவ்வொருக்கும் நீர் தாமே துணையாகவும், வழிகாட்டியாகவும் இருந்து அவர்களை வழிநடத்த தேவையான அருளைத் தரவேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

பாடல்

நன்றியால் துதிபாடு நம் யேசுவை
நாவாலே என்றும் பாடு — 2

கர்த்தர் கற்பித்த செபம்

இறுதி செபம்

என்றும் வாழும் எல்லாம் வல்லவரே, நீர் எல்லோருக்கும் மேலானவர், எல்லோர் மூலமாகவும் செயலாற்றுபவர், எல்லோருக்குள்ளும் இருப்பவர் என்பதை உணர ஆற்றலைத்தாரும். மேலும் தூய ஆவியாரின் கொடைகளை அனைத்து உள்ளங்களிலும், பொழிந்து வழிநடத்தும். எல்லா உலகினரையும், மொழியினரையும் உமது பெயரில் நம்பிக்கை கொண்டு வாழ உதவி செய்தருள வேண்டுமென்று எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.

ஆண்டவர் நம்மை ஆசிர்வதித்து, தீமை அனைத்தினின்றும் பாதுகாத்து, முடிவில்லா வாழ்வுக்கு அழைத்துச் செல்வாராக. - ஆமென். ஆண்டவரைப் போற்றுவோம். இறைவா உமக்கு நன்றி!

சகோ. ச. ரபேக்காள் FSAG

7. இயேசுவின் திருவுடல் திரு இரத்த பெருவிழா

முன்னுரை

அன்பே வடிவான இறைவன் தம் அன்பை பகிர்ந்தளிக்க, மனிதனை உருவாக்கினார். மனிதனும் இறைவனும் ஒன்றாய் இன்பமாய் இருந்ததை பாவத்தால் பிரித்தான் தீயவன். இறைவனுக்கும் மனிதனுக்கும் உள்ள உறவு பிளவுபட்டதை நினைத்து, மனிதன் மேல் கொண்ட பேரிரக்கத்தால், வார்த்தையாயிருந்த கடவுள் மானிட மகனாய் நம்மிடையே குடிகொண்டார். இம் மானிட மகன் மரித்து அப்ப வடிவில் நற்கருணையில் உருமாறியிருக்கிறார். இந்நற்கருணையே, கிறிஸ்துவ வாழ்வின் மையம் என்பதை நமக்கு சுட்டிக் காட்டுகிறார். நமது பாவங்களுக்கு ஏற்ற பரிகாரமாக இந்நற்கருணை நமக்குத் திகழ்கிறது.

"இதை என் நினைவாகச் செய்யுங்கள்" என்று கூறி நமக்காக ஏற்படுத்திய "நற்கருணை" உடன்படிக்கையின் வாழ்வாகவும் பாவிகளோடும், பழிக்கப்பட்டவரோடும் பந்தியமர்ந்த வாழ்வாகவும், பணியாளராக தொண்டு செய்த வாழ்வாகவும் தன்னையும் தனக்குள்ளதையும் பகிர்ந்தளித்த வாழ்வாகவும், இறைமக்களின் மீட்புக்காக தன்னையே பலியாக்கிய வாழ்வாகவும் இந்நற்கருணை நமக்கு திகழ்கிறது, ஆகவே நாமும் இந்நற்கருணையில் உள்ள இயேசுவைப் போல பிறரோடு அன்பு கொண்டு வாழ நற்கருணை நாதரிடம் வரம் கேட்போம்.

மூவொரு இறைவனுக்கு வாழ்த்து

அகரமும் னகரமுமான தந்தையே! முதலும் முடிவுமான தந்தையே விண்ணிற்கும் மண்ணிற்கும் ஆண்டவரே! எங்கள் வாழ்க்கை தொடங்குவதற்கும், முடிவதற்குமான தந்தையே.! எங்களைத் தாயின் வயிற்றில் உருவாக்கிய தந்தையே.! பரலோகத்தின் தந்தையே, புனிதர், புனிதர் என அனைவராலும் போற்றப்படும் தந்தையே! உம்மை போற்றுகின்றோம், புகழ்கின்றோம், ஆராதிக்கின்றோம்.

வார்த்தையில் மனுவுருவான இயேசு ஆண்டவரே! விண்ணிலுள்ளோர், மண்ணிலுள்ளோர் அனைவரும் இயேசுவே ஆண்டவர் என அறிக்கையிடும் ஆண்டவரே, நற்கருணையில் வாழும் நல்ல நாதரே, நானே வாழ்வு தரும் உணவு என்றவரே, நானே வழி என்று எங்களை வழிநடத்துபவரே உம்மை போற்றுகின்றோம், புகழ்கின்றோம், ஆராதிக்கின்றோம்.

ஆதியிலே நீர்திரளின் மேல் அசைந்தாடிக் கொண்டிருந்த தூய ஆவியே, இயேசு ஞானஸ்நானம் பெற்றபோது இவரே என் அன்பார்ந்த மகன் என்று உரைத்த ஆவியானவரே, திருத்தூதர் மேலும் அன்னை மரியாள் மேலும் இறங்கிய ஆவியானவரே, எங்கள் மீது இந்த வேளையில் இறங்கப் போவதற்காய் உம்மை போற்றுகின்றோம், புகழ்கின்றோம், ஆராதிக்கின்றோம்.

பஜன்

இயேசு உன் பாதத்தில் அமர்ந்திடவே
ஆசை நான் வளர்த்தேன் அருள்வாயே

மனத்துயர்

பதில் : நற்கருணை நாதரே எங்களை மன்னியும்.

"இதை என் நினைவாகச் செய்யுங்கள்" என்று கூறி உம்மையே இழந்து, எங்களுக்கு உணவாய் நற்கருணையின் வழியாய் வந்தீர். ஒவ்வொரு முறை நாங்கள் நற்கருணை வாங்கும் போதும், பரிசுத்த இதயமில்லாமல் வாங்கியதற்காய்.... நாங்கள் உம்மிடம் மன்னிப்பு கேட்கின்றோம்....

"இது என் உடன்படிக்கையின் இரத்தம், பலருடைய பாவங்களுக்காக சிந்தப்படும் என்று சொன்ன இயேசுவே நாங்கள் பல முறை பிறரிடமும், உம்மிடமும் நல்ல உடன்படிக்கை இல்லாமல் வாழ்ந்ததற்காக....

நீர் உம் திரு உடலை எங்களுக்காக பகிர்ந்து கொடுத்தீர், ஆனால் நாங்களோ எங்களிடமுள்ள அன்பு, கனிவு, இரக்கம் போன்ற பண்புகளை பிறரிடம் பகிர்ந்து வாழாமல் இருந்ததற்காக....

அப்பம் ஒன்றே ஆதலால் நாம் பலராயினும் ஒரே உடலாய் இருக்கின்றோம் என்ற இறைவார்த்தையின்படி வாழாமல் எங்களிடையே பிளவு, சண்டை, விவாதம், குழப்பம், வருத்தம் கோபம் போன்ற பாவங்களில் ஈடுபட்டதற்காக...

(நற்கருணை ஆண்டவரின் மன்னிப்பைப் பெற்று பாவத்திலிருந்து கழுவப்பட்டவர்களாய், தூய இதயத்துடன் இறைவனைப் புகழ்வோம்.)

புகழ்ச்சி

இயேசுவே எங்கள் மேல் இறுதிவரை அன்பு கொண்டிருந்ததால் எங்களுக்கு உமது உடலையும் இரத்தத்தையும் கையளித்தீர் அதற்காக உம்மைப் புகழ்கின்றோம்.

நற்கருணையில் நீர் நாள்தோறும் எழுந்தருளி, எங்கள் மத்தியில் பிரசன்னமாவதற்காய் உம்மை புகழ்கின்றோம்.

அன்பு இயேசுவே நற்கருணை என்பது விசுவாசத்தின் மறைபொருள் என்பதை நாங்கள் கண்டுபிடிக்க செய்ததற்காய் உம்மை புகழ்கின்றோம்.

"நானே வானின்று இறங்கி வந்த உணவு" இதை யாராவது உண்டால் அவன் என்றுமே வாழ்வான் என்று சொல்லி எங்களுக்கு ஆன்ம உணவாக நீர் மாறியதற்காய் உம்மை புகழ்கின்றோம்.

(உன்னதராம் இறைவனைப் புகழ்ந்து பாடுவோம்.)

பாடல்

பாடுங்கள் ஆண்டவர்க்கு புதியதோர்
பாடல் பாடுங்கள் அல்லேலூயா அல்லேலூயா

விவிலிய வாசகம்

மாற்கு 14 : 22 — 24

விவிலிய விளக்கம்

இறையாட்சியின் நேரம் வரும் வரை காத்திருந்த இயேசு கிண்ணத்தை எடுத்து கடவுளுக்கு நன்றி செலுத்துகிறார். துன்பமான சூழ்நிலை வந்த போதும் முதலில் இறைவனுக்கு நன்றி செலுத்துகிறார். நமது வாழ்க்கையில் வரும் துன்பங்களை முதலில் இறைவனுக்கு நன்றி செலுத்தி ஒப்புக்கொடுக்கும் போது அது நமக்கு சுமையாக மாறாது. நம்மிடமுள்ள எல்லாவற்றையும் பிறருக்காக பகிர்ந்து கொடுத்து இயேசு கொண்டுவந்த புதிய உடன் படிக்கையின் படி வாழ முடியும். அப்பத்தை நாம் உண்ணும் போது அவருடைய வாரிசுகளாக மாறுகிறோம்.

பழைய ஏற்பாட்டில் ஏற்படுத்திய "பாஸ்கா உணவு" அடிமைத்தனத்திலிருந்து வாக்களிக்கப்பட்ட விடுதலை வாழ்வுக்கு கடந்து சென்ற மாபெரும் நிகழ்ச்சியை குறிக்கிறது. புதிய பாஸ்காவோ பாவ வாழ்க்கையிலிருந்து புண்ணிய வாழ்வுக்கு வழிகாட்டுகின்ற ஒன்றாக உள்ளது.

இயேசு தன்னை முழுவதும், உலகம் வாழ்வு பெறும் பொருட்டு, அதுவும் நிறைவாழ்வு பெறும் பொருட்டு வழங்கினார். எளிய அப்ப, இரச குணங்களில் தம்மை மறைத்துக் கொண்டார். இயேசுவைப் போல் பிறர் நிறை வாழ்வு பெற நம்மை இழக்க முற்படுவோம். எளிய மனது, எளிய வாழ்வு நமது சொந்தமாகட்டும்.

அமைதியாக செபித்தல்.

பாடல்

இதை என் நினைவாய் செய்யமாட்டாயா
என் உடலை உண்டு உயரமாட்டாயா

மன்றாட்டு

அமைதியுடன் இருந்து, நான் கடவுள் என்று உணர்ந்து கொள்ளுங்கள்" என்று கூறியவரே நீரே உண்மையான கடவுள் என்பதை ஒவ்வொரு நிமிடமும் நாங்கள் உணர்ந்து வாழ உம்மை மன்றாடுகிறோம்.

எனது சதையை உண்டு, என் இரத்தத்தைக் குடிப்பவர் நிலைவாழ்வு கொண்டுள்ளார் என்று சொன்னவரே நாங்கள் எப்போதும் நிலைவாழ்வு வாழ தூய்மையான உள்ளத்தில் நிதம் உம்மை ஏற்றுக் கொள்ள அருள் வரம் தருமாறு உம்மை மன்றாடுகின்றோம்.

பிறருகாய் உம்மைப் பகிர்ந்து, பிறர் வாழ்வில் மனம் மகிழ்ந்தவரே, தீமைகளிலிருந்து விலகி நிற்கவும், சோதனையை எதிர்த்து போராடவும், பிறரை மன்னித்து நட்புறவுடன் வாழவும் உம்மை மன்றாடுகின்றோம்.

நோயுற்றோர், அநாதைகள், கைவிடப்பட்டோர், ஏழைகள், கைம்பெண் போன்றோருக்கு ஏற்ற துணையாக இருந்து அவர்கள் வாழ்வு பெற, நாங்கள் வாழ்வை இழக்க வரம் தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்.

உமது இறையாட்சிப் பணியினை இவ்வுலகில் செய்து கொண்டிருக்கும் அனைவரையும் ஆசிர்வதித்து, வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

இன்றைய விழா நாளினைக் கொடுத்து, ஆசிர்வாதங்களால் நம்மை நிறைத்தவரை மகிழ்வாய் நன்றிப்பாடல் இசைத்து வாழ்த்துவோம்.

பாடல்

நன்றிப்பாடி நன்றிப்பாடி நாதனைப் போற்றிடுவோம்
நாளும் அவரின் வல்ல செயலுக்கு நன்றிப்பண் பாடிடுவோம் - 2
நன்றி, நன்றி எம் இயேசுவே உமக்கு நன்றி

கர்த்தர் கற்பித்த செபம்

இறுதி செபம்

ஆண்டவராகிய இயேசுவே! எங்களுக்கு வழங்கிய வாக்குறுதியான ‘எனது சதையை உண்டு எனது இரத்தத்தைக் குடிப்போர் என்னோடு இணைந்திருப்பர் நானும் அவர்களோடு இணைந்திருப்பேன்’ என்பதை நினைத்து மகிழ்கின்றோம்

...எங்களோடு இணைந்திருப்பது ஒரு மாபெரும் செயல். தொடர்ந்து ஊட்டமுள்ள ...நற்கருணை உணவால், பிரசன்னத்தால் எங்களை ஆசிர்வதியும் ஆமென்.

ஆண்டவர் நம்மை ஆசிர்வதித்து, தீமை அனைத்தினின்றும் பாதுகாத்து, ...வில்லா வாழ்வுக்கு அழைத்துச் செல்வாராக. - ஆமென். ஆண்டவரைப் ...போற்றுவோம். இறைவா உமக்கு நன்றி!

சகோ. ச. ரபேக்காள் FSAG

8. இயேசுவின் திருஇருதய திருநாள்

...ன்னுரை

இதயம் எப்போதும் அன்புக்கு அடையாளமாக்கப்படுகிறது. பல நேரங்களில் ...ங்கள் பேசிக்கொள்ளும் போது நாம் செவிகளை துளைக்கும் வார்த்தை உன் இதயம் என்ன கல்லா? அப்படியே ஜடம் மாதிரி நிக்கிற. அதோ அங்க இருக்கிறாங்களே ...வங்க இதயம் ஒரு இரும்பு. வலைக்கவே முடியாது இந்தப் பேச்சையும் கே...டிருப்போம். ஆக மொத்தம் இதயம் என்றவுடன் அது அன்புக்கு ...ஒப்பிட்டுப்பார்க்கப்படுகிறது. இதற்கு கராணம் இல்லாமல் இல்லை.'கல்லான இதயத்தை ...நீக்கிவிடு என்னை கனிவுள்ள நெஞ்சுடனே வாழ விடு......இந்த பாடல் வரிகள் இதயம் பல நேரங்களில் கடினமாய் கல்லாகி இருப்பதை சுட்டிக்காட்டுகிறது. இன்று உங்கள் இதயத்தை கடினப்படுத்திக்கொள்ளாதீர்கள். மாறாக ஆண்டவரின் ...குரலுக்கு செவி கொடுங்கள். அப்படியென்றால் கல்லாகவும், கடினமாகவும் ஆகும் போது அதன் செயல் ஏற்புடையதாய் இல்லை என்பது புலனாகின்றது. ஆனால் நம் ...வர் இயேசுவின் இதயத்தை உற்று நோக்கும் போது அது உயிருள்ள இதயமாக இருப்பதை பார்த்து பரவசமடைய முடிகிறது. அந்த இறைவன் அன்பானவர் அதனால் தன் ஒரே பேரான மகனை இவ்வுவலகிற்கு அனுப்பினார். அதே அன்பை ...ந்தவராய் மகன் கிறிஸ்துவும் மண்ணுலகில் மானிடர் மத்தியில் தோன்றினார்." அவர் ...து இதயத்தைத் திறந்துக்காட்டி மனிதர்களை அளவற்ற விதமாக அன்பு செய்யும் ...னது இதயத்தைப் பார் என்றும், நமது திரு இருதய அன்பில் நிலைத்திருப்பவர்களின் குடும்பங்களில் சமாதானத்தையும், அனைத்து துன்ப துயரங்களில் ஆறுதலையும், தொடங்குகின்ற அனைத்துக்காரியங்களிலும் அனுகூலத்தையும் பொழிந்தருள்வேன் என்று கூறியுள்ளார்.

நம் ஆண்டவர். இயேசு அன்பினால் உந்தப்பட்டவராய் தாம் சென்றவிடமெல்லலாம் நன்மையே செய்தார். இயலாதவர்களை கனிவோடு அனுகினார், பாவிகளை வாஞ்சையாய் அரவணைத்தார், முடியாதவரை கண்ணுற்ற போது முடியும் என்ற நம்பிக்கையையூட்டி தேற்றினார், ஒதுக்கப்பட்டவர்கள், ஓரம் கட்டப்பட்டவர்கள், பெண்கள், சிறார்கள், பாவிகள் மட்டில் தனி அன்பு கொண்டார். அன்பினால் உந்தப்பட்ட அவர் பாவிகளை தண்டிப்பதைவிட அக்கறையுடன்

அவர்கள் இருக்கும் நிலையில் ஏற்றுக்கொள்ளும் போது. அவர்களை அன்பு செய்யும் போது அவர்கள் மனம் திருந்துவார்கள் என்பதை மெய்பித்துக்காட்டினார். பெரும்பாடுள்ள பெண் குணமடைந்தாள். 38 ஆண்டுகள் முடக்குவாத நோய் கண்டவன் குணம் பெற்றான். பேச முடியாதவர் பேசினர். நடக்க இயலாதவர் நடந்தனர். செவி திறவாதவர் செவி திறக்கப்பட்டனர். கண் பார்வை அற்றவர் பார்வை பெற்றனர். பாவ வாழ்வு வாழ்ந்தவர் மனம் திருந்தினர். திருந்தியதோடு திருமகன் இயேசுவுக்கு சாட்சியாக வாழ்ந்தார். பசியோடு மூன்று நாள் அமர்ந்து தனது போதனையைக் கேட்டவரின் பசியை தாயன்போடு தீர்த்தார். திருமண விழாவில் தன் நேரம் வராத போதும் தன் தாய் கேட்ட உதவியை தட்டாமல் செய்து இக்கட்டான நிலையில் உதவினார். காட்டிக்கொடுக்க இருந்த யூதாசுக்கும் மன்னிப்பளித்து. இறுதி இராவுணவில் பங்குஅளித்தார். தன்னை மறுதலித்த இராயப்பரை ஏற்றுக்கொண்டார். தன்னை விட்டு ஓடிப்போன சீடர்களை மீண்டும் தேடி வந்து தூய ஆவியை அனுப்பினார். இவையெல்லாம் ஆழம். அகலம். நீளம் என எல்லை காண முடியாத இயேசுவின் திருஇதய அன்பின் செயல்பாடுகளிலிருந்து வெளிப்பட்ட நன்மைத்தனங்கள். தந்தையின் அன்பை சுவைத்தவர். வளர்ப்புத் தந்தை சூசையின் அன்பை சுவைத்தார். தாய் மரியாளின் அன்பு அரவணைப்பில் மகிழ்ந்தவர். நண்பர்கள் லாசர். மார்த்தாள். மரியாள் குடும்பத்தில் ஆறுதலைப்பெற்றவர். திருத்தூதர்கள். சீடர்கள் இவர்களிடம் தோழமையை அனுபவித்தவர் இவர்களுடன் மட்டுமே என்று தன் எல்லையை சுருக்கிக்கொள்ளவில்லை மாறாக தான் உலகில்வாழும் எல்லோருக்கும் உரியவர் என்பதை நிரூபித்தார். அதனால். புறவினத்தார் மத்தியிலும் பணி செய்தார். இறையாட்சியின் மதிப்பீடுகளை அவர்கள் உள்ளத்திலும் விதைத்தார். இயேசுவின் அன்பு இதயம் செய்த செயல்களை கண்ணுறும் நாம் இந்த ஒரு மணி நேர செப வழிபாட்டில் ஆழமாய் அவரது அன்பு செயல்களை உற்று நோக்குவோம். அவர் அன்பை நாமும் சுவைப்போம். சுவைத்ததை நாம் சந்திக்கும் எல்லோருக்கும். சிறப்பாய் ஒதுக்கப்பட்டவர்களுக்கு. விளிம்பு வாழ் மக்களுக்கு. வலுவிழந்தோர்க்கு. தாரளமாய் வழங்குவோம். பயனுள்ள விதத்தில் இந்த நேரத்தை செலவிடுவோம். இறை ஆசீர் பெற்று செல்வோம்.

மூவொரு இறைவனுக்கு வாழ்த்து

பாரினை ஆளும் பரம்பொருளே இறைவா! உம் எல்லையில்லாத அன்பினால் உம் ஒரேப்பேறான மகனை இவ்வுவலகிற்கு அனுப்பி உலகை மீட்கத் திருவுளம் கொண்டீர். இந்த உம் பேரன்புக்காக உம்மை போற்றுகின்றோம்இருகரம்

விரித்து இதயத்தால் நாங்கள் இருக்கும் நிலையிலேயே எங்களை அரவணைத்து காத்துக்கொண்டிருக்கும் அன்பு இயேசுவே! உம்மைப் போற்றுகின்றோம்.

ஆவியாம் இறைவா! தந்தை இறைவனின் அன்பையும், மகன் இயேசுவின் அன்பையும் இணைத்துப்பார்த்து அதன் பலன்களில் நாங்கள் தொடர்ந்து மகிழ்திட உம் ஆவியால் எங்களை இயக்கிக்கொண்டிருக்கும் உம் மேலான வழிகாட்டுதலுக்காக உம்மைக் போற்றுகின்றோம்.

தந்தை, மகன், தூய ஆவியாகிய மூவொரு இறைவா அன்பினால் எழுப்பப்படும் தூய உள்ளம் கொண்டு நாங்கள் வாழ அனுதினமும் எங்களுக்கு வழித்துணையாய் வரும் உம் பாசத்திற்காக உம்மைப் போற்றுகின்றோம்.

(இதயங்கள் ஒன்றிணைந்து செபிக்கும் இந்த நேரத்தில் கடினமானத் தன்மைகள், இறுகியத் தன்மைகள் மறைந்து மெல்ல ஆண்டவருக்குள் நம்மை இணைத்துக்கொள்ள பாடப்படும் பஜனையில் நம்மை மறந்து ஆண்டவரை போற்றுவோம்.)

பஜனை

மெல்ல மெல்ல மனதில் நீ நுழைவாய்
நல்ல நிலமாய் நான் பலன் தருவேன் - 2

(சில நிமிடம் அமைதியை காப்போம்)

(இதயம் அன்பை வெளிப்படுத்த உதவும், ஒரு உன்னதமான உடற்கூறு. அநேக நேரங்களில் ஆண்டவரின் அளவில்லாத இதய அன்பை உணர்ந்த நாம், அந்த நிலையில் நமக்கு அடுத்திருப்பவரை அன்பு செய்ய மறந்திருப்போம், மறுத்திருப்போம். அவைகளை எண்ணி அன்பின் ஆண்டவரிடம் மன்னிப்பு வேண்டுவோம்.)

மனத்துயர்

அன்பு இறைவா தேவை என்று என்னை அணுகியவர்களின் தேவைகளை நிறைவேற்ற வாய்ப்பிருந்த போதும், நிறைவேற்றாமல் புறக்கணித்ததற்காக மன்னிப்பு கேட்கின்றேன். மன்னித்தருளும் இறைவா.

வயதில் மூத்தவர்களை அதிகமாய் அன்பு செய்ய வேண்டும் என அறிந்திருந்தும், அன்பு செய்யாமல், அரவணைக்காமல் இருந்த என் இழிநிலையை எண்ணி மன்னிப்பு கேட்கின்றேன். மன்னித்தருளும் இறைவா.

என்னுடைய நண்பர்கள், பெற்றோர், உற்றார், உறவினர் என்று சுய நலத்துடன் வாழ்ந்து அடுத்திருப்பவரைப்பற்றி அக்கறையின்றி வாழ்ந்துள்ளேன். அதற்காக மன்னிப்பு கேட்கின்றேன். மன்னித்தருளும் இறைவா.

இயற்கைச் சீரழிவுகள் ஏற்பட்ட போது, எத்தனையோ பேருக்கு உதவி செய்ய இறைவன் அழைப்பு விடுத்த போது, சுய நலத்துடன் இருந்து, உதவி செய்ய மறுத்த நிலையை எண்ணி மன்னிப்பு கேட்கிறேன். மன்னித்தருளும் இறைவா.

இயேசுவின் இதய அன்பை நாம் சுவைத்து, பிறர்க்கு வழங்காத தருணங்களுக்கா மனம் வருந்தி, மன்னிப்பு பெற்ற நாம், தூய்மையான இதயத்துடன் அவரை புகழ்வோம்.

புகழ்ச்சி

அன்பின் இறைவா! ஆழமான அன்பை நான் உணர அன்பு பெற்றோர் உற்றார், உறவினர், நண்பர்களை எனக்கு வழங்கிய உம்மை நெஞ்சாரப் போற்றுகின்றேன்.

இரக்கத்தின் இறைவா! அறிவோடு நான் வளர, அருளோடு நான் நிறைய அன்புதனை அளவுக்கதிகமாய் எனக்குவழங்கி நல் வழிப்படுத்திய ஆசிரியர்கள் வழிகாட்டிகளுக்காக உம்மை நெஞ்சாரப் போற்றுகின்றேன்.

இதயம், அன்புக்கு இலக்கணம் என்பதை எனக்கு உணர்த்திய அன்பு ஆண்டவரே எளிய எனது இதயத்தில் உம் அன்பில் அப்ப, இரச வடிவில் எழுந்த மேலான உம் கருணைக்காக உம்மைப் போற்றுகின்றேன்.

தவறு செய்பவர்களை தண்டிப்பதை விட, திருத்த வேண்டும் என்பதை ஆன்றோர் வழி எனக்கு உணர்த்திய இறைவா, நான் தவறும் போது, நல் இதயம் கொண்ட நல்லவர்களைத் தந்ததற்காக உம்மைப் போற்றுகின்றேன்.

பாடல்

இயேசு நாமம் பாடப்பாட பாட
இனிமை பொங்குதே

விவிலிய வாசகம்

மத் 6 : 43 – 48

விவிலிய விளக்கம்

இதயம் அன்பின் இருப்பிடம், இயேசுவின் இதயத்தை நாடுவோர் அனைவரும் மனமுடைந்தோர், வாழ்வில் துயரடைந்தோர், துயரத்தில் வீழ்ந்தோரே, இன்றைய நற்செய்தி பகைவரையும் அன்புசெய் என்பதே! அன்பு செய்யும் போது இதயம் இறைவனின் முழுமையினை உணரும்.

விண்ணக தந்தை நிறைவுள்ளவராய் இருப்பது போல் நீங்களும் நிறைவுள்ளவராய் இருங்கள் என்கிறார். இறைமகன் இயேசு பாவிகளை, தவறு செய்தவர்களை, என்றுமே மனமிரங்கி மன்னிக்க அழைக்கிறார். அவ்வாறே நாம் தவறுகளுக்காக மனமிரங்கும் போதும் நம்மை தனது இதயத்தில் அரவணைத்து மன்னிப்பு அளிக்கிறார்.

பாட்டு

இதய அன்பை நினைத்து பாடுவோம்.

மன்றாட்டு

நம்மை அன்பினால் அரவணைத்து, அருள் ஆசிரை பொழிந்து, தேடி பாதுகாக்கும் இறைவனிடம் நமக்கு தேவையான மன்றாட்டுகளை எழுப்புவோம்.

பதில் : இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

இதய தெய்வமே இறைவா! திருச்சபையை ஆளும் தலைவர்கள் உமது அன்பினை பிறர் உணர உதவி செய்திட வரமருள வேண்டுமென்று...

எல்லாம் வல்ல இதய தெய்வமே இறைவா! மக்களை வழிநடத்தும் அரசியல் தலைவர்களுக்காக மன்றாடுகிறோம். அவர்கள் மக்களை நல்பாதையை காட்டி வழிநடத்திட ஆசீர்வதிக்குமாறு....

இதய தெய்வமே இறைவா! இந்நன்னாளில் உமது இதய அன்பை உணராத மக்களுக்காக செபிக்கிறோம். உமது அன்பை உணர அவர்களுக்கு உமது தூய ஆவியானவரை தந்து ஆசீர்வதித்தருள....

இதய தெய்வமே! இதய நோயால் பாதிப்படைந்து துன்புறும் அனைவரையும் ஆசீர்வதித்து, அவர்களுக்கு மனதிடனையும், உடல் நலனையும் தந்தருள வேண்டுமென்று....

இரக்கத்தின் ஊற்றாகிய இறைவா! பல்வேறு மக்கள் மனமுடைந்து, துயரத்தில் ஆழ்ந்து, குடும்பத்தில் குழப்பத்தாலும், வேலையின்மையாலும் வருந்துகின்றனர். அவர்களை ஆசீர்வதித்து வழிநடத்த....

இளைஞர்களின் நாயகனே இறைவா! இவ்வுலகில் வாழ்ந்து கொண்டிருக்கும் இளைஞர், இளம் பெண்களை கண்ணோக்கும். அவர்கள் பாவத்தின் நிழலிலிருந்து விடுதலை பெற்று உம்மை பின்பற்றி வாழத் தேவையான அருளை தந்தருள....

(இதய அன்பை நாம் சுவைத்து மகிழ தன்னையே முழுமையாய் கையளித்த ஆண்டவர் நமது கூக்குரலுக்கு செவிசாய்கிறார் என்ற நம்பிக்கையில் நன்றி கூறுவோம்.)

புகழ்ச்சி

பதில் : நன்றி கூறுகின்றோம்.

எல்லாம் வல்ல அன்பு இறைவா! உமது இதய அன்பை இந்நாளில் நினைத்து சுவைக்க, உணர வாய்ப்பளித்தமைக்காக....

நாங்கள் எந்த நிலையில் இருந்தாலும் எங்களை மன்னித்து வழிகாட்டும் பரம்பொருளே! பகைவரை அன்பு செய் என்று கூறி அதை வாழ்ந்து காட்டிய உம் பேரன்புக்காக, இறைவா உமக்கு...

ஏழையருக்காய் மனதுருகி அவர் தம் துயர் துடைக்க வேண்டும் என்பதை எங்களுக்கு மாதிரியாக விட்டுச்சென்ற அன்பிறைவா....

தாய், தந்தையை பேணு என்பதை உணரச்செய்து, வயோதிகத்தில் அவர்கள் செய்த பணிகளை மறவாதே என்று கூறி நல்லப்பாதையை நாங்கள் தேர்ந்து கொள்ள வழி செய்த இறைவா,பெற்றோரை காக்க வேண்டுமென்பதை தொடர்ந்து வலியுறுத்தும் உம் தாய்மை உள்ளத்திற்காக....

பாடல்

இறைவன் படைத்த நாளிதே நன்றி நன்றிப் பாடுவோம்.
நன்றி இறைவா (4)

(*சில மணித்துளிகள் அமைதியாய் நன்றி கூறுவோம்.*)

கர்த்தர் கற்பித்த செபம்

இறுதி செபம்

அனைத்தையும் படைத்தாளும் இறைவா! தன்னையே உலகிற்கு ஈன்றளித்த உம் திருமகன் இயேசுவின் திரு இருதயத்தை நினைத்து நாங்கள் பேருவகை கொள்கின்றோம். நீர் எங்கள் மீது வைத்திருக்கும் அதே அன்பை, மாறாத நேசத்துடன் எங்கள் ஒவ்வொருவர் மேலும் பொழிந்து வருகின்ற அளவிடமுடியா நன்மைத்தனங்களை எண்ணி மகிழ்ச்சி கொள்கின்றோம். அவரது குத்தி திறக்கப்பட்ட இதயத்திலிருந்து இரத்தமும், நீரும் வழிந்தோடின. அந்த திறந்த இதயத்திலிருந்து உண்மையான, ஆழமான, தன்னலமில்லாத அன்புத் தீயை நாங்கள் தொடர்ந்து பெற்றுக்கொள்ளவும், நிலைத்த மன அமைதியுடன் நாங்கள் சந்திப்பவர்களுக்கும் எங்களை சந்திப்பவர்களுக்கும் பகிர்ந்து வாழ்ந்திட வரம் தர வேண்டுமென்று உம் மகன் இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.

ஆண்டவர் நம்மை ஆசிர்வதித்து, தீமை அனைத்தினின்றும் பாதுகாத்து முடிவில்லா வாழ்வுக்கு அழைத்துச் செல்வாராக. - ஆமென். ஆண்டவரைப் போற்றுவோம். இறைவா உமக்கு நன்றி!

சகோ. S. சகாயம் FSAG

9. புனித அலோசியஸ் கொன்சாகா – பெருவிழா (ஜூன் ௨௧)

மூவொரு இறைவனுக்கு வாழ்த்து

“தூயோராய் இருங்கள், ஏனெனில் உங்கள் கடவுளும் ஆண்டவருமாகிய நான் தூயவர் என்றுரைத்து (லேவி 19 : 2) தூய்மைக்கு இலக்கணம் வகுத்து தூய்மைக்கு விளக்கமளித்து, இவ்வுலகில் தூய்மைக்கு உருவம் கொடுத்த தந்தையாகிய இறைவா! உம்மை போற்றுகிறோம், ஆராதிக்கிறோம், வணங்குகிறோம், உமக்கு நன்றி கூறுகிறோம்.

மனிதம் புனிதமடைவதற்காக தம் தூய நிலையினின்று இறங்கி வந்து, மாசற்ற வழியை மானிடருக்கு கற்பித்து, புனிதத்திற்கு வாழ்வுகொடுத்த, இறை மகனாகிய இயேசு இறைவா! உம்மை போற்றுகிறோம், ஆராதிக்கின்றோம், வணங்குகின்றோம் உமக்கு நன்றி கூறுகின்றோம்.

மனிதர்கள் யாவரும் அன்றாட வாழ்வில் உடல், உள்ள மாசகற்றி தூயோராய் வாழ்ந்திட அருள்வரங்களை அபரிமிதமாக பொழிந்து கொண்டிருக்கும் தூய

ஒளியாகிய இறைவா! உம்மை போற்றுகின்றோம், ஆராதிக்கின்றோம், வணங்குகின்றோம், உமக்கு நன்றி கூறுகின்றோம்.

புனிதத்தை... படைத்தவரும், புனிதமே உருவானவரும், புனிதத்தை பகிர்ந்தளிப்பவருமான மூவொரு இறைவா! உம்மை போற்றி ஆராதித்து வணங்கி நன்றி கூறுகிறோம்.

புனிதருக்கு வணக்கம்

இத்தாலியின் வடபகுதியில் காஸ்திக்கிளியோனே மாளிகையில் இத்தாலி நாட்டின் பெராந்தே பிரபுவுக்கும் இஸ்பானிய நாட்டு மார்த்தா பிராட்டியாருக்கும் 1568 மார்ச் 9ம் நாள் முதல் மகனாக பிறந்து இவ்வுலகில் தோன்றிய எம் சபையின் பாதுகாவலரே உம்மை..... வணங்குகிறோம்.

1568 ஏப்ரல் 20ம் நாள் உமது ஞானஸ்நானத்தின் ஆடம்பர சடங்குகளை நிறைவேற்றி அலோசியஸ் கொன்சாகா என்ற பெயர் பெற்றவரே உம்மை.... வணங்குகிறோம்

1580ம் ஆண்டு ஜீன் மாதம் 22ம் தேதி புனித மரியமதலேனம்மாள் திருநாளில் சார்லஸ் பொரோமியா என்ற புனிதரிடமிருந்து புனிதத்திற்கு ஊற்றான இயேசுவை திவ்ய நற்கருணையாக முதன்முறை பெற்று ஞானத்தீயால் பற்றி எரிந்தவரே உம்மை வணங்குகிறோம்.

திருச்சபையின் மதிப்புமிக்க பதவியின் பெருமையைத் தேடுவது இல்லையென ஒரு தனி வார்த்தைப்பாடு கொடுத்த சேசு சபையில் பணிபுரிய விருப்பங்கொண்டு 1585 நவம்பர் 25ல் சேர்ந்து நவதுறவு பயிற்சியை மேற்கொண்டவரே உம்மை.... வணங்குகிறோம்.

1587 நவம்பர் 25ல் சேசு சபையில் வார்த்தைப்பாடு கொடுத்த நவசன்னியாசியே உம்மை ..... வணங்குகிறோம்.

தான் இறக்க இருந்த வேளையில் பலமுறை தமது ஆலோசகர் கர்தினால் ராபர்ட் பெல்லார்மினுடன் பேசியதோடு, கபிரியேல் வானதூதரின் செய்தியின்படி 1591 ஜுன் 21 அன்று இறந்து திருத்தந்தை ஐந்தாம் பவுல் அக்டோபர் 19, 1605 அன்று அருளாளர் பட்டம் கொடுக்க திருத்தந்தை 13 ஆம் ஆசீர்வாதப்பரால் 1726, டிசம்பர் 31 அன்று புனிதர் பட்டம் - பெற்ற புனித அலோசியஸ் கொன்சாகாவே உம்மை ..... வணங்குகிறோம்

(மூவொரு இறைவனை, நம் புனிதரை குனிந்து வணங்கி இடம் அமர்வோம்)

பஜன்

எந்தையே இறைவா திருவடி சரணம்
இயேசுவே ஆண்டவா திருவடி சரணம்
தூயநல் ஆவியே திருவடி சரணம்
மூவொரு இறைவா திருவடி சரணம்

(அமைதி 5 நிமிடம்)

புனிதரின் சிறப்பியல்புகள்

புனித அலோசியஸ் கொன்சாகாவின் திருவிழாவினை சிறப்பிக்கும் இப்பெருநாளி அவரை புனிதத்திற்கு உயர்த்திய சிறப்பியல்புகளை அவரது வாழ்க்கை வரலாற்றிலிருந்து தியானித்து நமது ஆன்மீக வாழ்வை ஆய்வு செய்வோம்......

கடவுளைப்பற்றி பேசுவது இவருக்குப்பிரியம் எனினும் அதைவிட மௌனமே இவருக்கு மிகவும் பிரியம்.

தனக்கு கிடைக்கும் நேரங்களில் எல்லாம் முழந்தாள் படியிட்டு செபிப்பது இவருக்கு மிகுந்த விருப்பம்.

உபவாசங்கள் தன்னிலேயே புத்திக்குத் தெளிவை கொடுக்கின்றன என்று கண்டவர் படிக்கட்டுகளில் இறங்கும் பொழுது பல சமயங்களில் இவர் ஒவ்வொரு படியிலும் "மரியே வாழ்க" என்று சொல்வார்.

அவர் விரும்பி அனுசரித்த புண்ணியம் இறை திருவுளத்திற்கும் பெரியவர்களுக்கும் கீழ்ப்படிந்து நடப்பதே.

சோதனைகளை வெல்ல தம்மை பெற்ற தாயைவிட பன்மடங்கு நேசமும் ஞானமும் வலிமையுமுள்ள கன்னித்தாயிடம் ஓடினார். மரியன்னையிடம் தமது உடலையும் உள்ளத்தையும் 9 வயதிலேயே ஒப்படைத்தார்.

அனாதைகளின் ஆதரவும், விதவைகளின் நடுவரும் ஆண்டவரே! என்ற சங்கீத வரிகளை ஆழ்ந்து தியானித்து ஆறுதல் கூறி அல்போன்சா பிரபுவுக்கு கடிதம் எழுதினார்.

பெருமைகளை நான் ஏற்றுக் கொள்ள முடியாது. எனது பெருநிதி கடவுள் ஒருவரே. திருச்சபையின் மகிமைகளை ஏற்றுக் கொள்ளாமலிருக்கவே சேசு சபையை நான் தெரிந்து கொள்ளலானேன் என்றார்.

நான் துறவி: ஆதலால் கிறிஸ்து நாதருடைய மாதிரிகையையும் புனிதர்களுடைய வாழ்க்கையையும் கண்டுபாவிக்க வேண்டும். ஆதலால் அவர்களுடைய மரபுவழி வாழ்க்கை வரலாற்றை ஊன்றி படிக்க வேண்டும். அப்பொழுதுதான் நமது நாட்டங்கள் ஆண்டவருடைய சித்தத்திற்கு ஒத்திருக்கும். நிலையானவைகளை நேசிப்போம் அல்லாதவைகளை விட்டுவிடுவோம் என்பார்.

வாசனை பொருந்திய மலர் ஒன்றையும் முகந்தவரல்லர். கையில் முதலாய் எடுத்தவரல்லர். அதற்கு மாறாய் இரத்தமும் சீழும் ஒழுகி மக்களுக்கு அருவருப்பை கொடுக்கும் இரணங்கள் அழுகும் நோயாளிகள் அருகில் மருத்துவமனைகளில் அடிக்கடி போவார்.

தாழ்ச்சியின் மேலுள்ள ஆவலால் பிறர் குறைகளையும் இவர் தம் தோள்மேல் தூக்கிப்போட்டுக் கொள்வது வழக்கம். தம் சுகத்தைக் கவனியார் மற்றவர்களைப்பற்றி கவலைப்படுவார்.

தவசந்நியாசிகளில் எவருக்காவது பல பூசைக்கு உதவி செய்வதில் களைப்பேற்பட்டால் உடனே அதை அருள் திரு அதிபரிடம் போய் அறிவிப்பார். பிற்பகல் வேளையில் குருவானவரோடு சென்று நோய்வாய் பட்டோருக்கும் சிறையிலிருப்போருக்கும் ஒப்புரவு அருட்சாதனம் குரு கொடுக்க இவர் மறைக்கல்வி கற்றுக் கொடுப்பார்.

முந்தியநாள் இரவே மறுநாட்காலை செய்யப்போகும் தியானப்பொருட்களை சேகரிப்பார். தியான நேரத்தில் யாராவது இவர் அறையின் கதவைத் திறந்தாலும் இவருக்கு தெரியாது. காலை நேரத்தின் முதல்மணிநேரம் முழுவதையும் தேவ நற்கருணையைப்பற்றிய நல்ல சிந்தனையில் செலவிடுவார்.

இவருடைய தபவாழ்க்கைக்கு யேசுவின் பாடுகள் மாதிரிகையாகவும் ஆறுதலாகவும் விளங்கியதால் திருப்பாடுகளின் மேல் பக்தி கொண்டார்.

துன்ப தூரிதங்களில் தேவதாயின் வியாகுலங்களை பார்க்கும்படி தமது அன்னையிடம் இஸ்பானிய தேசத்து அரசியின் தோழியாய் நீவிர் இருப்பதைவிட தேவதாய்க்கு ஊழியம் செய்வது எவ்வளவோ மேலானது என்று மரியாளின் மேல் பக்தி கொள்ள பணித்தார்.

வானதூதர்கள் மேல் இவருக்கு பக்தி அதிகம் இவருடைய தாய் இவரை தன் வானதூதர் என்று அழைப்பார். திருச்சபையும் தனி பொது செபத்தில் வானதூதர் போன்ற வாலிபர் என்னும் பெயரை வழங்கியது.

அரசு மாளிகையில் பிறந்து அனைத்து இன்பங்களையும் அனுபவிக்க வசதியிருந்தும் வாய்ப்புக்கள் கொடுக்கப்பட்டாலும் அனைத்தையும் விட்டகன்று ஏழ்மையில். வாழ்ந்து. ஒன்றுமில்லாமையில் இறைவனை எல்லாமாக நேசிப்பதையே தனது ஆன்மீகமாகக் கொண்டார்.

(அமைதி 5 நிமிடம்.....)

பாடல்

இலேசான காரியம் உமக்கது இலேசான காரியம்.

மனத்துயர்

அலோசியஸ் கொன்சாகாவின் ஆன்மீகத்தை ஆழமாக சிந்தித்த நாம். அவர் வழியில் நம்முடைய ஆன்மீகத்தை ஆழ்ந்து தியானித்து அதில் தவறிய நேரங்களுக்காக இறைவனிடம் மன்னிப்பை வேண்டுவோம்.

கடவுளின் பேரன்பை பிறருக்கு எடுத்துரைக்க வேண்டிய நேரங்களில் எல்லாம் என்னுடைய பெருமையை பறைசாற்றி பிறருடைய பெயருக்கு களங்கம் வருவிக்கும் வகையில் அமைதியை கடைபிடிக்க வேண்டிய நேரத்தில் கூட அதிகம் பேசியமைக்காக உம் இரக்கத்தை வேண்டுகிறேன்.

பதில் : இரக்கமாயிரும் 2 ஆண்டவரே தேவனே இரக்கமாயிரும்.

மண்டியிட்டு செபிக்க வேண்டிய நேரத்தில் எனது சோம்பலினால் அமர்ந்து சுகம் தேடியமைக்காக....

திருச்சபையும், சபையும் நிர்ணயித்த உபவாசநாட்களை அனுசரிக்க தயங்கியமைக்காக...
இறைத்திருவுளம் பெரியவர்கள் வழியாகவும் மற்றவர்கள் வழியாகவும் அறிவிக்கப்படும் போது அதனை ஏற்க மனமின்றி அலட்சியம் செய்தமைக்காக.....
சோதனைகளை வெல்ல உம் பதம் நாடி ஓடிவராமல் இவ்வுலகின் ஆறுதல்களை பலனுள்ளவையாக கருதி சாத்தானின் சக்திகளுள் கட்டுண்டு கிடந்த நேரங்களுக்காக....
எல்லாவற்றிலும் பெருமையை தேடி சிறுமைகளை ஓரங்கட்டி, உலகியல் மகிமைகளை அடைதலையே நோக்கமாக கொண்டு நித்தியமானவைகளை நேசிக்காமல் தீமையானவைகளை யாசித்தமைக்காக....
நற்செய்தி அறிவிப்பு என்பது எம்மேல் சுமத்தப்பட்ட கடன் என்பதை மறந்து நோயிலும், சிறையிலும் வாடுவோரை சந்தித்து இறைமகிமையை உணர்த்த மறந்த நேரங்களுக்காக....
தியான நேரத்தை உம்மோடு ஒன்றிக்க தகுந்த தயாரிப்பின்றி அமர்ந்து பிற காரியங்களைப்பற்றி அக்கறைப்பட்டுக் கொண்டமைக்காக....
மீட்புக்கு வழியான திருப்பாடுகள் மீதும் திரு நற்கருணையின் மீதும், மரியன்னையின் வியாகுலங்களின் மீதும் காவல்தூதர்கள் மீதும் உரிய பக்தி கொண்டிராமல் உதாசினப்படுத்தியமைக்காக....
பிறப்பால் கண்டிராத வசந்தத்தை வாழ்வில் பெற்றே வாழவேண்டுமென ஆர்வம் காட்டி எளிமைக்கும் ஏழ்மைக்கும் பங்கம் விளைவித்த தருணங்களுக்காக....

பாடல் : உன் கண்ணுக்குள்ளே கண்மணியாய் இருக்கின்றேன்

வாசகம்

(நோயின் நடுவே தாம் இறப்பதற்கு 10 நாட்களுக்கு முன் தம் அன்னைக்கு புனித அலோசியஸ் கொன்சாகா எழுதிய கடிதங்கள்)

கடிதம் 1

மகாமாட்சிமை தங்கிய சீமாட்டியே, ஆண்டவரில் கனம் பொருந்திய அன்னையே, "சேசுக்கிறீஸ்துநாதரில் சமாதானம் உண்டாவதாகவும், உமக்கு ஆறுதல் அளிப்பதற்கு ஏற்ற வழியாகத் துயரத்தில் தமக்கு நேர்நிகரற்ற விண்ணகத் தாயைப் பாரும். நமது இக்கட்டில் நமக்குப் பொறுமையைக் கற்றுக் கொடுக்கவும் நம்மைக் கரையேற்றவும் தானே, தமது வாதனைகளையும் உழைப்பையும் சாவையுமே சேசு ஏற்றுக்கொண்டார். நமது ஆண்டவரும் அவர் மகனுமானவரைப் பாரும். என்

நேச அன்னையே உமது துன்பங்கள் பலவகை. வெகு கொடியவை. ஆகிலும் அவை நீடிக்கா; ஏனெனில் நாம் நல்ல மனதோடு அமைதியாய் அவைகளை மகிமை பொருந்திய கடவுளின் கரத்திலிருந்து ஏற்றுக்கொள்வோமேயாகில், வாக்களிக்கப்பட்ட நாட்டிற்கு நிச்சயமாகவும் விரைவாகவும் போய்ச் சேருவோம். மகாபரிசுத்த கன்னித் தாயைக் கண்டும் மகிழ்வீராக.

கடிதம் 2

"தூய ஆவியாரின் வரங்களும் ஆறுதலும் உம்மோடு எப்பொழுதும் நிலைத்து நிற்பதாக. சீமாட்டியாகிய தாங்கள் அனுப்பிய கடிதம் மரித்தோர்களின் நாடாகிய இப்பூமியில் நான் வாழ்வதைக் கண்டது. ஆகிலும் வாழ்வோர்கள் நாட்டில் என்றென்றைக்கும் கடவுளைப் புகழ மிக விரைவாக போகப்போகிறேன். இதற்குள் என் கடைசிப் பயணத்தை முடித்திருப்பேன் என்று நினைத்தேன். ஆனால் காந்தலின் கொடுமை குறைந்துவிட்டது: இயேசுவின் விண்ணேற்பு பெருவிழா திருநாளை இங்குக் கொண்டாடினேன்.

"நெஞ்சின் கபம் அதிகரித்துவிட்டது. விண்ணகத்தந்தையின் இன்ப ஈர்ப்பை நாடிப் போய்க்கொண்டிருக்கிறேன். அவருடைய மகிமையில் பயமின்றி என்றென்றைக்கும் இளைப்பாறப் போகிறேன். புனித பவுல் அடியார் சொல்லியதுபோல அழுவாரோடு அழுது, மகிழ்வாரோடு நாம் மகிழ வேண்டும் அல்லவா? பரலோக இன்பம். ஒருநாளும் இழந்துபோகாத நிறையின்பம், உண்மையான மகிழ்ச்சி நிறை இன்பம். அதற்கு அழைத்துச் செல்லும் பாக்கியத்தை எனக்கு அளிப்பது சீமாட்டியாகிய உங்களுக்கு அகமகிழ்ச்சியைக் கொடுக்கும். சிலநாளைய சுருக்கமான உழைப்பிற்கு பின் நித்திய இளைப்பாற்றிக்கு ஆண்டவர் அழைக்கிறார்: நான் வெகு சோம்பலாய்த் தேடித்திருந்த சிறந்த நன்மைக்கு அழைக்கிறார். நான் குறுகி விதைத்த கண்ணீரின் பலனான நிலைவாழ்வுக்கும் கடவுள் அழைக்கிறார். அவரது ஆழ்ந்த கரைகாணா நன்மைக் கடலின் நினைவானது எனக்கு மதிமயக்கத்தைக் கொடுக்கின்றது. கடவுளோடு வாழ்ந்து பூமியிலிருந்து செய்ததைவிட அங்கிருந்து அதிகமாக நன்மைசெய்யப் போகிறேன்.

"என்னை இறந்தவனாய் நினைத்து வருந்தினால் அது இறைவனுக்கு வருத்தம். அந்த வருத்தத்தை ஆண்டவருக்கு வருவிக்காமலிருக்கும்படி என் அன்பு அன்னையே!, எச்சரிக்கையாயிரும், இப்பிரிவு நீடிக்காது; விண்ணகத்தில் நாம் ஒருவரை ஒருவர் பார்த்துக் களைப்பின்றி மகிழ்வோம்; நமது இரட்சகரோடு ஒன்றித்து நமது ஆற்றல் உள்ளவரை அவரைத் துதித்து அவரது இரக்கப்பெருக்கைப் பாராட்டுவோம்"

"மனிதப் புத்தி சொல்வதை விட்டுவிடுவோமேயாகில், விசுவாசத்தின் கதவு சுலபமாய்த் திறக்கும்; அப்போது நாம் கடவுளுக்குச் செலுத்தவேண்டிய, சுத்தமான தெளிந்த கீழ்ப்படிதலோடு, அவருக்குச் சொந்தமானதைத் தாராளமாகவும் காலம்

தாழ்த்துதலின்றியும் கொடுப்போம்; உம்மிடமிருந்து அவர் எடுத்துக்கொள்வது உமக்கு எவ்வளவு பிரியமானதோ அவ்வளவிற்குத் தாராளமாய்க் கொடும்; கடவுள் செய்வதெல்லாம் நமக்கு நன்மைக்காகவே செய்கிறார்; நமக்கு அவர் முதலில் கொடுத்ததை எடுக்கிறார்; ஏன்? அதைப் பத்திரமாய்வைத்து நாம் விரும்புவதெல்லாவற்றையும் அதற்குக் கொடுப்பதற்காகவே எடுக்கிறார் என்றும் அறிவோம். இவைகள் எல்லாவற்றையும் நான் சொல்வதற்குக் காரணம் ஏதெனில் சீமாட்டியாகிய தாங்களும் நமது குடும்பத்தினரும் எனது பிரிவு வேளையில் எனது அருமையான கொடையாக இவைகளை ஏற்றுக்கொண்டு, தாயின் ஆசீர்வாதத்தால் இக்கடைசிக் துன்பங்களை நான் கடந்து கரையேற உதவி செய்யும்படியாகவேயாம். இதைத் தவிர என் அன்பின் பரிசாக கொடுப்பதற்கு வேறொரு அடையாளம் இல்லாததினால் இதை நன்றாய் (எழுதி) செய்து முடிக்க முயற்சி எடுத்தேன்.

(அமைதி)

கர்த்தர் கற்பித்த செபம்

இறுதி செபம்

யேசு சபையில் எத்தனையோ அருளாளர்களும், மறைசாட்சிகளும் இருந்த போதிலும் புனித இஞ்ஞாசியாருக்கும் புனித சவேரியாருக்கும் அடுத்தபடியாக இவரைப்போல் புதுமை வரத்தால் விளங்கினவர்கள் அச்சபையில் வேறெவரும் இல்லை என்று புனித ராபர்ட் பெல்லார்மின் அவர்களால் போதிக்கப்பட்ட புனித அலோசியஸ் கொன்சாகாவே.....

எய்ட்ஸ் நோயுற்றோர் மற்றும் அவர்களைப் பராமரிப்போரின் பாதுகாவலரே.....

இளையோரின் பாதுகாவலரே, எமது சபையின் பாதுகாவலரே... புனித அலோசியஸ் கொன்சாகாவே......

யேசுவின் திருஇருதயத்தின் மேல் நீர் கொண்டிருந்த அன்பை நாங்களும் கொண்டு எமது இந்த வாழ்க்கை பாதையில் உமது அடியொற்றி விண்ணக வீடு வந்து சேர எங்களுக்காக இறைவனிடம் பரிந்து பேசும்படி இந்த உமது விழா நாளிலே எமது இறை வேண்டலை உமது பாதத்தில் காணிக்கையாக்குகிறோம்.

புனித அலோசியஸ் கொன்சாகாவே! எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

ஆண்டவர் நம்மை ஆசிர்வதித்து, தீமை அனைத்தினின்றும் பாதுகாத்து, முடிவில்லா வாழ்வுக்கு அழைத்துச் செல்வாராக. - ஆமென். ஆண்டவரைப் போற்றுவோம். இறைவா உமக்கு நன்றி!

சகோ. F. ஜோஸ்பின் மேரி ஸ்டெல்லா FSAG

9. (II) புனித அலோசியஸ் கொன்சாகாவின் தூய்மை / தியாகம்

முன்னுரை

இறை ஞானம் தான் விண்ணையும், மண்ணையும், அதிலுள்ள அனைத்தையும் பெற்றெடுத்தது. இந்த ஞானத்தின் மேல் ஒருவன் நிலைத்தால் அதுவே வாழ்வின் நிறைவு. இந்த இறை ஞானத்தை உலகுக்கு கொடுத்தது இயேசுவின் சிலுவை.

இயேசுவின் சிலுவையின் மீது இளம் வயதிலிருந்து தன் சிந்தனையை நிறுத்தி ஞானத்தையும் இறைவல்லமையையும் பெற்றவர் புனித அலோசியஸ் கொன்சாகா.

இவர் இறைவார்த்தையைப் பாதைக்கு விளக்காக்கி நற்கருணை நாதரில் நாளுக்கான சக்தியைப் பெற்று சிலுவையில் சிந்தையை நிறுத்தி, அரண்மனை வாழ்விலும் லீலிமலரின் தூய்மையை தன் உள்ளத்தில் வளர்த்து, அந்த தூய்மை வாழ்வினை நாம் வாழ, தூய்மையை நம் சபைக்கு உள்ளுயிராகத் தந்தவர் புனித அலோசியஸ். இத்தகைய புனிதரை சபைக்குப் பாதுகாவலராக கொடுத்த இறைவனுக்கு நன்றி கூறி வழிபாட்டில் பக்தியுடன் பங்கு கொள்வோம்.

அஞ்சலி

அழகுடன் படைத்து அருளும் கொடுத்து இயேசுவின் உருவை நம்மில் பதித்து மகிமையில் மகுடம் புனைத்து என் கண்ணுக்கு நீ விலையேறப் பெற்றவர் என நம்மைக் கருத்தில் நிறுத்தி நம் பெயரைக் கரத்தில் பொறித்து நாளும் கண்ணின் மணிபோல் நம் ஒவ்வொருவரையும், பாதுகாத்துவரும் மூவொரு இறைவனை தீப, தூப, மலர்களால் அஞ்சலி செய்து போற்றி புகழ்வோம்.

பஜன்

ஆராதனை 2 இயேசு இறைவனே
ஆராதனை 2 இயேசு இம்மானுவேலனே

தூய்மை

தூய உள்ளத்தோர் பேறுபெற்றோர், ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பார்கள்.

நாம் ஒவ்வொருவரும் புனித வாழ்வுக்கு அழைக்கப்பட்டவர்கள் புனிதம் அடைய, தூயவராக வாழ வயது வரம்போ, எல்லைக்கோடோ, இனவரையரையோ தேவையில்லை.

இறைவன் அருளிய வாழ்வை அவர் பிரசன்னத்தில் இறைவழியில் வாழ்வதே அதற்கான ஒரே வழி.

ஆண்டவர் மீது அளவு கடந்து அன்புக் கொண்ட உள்ளங்கள் எப்போதும் ஆண்டவன் வாழும் ஆலயங்களாகத் திகழ்கின்றனர். துன்பப்படுகிறவர்களுக்குத் துணையாகிறவர்கள் தூய்மை உள்ளம் படைத்தவர்கள். இத்தகைய உள்ளம் கொண்ட இறைமகனின் நற்கருணை பேழையாக வாழ்ந்த அன்னை மரியாளுக்கு தனது ஒன்பது வயதிலேயே கற்பைக் காணிக்கையாக்கி எண்ணத்திலும்,

சிந்தையிலும், சொல்லிலும், செயலிலும் தூய்மையாக வாழ்ந்தவர் நம் புனிதர் அலோசியஸ் கொன்சாகா.

புனித அலோசியஸ் வாழ்ந்த அரச மாளிகையில் ஆடம்பரமாக வாழவும் உலக இச்சைகளில் ஈடுபடவும் பல வாய்ப்புக்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டது. எவ்வகையிலும் தூய்மையாய் இருக்கத் தீர்க்கமான தீர்மானம் எடுத்து, சிலுவையில் தன் சிந்தையை இருத்தி தூய்மையுடன் வாழ்ந்து இறைவனைக் கண்டவர் புனித அலோசியஸ். எந்நேரமும் இறை உணர்வும், இறைத் தேடலும் இருந்தமையால் தூய்மை வாழ்வினை உள்ளுயிராக கொண்டு வாழ்ந்தார். இத்தகைய இறைதேடலில் ஆர்வமும், அன்பும் கொண்டு வாழவும், தூய்மை நெறிக்கு அடிப்படையாக அமைவது இறைத்தேடல். இத்தகைய இறைதேடலில் ஆர்வமும், அன்பும் கொண்டு வாழும் நெறியினை உள்ளுயிராகக் கொண்டு இறைவன் வதியும் ஆலயங்களாகத் திகழ அருள் வேண்டுவோம்.

பாடல்

என் தேடல் நீ என் தெய்வமே நீயின்றி என் வாழ்வு நிறம் மாறுதே

தியாகம்

தம்மையே வெறுமையாக்கி அடிமையின் தன்மை பூண்டு சிலுவை சாவு வரை கீழ்படிந்த இயேசுவின் ஒளியில், அரண்மனை வாழ்வும், அரசுரிமையும், சிலுவையில் தம்மையே முழுமையாகத் தரணிக்கு தாரை வார்த்துக் கொடுத்த இயேசுவின் அன்பிற்கு முன் குப்பையெனக் கருதி துறவு வாழ்வில் நுழைந்தவர் புனித அலோசியஸ்.

"நான் முறுக்கப்பட்ட இரும்புக் கம்பி, என்னை நேராக நிமிர்த்துவதற்காகவே துறவு வாழ்வில் நுழைந்தேன்" என்றுக் கூறி தன்னையே தாழ்த்திக் கொண்டார். பட்டம், பதவி என்பது பதவிக்கு கிடைக்கும் வாழ்வு, அன்புக்கு கிடைக்கும் அழகு. பணிவிடை பெற அல்ல: பணிவிடைப் புரியவே வந்தேன் என்ற இயேசுவின் வாழ்க்கை நெறியில் காலடித் தடங்களைப் பதித்தவர். அரசனின் மகன் என்று அடுத்தவர் தன்னை சுட்டிக்காட்டிய பொழுதெல்லாம் நான் ஆண்டவனின் அடிமை என்று தன்னைக் கூறிக் கொண்டவர். சமுதாயத்தில் ஒடுக்கப்பட்ட மக்கள் சார்பாய் நிலைப்பாடு எடுத்து அவர்கள் வாழ்வு பெற தம்மையே அர்ச்சனையாக்கிய இயேசுவைப் போன்று, நவதுறவு வாழ்விலேயே அவர் வாழ்ந்த சமுதாயத்தில் கொள்ளை நோயால் பாதிக்கப்பட்டு உயிருக்காகப் போராடிய மக்களின் வாழ்வுக்காய் தியாகப் பலியானார். கொள்ளை நோயால் பாதிக்கப்பட்டவர்களை தோளில் சுமந்து மருத்துவமனையில் சேர்த்தார்.

நோயாளிகளின் பாதங்களைத் கழுவித் துடைத்து அவர்களது படுக்கைகளை சரிசெய்யும் மருத்துவராக செயல்பட்டார்.

பஞ்சம் ஏற்பட்ட அந்தக் கால கட்டத்தில் பிறரிடம் தர்மம் பெற்று அவர்களுக்கு வாழ்வளித்தார். நவ துறவு வாழ்வின் ஆறாம் ஆண்டிலேயே அவரது துறவற அர்ப்பண வாழ்வு இறைவன் பதம் தூய மலராக, தியாகப்பலியாக சமர்ப்பணம் செய்யப்பட்டது. இத்தகைய தன்னலமில்லா தியாக வாழ்வை நாமும் கொண்டு வாழ அருள்வேண்டுவோம்.

பாடல்

இறைவனின் ஆவி நிழலிடவே
இகமதில் அவர்புகழ் பகர்ந்திடவே

மன்றாட்டுகளை சமர்பித்தல்

கர்த்தர் கற்பித்த செபம்.

இறுதி மன்றாட்டு

எங்கள் தாயும் தந்தையுமான மூவொரு இறைவா! இறை அன்பும், தூய்மையும், தன்னலமில்லா தியாக வாழ்வையும் எம் கொன்சாகா சபைக்கு உள்ளுயிராகப் பாய்ச்சி எம் சபையினை பாதுகாக்க நீர் கொடுத்த பாதுகாவலுருக்காய் நன்றி கூறுகிறோம்.

கொன்சாகா தாயின் புதல்வியராகிய நாங்கள் ஒவ்வொருவரும் எம் பாதுகாவலரின் தூய்மையையும், தன்னலமில்லா தியாகத்தையும் உள்ளுயிராகக் கொண்டு இயேசுவின் ஒளியில் இலட்சியப் பணியில் இணைந்து செயல்படவும் கிறிஸ்துவின் சாட்சிகளாய் வாழ்ந்திடவும் வரம் அருள எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக இறைஞ்சுகின்றோம்.

ஆண்டவர் நம்மை ஆசிர்வதித்து, தீமை அனைத்தினின்றும் பாதுகாத்து, முடிவில்லா வாழ்வுக்கு அழைத்துச் செல்வாராக. - ஆமென். ஆண்டவரைப் போற்றுவோம். இறைவா உமக்கு நன்றி.

சகோ. S. பிரான்சிஸ்கா FSAG

10. சுதந்திர தினம்

மூவொரு இறைவனுக்கு வாழ்த்து

எங்கள் உணர்வும் உறவுமான இறைமகனே படைப்பிற்கெல்லாம் சிறந்த படைப்பாக மானிடரை படைத்து காத்து வரும் உன்னத கடவுளே! எங்கள் மீட்பரான இயேசுவே! எங்களைத் தேடி வந்த இறை சுதனே! எங்களைத் தேற்றிடும் தூய ஆவியே! வரங்களை அளிக்கும் ஆவியே! மூவொரு இறைவா உம்மை வாழ்த்தி வணங்கி ஆராதிக்கின்றோம்.

முன்னுரை

'சுதந்திரம் எனது பிறப்புரிமை' என்ற தாரக மந்திரத்தோடு நாம் பெற்ற சுதந்திரம் இன்று சிறையிலிடப்பட்டு, மனித உரிமைகள் பறிக்கப்பட்டு, அடிமை நாடாக மாறிக் கொண்டு வருகின்றது. பல ஆண்டுகளாய் சிந்தப்பட்ட இரத்தித்தின் விலையான

சுதந்திரம் இன்று அரசியல்வாதிகளின் அதிகாரத்திற்கும், அடிப்படைவாதிகளின் வெறித்தனத்திற்கும் இரையாகிக் கொண்டிருக்கிறது. தன்னலவாதிகளின் இராச்சியத்தில் சாதாரண மக்களின் சுதந்திரம் பறிக்கப்பட்டு சாதிக் கட்சிகளின் சாக்கடைகளில் தவித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

பிறரன்பு, ஒற்றுமை, அமைதி இவையெல்லாம் இன்று கானல் நீராகிவிட்டன. கலவரங்களும், சாதி சண்டைகளும் அதிகரித்துக் கொண்டிருக்கும் இவ்வேளையில் நமது அன்னை கன்னி மரியாவின் விண்ணேற்பு நமது சுதந்திர வாழ்வினை அமைதியில் நோக்கும் சவாலாக இருக்கின்றது. இந்த புனிதமான நன்நாளில் நம்நாடு எல்லா துறையிலும் மின்னித் துலங்கவும், நம் நாடு எதிர் நோக்கியிருக்கும் சவால்கள், பிரச்சனைகள் மற்றும் அச்சுறுத்தல்களிலிருந்து விடுபடவும், வளமான எதிர்காலத்தை நோக்கி வீறுநடை போடவும் இறையருளை வேண்டுவோம்.

மேலும் இந்த உயர்நிலையை நம் நாடு அடைந்திட உறுதுணையாக இருந்து செயல்பட்ட தலைவர்களையும், குறிப்பாக நாட்டுப் பணிகளில் உயிர்நீத்த தியாகிகளையும் நினைவு கூர்வோம்.

நமது நாட்டை வழிநடத்தும் தலைவர்கள், அதிகாரிகள் மற்றும் நம் அனைவர் மீதும் இறைவன் தம் வரங்களையும் கொடைகளையும் பொழிந்து அனைவரையும் வழிநடத்த வேண்டுமென்று இவ்வழிபாட்டில் இணைந்து மன்றாடுவோம்.

மனத்துயர் வழிபாடு

அன்பார்ந்த சகோதர சகோதரிகளே "நாடு உனக்கு என்ன செய்தது என்று கேட்காதே மாறாக நீ நாட்டுக்கு என்ன செய்தாய் எனக் கேள்" என அமெரிக்க முன்னாள் குடியரசுத் தலைவர் ஜான் F. கென்னடி கூறியுள்ளார். நாம் அனைவரும் நமது சொற்கள், செயல்கள், கடமையில் தவறுதல் ஆகியவற்றால் நாட்டிற்கும், மக்களுக்கும் எதிராக குற்றம் செய்துள்ளோம். அவற்றிற்காக இப்போழுது மனம் வருந்துவோம்.

பதில் : எம் குற்றம் பொறுத்தருளும் இறைவா, உம் பற்றில் வளரச்செய்யும்.

தலைமைப் பண்புகளின் ஊற்றே இறைவா! எம் தலைவர்களது வழிகாட்டுதல்களை ஏற்று வாழாமலும், எம் கடமையை உணர்ந்து வாழாத குற்றங்களுக்காகவும் மனம் வருந்துகின்றோம்.

திறமைகள் அளித்து எம்மை வழிநடத்தும் இறைவா! நீர் அளித்த திறமைகளை எம் நாட்டின் வளர்ச்சிகளுக்குப் பயன்படுத்தாமல் சுய நலத்திற்காக பயன்படுத்தியகற்காகவும், அடிப்படை உரிமைகளைத் தவறாகப் பயன்படுத்திய குற்றங்களுக்காகவும் மனம் வருந்துகின்றோம்.

நல்லவரே நாயகனே இறைவா! எம் நாட்டு நலத்திட்டங்கள் அடித்தட்டு மக்களைச் சென்றடைய நாங்கள் உழைக்காமலும், ஈடுபாடில்லாமலும் வாழ்ந்த குற்றத்திற்காக மனம் வருந்துகின்றோம்.

அமைதியின் தெய்வமே இறைவா! பல்வேறு சமயங்களில் எங்களது அன்றாட கடமைகளை சரிவர செய்யாமல், உரிமைகளை மட்டும் பெறக்கூடியவர்களாக வாழ்ந்த குற்றத்திற்காக மனம் வருந்துகின்றோம்.

பஜனை

...ந்தோம் சாமி எங்களை
மன்னிக்கனும் சாமி.

விவிலிய வாசகம்

யோவான் 8 : 31 - 36.

விவிலிய விளக்கம்

இறைவனின் அன்னையாம் புனித அன்னை மரியாளின் விண்ணேற்பை இன்று நாம் சிறப்பிக்கின்றோம். சென்ம பாவம் இல்லாமல் பிறந்து, இம்மண்ணக வாழ்விலே புனிதையாக வாழ்ந்து, இறை சித்தத்தை என்றுமே நிறைவேற்றிய அன்னை கன்னி மரியாள் விண்ணகத்தில் அரசியாக வாழ்கின்றார். அன்னையின் விண்ணேற்பைக் கொண்டாடி மகிழும் நாம் பாரத அன்னையின் சுதந்திர நாளையும் கொண்டாடுகின்றோம். நாம் பெற்ற சுதந்திரத்தை அன்னை மரியாளைப் போன்று சரியான முறையில் பயன்படுத்துவது நமது கடமையாகும். அணுகுண்டு சோதனை செய்து இவ்வுலகை வியக்கச் செய்தோம் அறிவியல் வளர்ச்சியிலே அரிய சாதனை படைத்தோம். கணினி உலகிலேயும் வளர்ந்து விட்டோம். இருப்பினும் பலரது வாழ்விலே வரையப்பட்ட வறுமைக் கோடுகள் இன்னும் அழியாமலே இருக்கின்றன.

எங்கள் உரிமை, எதிலும் உரிமை என்று சொல்லி கடமையை கை கழுவி விடுவது இன்றைய நவீன பண்பாடாகி விட்டது. உரிமையும், கடமையும் ஒருங்கிணைந்து, மனித மாண்பு மலர வேண்டும் அடிமை வாழ்வு, தீண்டாமையும் தீயிலிட்டுக் கொளுத்தப்பட வேண்டும் அப்பொழுது தான் நமது பாரதத் தாய் உண்மையான சுதந்திர தாயாக வாழ முடியும்.

பாடல்

...வண் முடி சூடிய வேந்தனாம் இமயனும்
விந்திய மலையனும் வாழ்த்துங்கள்
...ன்னிய கீழ்மேல் மலைகளும் பழனி
...மாம் மலையும் வாழ்த்துங்கள்

(ஆற்றலின் ஊற்றாம் இறைவன் நமது நிலைக்கேற்ப தம் அருட்கொடைகளை வழங்கி நம்மை சிறப்பாக வழிநடத்துபவர். அவரிடம் நமது தேவைகளை நம்பிக்கையுடன் எடுத்துக்கூறி மன்றாடுவோம்.)

மன்றாட்டு

பதில் : இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

வாழ்வின் முதற்பொருளாம் இறைவா! எமது தாயாம் திருச்சபையை ஆசீர்வதியும். எமது திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர் அனைவரும் தங்கள்

அர்ப்பணத்தின் மேன்மையை உணர்ந்து இறைமக்களை வழிநடத்திச் செல்ல தேவையான ஞானத்தை அருளுமாறு....

ஒன்று சேர்க்கும் இறைவா! பல்வேறு மொழி, சமயம், இனம், பண்பாடு ஆகியவற்றால் பரந்து விரிந்திருக்கும் எங்கள் பாரத நாட்டை ஆளும் தலைவர்கள், அதிகாரிகள் ஆகியோருக்கு உமது ஆசியை நிறைவாகப் பொழிந்து நாங்கள் வேற்றுமையில் ஒற்றுமை காண்பவர்களாய் வாழ அருள் புரிய வெண்டுமென்று....

வளம் தரும் இறைவா, சுதந்திர தினத்தினை நினைவு கூறும் எமது இந்திய நாட்டை பாதுகாத்தருளும். எம் நாட்டு நீர், நில, கடல், கனிம வளங்களை நாங்கள் சிறப்பாக பயன்படுத்திடவும், அவற்றை முறையாக பகிர்ந்து முன்னேற்றப் பாதையில் கொண்டுச் சென்றிடவும்....

நலம் நல்கும் இறைவா! எம் நாட்டு முன்னேற்றத்தில் நாங்கள் அக்கறை கொண்டு உழைக்கவும், எங்கள் திறமைகளை ஒன்று சேர்த்து ஒருங்கிணைந்த வளர்ச்சியில் ஈடுபடுவது எங்கள் கடமை என உணரவும், பொதுச் சொத்துக்களைப் பேணிக் காக்க நாங்கள் விழிப்புணர்வு பெற்றவர்களாக வாழ வேண்டுமென்று....

நிலை வாழ்வின் ஊற்றாம் இறைவா! நாட்டுப் பணிகளில் தங்களை ஈடுபடுத்தி நாட்டிற்காக உயிர் நீத்த அனைவரது ஆன்மாக்களுக்கும் உம் திருவடிகளில் நிலை வாழ்வு அருளவும், அவர்களது குடும்பத்திற்கு எல்லாவிதத்திலும் துணையாயிருந்து அவர்கள் வாழ்வை வளமாக்கவும் வேண்டுமென்று.....

கர்த்தர் கற்பித்த செபம்

இறுதி செபம்

எங்கள் வாழ்வும், வழியும், ஒளியுமான அன்பு இறைவா! அன்னையின் விண்ணேற்பைக் கொண்டாடும் இந்த புனித நாளில் இறைமக்கள் ஒவ்வொருவரையும் ஆசீர்வதியும். நாங்கள் அனைவரும் அன்னையின் அன்புப் பிள்ளைகளாக என்றும் வாழவும், அன்னை மரியாவின் உயரிய பண்புகளை நாங்கள் பெற்றிட அருள்புரியும் மேலும் நாங்கள் எங்கள் அன்றாட வாழ்வில் சுதந்திரம் பெற்ற புது மனிதர்களாக வாழவும், பிறரது உணர்வுகளை மதித்து, எங்கள் உரிமை, மற்றும் கடமைகளை ஒருங்கிணைத்து, ஒற்றுமையுடனும், சமாதானத்துடனும், வாழ்ந்து இவ்வுலகில் உமது இறையாட்சியைக் கட்டியெழுப்பும் தூதுவர்களாக வாழ எங்களை மாற்றியருளும்.

ஆண்டவர் நம்மை ஆசிர்வதித்து, தீமை அனைத்தினின்றும் பாதுகாத்து முடிவில்லா வாழ்வுக்கு அழைத்துச் செல்வாராக. - ஆமென். ஆண்டவரை

போற்றுவோம். இறைவா உமக்கு நன்றி.

சகோ. S மேரி ஸ்டெல்லா FSAG

II. ஆசிரியர் தினவிழா

முன்னுரை

ஆசிரியராக இருந்து குடியரசுத் தலைவராக உயர்ந்தவர். தத்துவ மேதை எனப் புகழப்படுபவர். தம் பிறந்த நாளை ஆசிரியர் தினமாக கொண்டாட விரும்பியவர். டாக்டர் இராதா கிருஷ்ணன் என்ற மாமனிதர். இவர் சென்னை மாநிலக்கல்லூரியில் துணைப்பேராசிரியராக பணியைத் தொடங்கினார். கனிவான தோற்றம். கற்பித்தல் திறன் மாணவர் உள்ளங்களைக் கொள்ளை கொண்டார். மாணவர்களுக்கு நல்ல நண்பராக வழிகாட்டியாக திகழ்ந்தார். இவர் குடியரசு தலைவராக இருந்தாலும் தான் ஓர் ஆசிரியர் என்பதை கருத்தில் கொண்டு தமது பிறந்த நாளை ஆசிரியர் தினமாக கொண்டாட சொன்னார். தமது பெயரால் நல் ஆசிரியர்களுக்கு விருது வழங்க ஏற்பாடு செய்தார்.

மூவொரு இறைவனுக்கு வாழ்த்து

மூலவனே. எம் பரம்பொருளே! இவ்வுலகினைப் படைத்து. அதனை அழகுற கலைநயத்தோடு உருவாக்கி. மனிதனைப் படைத்து. மனிதனுக்குள் உன் உயிர் மூச்சை வழங்கி. மேலான ஆசிரியராய் எதை செய்ய வேண்டும். எதை செய்யக் கூடாது என்பதை தொடக்கத்திலேயே முதல் பெற்றோர்க்கு உணர்த்திய உம்மை வாழ்த்துகிறோம்.

ஆசிரியருக்கெல்லாம் மேலான ஆசிரியராய் விளங்கும் மாபரன் இயேசுவே! உம் போதனைகளாலும். உவமையாலும். எடுத்துக்காட்டான வாழ்வு அனுபவங்களாலும் ஒவ்வொரு நாளும் தொடங்கப்பட்டவர்கள். அதனால் வாழ்வில் மாற்றம் கண்டவர்கள். மீண்டும் பழையவற்றிற்கு திரும்பாத புதிய. புனிதமானப் பாதையை தேர்வு செய்து வாழ அறிவுறுத்திய உம் மேலான உடனிருப்பிற்காக உம்மை வாழ்த்துகின்றோம்.

ஆவியாம் இறைவா! மனிதர் இப்படித்தான் வாழ வேண்டும் என்று கொடைகளை வழங்கி நேரியப் பாதையில் இறைவனுடனும் மகன் கிறித்துவுடனும் இணைந்து கனிதரும் வாழ்வு வாழ வழி செய்த உம்மை வாழ்த்துகிறோம்.

மூவொரு இறைவா! மூவுலகை ஆளும் அரசரே நேர்மறை எண்ணங்கள் கொண்டு வாழ்வின் அனைத்து சூழல்களையும் துணிவோடு சந்திக்க துணை செய்யும் உம்மை வாழ்த்துகின்றோம்.

இறைவனை வணங்கி இடம் அமர்ந்து பாடப்படும் பஜனையில் இறைவனில் இணைவோம்.

பஜனை

என்னுயிரே இறைவா
உம் திருவடி சரணம்

உம் பதம் அமர்ந்து உன் மொழி கேட்க
என்ன தவம் செய்தேன் நான் - 2

மன்னிப்பு

சமுதாயத்தில் முன்மாதிரியாக வாழாமல் இருந்தமைக்காக எம்மை மன்னியும்.
எமது ஆசிரியப் பணியில் பொறுப்பில்லாமல் நடந்து கொண்டதற்காக மன்னித்தருளும்
வேலைப் பளுவாலும் எமக்கு வரும் நெருக்கடியாலும், எங்கள் கோபத்தை மாணவரிடம் காட்டியதருணத்திற்காக மன்னியும்.
பள்ளியில் தாளாளர் தலைமை ஆசிரியர் மற்ற பெரியவர்களுக்கு கீழ்படியாத தருணத்திற்காக மன்னியும்
காலதாமதமாக வந்த நேரங்களுக்குகாக மன்னியும்
பணிவரையறைகளை உதாசீனப்படுத்தமைக்காக எங்களை மன்னியும்

பாடல்:

நான் பாவி இயேசுவே
என் வாழ்வை மாற்றுமே

புகழ்ச்சி

வலுவிழந்தோரின் வாழ்வாக என்ற வார்த்தைக்கு ஏற்ப, ஏழை எளிய பிள்ளைகள் கடைநிலை மதிப்பு பெற்ற பிள்ளைகளை சேர்த்து படிக்கவைத்து அவர்களை நல்ல நிலைக்கு உயர்த்தியுள்ளோம். அதற்காக உழைக்க நல்ல ஆசிரியர்கள், சகோதரிகள், பணியாளர்களை கொடுத்த உம் கிருபைக்காக உம்மை புகழ்கின்றோம்.

இறைவா எங்களிடம் கற்போருக்கு கருத்துச் செறிவும், செயற்திறன் பயிற்சியும் அளித்து, உண்மைக்குச் சான்று பகரும் எங்கள் வாழ்வு, அவர்கள் மனதை தொட்டு உணர்த்திட, நாங்கள் செலுத்தும் தனி கவனத்தால் வாழ்க்கையில் பிடிப்பும், கல்வித்தாகத்தையும் தந்தமைக்கு உம்மை புகழ்கின்றோம்.

இறைவா எங்கள் சகோதரிகளுக்கு அறிவை புகட்டுவதில் எளிமையும் செவி மடுப்பதில் கவனமும், ஒத்துழைப்பதில் நல்லிணக்கமும், தீர்ப்பிடுவதில் தயக்கமும், பாராட்டுவதில் தாராளமும், மன்னிப்பதில் ஆர்வமும் தந்த உம் அன்பிற்காக உம்மை புகழ்கின்றோம்.

ஆசிரியர்களுடைய வாழ்க்கை பயிலும் மாணவர்களுக்கு பாடமாக அமைந்து, ஞானத்தோடும் ஆர்வத்தோடும் வழி காட்டிய ஆசிரியர்களுக்காக நன்றி கூறுகிறோம்.

விவிலிய வாசகம்

சீராக் 37 : 22 — 26

விவிலிய விளக்கம்

கல்வி என்பது எழுத்தறிவை மட்டுமே கொடுக்கக் கூடியதாக இருக்கக் கூடாது அது மனிதனை சிந்திக்க வைக்க கூடியதாக புரிந்து கொள்ள கூடியதாக பொறுமை வளர்ப்பதாக இருத்தல் வேண்டும்.

இயேசு ஓர் ஆசிரியர் நீங்கள் என்னை போதகர் என்றும் ஆண்டவர் என்றும் அழைக்கிறீர்கள். ஆண்டவர் தான் (யோ 13 : 13 — 14) என்கிற போதும் நான் உங்கள் ஆசிரியர் என்றே காண்பிக்கின்றார்.

இயேசுவின் கல்வி கொள்கை இயேசு கற்பித்த இறையாட்சியை பற்றித் தான் (மத் 25) அதாவது அன்றிருந்த நிலை மாறி இறையரசு உருவாக வேண்டுமென்பதே அவரது கல்வி திட்டம்.

சாதாரண கிராமங்களைத் தனது பள்ளியறைகளாக்கி கொள்கிறார். நாசரேத் கலிலேயாவின் பாடாவதி கிராமம் அதில் கல்வி பணியைச் செய்கிறார். பெத்சாய்தா என்ற மீனவ கிராமம். கப்பர்நாகூம் என்கிற ஊராட்சி ஒன்றிய பணிதளங்களாக இருந்தன.

கிராமப்புறங்களில் சிம்னிவிளக்குகளில் தங்களது முகவரிகளைத் தேடிக் கொண்டிருந்த ஏழைகள். பாவிகள். தொழு நோயாளிகள் தாழ்த்தப்பட்டவர்கள் தான் இறையாட்சி என்கிற சமூகமாற்றத்துக்கு சொந்தக்காரர்கள். கல்வி என்பது மண்ணோடும். மனித உணர்வோடும் வாழ்ந்து கொண்டிருக்கிற பாமர மக்களை போய்ச் சேர வேண்டிய ஒன்று

இயேசு கற்பித்தார் தன் தனித்தன்மையோடு.

அதிகாரத்துடன் கற்பித்தார் (<u>மத் 7 : 28, மாற் 1 : 22</u>)

உவமைகளில் கற்பித்தார்.

உணர்வறிவை உருவாக்கிக்கொண்டு கற்பித்தார்.

இயேசுவுக்கு எங்கிருந்து வந்தது இந்த ஞானம்.

இயேசு தமது இறைத்தந்தையோடு கொண்டிருந்த உயரிய நட்புறவாலும். ஒடுக்கப்பட்டோரின் கண்ணீரைக் கண்டு கலங்கிபோய் விடுகிற கருணை குணத்தாலும் தான் கற்பிப்பது கடவுளின் ஞானத்தால் தான் என்கிறார்.

ஆகவே இன்றைய வாசகம் ஞானம் கடவுளிடமிருந்து நாம் பெற்றுக்கொண்ட ஒன்று அவற்றை எப்படி பயன்படுத்துகிறோம் எவ்வாறு இயேசுவைப்போல கற்பிக்கிறோம். எப்படிபட்ட இடங்களில் நம் பள்ளிகள் இருக்கின்றன? யாருக்காக கற்பிக்கிறோம்? என்பதை சிந்திப்போம். மாசு மருவற்றவர்கள் குழந்தைகள் எப்படி வேண்டுமானாலும் அவர்களை மாற்றலாம். நல்லவனாக மாற்றி இயேசுவின் கனவை உருவாக்குவோம் அமைதியில் சிந்திப்போம்.

பாடல்

மழலை இதயம் நாடி வருவோர்

என விழைவீரோ - இசை
குழலின் ஒலியில் மயங்குவோரே
பேச வருவீரோ
(மன்றாட்டுகளை கூடியுள்ளோர் செபிப்பர்)

கர்த்தர் கற்பித்த செபம்

இறுதி செபம்

தெய்வீக பேராசிரியரே. ஆர்வமும் பற்றுதியும் உள்ள நல்ல ஆசிரியராக நாங்க விளங்க வேண்டும். ஆழ்ந்த அன்புடன் மாணாக்கரின் தனித்தன்மையைப் புரிந்து கொண்டு. அவர்கள் திறமைகளை நாங்கள் மதிக்க வேண்டும். அவர்களின் நிரந்த நலன் மட்டுமே எங்கள் பணியின் நோக்கமாக இருக்க அருள்தர வேண்டுமென்று மன்றாடுகிறோம்.

ஆண்டவர் நம்மை ஆசிர்வதித்து, தீமை அனைத்தினின்றும் பாதுகாத்து முடிவில்லா வாழ்வுக்கு அழைத்துச் செல்வாராக. - ஆமென். ஆண்டவரை போற்றுவோம். இறைவா உமக்கு நன்றி!

சகோ. S. மார்க்கிரட் பெட்சி FSAG

௰௨. 'தீபாவளி-ஒளிவிழா'

முன்னுரை

தீபாவளி என்பது ஒளி விழா. இறைவன் உண்மையான ஒளி. இருளை விரட்டும் ஒரு பேரொளி. இந்தியாவில் உள்ள நம் பிற மறை நண்பர்கள் கொண்டாடு விழாவாக இருந்தாலும் இதற்கான காரணங்கள் பலவாறு கூறப்பட்டுள்ளது. ஆனா கிறிஸ்தவர்களாகிய நாம் இதனை ஒளி விழாவாக சிறப்பிக்கின்றோம். நம்மோடு வாழும். நம் நண்பர்களின் மகிழ்வில் முழுமையாய் பங்குகொள்கின்றோம்.

ஒரு புனைக்கதையாக கூறப்படுவது, நரகாசுரன் என்ற அரக்கன் கந்தர்வர்களின் மகள்களை அபகரித்துச்சென்று, தேவர்களுக்கும், இறைவனை வழிபடுவோர்க்கு தொடர்ந்து இன்னல்கள் பல விளைவித்ததால் தேவர்கள் கிருஷ்ணனிடம் சென்று முறையிடுகின்றனர். மக்கள் மீது கருணைக்கொண்ட கிருஷ்ணன் மண்ணிற்கு வந்து நரகாசுரனைக்கொன்று மக்களை இன்னல்களிலிருந்து மீட்கின்றார். இந் நாளையே மக்கள் தீபாவளியாக கொண்டாடி மகிழ்கின்றனர். மற்றும் ஒரு புனைக்கதை அயோத்தியின் மன்னராக இராமர் முடி சூட்டப்பட்டபோது மக்கள் எல்லோ

வீடுகளிலும் விளக்குகளை ஏற்றிவைத்து மகிழ்ந்தனர். மேலும் விஷ்ணு கடவுள் வாமன அவதாரம் எடுத்தபோது அரசர் பாலியை எதிர்கொண்டதை மக்கள் கொண்டாடிய நிகழ்வாகவும் பார்க்கப்படுகிறது. மேற்கூறிய புனைக்கதைகளை நோக்கும்போது தீமையை நன்மையால் மேற்கொள்வது. நன்மை புரியும் கடவுள் தீமை புரிபவரை சுட்டெரிக்கிறார் என்பது புலனாகின்றது. இதைத்தான் புனித திருமுழுக்கு யோவான் " நற்கனித்தராத மரங்கள் எல்லாம் வெட்டுண்டு தீயிலிடப்படும். இறைவன் சுளகை கையிலெடுத்து கோதுமையையும். பதரையும் தனித்தனியாக பிரிப்பார். கோதுமையை களஞ்சியத்தில் சேர்ப்பார். பதரை அணையா நெருப்பில் சுட்டெரிப்பார்." என்று அறிவுறுத்துவதாக கோடிட்டுக்காட்டப்படுகிறது. நானே உலகின் ஒளி என்னை பின்செல்பவன் இருளில் நடவான் உயிரின் ஒளியை கொண்டிருப்பான் என்று கூறிய ஒளியாம் இயேசுவை நாம் நெருங்கி பின்பற்ற இந்த கொண்டாட்டம் நமக்கு மாபெரும் வாய்ப்பாக கொடுக்கப்பட்டுள்ளது. எனவே இந்த இனிமையான நேரத்தில் ஒளியாம் இயேசுவை நம் உள்ளத்தில். சிந்தனையில். இதயத்தில் ஏற்றுக்கொள்ள முழுமையாய் இந்த செபவழிபாட்டில் பங்குக்கொள்வோம்.

மூவொரு இறைவனுக்கு வாழ்த்து

தந்தையாம் இறைவா! உம் ஒரேப்பேறான மகனை ஒளியாக இவ்வுலகிற்கு அனுப்பிய உம் மேலான கருணைக்காக உம்மைப் போற்றுகின்றோம். வாழ்த்துகின்றோம்.

மகனான இயேசுவே! நானே உலகின் ஒளி என்னை பின்செல்பவன் இருளில் நடவான் உயிரின் ஒளியைக் கொண்டிருப்பான் என்று கூறி உம்மை முழுவதும் எங்களுக்காய் கையளித்த உம் தியாக செயலுக்காய் உம்மைப் போற்றுகின்றோம். வாழ்த்துகின்றோம்.

ஆவியாம் இறைவா! இணையற்றத் தலைவா. எங்கள் உள்ளங்களில் தீ நாக்கு வடிவில் குடிக்கொண்டு எங்களது மன அழுக்குகளை. சுட்டெரித்து. பொசுக்கி தூய்மைப்படுத்தும் உம் மேலான அருள் வரங்களுக்காய் உம்மைப் போற்றுகின்றோம். வாழ்த்துகின்றோம் .

மூவொரு இறைவா! நாங்கள் எப்போதும் தீமையை களைந்து நன்மையின் மக்களாய். ஒளியின் பிள்ளைகளாய் உலகில் வலம் வர உமது பாதுகாப்பை வழங்கி

காத்துவரும் உம் மேலான செயலுக்காய் உம்மைப் போற்றுகின்றோம் வாழ்த்துகின்றோம்.

(மூவொரு இறைவனை போற்றி, வாழ்த்தி, ஆராதித்த நாம் நம் நெற்றி தரையில் படும்படி வணங்கி இடம் அமர்வோம்.)

பஜனை

உள்ளத்தில் உறையும் தூய நல் ஆவியே
உன்னருளைப் பொழிந்திடுவாய் - 3
உன் ஒளியைப் பொழிந்திடுவாய் -3

(சில மணித்துளிகள் அமைதி காப்போம்)

மனத்துயர்

ஆண்டவரின் ஒளி நம்மை வாஞ்சையாய் வழி நடத்திய போதும், பிடிவாதமாய் இருளில் தான் நடப்பேன் என்று, கானல் நீர் போன்ற இன்பத்திற்கு நம்மை கையளித்த தருணங்களை நினைத்து, அதனை தீயின் வெப்பத்தால் சுட்டெரிக்கவும், அதனால் நம் பாவநாட்டங்கள் நம்மை விட்டு நீங்க மனம் வருந்துவோம், மனம் திருந்துவோம்.

'ஒளி' உயிர் என்பதை மறந்து, இருளே இன்பம் என்று வாழ்ந்த என் இழிவான நிலைக்காக மனம் வருந்துகின்றேன்.

பதில் பாடல் - மனம்வருந்தி,மனம் திருந்தி உம்மை சரணடைந்தேன் என்னை ஏற்பாய் இறைவா.

ஒளியான இறைவா தீபங்களாக விளங்கி வாழ்விற்கு பொருள் சேர்த்த நல்லவர்கள், நல்லப் புத்தகங்கள், நல்ல நினைவுகள் இவைகளை நாடாது தீமையானவற்றை தேடித் திரிந்த என் பாவச்செயலுக்காய் மனம் வருந்துகின்றேன்.

ஒரு போதும் என்னை கைவிடாத தந்தையே, உலக மாயைகள் நல்லதல்ல என்பதை நான் உணர்ந்திருந்த போதிலும். அதில் விருப்பம் கொண்டு தேடிப்போன என் நண்பர்களின் வாழ்வை சரி செய்ய நினைக்காது, அவர்கள் கெட்டு அழியட்டும் என்று சுயநலப் பேய் பிடித்து வாழ்ந்த என் எதிர்மறையான செயலுக்காய் மனம் வருந்துகின்றேன்.

சமூகம், குழந்தைத் தொழிலாளர்கள், பெண்ணடிமை, குடிவெறி களியாட்டம், நெறி தவரிய வாழ்க்கை சாதிப்பேய் என பல்வேறு பிரச்சனைகளில் சிக்குண்டு அருளிழந்து இருப்பது தெரிந்தும், அதனை

நீக்க முயற்சிக்காமல், நானும் செயல்கள் மேலும் வலுவாகிட நேரடியாகவோ, மறைமுகவோ உதவி செய்துவரும் எனது விஷத்தன்மைக்காக மனம் வருந்துகின்றேன்.

புகழ்ச்சி

(அருளையும், ஒளியையும், மகிழ்வையும், அமைதியையும் பொழிந்து தொடர்ந்து அரவணைத்து வரும் அன்பு ஆண்டவரை ஒரிரு வார்த்தைகள் கூறி புகழ்வோம்.)

பேரொளியான உம்மை நாங்கள் ஆடையாய் அணிந்துகொள்ள அருள் புரிந்தவரே....

பதில் : உம்மைப் போற்றி, புகழ்கின்றோம்.

ஆண்டவரே உம் வேலைப்பாடுகளால் இந்த பூவுலகை வடிவமைத்து ஒளி கொடுத்து அழகு சேர்ப்பதற்காக....

ஆண்டவரே உம் இரக்கத்தின் கரங்களைக் கொண்டு எல்லா நலன்களையும் நல்லோர்,தீயோர் மீதும் பொழிந்து கொண்டிருக்கும் உம் கருணைக்காக....

வார்த்தையான இறைவா, உம் ஆறுதல் மொழிகளால் எங்களது வாழ்வை சுட்டிக்காட்டி நாங்கள் நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவர்களாய் வாழ அருள் பொழியும் உம் கிருபைக்காய்....

பாடல்

உயிரே என் இயேசுவே உம்மைப் புகழ்கின்றேன்

வாழ்வு மலர சமூகம் மாற என்னை அர்ப்பணித்தேன்

விவிலிய வாசகம்

எபேசியர் 5:8-14

விவிலிய விளக்கம்

ஆண்டவரோடு இணைந்திருப்பது மட்டுமே நாம் ஒளி பெற்றவர்களாய் இருக்கின்றோம் என்பதற்கான சாட்சி. ஒளி இருக்கின்றது என்றால் அங்கு இருளுக்கு இனி இல்லை. ஒளி ஏற்றப்படும் அதே நேரத்தில் இருள் இருக்கின்ற இடம் தெரியாமல் மறைந்து கொள்கின்றது. ஒளியைப்பார்க்கும் போது மகிழ்ச்சி, புத்தொளி, புத்துணர்வு கிடைக்கின்றது. ஆனால் இருளில் இருக்க நேரிடின் பயம் மனதை கவ்விக்கொள்கின்றது. எப்பொழுதெல்லாம் மின்சாரம் இல்லாமல் போகின்றதோ அப்போழுதெல்லாம் வீண் கவலை, பயம், கோபம், விரக்தி போன்றவை மனதில் வந்து குடிகொள்ளும் நிலை உருவாகின்றது. ஆனால் மின்சாரம் இருக்குமாயின்

ஒரே மகிழ்ச்சி. அதை செய்து விட வேண்டும். இதை முடித்துவிட வேண்டு என்ற திட்டமிடல் ஆரம்பமாகிவிடுகின்றது. இந்த நிலை எல்லோரி வாழ்வனுபவத்திலும் தவிர்க்க முடியாத அனுபவமாய் ஆகி விட்டது. இரு அழிவுக்கு வாசல் திறக்கிறது. ஒளி வாழ்வுக்கு வாசல் பிறக்கிறது. கணவ மனைவி கோப உணர்வு கொண்டவர்களாய் ஒருவர் மற்றவரிடம் பேசுவதை தவிர்த் வாழுகின்றனர். யார் முதலில் பேசுவது என்ற போட்டி வேறு. அதனால் பல முடிந்து வீடு திரும்பும் கணவன் ஒரு காகிதத்துண்டை எடுத்து நா அவசரமான பணி. விமானத்தில் பயணம் செய்ய வேண்டும். எனவே 5 மணிக் எழுப்பவும் என எழுதி பொது மேசை மீது வைத்துச் சென்றான். காலை வந்தது மணியும் 9 ஆனது. கோப உணர்வுக்கொண்டவனாய் மனைவியை நோக்கி சண் போட முற்படுகையில் கண்ணில் பட்டது அவன் எழுதிய தாளின் மறுபக்க அதில் மணி 5 ஆகி விட்டது எழுந்திருக்கவும் என்று எழுதப்பட்டிருந்தது கணவன், மனைவி இருவரின் செயலும் இருளுக்குரிய செயல், அது ஒளியி செயலாய் இருந்திருந்தால் நிகழ்வு வேறு மாதிரி அமைந்திருக்கும். எனவே பவுலடிய எபேசு மக்களுக்கு எடுத்து கூறிய இறைவார்த்தைகளை நமதாக்க முயலுவோ நன்மை, நீதி, உண்மை ஆகியவைகளை விளைவிக்கும் ஒளியை எப்போது நம்முடன் வைத்திருப்போம். நம் வாழ்வில் நாம் மேற்கொள்ளும் எல்லாச்செயலிலு ஆண்டவர்க்கு விருப்பமானதை மட்டும் செய்பவராய் இருப்போம். அப்போ நாம் ஒளியின் மக்களாய் மிளிர்வோம். அடுத்தவருக்கு ஒளி எண்ணும் வாழ் பகிர்ந்தளிப்பவர்களாய் பூமியில் வலம் வருவோம். எனவே தீபாவளி விழா (ஒ விழா) எல்லோர்க்கும் நன்மை செய்வதாக மட்டுமே இருந்திட வழிபாட்டில் பக்தியுட இறை வேண்டல். நன்மையை விரும்பி ஒளி என்னும் இன்பத்தில் நடக்கின்றோம தீமைகளை நேசித்து இருள் என்ற துன்பத்தில் உழல்கின்றோமா? தியானிப்போ

பாடல்

நீ ஒளியாகும் என் பாதைக்கு விளக்காகும்
நீ வழியாகும் என் வாழ்வுக்குத் துணையாகும்

(ஒளியான இறைவன் நம்மை முழுதும் ஆட்கொள்ள வரம் வேண்டி கூக்குரலை அவர் பதம் சேர்ப்போம்.)

வாழ்வின் உண்மையான மதிப்பீடுகளை உணர்ந்து வாழ

பதில் : இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

உம் ஒளியில் வெளிச்சம் பெறும் போது மட்டுமே இவ்வுலகம் நன்மைகளால் நிறைவடையும் என்பதை நாங்கள் உணர்ந்து வாழ....

எங்கள் விருப்பங்கள், ஆவல்கள், ஏக்கங்கள், கனவுகள், நாட்டங்கள் எல்லாமே உம் ஒளியினால் வழி நடத்தப்பட வேண்டுமென்று....

இன்றைய விழாவை மகிழ்ச்சியுடன் கொண்டாடும் ஒவ்வொருவரும் உம் ஒளியால் நிரப்பப்படவும், அதை மற்றவர்க்கு கொடுத்து மகிழவும் வேண்டிய வரத்தை தர.....

ஒளி விழாவை சிறப்பிக்கும் இன்று உமது அருள் ஒளி எங்களது இல்லம், ஊர், மாவட்டம், மாநிலம், நாடு, உலகு என எல்லா இடங்களிலும் நிரப்பப்படட்டும். அதனால் விளையும் மகிழ்ச்சி, அமைதி எல்லா இடங்களில் குடி கொண்டிட வரம் தரவேண்டுமென்று

நாம் கேட்பதற்கு மேலாகவே இறைவன் நமக்கு வழங்குவார் என்பதை மனதில் நினைத்தவர்களாய் நாம் எழுப்பிய விண்ணப்பங்கள் நமக்கு இறைவனால் அருளப்படுகிறது என்பதை உணர்ந்து அக்களிப்போடு நன்றி கூறுவோம்.

பாடல்

நான் போகின்ற வழியெல்லாம் ஒளி தீபமோ

தேன் பொழிகின்ற மலர் கூட்டமோ

கர்த்தர் கற்பித்த செபம்

இறுதி செபம்

இரக்கமே உருவான இறைவா, தீபாவளி என்று நாட்டு மக்கள் அனைவராலும் அழைக்கப்படும் ஒளி விழா வழிபாட்டில் எங்களை பங்குக்கொள்ள செய்ததற்காக நன்றி கூறுகின்றோம். தீபங்கள் ஏற்றப்படுகின்ற இடங்கள் ஒளி வெள்ளத்தால் சூழப்பட்டிருப்பது போல் ஒளியாகிய உம்மால் நாங்கள் முழுமையாய் ஆட்கொள்ளப்படவேண்டும். அதனால் எங்கள் உள்ளத்தில் உள்ள மாசுகள் அகற்றப்படவேண்டும். ஒளியாகிய நீர் எம்முள் எழும் போது வஞ்சகம், பொறாமை, கட்டு, ஆடம்பரம், குடிவெறி, களியாட்டம், நெறி தவறிய வாழ்வு, மோகம், களவு, சீற்றம், கட்சி மனப்பான்மை, பிரிவினை, அழுக்காறு, அவதூறு என்ற எங்களின் தவறான போக்குகள் முற்றிலும் மறைந்து அன்பு, பரிவு, பாசம், பொறுமை, ஆடம்பரமின்மை, மகிழ்ச்சி, அமைதி, தன்னடக்கம், நன்னயம், நம்பிக்கை என்பவை நிரந்தரமாய் குடி கொள்ளவும் அதைக்கொண்டு எல்லோர் வாழ்விலும் நம்பிக்கை

ஒளி ஏற்றுபவர்களாய் நாங்கள் செயல்படவும் உம் மகன் இயேசு கிறிஸ்து வழிய
எங்களுக்கு அருள வேண்டுமென்று தாழ்மையுடன் உம்மை மன்றாடுகின்றோம்.

ஆண்டவர் நம்மை ஆசீர்வதித்து, தீமை அனைத்தினின்றும் பாதுகாத்து, முடிவில்
வாழ்வுக்கு அழைத்துச் செல்வாராக. - ஆமென். ஆண்டவரைப் போற்றுவோம். இறை
உமக்கு நன்றி!

குறிப்பு: ஒளி விழா மகிழ்வை வெளிப்படுத்தும் விதமாக வழிபாட்டு பீடத்திலிருந்
ஒளியை ஏற்றி ஒருவர் மற்றவர்க்கு அடையாளமாய் வழங்கி வாழ்த்தை பரிமாறிக்கொள்வோ

சகோ. மோ. திரேசா ஞானமணி. FSAG

13. இயற்கையின் பாதுகாவலர் (தூய அசீசி பிரான்சீசு)

மூவொரு இறைவனுக்கு வாழ்த்து

தந்தையே உம்மை வணங்குகிறோம்
எம் வாழ்வை உமக்கு அளிக்கின்றோம்
உம்மை அன்பு செய்கின்றோம்.

இயேசுவே உம்மை வணங்குகிறோம்.....
ஆவியே உம்மை வணங்குகிறோம்.....
மூவொரு இறைவா வணங்குகிறோம்....
(மூவொரு இறைவனை குனிந்து வணங்கி ஆராதித்து இடம் அமர்வோம்)

புகழ்ச்சி

அமைதியான இறைவனே! உம்முடைய அமைதியை அரவணைக்கவும் அன்
செய்யவும், அந்த அமைதிக்காக தன்னையே கருவியாக்கிக் கொள்ளவும் ஏங்கி, உம்மிட
மன்றாடிய தூய அசீசி பிரான்சீசுவை, இவ்வுலகிற்கு ஒரு புனிதரா
அறிமுகப்படுத்தியமைக்காக உம்மை போற்றி புகழ்கின்றோம்.

செல்வந்தரின் மகனான பிரான்சிஸ் ஆடம்பர வாழ்வில் திளைத்து, எப்போதும் தா
வசதியானவர் என்பதை நடை உடையில் காட்டியவரை ஏழ்மையை மணவாட்டியாக்
ஏழை பங்காளனாக மாற்றிய உம்மை போற்றி புகழ்கின்றோம்.

தன்னை மிகவும் விரும்பி நேசித்த கிளாராவை விடுத்து உமக்கு பணிபுரிய தன்னை
அர்ப்பணித்து, அப்பணிக்கு கிளாராவையும் இணைத்துக் கொள்ளும் அளவிற்கு உம்மே
உறுதியான உள்ளமும் மாறா பற்றும் கொண்ட பிரான்சிஸ்குவிற்காக உம்
போற்றுகிறோம்.

சாதாரண ஒரு பறவை அவருடைய இல்லத்தின் மாடியின் உச்சியில் வந்தமர்ந்திருக்
அதனை காப்பாற்ற உடல்நலமில்லாத போதும் தன் வேதனையைப் பாராமல் மாடியி
உச்சிக்கு சென்று அப்பறவைக்கு பாதுகாப்பு நல்கிய உத்தமர் பிரான்சிஸ்குவிற்கா
உம்மை போற்றுகிறோம்.

தான் விலையுயர்ந்த ஆடை ஆபரணங்களில் வாழ்வதும் ஏழைமக்கள் ஒன்றுமில்லாம
எளிய ஆடை அணிந்திருப்பதையும் கண்டு, தன்தந்தை வியாபாரத்திற்காக வைத்திருந்
துணிகளையெல்லாம் அள்ளி கொடுத்த தயாளர் பிரான்சிஸ்குவிற்காக உம்மை புகழ்கின்றோ

தன்னுடைய வீட்டிலும் தொழில்பட்டறையிலும் அடிமைகளைப் போல பணிசெய்த பணியாளர்களிடம் சென்று அவர்களோடு பணி செய்தும், அவர்களுக்காக தன்னுடைய தந்தையிடத்தில் வாதாடி விடுதலை வாங்கிக்கொடுக்கவும் முயன்ற செயல் வீரர் பிரான்சிஸ்குவிற்காக உம்மை புகழ்கின்றோம்.

அகிலம் முழுவதையும் படைத்த இறைவன், அவரது அருளால் பூமியை நிறைத்துள்ளார். எல்லாம் வல்ல இறைவன், எங்கும், எதிலும் நிறைந்துள்ளார். அனைத்தையும் படைத்து, பாதுகாக்கும் பரம் பொருள் அனைத்திலும் நீக்கமற நிறைந்துள்ளார். அவரது அன்பிற்கு அப்பாற்பட்டது எதுவும் இல்லை. இறைவனின் படைப்புக்கள் அனைத்திலும் வாழும் நம் தெய்வத்தின் அழகினையும், சிறப்பயும் உணர்ந்து பாடுவோம்.

பாடல்

என் தெய்வம் வாழும் பூமியிது எத்துணை அழகு இது

1. உலகே கண்கள் திறவாயோ உவகை கொண்டு காணாயோ

கொல்லான்புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும் - திருவள்ளுவர்.

இறைச்சி உண்ணாதவர்களையும், அதற்காக உயிர்களைக் கொல்லாதவர்களையும் எல்லா உயிர்களும் வாழ்த்தும். அதனைப் போலவே இயற்கை இடத்தும், ஏனையப் படைப்புகளிடத்தும் தூய அசீசி பிரான்சீசு நடந்து கொண்ட வகையே தனிப்பட்டது. விலங்கினமும் பறவைகளும் அவரது தங்கையரே! இளஞ்சோலைகளும், வனமலர்களும், இணைந்து உலவும் இளங்காற்றும் அவருக்கும் இன்பம் அளித்தன. இவ்வாறாக இயற்கையிடம் தம் இதயத்தை பதித்து அதன்வழி இறையிடம் இன்பம் கண்டவர்.

மரங்களையும், மட்டைகளையும் ஆசிரியர்களாக கருதினார். உருண்டோடும் ஓடைகள் அவருக்கு திரண்ட அறிவைக் கூறும் நூல்களாகும், படர்பாறைகளும் மலைகளும் அவருக்கு பாடம் கற்பித்தன. இறைவனே அவருக்கு ஆசிரியர், இம்மாநிலமே பள்ளி, பறவைகளையும், விலங்குகளையும் தம் உடன் பிறப்பாக கருதிய பிரான்சீஸ் நாள் போக போக அவைகளுக்கு எவரும் தீங்கு இழைக்காமலும் காத்து வந்தார்.

சின்னஞ்சிறிய குருவிகளைப் போலவே வண்ணமலர்கள் எல்லாம் புனிதருக்கு தங்கையாயினர். பூக்கள் என்றாலே புனிதருக்குப் பெரிய விருப்பம் எனவே தங்கள் இல்லத்துள் எங்கெல்லாம் பூச்செடிகளை வைத்துப் பார்க்க முடியுமோ அங்கெல்லாம் அவைகளை நட்டுச் செழிக்க வைக்கும்படி தன் சகோதரர்களுக்கு கூறுவார். மலர்களைக் கண்டதும் அவர் மனமும் அவைபோல மலர எதுவும் இல்லை என்பதை உணர்ந்தவர். இந்த இயற்கையின் பாதுகாவலரைப் போன்று இறைபடைப்பில் இறைவனைக் கண்டு அவைகளைப் பேணிகாப்போம்.

பாடல்

ஆண்டவரைப் பாடுங்கள்
அவர் பெயரை வாழ்த்துங்கள்

II. படைத்தார் படைப்பெல்லாம் மனுவுக்காக

மனுவைப் படைத்தார் தமை வணங்க

அல்வெர்னா மலையை விட்டு அகலும் காலம் வந்தது. அதை வாயார வாழ்த்தினார். அல்வெர்னா மலையே அவருக்கு பனிநிலமாகிவிட்டது. கருங்கல்லும் அருங்கல்லாகியது. மரம், செடி, கொடிகளும் அவரது கண்களுக்கு அருமையாயின மணந்தரும் மலர்களும், சுவைதரும் கனிகளும் பிரிய அரிதாயின. அவை ஒவ்வொன்றையும் பார்த்துப் பேசி இறைவனைப் புகழ்ந்து வாழ்த்தினார். அல்லும் பகலும் அயராது அவருக்கு உண்மையாயிருந்த அரசாளித் தம்பிக்கு தனி அன்புக் காட்டினார். அசிசி நகருக்கு அருகில் அவ்விரானா என்ற கிராமத்தில் பிரான்சிஸ் மறை உரையாற்றினார். அங்கு அடைக்கலான் குருவிகள் கூடுகட்டி ஒரே இரைச்சல் செய்து அவரது மறைஉரைக்கு இடறலாய் இருந்தது. இனிய குரலில் பிரான்சீஸ் "என் அன்பார்ந்த சிறுதங்கையரே அடைக்கலான் குருவிகளே! நீங்கள் இதுவரை பேசி மகிழ்ந்தது போதாதா? அண்ணனும் பேசவேண்டாமா? என்று பிரான்சீஸ் பரிவுடன் வினவினார். அவ்வளவுதான் அவரது மறையுரை முடியும் மட்டும் அமைதியாக இருந்தன.

வேடன் ஒருவன் கூட்டிற்குள் புறாக்களை அடைத்து விற்கச் சென்றான் அவ்வழியே பிரான்சீஸ் நடந்து சென்றுக் கொண்டிருந்தார். பிரான்சீஸ் வேடனைப் பார்த்து என் பிறவிகளை என்னிடம் கொடுத்து விடமாட்டாயா? என்று இரக்கமுடன் கேட்டார். வேடனும் அன்போடு புறாக்களைக் கொடுத்துவிட்டான். பிரான்சீஸ் அவைகளை இல்லத்திற்கு எடுத்துச் சென்று சுதந்திரமாக உலவச் செய்தார். அவைகளின் சுதந்திரத்தில் இறைவனைப் புகழ்ந்தார். நாமும் இயற்கையில் இறைவனின் அழகையும், சிறப்பயும் கண்டு அவரைப் புகழ்வோம்.

பாடல்

ஆண்டவரே எவ்வளவு நல்லவரென்று
சுவைத்துப் பாருங்கள்

விவிலியம் வாசகம்

ஆதியாகமம் : 1/1-31, 2/1-4

விவிலிய விளக்கம்

ஆதியிலே இறைவன் தான் படைத்த அனைத்தையும் நல்லதெனக் கண்டார் ஆனால் இன்று தீமைகள் நிறைந்து விட்டன.

படைப்புக்கள் அனைத்திலும் சகோதரத்துவம் இருந்தது
இன்று எங்கு நோக்கினும் பகைமையும், பிரிவுகளும் நிறைந்து காணப்படுகிறது.

இறைவன் ஆணும், பெண்ணுமாக சமத்துவ உணர்வோடு படைத்தார். இன்று பிரிவினைகள் மிகுந்து சமத்துவ உணர்வு அழிக்கப்படுகிறது. படைப்புக்கள் அனைத்தும் ஒருவருக்காக அல்ல, இந்த உலகில் உள்ள அனைவருக்காகவும் படைக்கப்பட்டது. ஆனால் இன்று அனைத்தும் தனிஉடைமை ஆக்கப்பட்டு சுரண்டல் எங்கும் நிறைந்துள்ளது. இல்லாமை எங்கும் நிறைந்துள்ளது. எல்லோரும் பெறும் நிலை அழிக்கப்பட்டு வருகிறது.

உயிரினங்களில் அமைதியும், சமாதானமும் எங்கும் நிறைந்து இருந்தது. இன்று ஓருலகம் பலகூறுகாளக்கப்பட்டு குழப்பமும், சண்டையும் நிறைந்துள்ளது. இறைவனின் படைப்பில் அன்று இறை ஆட்சி பண்புகள் நிறைந்திருந்தன. இறைவனால் அழைக்கப்பட்ட நான் படைப்புக்களில் இறையாட்சியைக் கட்டி எழுப்ப எனது பங்கு என்ன என்று சிந்திப்போம். இயற்கையின் பாதுகாவலராக, இறைவனின் உன்னத கருவிகளாக வாழ்வோம்.

மன்றாட்டுக்கள்

இயற்கையை பாதுகாக்கவும், இறை ஆட்சிப் பண்புகளை கட்டி எழுப்பவும் தேவையான அருள் கேட்டு மன்றாட்டுகளை எழுப்புவோம். மன்றாடுவோம்.

(பங்கு பெறுவோர் செபிப்பர்)

இறுதி செபம்

- படைப்பின் இறைவனே, நீர் படைத்த வானம் போன்று விரிந்த கொள்கையும் உயர்ந்த உள்ளமும் தா!
- பூமியைப் போன்று மாறாது நடைபோடும் தார்மீக நெறியை தா!
- நெருப்பு போன்று ஒளியாய் நின்று வழிகாட்ட வரம் தா!
- மழையைப் போன்று விதையை துளிர்க்கச் செய்ய துணிவை தா!
- காற்றைப் போன்று எங்கும் நில்லாது இறையாட்சிப் பயணம் மேற்கொள்ள வேகத்தைத்தா!

இந்த அருளை பெற்றுக் கொள்ள படைப்பின் இறைவனை நோக்கி கிறிஸ்து கற்பித்த செபத்தை செபிப்போம்.

ஆண்டவர் நம்மை ஆசிர்வதித்து, தீமை அனைத்தினின்றும் பாதுகாத்து, முடிவில்லா வாழ்வுக்கு அழைத்துச் செல்வாராக. - ஆமென். ஆண்டவரைப் போற்றுவோம். இறைவா உமக்கு நன்றி!

சகோ. பிரான்சிஸ்கா FSAG

13. (II) புனித பிரான்சீஸின் ஆன்மீகம்

பாடல்:

வானம் திறந்து வெண்புறா போல இறங்கி வர வேண்டும்
தேவா வல்லமை தர வேண்டும் - 2

தொடக்கச் செபம்

ஏழைகளின் கடவுளாகிய இறைதந்தையே!

ஏழ்மை கோலம் பூண்டு மண்ணிலே மனுஉருவான இயேசுவே!

மானிட இதயங்களை ஆலயமாக்கி அதில் நாளும் வாழ திருவுளம் கொண்ட தூய ஆவியே உம்மை ஆராதித்து, போற்றி புகழ்ந்து நன்றி கூறுகிறோம். இன்றைய நாளில் புனித பிரான்சீஸ் அசீசியாரின் ஏழ்மையையும், பற்றற்ற வாழ்வினையும் தியானிக்க அழைக்கப்படுகிறோம். இன்று பற்றற்ற இறைவனை பற்றிக்கொண்டு அவர் வழி வாழ வரம் கேட்போம்.

பஜனை

உம்மை பற்றிக் கொள்ள வேண்டும் இயேசுவே
உம்மைத் தொடர்ந்திட வேண்டும் இயேசுவே (2)

I. பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்றுவிடற்கு என்றார் - வள்ளுவர்

"உங்கள் செல்வம் எங்குள்ளதோ அங்கே உங்கள் உள்ளமும் இருக்கும்" - என்றது நற்செய்தி நூல்

"என் ஆண்டவரே நீரே என் எல்லாம்" என்று செபித்தார் - புனித பிரான்சீஸ்

பிரான்சீஸ் வழக்கம் போல் சிற்றாலயத்திற்கு சென்றார். ஒரு நாள் இறைபீடம் முன் நின்று "இருள் நிறைந்த என்னுள்ளத்தை உமது அருள் ஒளியால் நிரப்பும் எனக்கென்று எண்ணம் ஒன்றுமில்லை, உம் திருவருள் எப்படியோ அப்படியே அழைத்து வழிநடத்தும்" என்று கூறி இறைவன் கரத்தில் முழுமையாக தன்னைக் கையளித்தார். திடீரென திருச்சிலுவையில் தொங்கிய இயேசு பழுதடைந்த ஆலயத்தை சீர்படுத்துவாயா? என்று பிரான்சீசைப் பார்த்துக் கேட்டார். பிரான்சீஸ் எட்டி நின்று கண்களில் நீர் சொரிய இரு கைகளையும் விரித்து இதோ ஏழை நான் விரைந்து முடிக்க சித்தமாய் உள்ளேன் என்று இன்பமுடன் பதில் அளித்தார். என்னவென்று உணராமல், செயலற்று, மெய்மறந்து, சிலுவை அன்பில் ஆழ்ந்தார். இயேசுவின் அன்பினை இனம் கண்டு கொண்ட பிரான்சீஸ், தமது பண்டக சாலையிலிருந்து வேண்டிய அளவு துணிகளை குதிரை மேல் ஏற்றி, அதை விற்று கோவிலை சீர்திருத்தும் பணிக்கு குருவிடம் கொடுத்தார்.

குரு அப்பணத்தை ஏற்றுக் கொள்ளாமையால் கோவிலுக்குள் போட்டு விட்டு வருத்தமுடன் திரும்பினார். தம்மை ஆட்கொண்ட இறைவனுக்கு சான்றுபகர துன்பங்களை இன்பமென எண்ணி ஏற்க உறுதி பூண்டார். இவைகளை எல்லாம் அறிந்த அவரது தந்தை, பிரான்சீஸை அறை ஒன்றில் போட்டு அடைத்து அடித்தார், உதைத்தார். இவை அனைத்தையும் பொறுத்துக் கொண்டிருந்த புனிதர், தந்தையே! நான் ஆண்டவரின் ஆவியானவரால் ஆட்கொள்ளப்பட்டு அவருக்காக வாழ முடிவெடுத்து விட்டேன். உங்களின் உலக வழியில் வாழ என்னால் முடியாது என்றார்.

பிரான்சீசின் தந்தை அவரை ஊரை விட்டே விரட்ட, இந்த வழக்கை ஆயர் குழுவுக்கு இழுத்தார். ஆயருடன் ஆயிரக்கணக்கான கண்கள் பிரான்சீஸை சூழ்ந்து நின்றது. அவர்தம் ஆடையையும் கழற்றி எறிந்து விட்டு நிர்வாணமாய் இனி எனக்கு நீ தந்தை இல்லை வானகத்திலுள்ள இறைவனே என் தந்தை என்று விருப்பன் கூறினார். ஆயர் தம் மேலாடையை அவர் மேல் போர்த்த பிரான்சீஸ் ஏழ்மை என்னும் எழில் அரசியை வாழ்த்தி அன்புறவு கொண்டார். நாம் கொண்டுள்ள இறைப்பற்றை ஒரு தராசிலும், உலகப்பற்றை மற்றொரு தராசிலும் எடுத்து வைப்போம். உலகப்பற்றைக் குறைத்து இறைப்பற்றை அதிகரிக்க நம் சிந்தனையை பிரான்சீஸின் வாழ்வோடு உரசிப் பார்ப்போம்.

பாடல்

உனக்காக இனி வாழ முடிவெடுத்தேன்

ஒரு கோடி இடர்ப்பாடு எது வந்த போதும்....

நற்செய்தி **லூக் 4 : 16 — 19.**

செல்வமிக்கவராய் இருந்தும் நாம் செல்வராகும்படி ஏழ்மைக்கோலம் பூண்ட இயேசுவின் ஏழ்மையைத் தனது மணவாட்டியாக்கி கொண்டவர் புனித பிரான்சீஸ். அக்கால சமுதாயத்தில் ஒடுக்கப்பட்ட ஏழைகள், வலுவற்றோர், நோயுற்றோர், தொழுநோய் கொண்டோர் மற்றும் வழியோரப் பிச்சைக்காரர்கள் மத்தியில் வாழ்வதையே பெருமகிழ்வாகக் கருதியவர்.

அன்றைய சமுதாயத்தில் மேட்டுக்குடியினர், கீழ்குடியினர் என்று இரு பிரிவினர் இருந்தனர். மேட்டுக்குடியினர் வகுப்பைச்சேர்ந்த பிரிவினர் புனித பிரான்சீஸ் கீழ்குடி மக்களுடன் தன்னை இணைத்துக் கொண்டார். புனிதரும் அவரது சகோதரர்களும் தங்களின் பணிகளைத் தேர்ந்தெடுக்கும் போதும், பணிகளில் ஈடுபட்டிருக்கும் போதும், மேட்டுக்குடி மக்களின் அதிகார மனப்பான்மையையும் மேலாண்மை போக்குகளையும் விலக்க வேண்டும் என்று உறுதி பூண்டார். அனைத்து சகோதரர்களும் இயேசு கிறிஸ்துவின் தாழ்ச்சியையும், ஏழ்மையையும் பின்பற்றவும், மக்கள் மத்தியில் பணிபுரியும் போது நிர்வாகிகளாகவோ, அதிகாரிகளாகவோ இல்லாமல் நற்செய்தி வாக்கின்படி தலைவர்கள் பணியாளர்களாக இருக்க வேண்டும் என்பதை நடைமுறைப்படுத்தினார்.

பிரான்சீசிய ஆன்மீகம் வெறும் பக்தி முயற்சிகளையும், வழிபாட்டையும் மட்டும் சார்ந்தது அல்ல, மாறாக ஏழை, எளியவர், தாழ்த்தப்பட்டோர் நோயாளிகள் மட்டில் தனிப்பட்ட நிலைப்பாடு எடுக்காத நமது செயல்பாடு சிறந்த ஆன்மீகமாக இருக்க முடியாது என ஆணித்தரமாக கூறினார். துறவற வாழ்வில் நமது நிலைப்பாடு யாருக்கு எடுத்துள்ளோம், மக்கள் மத்தியில் எத்தகைய பாதிப்பை ஏற்படுத்தியுள்ளோம் சிந்திப்போம்.

பாடல்

நீ செய்த நன்மையெல்லாம் உலகோர்க்கு சொல்லிடுவேன்
நீ கண்ட கனவெல்லாம் நனவாக நான் உழைப்பேன் இயேசுவே
உன் நினைவாக நான் என்றும் வாழ்வேன்

III புனித பிரான்சிஸ் காலத்தில் மேலோங்கி இருந்த ஆன்மீகம் "மடாலய ஆன்மீ இந்த ஆன்மீகம் உலகம் தீயது அதனை விட்டு பாலைவனங்களுக்கு காடுகளுக்கும் ஓடிப்போவதே மீட்பிற்கு ஒரே வழி எனப் போதித்தது. இ ஆன்மீகம் திருச்சபையின் போக்கையும் நிர்வாகத்தையும் பெரிதும் பாதித்த புனித பிரான்சிஸ் மற்றும் அவரது சகோதரர்களும் பின்பற்றிய ஆன்மீகம் இருப்பி ஆன்மீகம். எல்லா நிலையினராலும் வாழக் கூடிய ஒன்று புனிதம் என்பது ஆவியாரி செயல்பாடு. அந்த ஆவியானவருக்கு யாரும் வேலி போட்டுவிட முடியாது அவர் விரும்பிய பக்கமெல்லாம் செயல்படுவார் என்று பிரான்சிஸ் ஆழமாக நம்பினா இந்த ஆவியின் அசைவாடலை அடையாளம் கண்டு அதற்கு தெளிவாக வடிவ கொடுத்து எல்லா தரப்பினரையும் புனிதத்தை நோக்கி வழிநடத்த முற்பட்ட நம் தந்தை புனித பிரான்சிஸ். இவர் மாட்டுக் கொட்டிலில் பிறந்த கிறிஸ்துவை மனுமகனாகப் பொதுப்பணியில் ஈடுபட்ட கிறிஸ்துவையும் மாதிரியாகக் கொண் செயல்பட்டார். மடாலய ஆன்மீகத்தால் ஏற்பட்ட சிதைவினை சீரபடுத்த அ தேர்ந்து கொண்ட நற்செய்தி மதிப்பீடு ஏழ்மையாகும்.

இயேசுவும் அவருடைய சீடர்களும் ஏழைகளாகவும், வழிப்பயணிகளாகவு யாசித்ததைக் கொண்டு வாழ்பவர்களாகவும் இருந்ததைப் போன்று தேவை ஏற்படு போதெல்லாம் யாசிக்கும் தொழிலை மேற்கொண்டார். பிச்சை எடுத்த ஏழைகளுக்காக நம் ஆண்டவர்இயேசு பெற்றுத் தந்த நியாயமான உரிமை சொத்து என்றார்.

அன்றாடப் பிழைப்புக்கு அலைந்து திரிவது நலமன்று. ஏனையத் துறவிக போல் மடமொன்றுக் கட்டி நிலப்புலன் கொடையாக பெற்று வந்தால் நலம் எ அறிவுரைத்தபோது, புனித பிரான்சிஸ் அழிவுக்கும், சண்டை சச்சரவுக்கு அன்பின்மைக்கும் உறவின் முறிவுக்கும் நிலபுலமும் உலக செல்வமுமே காரண எங்களுக்கு ஆண்டவரின் படைப்புக்கள் அனைத்தும் உரிமைச் சொத்து கடவு மேல் எங்களுக்குள்ள நம்பிக்கையே எங்கள் செல்வம். ஏழ்மை என அன்புக்குரியவள் அவளை விட்டு ஒரு போதும் நான் பிரிய மாட்டேன் என்று கூறினார். இதுதான் மனித குலத்தையே மாற்றிப் போட்ட அந்த மாமனிதரி ஆன்மீகம். நம் வாழ்வில் இறைவனும், ஏழைகளும், ஏழ்மையும் எத்தகை இடம் பெற்றுள்ளார்கள் சிந்திப்போம்.

பாடல்

இறைவன் நமது வானகத்தந்தை
இதை உணர்ந்தாலே குளிர்ந்திடும் சிந்தை

...திரங்களில் பொய்கள் உண்மைகளைவிட வலுவானவைகளாக இருக்கும். ...திரங்களில் போதனைகளே வேதனை தரும். போதனைகளையும், ...னைகளையும் உள்ளடக்கி சாதனைப் புரிந்து வரலாற்றை வரைந்தவர் புனித ...சீஸ். அவரின் உள் மனதில் எரிந்து கொண்டிருந்த இலட்சிய தீ தான் ...மை என்னும் எழிலரசி. மதத்தின் பெயரை வைத்துக் கொண்டு மாயக்கூத்தாடிய ...களையவர்களை மனிதர்களாக வாழச் சொன்னவர்தான் புனித பிரான்சீஸ். ...விக்காணக்கான நெருஞ்சங்கள் ஏழ்மையிலும், சமுதாயத்தில் விளிம்புக்குத் ...ளப்பட்ட நிலையிலும் தவித்துக் கொண்டிருக்கும் போது இறையாட்சியைக் ...ழுப்ப நாம் பக்தி பரவசத்திலும், பஜனைகள் பாடுவதிலும் பவனிகள் ...துவதிலும் கருமமே கண்ணாயிருக்கிறோம். அன்றாட இறை அரசின் ...ளங்களாகிய வாழ்வின் சுமைகள், சோர்வுகள், இரக்கம், ஈகை, ஏமாற்றங்கள் ...ம் மாய உலகின் மயக்கங்கள் அல்ல, காலமென்னும் கரையில் வந்து மோதும் ...வின் அருள் அலைகள். சமுதாயத்தில் மக்களின் வறுமை, அறியாமை, குருட்டு ...க்கைகள் மூடப்பழக்கங்கள் எனும் அடிப்படைத் தனத்தைக் கண்டு ...னைப்போல் பொங்கி எழுகிறார். ஆமோசைப் போல் இடி முழக்கமிடுகிறார். ...மியாக மக்களுக்குத் தன்னை அர்ப்பணிக்கிறார். மண்ணிலே மனுஉருவான ...வை தொழுவத்தில, குடில் அமைத்து உலகுக்கு முதன் முறையாக ...முகப்படுத்தியவர் புனித பிரான்சீஸ்.

...வாழ்க்கையிலிருந்து விழுந்துவிட்டால் நம்பிக்கை இல்லாத மனிதன் புதைந்து ...கிறான். ஆனால் நம்பிக்கையுள்ள மனிதனோ புதைக்கப்பட்டாலும் முளைத்து ...கிறான். ஏழைகளின் செயல்கள் முகவரி இல்லாமலேயே போகின்றன. ...க்கப்பட்டவர்கள் கேள்வி கேட்கக்கூட சக்தியில்லாமல் திரிகிறார்கள். இன்று ...ழைக்கும் மக்கள் உறவினர்கள் இன்றி தவிக்கிறார்கள். சமுதாயத்தில் ...ந்தவர்களால் ஓரங்கட்டப்படுகிறார்கள். இந்த மக்களை கேள்வி கேட்காமல் ...செய்யாமல் அகிம்சை என்னும் அன்பு நெறியை உலகிற்கு அறிமுகப்படுத்தி ...மனிதனுக்கே.... மனிதன் மதத்திற்கன்று என்று வாழ்ந்தவர் புனித பிரான்சீஸ். ...ஏழ்மை வார்த்தைப்பாடு ஏட்டோடு நின்றுவிடுகிறதா? அல்லது ஏழைகள், ...க்கப்பட்டவர் மத்தியில் அவர்களது வாழ்வை வளர்த்தெடுக்கிறதா? சிந்திப்போம்.

(பங்கு பெறுபவர்கள் மன்றாட்டுக்கள் எழுப்புவர்)

மன்றாட்டுக்கள்

ஒவ்வொரு மன்றாட்டுக்குப் பிறகும் "ஒரு வரம் நான் கேட்கிறேன்" என்ற ...லின் பல்லவியைப் பாடுவோம்.

(இறுதியாகப் பாடல் முழுவதையும் பாடி முடிப்போம்.)

...டல்

ஒருவரம் நான் கேட்கின்றேன்

திருப்பதம் நான் பணிகின்றேன்
மனிதனாக புதிய மனிதனாக
வாழும் வரம் நான் கேட்கின்றேன்

கர்த்தர் கற்பித்த செபம்

இறுதி செபம்

எங்கள் தாயும் தந்தையுமான இறைவா! புனித பிரான்சிஸை எங்கள் செல்வியிட்ட மகனைக் கொடுத்தமைக்காக நாங்கள் நன்றி கூறுகிறோம். இவர் பிரான் ஒழுங்குமுறைகளை அன்றாட வாழ்வில் நாங்கள் பின்பற்றிக்கொண்டு பிறக் அவரது எளிமை வாழ்வினையும், பற்றற்ற மனப்பான்மையையும் எங் உள்ளுயிராகவும் மனிதநேயத்தையும், புனித வாழ்வையும் பகிர்கின்றவர்களாகவும் சொல இறைஅன்பின் கருவிகளாக, அமைதியின் தூதுவர்களாக வாழ வரம் அ எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

ஆண்டவர் நம்மை ஆசீர்வதித்து, தீமை அனைத்திலிருந்தும் பாதுகாத்து முடிவில்லா வாழ்வுக்கு அழைத்துச் செல்வாராக. - ஆமென். ஆண்டவ போற்றுவோம். இறைவா உமக்கு நன்றி!

சகோ. பிரான்சிஸ்கன் F.S

14. குழந்தைகள் தினம்

தந்தை மகன் தூய ஆவியின் பெயராலே - ஆமென்

முன்னுரை

குழந்தைகள் நாட்டின் கண்மணிகள். ஒவ்வொரு வீட்டின் அற்புத மாணிக்க சொத்துக்கள். குழந்தையும், தெய்வமும் குணத்தால் ஒன்று. குற்றங்களை மறந் விடும் மனத்தால் ஒன்று என்று கவிஞன் பாடினான். குழந்தையை யாராவ அடித்தாலோ, திட்டினாலோ துன்புறுத்தியவரை விட்டு, விட்டு ஓடிவிடும். ஆன அடுத்த நிமிடமே ஓடி வந்து அவர் தம் அரவணைப்புக்குள் தஞ்சம் புகு குழந்தைகளின் விழாவை கொண்டாடும் போது நம் தேசிய கவி தாகூர் சொன்ன நாம் நினைவு கூற கடமைப்பட்டுள்ளோம். 'ஒவ்வொரு குழந்தையும் இந்த மண்ணி பிறக்கும் போது மாபெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை இவ்வுலகைப் போ சுமந்து வருகின்றது. இறைவன் இந்த உலகை தொடர்ந்து அன்பு செய்கின்றா மேலும் உலகின் மீது தொடர்ந்து நம்பிக்கை வைத்துள்ளார் என்று' கூறியிருந்தா நம் பாரத பிரதமர். நேருவுக்கு குழந்தைகள் மிகவே பிடிக்கும். அதனாலே அவரது பிறந்த நாள் குழந்தைகள் தின விழாவாக வெகு சிறப்பா கொண்டாடப்படுகிறது.

வீட்டிற்கு கோபமாக நுழையும் தந்தை குழந்தையின் முகத்தை காண நேரிடி துன்பம் மறந்து, கவலை விலகி இயல்பான நிலைக்கு திரும்புகின்றார். கடி மனப்போக்கை மாற்றும் உன்னத சக்தி குழந்தைகளிடம் இறைவன் கொடுத்துள்ளா

ஆனால் தான் திருமணம் ஆன உடனேயே ஒவ்வொரு தம்பதியரும் ஆவலாய் குழந்தைகளை எதிர்பார்க்கின்றனர். அவர்களைவிட அவர்களது பெற்றோர்கள் அதிகமாய் தவம் கிடக்கின்றனர்.

எந்த குழந்தையும் மண்ணில் பிறக்கையில் நல்ல குழந்தைகளே அவன் நல்லவனாவதும் தீயவனாவதும் அன்னை வளர்ப்பினிலே.' இது மறைக்க முடியாத உண்மை. குழந்தை நாணல் செடிப்போன்றது எவ்வளவு வளைத்தாலும் வளைக்கலாம். சரியாய் வளைத்தால் அது முறையாய் வளையும். இது அனுபவத்தில் நாம் கண்டறிந்த உண்மை. எனவே தான் 'ஐந்தில் வளையாததை, ஐம்பதில் வளைக்கமுடியுமா?' என்ற பழமொழியை எழுதி வைத்தனர். மகிழ்ச்சியை இவ்வுலகிற்கு கொண்டுவரும் குழந்தைகள் 'கடவுள் தொடர்ந்து உலகை நம்புகின்றார்' என்ற நம்பிக்கை செய்தியை உலகிற்கு தாங்கிவரும் பதாகைகள் எனவே அவர்களை ஆசையாய் வரவேற்போம். அவர்களுக்காய் சிறப்பாய் செபிப்போம்.

மூவொரு இறைவனுக்கு வாழ்த்து

அன்பு தந்தையே! உலகின் மீது நீர் கொண்டிருக்கும் அசைக்கமுடியாத நம்பிக்கையையும், அன்பையும் ஒவ்வொரு குழந்தைகளையும் பெற்றோர்க்கு வழங்குவதன் மூலம் வெளிப்படுத்தும் உம் மேலான கிருபைக்காய் உம்மை வாழ்த்துகின்றோம்.

மகனாகிய இயேசுவே! உம் தந்தையைப்போலவே உலகின் மீது மாறாத அன்பு கொண்டதால் மனித உரு ஏற்று ஏழ்மையின்கோலம் பூண்டு, மனிதத்தை போற்றி, உயர்த்தி, மேன்மைப்படுத்திய உம் அதிமிகு வாஞ்சைக்காய் உம்மை வாழ்த்துகின்றோம்.

தூய ஆவியாம் இறைவா! இறைத்தந்தையின் விருப்பம் நிறைவுற முதலில் மரியாளை, அன்பு இயேசு குழந்தையை ஈன்றெடுக்கும் உன்னத கருவியாக்கினீர். அதே போல் இறை விருப்பம் உலகில் வாழும் பெற்றோர்களில் செயல்பட ஆவியின் அருட்பொழிவை இடைவிடாமல் நிகழ்த்திக்கொண்டிருக்கும் உம் வல்லச்செயல்களுக்காய் உம்மை வாழ்த்துகின்றோம்.

மூவொரு இறைவா! நாங்கள் உருவான நாள் முதல் இந்நாள் வரை எங்களை எல்லாவித தீங்கிலிருந்தும் காப்பாற்றிய உம்மை போற்றுகின்றோம்.

உலகம் முடியும் வரை எந்நாளும் உங்களோடு இருப்பேன் என்று சொன்ன ஆண்டவரே உமது உடனிருப்பை உணர்கிறோம். குழந்தைகள் சிறப்பாய் வளர, வாழ நல்ல பெற்றோரை, சகோதர, சகோதரிகளைக் கொடுத்து ஆசீர்வதித்து கொண்டிருப்பதை நம்புகிறோம். என் அருள் உனக்குப் போதும் என்று சொன்ன ஆண்டவரே, படைப்புகள் அனைத்தும் உம்மைப் புகழ்கின்ற வேளையில் நாங்களும் உம்மைப் புகழ்கின்றோம்.

ஆமென்

என்னோட இயேசுவே கொஞ்சநேரம் பேசுமே
ஆசையாய் இருக்குதய்யா – 2

மனத்துயர்

எத்தனையோ நன்மைகளைப் பெற்றுக் கொண்ட நாங்கள் உம்மை மறந்து நன்றிக் இல்லா பிள்ளைகளாக வாழ்ந்த நேரங்களை நினைத்து மன வருந்துகின்றோம்.

பதில்: மன்னிக்க வேண்டும் அன்பின் இறைவா (2)
எங்கள் சொல், செயல், சிந்தனையில் உம்மை மறந்து வாழ்ந்ததற்காக.
இறைவா நீர் கொடுத்தத் திறமைகளை பயன்படுத்தாத நேரத்திற்காக
எம் பெற்றோரை, ஆசிரியரை மதிக்காது மரியாதைக் குறைவா
வார்த்தைகளால் திட்டியதற்காக.
உடன் பயிலும் மாணவர்களை ஏற்று அன்பு செய்யாத நேரத்திற்காக

நற்செய்தி வாசகம்

புனித மத்தேயு 19 : 13 – 15

நற்செய்தி விளக்கம்

குழந்தைகள் தின விழாவைக் கொண்டாடும் இந்நாளில் சிறு குழந்தைகளை இயேசு சிறப்பான விதத்தில் அன்பு செய்கிறார். அவர்களுக்கு முதன்மையான இடத்தை கொடுத்திருக்கிறார். ஏனெனில் குழந்தைகள் கள்ளம் கபடமற்றவர்கள். உண்மையை பேசுபவர்கள். எளிதில் கற்றுக் கொள்ளும் திறன் கொண்டவர்கள். இந்த நற்குணங்களை வாழ்நாள் முழுவதும் கடைபிடித்து, நட்ட இடத்தில் தழைத்திடு என்ற வார்த்தை ஏற்று. கொடுக்கபட்ட பொறுப்பை (படிப்பு) நன்முறையில் செய்து வாழ்வி உயர்வோம் பெரியோர்களின் வாய்மொழியை கடைபிடித்து வாழ அரு வேண்டுவோம். இயேசு தனது போதனையை ஞானிகளுக்கும், விவேகிகளுக்கு மறைத்துவிட்டு குழந்தைகளுக்கும், அறிவிலிகளுக்கும் வெளிப்படுத்தினார். எனவே குழந்தைகள் என்பவர்கள் எளிய மனம் படைத்தவர்கள் எதிலும் கூட்டல், கழித்த (மிகைப்படுத்துதல்) என்பது எதுவும் இருக்காது. உரைத்ததை ஒளிவு, மறைவின் கூறுவர். உண்மை செய்தி அறிய விரும்புபவர் தான் கேட்டறியும் வீட்டிற்கு நுழைகையிலே சிறுபிள்ளைகள், விபரம் அறிந்த குழந்தைகள் தென்படுகின்றார்க என்று பார்ப்பார். ஏனென்றால் அவர்கள் வெள்ளை மனது கொண்டவர்கள். உள்ள அப்படியே போட்டு உடைத்துவிடும் தங்ககுணம் கொண்டவர்கள். இத்தகை சிறப்பு மிக்க குழந்தைச்செல்வங்களை தொடர்ந்து இந்த மண்ணுலகுக்கு வழங் மகிழும் இறைவனை துதிப்போம்.

பாடல்

அஞ்சாதே ஆண்டவர் துணையிருக்க

நெஞ்சோடு நித்தம் அவர் நினைவிருக்க
உன்தாயின் உதிரத்தில் உனைத்தெரிந்தார்
உன் வாழ்வின் உறவாய் உனில் நிறைந்தார்

நாம் கேட்பதற்கு மேலாக நமக்குத் தேவையானதைத் தரும் இறைவனிடம் நமது தேவைக்காக மன்றாடுவோம்.

மன்றாட்டு

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும் - (2)

அன்பின் இறைவா திருச்சபையை வழிநடத்தும் ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரையும் ஆசீர்வதித்து அவர்களின் தேவைகளை நிறைவேற்ற இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

எம் இறைவா! எம் நாட்டுத் தலைவர்களை ஆசீர்வதியும். இவர்கள் மக்கள் நலனில் அக்கறை கொண்டு, சிறப்பாக குழந்தைகள், சிறார்கள், பெண்கள் குழந்தைகள், ஏழை எளியவர்மேல் இரக்கம் காட்டி அவர்களுக்கு தேவையானவற்றை உடனடியாகச்செய்ய நல்ல மனதைத் தந்தருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

தாயும் தந்தையுமான இறைவா! எங்களைப்போல் பல விடுதிகளில் பயிலும் மாணவ, மாணவிகள் அனைவரையும் ஆசீர்வதியும். நாங்கள் அனைவரும் இறைபக்தியிலும், ஞானத்திலும், ஒழுக்கத்திலும், பிறரை மதிப்பதிலும், சிறந்து விளங்க இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

அன்பே உருவான இறைவா! எமது பெற்றோர்களை ஆசீர்வதியும். அவர்கள் செய்யும் தொழிலையும் ஆசீர்வதியும். அவர்கள் நினைக்கும் காரியங்கள் நிறைவேறச் செய்ய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

ஆண்டவரே எல்லா அருள் வரங்களையும் நிறைவாக எம்மீது பொழிந்து வரும் உம் கருணைக்காக உம்மை புகழ்கின்றோம். எங்களைப் போன்று படிக்காமல் போதிய வசதியின்றி படிப்பை இடையிலேயே விட்டு விட்டு குடும்ப சுமையை தன் சுமையாக கருதி வீட்டு நலன்களுக்காய் உழைக்கும் குழந்தை தொழிலாளர்களை ஆசிர்வதியும். இச்சமூகம் அவர்கள் மீது உண்மையான அக்கறைக்கொண்டு செயல்படவும் அவர்கள் தங்கள் படிப்பைத் தொடர்ந்திட ஆவணச்செய்ய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

நாம் கேட்ட அனைத்து மன்றாட்டுக்களையும் இறைவன் தருவார் என்ற நம்பிக்கையில் அவர் கற்றுக்கொடுத்த செபத்தைச் சொல்லி வேண்டுவோம்.

குழந்தைகளின் குரலை இறைவன் உடனடியாகக்கேட்டு நிறைவு செய்கிறார் என்ற மகிழ்வில் அவரை நினைந்து நன்றிப்பண் பாடுவோம்.

பாடல்

நன்றி என்ற வார்த்தைக்குப் பொருள் என்னவோ இறைவா
பொங்கும் உந்தன் கருணைக்கு அளவில்லையோ தலைவா — 2

இறுதி செபம்

எம்மை பராமரித்து வரும் ஏகவொரு இறைவா! உமது சித்தம் நாடி செயல்ப எங்களைத் தூண்டியருளும். ஒவ்வொரு நாளுமே உமது மதிப்பீட்டை வாழ்வாக் மாமனிதர்களாக, மனித நேயமுள்ளவர்களாக எங்களை பண்படுத்தும். சிற்பி சிற் செதுக்குவது போல் எங்களது தேவையற்ற குணங்களைக் களைந்து நல் பிள்ளைகளாக ஞானத்தில் சிறந்து விளங்கி, பெற்றோருக்கும், பெரியோருக்கு பெருமை சேர்க்கும் பிள்ளைகளாக வாழத் தூண்டியருள வேண்டும் என்று எங்க ஆண்டவரும் உமது திருக்குமாரனுமாகிய இயேசுகிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

ஆண்டவர் நம்மை ஆசிர்வதித்து, தீமை அனைத்திலின்றும் பாதுகாத்து முடிவில்லா வாழ்வுக்கு அழைத்துச் செல்வாராக. - ஆமென். ஆண்டவரை போற்றுவோம். இறைவா உமக்கு நன்றி!

சகோ. S சகாயம் FSAG

15. இறந்தோர் இறைவனில் அமைதி பெற

முன்னுரை

“உயிர்ப்பும் உயிரும் நானே! என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்”. என்ற உயிருள்ள இறைவனின் வார்த்தையில் நம்பிக்கை கொண்டவர்களாய் இன்று நாம் அனைவரும் இறந்த நமது உறவினர்களுக்காக செபிக்க இறைத் திருமுன் கூடியுள்ளோம்.

இறைவனில் இறப்போர் பேறு பெற்றோர். இனி இவருக்கு மீண்டும் உழைப்பில்லை. ஆம் இறைவனில் இறந்தோர் அனைவரும் இன்று விண்ணகத்தில் மகிழ்ச்சியுடன் புகழ்பாடுகின்றனர். இறந்தோர் இறைத்திருமுன் உயிர் வாழ்கின்றனர் அனைத்து புனிதர்களுடன் நிறைவாக மகிழ்வுடன் இறைவனுக்கு பணிவிடை ஆற்றுகின்றனர். இப்புவியின் நிலையற்ற ஒளியை இழந்துவிட்ட அடியார்கள் ஒவ்வொருவரும் நித்திய ஒளியை, நிலையான ஆறுதலை நிறைவாகப் பெற்று மகிழ்வுடன் திருமகன் இயேசுவின் பாடுகள் வழியாக தங்கள் பாவத்தளைகளிலிருந்து விடுபட்டு நித்திய அமைதி பெற செபிப்போம்.

மனத்துயர்

பதில் : நித்திய அமைதியை உம் அடியார்க்கு அளித்தருளும்.

எளியோர் நலனில் அக்கறை கொள்பவரே....
எங்கள் அடைக்கலமும் ஆற்றலுமாக இருப்பவரே....
நானே கடவுள் என உணர்ந்து கொள் என்றவரே....

நம்பட வேளையில் என்னைக் கூப்பிடுங்கள் உங்களைக் காத்திடுவேன் என்று ஆறுதல் அளிப்பவரே....

தூயதோர் உள்ளத்தை எமக்குள்ளே படைக்கும் வல்லமையுள்ள இறைவனே....

மீட்பின் மகிழ்ச்சியை எமக்கு அளிக்கும் ஆண்டவரே....

எங்களின் விண்ணப்பத்தைக் கேட்டு மறுமொழி அளிக்கும் ஆண்டவரே....

பாடல்

இறந்தோர் வாழ்வு ஒளி பெறுக — அவர்

இறைவா உம்மிடம் வந்தடைக

விவிலிய வாசகம்

யோவான் 11 : 11 — 17

விவிலிய விளக்கம்

வாழ்வின் முடிவு என்பது கிறிஸ்தவர்களாகிய நமக்கு கிறிஸ்து காட்டிய வழமை கிறிஸ்து உயிர்த்து விண்ணகம் சென்றது போன்று நாமும் உயிர்த்தெழ வேண்டும் என்பது இறைவனின் விருப்பம்.

உயிர்ப்பும், உயிரும் நானே என்னில் பற்றுறுதி கொள்பவன். இறப்பினும் வாழுவான் ஆம் நாமும் உயிர்போம் என்ற ஆழ்ந்த பற்றுறுதி நம்மில் ஒவ்வொருவரும் வளர வேண்டும்

யாயீரின் மகளை உயிர் பெற்று எழச் செய்தவர். நயீன் பட்டணத்து ஏழை கைம்பெண்ணின் மகனுக்கு மறு வாழ்வு கொடுத்தவர். கல்லறையிலிருந்து லாசரை வெளிவரச் செய்தவர். தம் பணி வாழ்வின் போதே தம் உயிர்ப்புக்கு சாட்சியாக விளங்கினார்.

நாமும் திருமுழுக்கின் போது கிறிஸ்துவின் சாவில் அவரோடு ஒன்றாய் இணைக்கப்பட்டு உயிர்ப்பிலும் அவரைப் போல இருக்க அருளைப் பெறுகிறோம் இதனால் தான் புவுலடியார் "இறந்த இயேசுவை உயிர்த்தெழச் செய்தவரின் ஆவி உங்களுள் குடி கொண்டிருந்தால் கிறிஸ்துவை உயிர்த்தெழச் செய்த அவரே உங்களுள் குடி கொண்டிருக்கும் தம் ஆவியினாலே சாவுக்குரிய உங்கள் உடல்களையும் உயிர்பெறச் செய்வார்" (உரோ 8 : 11) என்று நம்பிக்கையோடு கூறுகிறார்.

இறந்த கிறிஸ்து உயிருடன் எழுப்பப்பட்ட இந்நிகழ்ச்சியானது நாமும் உயிர்க்கப் பெறுவோம் என்பதை உறுதிப்படுத்துகின்றது.

"உயிர்ப்பும், உயிரும் நானே என்றுரைக்கும் ஆண்டவர் என்றும் வாழும் கடவுள் நாமும் வாழும் கடவுளின் பிள்ளைகள். உயிர்ப்பை நம்புகிற நாம் சாவை சந்திக்க தயங்காமல் எந்நேரமும் தயாராக இருந்து புண்ணிய வாழ்வு வாழ முயல

வேண்டும். புனித தோமினிக் சாவியோ, புனித அலோஷியஸ் கொன்சாகர்வைப் போ
சாவை சவாலோடு சந்திக்க தயாராக இருக்க வேண்டும்.

பாடல்

சுவாமி பாதாளங்களிலிருந்து உம்மை நோக்கி கூப்பிடுகிறேன்
சுவாமி என் சத்தத்தை கேட்டருளும்... சப்தத்தை

மன்றாட்டு

பதில் : இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

எங்கள் வாழ்வும் வழியுமான இறைவா! நிறை வாழ்வை வழங்குபவ நீர் அளித்துள்ள இந்த வாழ்வுக்காக நாங்கள் நன்றி செலுத்துகின்றோம். இந் மண்ணுலகை விட்டுப்பிரிந்து உமது நிலையான வாழ்வுக்கு அழைத்து கொண் ஆன்மாக்களின் பாவத்தளைகளை அகற்றி, உமது வான்வீட்டில் இடமளிக் வேண்டுமென்று....

எம்மோடு என்றும் வாழ்பவரே இறைவா! நிலையான நகர் நமக்கு இங் இல்லை என்று மொழிந்தவரே! உம்மால் அன்பு செய்யப்பட்டு இன்று உம்மிட அழைத்துக் கொண்ட உம் அடியார்க்கு நித்திய இளைப்பாற்றியையும், முடிவில் அமைதியையும் அளிக்க வேண்டுமென்று.....

கருணை கடலாகிய இறைவா! இறந்த லாசரை உயிர்ப்பித்து மார்த்தா மரியாள் கவலையை போக்கியவரே! இறந்த உமது அடியாரைப் பிரிந்து வாடு அனைவருக்காகவும் உம்மை வேண்டுகின்றோம். இவர்களது கண்ணீரைய கவலைகளையும் போக்கி, இறந்தோர் அனைவரும் உம்மில் உயிர்ப்பார்கள் என் ஆழ்ந்த விசுவாசத்தைப் பெற்று வாழவும், இவர்களுக்கு உமது ஆறுதலைய அன்பையும் பொழிந்திட வேண்டுமென்று....

எமது பாவங்களை மன்னித்து எம்மை மீட்க உமது ஒரே மகன இவ்வுலகிற்கு அனுப்பிய அன்பு இறைவா! இறந்த அனைவருக்காகவும் செபிக்கு எங்கள் அனைவரையும் ஆசீர்வதித்தருளும். எங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கு வாழ்நாட்களில் நாங்கள் பிறருடன் நல்லுறவு கொண்டு பிறரன்புச் செயல்களி ஈடுபட்டு உமக்கு உகந்த வாழ்வு வாழ....

கர்த்தர் கற்பித்த செபம்

இறுதி செபம்

அனைத்தையும் ஆண்டு நடத்தி வரும் ஆண்டவராகிய கடவுளே! உம் ஒ மகன் சாவை வென்று விண்ணக மாட்சியடைய திருவுளமானீர். இறந்த உ அடியார் இவ்வுலக வாழ்வின் சாவுத்தன்மை மீது வெற்றி கொண்டு தம்மை படைத்தவரும் மீட்பருமான கிறிஸ்துவின் உயிர்ப்பில் நம்பிக்கைக் கொண் உயிர்த்த கிறிஸ்துவின் உயிர்ப்பில் பங்கு பெற்று ஆனந்தம் கொண்டு வா அருள்வீராக.

ஆண்டவர் நம்மை ஆசிர்வதித்து, தீமை அனைத்திலிருந்தும் பாதுகாத்து முடிவில்லா வாழ்வுக்கு அழைத்துச் செல்வாராக. - ஆமென். ஆண்டவரைப் போற்றுவோம். இறைவா உமக்கு நன்றி!

சகோ. S மேரி ஸ்டெல்லா FSAG

16. அமலோற்பவ அன்னை விழா

முன்னுரை

தாய் இல்லாமல் நான் இல்லை
தானே எவரும் பிறந்ததில்லை
எனக்கொரு தாய் இருக்கின்றாள்
எங்கும் எதிலும் காக்கின்றாள்.

தாய் பாசம் பேசப்படுவதற்கோ, பாடப்படுவதற்கோ அல்ல! ஆனால் அனுபவிக்கப்பட வேண்டிய ஒன்று. உலகில் எத்தனையோ உறவுகள் இருந்தாலும் தாயின் அன்பையும், உறவையும், யாரும் மறக்கமுடியாது. மறுக்கவும் முடியாது. மரியாள் என்ற தாயானவள் பிறந்திருக்காவிட்டால் இயேசு என்ற மகனை நமக்கு கொடுத்திருக்க முடியாது. பெற்ற பிள்ளையை அன்பால் குளிப்பாட்டி, பாசத்தால் தாலாட்டி, தியாகத்தால் வளர்ப்பதால் தாய் வருடங்களின் வளர்ச்சியில் பெலிக்கான். பெற்ற தாயின் அன்பு வற்றி போகுமா (இசை 49 : 15)

தாயின் அன்பையும், அரவணைப்பையும், ஆறுதலையும், அக்கறையையும் அர்ப்பணத்தையும், பரிந்து பேசுதலையும், பணிவிடை புரிதலையும் நிறைவு செய்வதையும் நாம் இன்று சிறப்பாக நினைவு கூற வேண்டும். இவை அனைத்தையும் ஒருங்கே பெற்றவள் மரியாள். ஓய்வு, பகை, எதிர்ப்பு என்ற வார்த்தைகள் அவள் வாழ்வில் இடம் பெறவில்லை. அத்தகைய சிறந்த இயேசுவின் அன்புத் தாயை நினைத்து அவளது அமல உற்பவத்துக்காய் விழா எடுக்கும் இந்நன்னாளில் அவளது வழிக்காட்டலுக்காவும், பரிந்து பேசதலுக்காகவும் இந்த ஜெப வழிபாட்டை தொடர்வோம்.

பஜனை

பெற்ற தாய் தனை மறந்தாலும், பிள்ளையை பெற்றவள் மறந்தாலும்
உற்ற தேகத்தை உயிர் மறந்தாலும்
உன்னை மறவேன் என்ற இறைவனே.

மனத்துயர்

சமுதாயத்தால் ஒடுக்கப்பட்டு விளிம்பு நிலைக்கு தள்ளப்பட்ட மக்களுக்கு பணி செய்ய வந்த நாங்கள் அவர்களை ஒரு சில வேலையில் கண்டு கொள்ளாமல் இருந்ததற்கு மன்னித்தருளும்

எங்களது பணிவாழ்வில் பெரியவர்களுக்கு கீழ்படியாமல் சோம்பேறித் தனமாக பணி செய்யாமல் இருந்த தருணத்திற்காக....

பிறருக்கு உதவி செய்யாமல் ஏற்றுக்கொள்ளாமல் வாழ்ந்ததற்காக....

ஜெபமாலையின் முக்கியத்துவத்தை மறந்து வாழ்ந்த தருணத்திற்காக...

புகழ்ச்சி

உமது அன்னையை எங்கள் அனைவருக்கும் அன்னையாக கொடுத்த உமது தாராள உள்ளத்திற்காக.....

பதில் : நன்றியோடு உம்மை புகழ்கின்றோம்.

அன்னை வழியாக ஏழைகள், பெண்கள் தைரியமுடன், நம்பிக்கையுடன், விசுவாசத்துடன் வாழ்வதற்கு கற்பித்தாய்.....

குருக்கள், கன்னியர்களுக்கு பாதுகாவலாகவும் முன் மாதிரிகையாகவும் வழிகாட்டியாகவும் இருக்க உமது அன்னையை கொடுத்த உம் கிருபைக்காக....

திருக்குடும்பங்களுக்கு, ஏழை எளியமக்களுக்கு அவளிடம் தஞ்சம் புகுபவர்களுக்கு உதவிக் கரம் நீட்டி உம்மிடம் பரிந்து பேசி பெற்றுகொடுத்த நன்மைக்காக....

விவிலிய வாசகம்

லூக் 1 : 26 – 38

விவிலிய விளக்கம்

நம் அன்னை மரியாளின் தாய்மை மனம் மண்ணுக்கு மதி, இதயக் கோவிலின் சிலை, அவள் உண்மையான சாட்சி, வற்றா குளம், அவள் நலம் தரும் வரம், நெஞ்சுக்கு உரம், அவள் சோகம் நீக்கும் சுகம். இத்தகைய தாய்மைப் பண்புகளைத் தன் இதமான இதயங்களில் சுமந்து கொண்டு தன்னை நாடிவரும் மக்களை நேசிக்கிறாள். கணவனை அறியாது கன்னிமை கெடாமல் பரிசுத்த ஆவியின் வல்லமையில் மகனைப் பெற்றுக் கொடுத்தவள் தாய்மைப்பண்பின் இலக்கணமானார்.

கன்னி மரியா 'கன்னிமை' முத்திரையிடப்பட்டவர். இந்த முத்திரையை மனித பசாசு உடைத்து பாவ நஞ்சை கலந்திட எவ்வளவோ முயன்றும் முடியவில்லை. புனித ஜெரோம் கூறுகையில் மூவொரு இறைவனே அவளை முத்திரையிட்டுள்ளார். தந்தை தனது 'அன்பு மகள்' என்றும் சுதன் தனது 'தாய்' என்றும் பரிசுத்த ஆவி தனது 'கன்னி' என்றும் முத்திரையிட்டார்கள். புனித தாமஸ் அக்குவினாஸ் கூறுகையில் கடவுள் யாரை அதிகம் நேசிக்கிறாரோ அவர்களுக்கு அதிகமாய் அருள் புரிவார். மற்றவர்களுக்கு அளந்து கொடுக்கப்படும் மரியாளுக்கு நிரம்ப பொழியப்பட்டது. புனித ஜெரோம் "ஓ மரியாயே உம்மிடம் அதிக பிரகாசத்தோடு துலங்காத புண்ணியம் ஒன்றுமில்லை. நீ ஒருவளே எல்லா அருள் கொடைகளையும் அடைந்தவர்" என்றார்.

புனித பெர்னதெத் : "ஓ மரியாயே உமக்கு எல்லா வரங்களும் கொடுக்கப்பட்டன உமக்கிணை ஒருவருமில்லை உமக்கு மேல் கடவுள் ஒருவரே புகழ்கின்றேன்" என்றார். இத்தகைய சிறப்பு மிக்க அன்னையை நமக்கு அன்னையாக கொடுத்த இறைவனின் தாய்மைப் பண்பை எண்ணி அவரைப் போற்றுவோம்.

பாடல்: தாயின் கருவில் என்னை அன்பு தெய்வம் அறிந்திருந்தார்
நாளும் உறவு தந்து எந்தநாளும் வளர்த்து வந்தார்
என்னென்ன ஆனந்தம்....

இன்றைய வாசகம் புனித கன்னிமரி இயேசுவின் தாய். நம் அனைவருக்கும் தாய் ஆகி பாவமாக அணுகாதவர். இயேசுவின் வாழ்வில் எல்லா சூழ்நிலையிலும் உடன் இருந்தவள். இறையாட்சி பணியில் அவளும் ஒரு சீடர். மரியாளின் வாழ்க்கையோடு நமுடைய வாழ்க்கையை ஒப்பிடுவோம்.

நாசரேத்தூர் மரியாவைப் பின் பற்றி இறைவனிடம் முழுமையாக சரணடைதல்.

யூதேயா மலை நாட்டிற்கு விரைந்து சென்ற மரியாவைப் பின்பற்றி நாமும் பட்டிதொட்டிகளிலெல்லாம் நற்செய்தியை பாங்குடனே பறை சாற்ற விரைந்து செல்லல்.

கீழ்திசை ஞானிகளுக்கு குழந்தை இயேசுவைக் காட்டிய மரியாவைப் பின்பற்றி நாமும் இயேசுவை இன்னும் அறியாதவர்களுக்கு அவரை அறிமுகப்படுத்துதல்.

கானாவூர் மரியாவைப் பின்பற்றி நாமும் பிறர்தேவைகளை குறிப்பறிந்து நிறைவேற்றி மனித நேயம் வளர்த்தல்.

சிலுவையடியில் கூடிச் செபித்த மரியாவைப் பின்பற்றி மரியாவின் இணைப்பாளர் பணியில் நாமும் உண்மையிலேயே பங்கேற்றல்.

மாடி அறையில் கூடிச் செபித்த மரியாவைப் பின்பற்றி உலகெல்லாம் தூய ஆவியால் நிரப்பப்பட மன்றாடல்.

இவ்வாறு அனைத்து நிலைகளிலும் மரியாவைப் பின்பற்றி வாழ்ந்தால் மரியாவின் இணை-ஊழியர் பணியில் நாமும் உண்மையிலேயே பங்கேற்கலாம் மரியாவை போன்று இறைவன் நம்மையும் அழைக்கின்றார்.

(சில நிமிடம் அமைதி)

மன்றாட்டு

அன்பானவரே, உம் தாயிடம் விளங்கிய, அன்பு, பொறுமை, பரிவு, நன்னயம் போன்ற அணிகலன்களை அணிந்து எம் வாழ்வைத் தொடர எமக்கு அருள்தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்.

இரக்கத்தின் இறைவா, அன்னைமரியிடம் விளங்கிய பிறருக்கு பணிசெய்யும் செய்யும் தியாக உள்ளத்தை எமக்கும் தந்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்.

பாசத்தின் தலைவா. அன்னைமரியாள் எப்போதும் எளியோரின் சார்பாகவே செயல்பட்டார். இல்லாதோர்க்கு மனமிரங்கும் அவரது நல்குணத்தை எல்லா நேரங்களிலும் நாங்கள் கொண்டிட உம்மை மன்றாடுகின்றோம்.

அன்பின் மரியாள். இன்ப. துன்ப நேரங்களில் தந்தை இறைவனை நினைவு கூர்ந்து மகிழ்ந்தார்கள். மேலும் இறைவாக்கின் படி தன் வாழ்வை செம்மையுடன் நடத்தினார். அவ்வாறு எல்லாச் சூழலிலும் ஆண்டவரின் வாக்கு கூறுவதற்கேற்ப வாழ்வு நடத்திட ஆவியானவரால் எம்மை வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்.

- அன்னைமரியாளைப் போன்று நாம் வாழ வரம் தந்த எல்லாம் வல்ல இறைவனை பாடல்வழி புகழ்வோம்.

பாடல்

இயேசுவின் திருநாமக் கீதம்
என் நெஞ்சிலே எந்நாளுமே
சங்காக முழங்கிட வேண்டும்

கர்த்தர் கற்பித்த செபம்

இறுதி செபம்

அன்பின் இறைவா உமது தாயின் அமல உற்பவ விழாவினை கொண்டாடும் நாங்கள் அவளின் புண்ணியங்களையும். அவளது பரிந்துபேசுதலையும் ஏற்று எங்களது வாழ்க்கையில் கிறிஸ்துவின் இறையாட்சி பணியில் நாங்களும் இணைந்து செயல்பட எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

ஆண்டவர் நம்மை ஆசிர்வதித்து. தீமை அனைத்தினின்றும் பாதுகாத்து. முடிவில்லா வாழ்வுக்கு அழைத்துச் செல்வாராக. - ஆமென். ஆண்டவரைப் போற்றுவோம். இறைவா உமக்கு நன்றி!

சகோ. S. மார்க்கிரட் பெட்சி FSAG

17. கிறிஸ்து பிறப்பு விழா

முன்னுரை

கிறிஸ்துவின் பிறப்பு ஒரு வரலாற்று உண்மை. மாபெரும் மகிழ்சியூட்டும் நற்செய்தி. கிறிஸ்து பிறப்பு என்றாலே கோலாகலம்தான். வண்ணவிளக்குகளுடன் பனி படர்ந்திருந்தாலும் மக்கள் கிறிஸ்து பிறப்பை சிறப்பான முறையில் கொண்டாடுகின்றனர். அந்த மகிழ்ச்சியை நாமும் ஒரே குடும்பமாக இணைந்து கடவுளை மகிமைப்படுத்தவும். கிறிஸ்து பிறப்பு நமக்கு கூறும் செய்தி இறைவனுக்குரிய மகிமைக் கொண்டவர். தந்தையின் விருப்பத்திற்கு கட்டுப்பட்டவராய் எளிமையான மானிட உருவைத் தாங்கி. இம்மண்ணில் பிறந்த மாபெரும் நிகழ்ச்சியின் நினைவுகொண்டாட்டம். பிறப்பு நிகழ்வு. எளிமையாய் நிகழ்ந்தது போல். எளியவர்க்கே அறிவிக்கப்பட்டது. இந்த விழாவிற்கு கூடுதல் சிறப்பு சேர்க்கிறது. கிறிஸ்து பிறப்பு கூறும் இன்னுமொரு செய்தி கடவுள் இந்த

உலகையும், மானிடரையும் தொடர்ந்து அன்பு செய்கின்றார் தன் மகன் இயேசு வழியாய் என்பதாகும்.

நம் ஒவ்வொரு இறைவனை போற்றி புகழ்ந்து பஜனையில் பங்கு கொள்வோம்.

பஜனா

என்னுயிரே இறைவா
உம் திருவடிசரணம்
உம் பதம் அமர்ந்து உம் மொழி கேட்க
என்ன தவம் செய்தேன் நான் - 2

(சில நிமிடம் அமைதியாய் இருப்போம்.)

மனத்துயர்

கிறிஸ்து பிறப்பின் மகிழ்வில் முழுமையாய் பங்குக்கொள்ள தடையாய் இருக்கும் குற்றங்களை அறவே தூக்கியெறிவோம். இயேசு பாலனை தூய்மையான உள்ளத்துடன் நம் உள்ளங்களில் வரவேற்போம்.

எல்லாம் வல்ல இறைவா குழந்தைகளை பல நேரங்களில் மதிக்காமல், அவர்களின் உணர்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் இருந்த தருணங்களுக்காக மனம் வருந்தி மன்னிப்பு கேட்கிறோம்.

ஆதியும் அந்தமுமாகிய இறைவா குழந்தைகள் என்பவர்கள் தெய்வத்திற்கு சமமானவர்கள் என்பதை மறந்து பல நேரங்களில் அவர்களை துன்பப்படுத்திய தருணங்களுக்காக மனம் வருந்துகிறோம்.

கிறிஸ்து பிறப்பு விழாவை அர்த்தமுள்ளதாக கொண்டாடாமல் ஆடம்பரம், புது துணி, அலங்காரம், திண்பண்டம் என்று நினைத்து ஒவ்வோராண்டும் கொண்டாடும் எங்களின் அற்பநிலைக்காக மனம் வருந்துகிறோம்.

ஒளியான இறைவா கிறிஸ்து பிறப்பு என்பது பிறருக்கு உதவுவது, அவர்களை மகிழ்ச்சி படுத்துவது என்பதே. ஆனால், ஒருவேளை உணவுக்காக ஏங்கும் ஏழை மக்களை கண்டும் காணாமல் வாழ்ந்த தருணங்களை நினைத்து மனம் வருந்துகிறோம்.

அன்பின் இறைவா சில நேரங்களில் எமது அன்பு, திறமை, வளங்கள் இவற்றை பிறரோடு பகிர்ந்து கொள்ளாத தருணங்களை நினைத்து மனம் வருந்தி மன்னிப்பு கேட்கிறோம்.

சில நிமிடம் அமைதி

பாடல்

கன்னி ஈன்ற செல்வமே - இம்
மண்ணில் வந்த தெய்வமே

இயேசுவின் பிரியமான சகோதர, சகோதரிகளே இந்நாள் நமக்கெல்லாம் ஒரு பொன்னாள். கன்னி கருவுற்று ஒரு ஆண்மகனைப் பெற்றெடுப்பார் அக்குழந்தை இம்மானுவேல் எனப்படுவார். மனிதர் யாவரும் மீட்புப் பெற வேண்டும். மனிதர்

யாவரும் கடவுளோடு இணைந்து வாழ பாவத்திலிருந்து விடுதலை பெற்று கடவுளின் மகிமையில் பங்கு பெறவேண்டும் இதற்காகவே கட்வுள் மனிதரானார் என்ற நற்செய்தி நமக்கு வழங்கப்பட்டதற்காய் குழந்தை இயேசு பாலகனைப் புகழ்வோம்.

புகழ்ச்சி

எங்களுக்காக மனுவுரு எடுக்க திருவுளம் கொண்ட இறைமகன் இயேசுவே....

பதில் : உம்மைப்புகழ்கின்றோம்.

எளிமையை வாழ்வாய் கொண்டவரே. மாடடைக்குடிலில் பிறந்தவரே....

உம் பிறப்பு. மானிடர்க்கு மகிழ்ச்சி. ஒடுக்கப்பட்டவர்க்கு உரிமை வாழ்வை அளிப்பது. அந்த மாபெரும் மகிழ்ச்சி செய்தியை உலகுக்கு பாறைச்சாற்ற ஆட்டிடையிரை பயன்படுத்திய உம் மேலான கிருபைக்காய்....

உம் பிறப்பால் உம் தந்தை தொடர்ந்து மகிமை பெறுவதை குறித்து....

(வார்த்தைகளால் வல்லத் தேவனைப்புகழ்ந்த நாம் பாடல் இசைத்துப் புகழ்வோம்.)

பாடல்

இன்று நமக்காக மீட்பர் பிறந்துள்ளார்
அவரே ஆண்டவர் மெசியாவாம் (2)

விவிலிய வாசகம்

லூக் 2 : 1-20

விவிலிய விளக்கம்

2000 ஆண்டுகளுக்கு முன் இயேசு பாலன் தோன்றிய பிறப்பு நிகழ்ச்சியை மீண்டும் மாந்தர் நம் நினைவுக்கு கொண்டுவந்து. அந்த மகிழ்வினில் நாம் தொடர்ந்து திளைத்திட வைக்கிறது கிறிஸ்து பிறப்பு விழாக் கொண்டாட்டம்.

கிறிஸ்து மாடடைக்குடிலில். எளிமைக் கோலம் பூண்டு தச்சர் சூசைக்கும். கன்னிமரியாளுக்கும் பரிசுத்த ஆவியின் வல்லமையால் பிறந்தார் என்பது ஒரு வரலாற்று நிகழ்வாக படித்து தியானிப்பதற்கான செய்தியாக மட்டுமே பார்த்தால் அதில் ஒரு பயனும் இல்லை. மாறாக ஒவ்வொரு நாளும் 'கிறிஸ்து பிறப்பு' (அ) கிறிஸ்து பிறப்பு கொண்டாட்டம் நம் உள்ளத்தில். வீட்டில். ஊரில். உறவினர்களில். நாட்டில். உலகத்தில் நடக்க வேண்டும். அதற்கு கிறிஸ்து தினந்தோறும் உள்ளத்தில். வீட்டில். ஊரில். உறவினர் மத்தியில். நாட்டில். உலகில் பிறக்க வேண்டும்.

அன்று கிறிஸ்து பிறந்தவுடன் வானவர் அணி ஒன்று திரண்டு உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக! உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக! என்று கீதம் இசைத்தனர்.

அன்று நிலவிய அதே அமைதி நிலவ வேண்டுமெனில், மீட்பர் பிறக்க வேண்டும். அப்படியென்றால் மீட்பர் பிறப்பதற்காக நம் உள்ளம், இல்லம், ஊர், நாடு, தூய்மையாய் இருக்க வேண்டும். புறத்தூய்மையும் வேண்டும். ஆனால் அதே நேரத்தில் அகத்தூய்மை மிக, மிக அவசியம்.

அகத்தூய்மை ஒருவரிடம் இருக்குமானால் அன்றாடம் இயேசு அந்த வீட்டில் பிறப்பார். அகத்தூய்மையடைந்த மரிய மக்தலேன் வாழ்வில் இயேசு அவள் உள்ளத்தில் பிறந்தார். அதனால் அவள் வாழ்வில் அமைதி ஏற்பட்டது.

அகத்தூய்மை சக்கேயுவின் வாழ்வில் ஏற்பட்டது அதனால் இயேசு அவரது வீட்டில் நுழைந்தார். அவரது செயலில் அதிரடியான மாற்றம் உண்டானது. அதன் பின் மகிழ்ச்சி நிலவியது.

தனிநபர், குடும்பம், ஊர், வீடு, நாடு, உலகு எல்லா இடங்களிலும் பல்வேறு பிரச்சனைகள் நிலவுகிறது. இன்னும் இன்று கிறிஸ்து பிறக்கவில்லை என்று தான் அர்த்தம். கிறிஸ்து நம்மில் பிறப்பது எப்போது? தூய்மையான உள்ளம், சிந்தனை, சொல், செயல் இருக்கும் போது தான். எனவே தூய்மையான உள்ளம் அமைப்போம். இயேசு அங்கு தங்கட்டும். அதனால் நமக்கும், பிறருக்கும் மகிழ்ச்சி சொந்தமாகட்டும்.

பிறரோடு அன்பு, அமைதி, மன்னிப்பு, பகிர்வு கொண்டு வாழ இயேசு பாலனை வழிபட வரங்களை பெற முற்படுவோம். அமைதியில் இத்தகைய பண்புகளை பெற மன்றாடுவோம். நம் நெஞ்சுக்குள்ளே பிறக்க அமைதியாக இறைவனிடம் வரங்களை வேண்டுவோம்.

சில நிமிடம் அமைதி

மன்றாட்டு

இயேசு பாலனே இறைவா, இவ்வுலகில் மாசில்லா உருவெடுத்து எங்கள் பாவங்களுக்காக மனிதராக பிறந்தீரே எங்கள் வாழ்க்கையில் நாங்கள் எங்கள் பாவங்களுக்காக மனம் வருந்தி இயேசு பாலனை போன்று குழந்தை மனம் கொண்டு வாழ வரம் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

சிறுவயதிலே தாய் தந்தையை இழந்து தெருவிலே அனாதையாக திரியும் குழந்தைகளுக்காக மன்றாடுகிறோம் அவர்களை பாதுகாத்து அரவணைத்து வழிநடத்த வேண்டி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

கிறிஸ்து பிறப்பை கொண்டாடும் நாங்கள் கிறிஸ்து பிறப்பை அர்த்தமுள்ள முறையில் கொண்டாடவும் அன்பு, மன்னிப்பு ஆகிய வரம் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

பல நேரங்களில் உலக கவலைகளில் மூழ்கி உம்மைப் பற்றி நினைவில் கொள்ளாமல், எல்லாவற்றையும் தேடி சேர்த்துக் கொள்ள வேண்டுமென்ற

எண்ணம் தவிர்த்து எல்லாம் உம் செயல் என்பதை ஏற்று, உம்மை எச்சூழலிலும் பின்தொடர இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

அன்பிறைவா! இவ்விழா நாட்களில் எங்களை வாழ்த்தும் ஒவ்வொருவரையும் ஆசிர்வதியும். நலன்களால் நிரப்பும். இவ்விழாவை சிறப்பிக்க இயலாத ஏழைகள், உடல் நலமற்றோர், மன நலமற்றோர் எல்லோரையும் ஆசிர்வதியும். இவர்கள் உம் அன்பை நிம்மதியாய் சுவைக்க வரம் தர வேண்டுமென்று இயேசு பாலனே உம்மை மன்றாடுகிறோம்.

பாடல்

எந்தன் நெஞ்சுக்குள்ளே நீ பிறக்க
எனக்கென்ன கவலை என் இறைவா

கர்த்தர் கற்பித்த செபம்

இறுதி ஜெபம்

எல்லாம் வல்ல இறைவா புறையோடியிருக்கும் சமுதாயத்தின் புண்களுக்கு அதிர்ச்சி வைத்தியம் நடத்தும் வித்தகரே! உம் மகன் இயேசுவின் பிறப்பில் அன்பு, சமாதானம், பகிர்வு, மன்னிப்பு இவற்றை நாங்கள் பெற்று, பெற்றதை பிறரோடு பகிர்ந்து உண்மைக்கு சாட்சி பகர எங்களை தொடர்ந்து வழி நடத்திட வேண்டுமென்று உம் மகன் இயேசு பாலகன் வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.

ஆண்டவர் நம்மை ஆசிர்வதித்து, தீமை அனைத்தினின்றும் பாதுகாத்து, முடிவில்லா வாழ்வுக்கு அழைத்துச் செல்வாராக. - ஆமென். ஆண்டவரைப் போற்றுவோம். இறைவா உமக்கு நன்றி!

சகோ. அந்துவான் ரெக்லின் FSAG

18. வெள்ளிவிழா, பொன் விழா

முன்னுரை

வெள்ளி விழா வெளிச்சங்களே வருக! வருக! நன்றிப்பூக்கள் தூவி வரவேற்கின்றோம். கருவில் உருவாகி கண்மணியாய் வளர்த்தெடுத்து, இமைப் பொழுதும் நெஞ்சத்தில் இன்றளவும் பயணித்து, உணர்வில் கலந்து உறவில் வளர்ந்து, பாசத்தைப் பொழிந்து, பிறருக்கென வாழ்ந்து ஓராயிரம் பணிகளில் ஓயாமல் உழைத்து, தரணியில் தடம் பதித்த பூக்களே இதயத்தை நிறைத்து இசைப்பாடி வாழ்த்துகிறோம். துறவறமென்னும் சோலையிலே 25 ஆண்டுகள், 50 ஆண்டுகள் தடம்பதித்த வெற்றியின் படிகளே.... உங்கள் பயணத்தில் நீங்கள் பெற்ற அனுபவங்கள், சாதித்த சாதனைகள் மேற் கொண்ட தியாகங்கள் எத்தனை எத்தனை.

துறவற வாழ்வில் உழைத்து உயர்த்தி பிடித்த இந்த வெள்ளி விழா நாயகிகளை ஆரத்தி எடுத்து வரவேற்போம்.

[illegible] வாழ்த்து

தந்தையாம் இறைவா வெள்ளி/பொன் விழாவை சிறப்பிக்கும் எம் சகோதரிகளுக்கு அருள் பொழிந்து வழி நடத்தி வருவதற்காக....

பதில் : உம்மை வாழ்த்துகிறோம்.

இறைமகனே எம் தலைவா! அனைத்தையும் இழந்து உம்மை பின்பற்றி வந்தால் 100 மடங்கு இம்மையில் தருவேன் என்பதை எங்கள் சகோதரிகள் வாழ்வில் மெய்ப்பித்துக் காட்டிய மேலான சக்திக்காக....

ஆவியாம் இறைவா! இவர்கள் தம் அழைத்தல் வாழ்வில் அர்ப்பணிப்போடு, தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றிய மகனைப் போல், மகனின் விருப்பத்தை நிறைவேற்றிய பத்தினிகளாய் வாழ்ந்திட உம் அருட் பொழிவு உதவி செய்ததை எண்ணி....

மூவொரு இறைவா! துறவற அழைப்பு ஒரு கொடை. அதனை இறை விருப்பத்தின் படி நடப்பதற்கு, தடைகளைத்தாண்ட துணிவை அளித்த மேலான வரங்களுக்காய்....

(இறைவனை வணங்கி இடம் அமர்வோம்.)

பஜன்

பாத மலர்களை தொழுகின்றோம்.

பாதையை நாங்களும் தொடர்கின்றோம்

மன்னிப்பு

பதில் : ஆண்டவரே இரக்கமாயிரும் (பாடல்)

இறைவா 25, 50 ஆண்டுகளில் உமது அன்பையும், உறவையும் ஒரு சில நேரங்களில் மறந்து அலைபேசி, தொலைக்காட்சி, நண்பர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து உம்மை மறந்ததற்காக....

ஏழைகளையும், கைவிடப்பட்டவர்களையும் ஒரு சில வேளைகளில் கண்டு கொள்ளாமலும் உதவி செய்யாமலும் இருந்த தருணத்திற்காக.....

அர்ப்பணவாழ்வில் எம்முடன் இருந்த சகோதரிகளுக்கு துர்மாதிரிகையாக நடந்து கொண்ட குற்றத்திற்காக....

இறைவார்த்தையை அறிவிக்க சந்தர்ப்பம் கிடைத்தும், எடுத்துக் கூற மனமில்லாமல் நழுவவிட்ட தருணத்திற்காக.....

எனது துறவற 25, 50 ஆண்டுகள் சபைத் தலைவிகள், மாநில தலைவிகள், பெரியவர்கள், திருச்சபை தலைவர்களுக்கு கீழ்ப்படியாமல் இருந்த குற்றத்திற்காக....

சபை சட்டங்களை நுணுநுணுக்கமாய் அனுசரித்து இளையோருக்கு முன்மாதிரி கொடுக்காமலிருந்ததற்காக....

புகழ்ச்சி

பதில் : உம்மை புகழ்கின்றோம்.

தேனீக்களின் கட்டமைப்பு போன்றது துறவறம். வெள்ளிவிழா. பொன் விழா காணும் சகோதரிகள் வாழ்வில் நன்மையை பொழிந்து வழிகாட்டிய ஆண்டவரை எண்ணி. புகழ்வோம்.

தியாகம் செய்து வளர்த்தெடுத்த. பெற்றோரை எண்ணி இறைவா.....

அன்பால் தாங்கிய சகோதர. சகோதரிகளை எண்ணி இறைவா.....

வளர்தெடுத்த சபை பொறுப்பாளர்கள். வழிகாட்டிகள். உருவாக்குனர்கள் ஆகியோரை எண்ணி இறைவா.....

ஆன்மீக உணவூட்டிய ஆயர்கள். குருக்களை நினைத்து இறைவா.....

நல்ல ஆலோசனை கூறிய பெரியவர்களை நினைத்து இறைவா.....

இன்ப. துன்ப வேளையில் உடனிருந்தவர்களை நினைவு கூர்ந்து இறைவா....

(ஆண்டவர் செய்த பல்வேறு நலன்களை. நன்மைகளை நினைத்து எல்லாம் வல்ல ஆண்டவரைப் புகழ்வோம்.)

சங்கீதம் 100

ஆண்டவரின் திருச்சந்திதியில் ஆனந்தமுடனே பாடுவீரே — 2
மகிழ்வுடன் அவரை ஆராதிப்பீர் மங்கள கீதங்கள் முழங்கிடுவீர்
அவரே தேவன் என்றறிவீர் அவரே நம்மைப் படைத்தாரே

(சில நிமிடம் அமைதி)

விவிலிய வாசகம்

சாமுவேலின் அழைப்பு

1 சாமுவேல் 3 : 1 - 19

விவிலிய விளக்கம்

உலகில் எத்தனையோ மனிதர்கள் இருந்தாலும் இறைவன் சிலரை மட்டும் தமது பணிக்காக தேர்ந்தெடுக்கிறார். இறைபணிக்கு அழைக்கப்பட்ட பலரில் சிலர் மட்டுமே எல்லா சூழ்நிலையிலும் பயன் தரும் இறைபணியாளர் ஆகிறார். துறவி என்று சொல்லும் போது எல்லா சூழ்நிலையிலும் இறைவனுக்கு கைகோர்த்து இறையரசுப் பணிக்காக தம்மையே முழுவதும் அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும். அர்ப்பணம் என்பது தற்கையளிப்பு அதாவது நம்மை நாம் செய்யும் ஒவ்வொரு பணிக்கும் முழுமையாய் அர்ப்பணம் செய்வதாகும். ஆன்மீகம் என்பது விழிப்புணர்வு உங்களைப் பற்றிய சுய விழிப்புணர்வு கொண்டு அதன் வழி சுய மரியாதையையும் நீங்கள் கொண்டிருப்பதால் நீங்கள் ஆன்மீகவாதி. கற்பு என்பது நிறை அன்பிலிருந்து வெளிப்படும் செல்வம் என்கிறார் தாகூர்.

ஏழ்மை ஆண்டவருக்காக எல்லாவற்றையும் விட்டுவிட்டு அந்த ஆண்டவனுடைய ஆதரவில் முழு நம்பிக்கை வைத்து வாழ்வது.

கீழ்படிதல் மூலமாக இடைவிடாது நமது விருப்பு. வெறுப்புகளை ஒடுக்குகின்றோம் நமது அதிபர்களுக்குக் கீழ்படிவதன் மூலம் ஒருவன் இறைவன் திருவுளப்படியே நடக்க ஆரம்பிக்கிறான். அது அவனை இறைவனுக்கு ஏற்றவன் ஆக்குகிறது.

பணிவாழ்வு நம் நாட்டில் அணிவகுத்து நிற்கும் கன்னியரது வாழ்வில் மறைப்பரப்பு பணியில் ஒரு நிறைவை எய்துகின்றது மற்ற பணிகள் மறைப்பரப்பு பணியோடு தொடர்பு கொண்டதாகும்.

ஆகவே சாமுவேல். எலியா ஆபிரகாம். மோயீசன். திருத்தூதர்கள். மரியாள் ஏன் நாமும் அழைக்கப்பட்டு மேற்கூறப்பட்டவைகளை கடைபிடித்து 25. 50 ஆண்டுகளை கடந்து வந்து இறைவனுக்கு நன்றி கூறுகிறோம். ஆண்டவர் இயேசு நற்செய்தியில் கூறும் பேறுபெற்றவர்களாக இருக்கின்றோம். வெள்ளிவிழா. பொன்விழா கொண்டாடும் இவர்களின் நல்ல பண்புகளை. குணங்களை பணிகளை நாமும் இறைவன் முன் பகிர்ந்து ஒவ்வொருவருக்காகவும் ஜெபிப்போம்.

ஈரமான இதயம் (அரு 1 : 32)
உதவும் கரங்கள் (மாற் 1 : 29 – 31)
பகிரும் மனநிலை (மாற் 6 : 42)
தேவையின் நிறைவே சேவை (அரு 21 : 12)
கொடுப்பது பெறவே (ஆதி 12 : 1 – 2)
நல்லாயன் (அரு 10 : 11)
மன்னிப்பும் இரக்கமும் (லூக் 23 : 34)

(இந்த ஏழு நிலைகளிலும் நம்மை நாமே சிந்தித்து அமைதியில் சிப்பார்போம்...)

த்தர் கற்பித்த செபம்

முதி செபம்

தெளிந்த மனநிலை பெற்றவராக
பரந்த சிந்தனை உடையவராக
தொலை நோக்குப் பார்வைபெற்றவராக
நன்மைத் தனம் உள்ளவராக
சினம் கொள்ளத் தாமதிப்பவராக
இரக்கக் குணம் உடையவராக
நீதிக்கும் நேர்மைக்கும் சான்று பகிர்ந்து. தன்னைகொடுக்கவும். இழக்கவும். ர்ப்பணித்து கொண்டு வாழ எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக மன்றாடுகிறோம்.

ஆண்டவர் நம்மை ஆசிர்வதித்து, தீமை அனைத்தினின்றும் பாதுகாத்து முடிவில்லா வாழ்வுக்கு அழைத்துச் செல்வாராக. - ஆமென். ஆண்டவரை போற்றுவோம். இறைவா உமக்கு நன்றி!

சகோ. S. மார்க்கிரட் பெட்சி FSAG

19. பிறந்த நாள்

முன்னுரை

பிறந்த நாள் என்பது மிக மகிழ்ச்சியான நாள். இயேசுவின் பிறந்த நாள் கிறிஸ்து பிறப்பு கொண்டாட்டமாக உலகமெங்கும் கொண்டாடப்படுகிறது. அன்னை மரியின் பிறந்த நாள் (செப்டம்பர் 8) மாபெரும் சிறப்பு கொண்டாட்டமாக கொண்டாடப்படுகிறது. பிறந்த நாள் அன்று மண்ணுக்கு அர்ப்பணித்த இறைவனை மண்ணில் வளர்த்தெடுத்த பெற்றோர்கள், உற்றார், உறவினர்கள், மண்ணோடு விளையாடி மகிழ உதவிய நண்பர்கள், வாழ்வின் அடுத்தப்பக்கத்தை எடுத்தியம்பிய விமர்சகர்கள், நன்மை, தீமை எவை என்பதை உணர்த்திய ஆசான்கள், கரம் பிடித்து நடத்திச்சென்ற பெரியோர், உலகின் உண்மைகளை சுட்டிக்காட்டிய எதார்த்தமான தருணங்கள், அனுபவ பாடங்கள், அனைத்தையும் அளித்த இறைவனை நன்றியோடு நினைக்கும் நாள். இன்னும் ஒரு வயதை நாம் சந்திக்க இறைவன் ஏற்படுத்திக்கொடுத்த இன்பமான நேரம். வியர்வை சிந்தியத் நேரங்களை நினைத்துப்பார்க்கவும், புன்னகைத்த நிமிடங்களை எண்ணிடவும், தடுக்கி விழுந்த நாட்களை, காயமடைந்த தழும்புகளை, தலைகுனிந்த அவமானங்களை கடந்துப்போகவும், வாழ்வின் அதிசியங்களை எண்ணி அதை அனுமதித்த ஆண்டவரைத் தொடர்ந்து வாழ்த்தி வணங்கிடவும் இறைவன் கொடுத்த நாளே பிறந்த நாள். இந்த பிறந்த நாளை சிறப்பிக்கும் நம் சகோதரி/சகோதரன்/தாய்/தந்தை/நண்பர்/ஆசான்இவருக்கு ஆண்டவரிடம் இருந்து ஆசீர் பரிசாக கிடைத்திட செபிப்போம்.

மூவொரு இறைவனுக்கு வாழ்த்து

ஆண்டவராகிய கடவுள் நிலத்தின் மண்ணால் மனிதனை உருவாக்கி, அவன் நாசிகளில் உயிர் மூச்சை ஊத, உயிருள்ளவனான மனிதன் தன் சந்ததியினரை காலம் காலமாக சந்திக்க பிறப்பு என்கிற(தொ.நூ:2/7) ஒரு சிறப்பினை உருவாக்கிய தந்தையாகிய இறைவா! உம்மை வணங்குகிறோம், ஆராதிக்கின்றோம். நன்றி கூறுகின்றோம்

மனிதரின் பிறப்பு. சிறப்பு தராமல் தன் பாவங்களினால் மாசுற்ற நிலையைக்கண்டு. மானிடராய் மண்ணில் பிறந்து. மனிதரின் பிறப்புக்கு மாண்பு சேர்த்திட்ட மகனாகிய இயேசு இறைவா! உம்மை வணங்குகிறோம் ஆராதிக்கின்றோம். நன்றி கூறுகின்றோம்.

மனிதனாக மண்ணில் பிறந்த ஒவ்வொருவரும் மண்ணிலிருந்து உருவாக்கப்பட்டதால் அதற்கு திரும்பும் வரை நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைத்து உணவை உண்ணும் தருணங்களில் (தொ.நூ.3/19) உதவிக்கரம் நீட்டி துணைதந்து வாழ வைத்துக் கொண்டிருக்கும் தூய ஆவியாகிய இறைவா! உம்மை வணங்குகிறோம். ஆராதிக்கின்றோம். நன்றி கூறுகின்றோம்.

மனிதனை உருவாக்கி அவன் நாசிகளில் உயிர் மூச்சை ஊதி உயிருள்ளவனாக்கி பாவகட்டுகளிலிருந்து அவனை மீட்டெடுத்து புனித பாதையில் நிதம் நிதம் வழிநடத்திச்செல்லும் தந்தை மகன் தூய ஆவியின் ஒன்றிப்பின் மூவொரு இறைவா! உம்மை வணங்குகிறோம். ஆராதிக்கின்றோம். நன்றி கூறுகின்றோம்.

(பாடல் - மூவொரு இறைவனை நெற்றி தரையில் பட வணங்கி இடம் அமர்வோம்)

விளக்கேற்றல் - (பிறந்தநாள் கொண்டாடுபவர் குத்துவிளக்கை ஏற்றுகிறார்)

பஜன்

ஆவியாம் இறைவா இணையற்றத்தலைவா
புது வாழ்வெனக்குள் பொழிந்தருளும் -2

இப்பொழுது அண்டத்தின் கடவுளைப் போற்றுங்கள். எல்லா இடங்களிலும் அரியன. அரியன செய்பவரை பிறப்பிலிருந்து நம் வாழ்வை மேன்மைப்படுத்துபவரை தம் நோக்கத்திற்கு ஏற்ப நம்மை வழி நடத்துகிறவரை ஓரிரு வார்த்தை சொல்லி அனைவரும் புகழுங்கள் (சீ. ஞா : 50/22)

புகழ்ச்சி

பதில் : உம்மை போற்றுகிறோம். உம்மை புகழுகின்றோம். நன்றி கூறுகின்றோம்.

படைத்தவரே இறைவா! உம்முடைய படைப்புபணியிலே இந்நாளை (பெயர்)... இவருக்காய் நிர்ணயித்து அவர்தம் பெற்றோருக்கு மகனாக / மகளாக கொடுத்த உமது வல்ல செயல்களுக்காய்....

பரம்பொருளே இறைவா (பெயர்)... இவரை இவ்வுலகின் மனிதராக பிறக்கச்செய்து உமது அன்பு, ஞானம், அறிவு, பண்பு நலன்களால் நிறைத்து வழிநடத்தி வருகின்ற கிருபைக்காய்....

எல்லாம்வல்ல இறைவா (பெயர்).... இவரை இந்த குடும்பத்தின் சொத்தாக அளித்ததோடு அவர் வழி மக்களும், நாங்களும் பெற்றுக் கொண்ட அளவிட முடியாத நன்மைகளுக்காய்....

இறைவன் விரும்பி அளித்த அழைப்பை ஏற்று பணி செய்ய மீண்டும் ஒரு முறை இப்பாடல் வழி அர்ப்பணிப்போம்.

பாடல்

என்ன கைம்மாறு நான் செய்வேன் இறைவா,இறைவா.
உந்தன் அன்பிற்கு ஈடாகவே தலைவா,தலைவா

விவிலிய வாசகம்

எரேமியா : 1:5-8

விவிலிய விளக்கம்

தாய் வயிற்றில் உருவாகு முன்பே அறிந்திருந்தேன். மானிடரை இவ்வுலகில் பிறக்க வைக்கும் இறைவன், தாய் வயிற்றில் உருவாவதற்கு முன்பே அறிந்தவராய் இருக்கின்றார். யார்? எப்போது? எங்கு? யாருக்கு பிறக்க வேண்டும் என்பது எல்லாம் அவர் தீர்க்கமாய் அறிந்தது அவர் திட்டப்படி தான் அனைத்தும் நடக்கும்.

திருப்பாடல் 2 இல் இறைவன் கூறும் வார்த்தை நீர் என் மைந்தர், இன்று நான் உம்மை ஈன்றெடுத்தேன். நீர் விரும்புவதை என்னிடம் கேளும். பிறந்த நாளின் சிறப்பில் இறைவன் ஒவ்வொருவரையும் பார்த்து கூறுவது அவரால் இந்த மண்ணக வாழ்வில் இடம் பெற்றுள்ள அனைவரும் அவரது புதல்வர்/புதல்வியர். அவரால், அவரது சாயலாக உருவாக்கப்பட்டவர்களை ஆசீர்வதித்துக்கொண்டே இருக்கிறார். அவர்களுக்கு எப்போது எது தேவையோ அதனை விரும்பி தருகிறார். பிறந்த நாளை கொண்டாடும் இந்த நேரத்தில் இறைவனின் ஆசிரால் இது வரை வாழ்ந்த தருணங்களை நினைத்து நன்றி கூறுவோம். ஒருவர் இது நாள் வரை வாழ்ந்திருக்கிறார் என்றால் அவரது வாழ்வில் அக்கறைக்கொண்டவர்கள் எத்தனையோ பேரை அவர் சந்தித்திருப்பார். அவர்களை எல்லாம் நினைத்து அவர்களை தந்த இறைவனுக்கு நன்றி கூறுவோம். பிறந்த நாளை சிறப்பிக்கும் நபரிடம் விளங்குகின்ற நற்பண்புகளை நினைத்து, நல் விதையாக இப்பூமியில் உருவாக்கி நல்லபலன் தர

...வைத்த இறைவனை மனதார புகழ்வோம். உள்ளவனுக்கு கொடுக்கப்படும் என்ற ...றிய இறைவன் அநேக திறமைகளாலும், கொடைகளாலும் நிறைத்துள்ள விழா ...யகரை/நாயகியை தொடர்ந்து அவரது பாதுக்காப்பில் வைத்திருக்க செபிப்போம். எத்தனை பிறந்த நாளை கடந்திருந்தாலும், இன்னும் ஒரு புதிய ஆண்டில் ...டி யெடுத்து வைக்க அழைப்பு கொடுத்திருப்பது பிறரை வளப்படுத்துவதற்காக. ...றரின் சுமைகளை தாங்கிக்கொள்வதற்காக. இதை எப்போதும் மறந்திடாமல். இயேசு ...சென்றவிட மெல்லாம் நன்மை செய்தது போல் இவ்வுலகில் வாழும் வரை நன்மை ...செய்பவர்களாய் வாழ வாழ்த்துவோம். எனவே பிறந்தநாளை சிறப்பிக்கும் இறைவனின் ...மகனுக்கு/மகளுக்கு தேவை என இறைவன் விரும்புவதை அவர் அளித்து ...ஆசிர்வதித்திட அமைதியில் செபிப்போம்.

பாடல்

என் ஆயனாய் இறைவன் இருக்கின்ற போது
என் வாழ்விலே குறைகள் என்பது ஏது -2

ஆண்டவர் உடனிருக்கும் போது கவலையில்லை என்பதை பாடல் வழி ...அறிக்கையிட்ட நாம் பிறந்த நாளை சிறப்பிக்கும் நம் சகோதரிக்காக/சகோதரனுக்காக ...விண்ணப்பங்களை எழுப்புவோம்.

அன்பின் இறைவா இன்று தனது பிறந்த நாளை சிறப்பிக்கும் எம் சகோதரி/சகோதரனை ஆசிர்வதியும். உம் ஆசிரால் மட்டுமே இன்னும் ஒரு ஆண்டை காணும் பேறு பெற்றிருக்கிறார். அதனால் எப்போதும், படைத்த உம்மைப்போற்றவும், உமக்கு நன்றி கூறவும், உம் அருட் பாதம் அமர்ந்து செபிப்பதே தனக்கு பேரின்பம் என்பதை உணர்ந்து வாழ வரம் தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்.

இரக்கமே ஊற்றான இறைவா விழா சிறப்பிக்கும் எம் அன்பு சகோதரியை/சகோதரனை இப்புவியில் ஈன்ற பெற்றோரை ஆசிர்வதியும். அவர்கள் ஆன்ம, உடல், உள்ள நலம் பெற்று திருச்சபையில் பலரை விசுவாச வாழ்வில் கட்டி எழுப்பும் பொறுப்புள்ள பெற்றோராய் செயல்பட வரம் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

நீதியின் தலைவா, பிறந்த நாள் விழா கொண்டாடும் சகோதரன்/சகோதரியை அருட்கொடைகளால் நிரப்பும். இது நாள் வரை இவர்களை உம் பாதுகாப்பில் வைத்து, தாம் சந்திக்கும் மக்களுக்கு நன்மைகள் பல புரிந்திட திருவுளம் கொண்டீர். இவர்கள் தொடர்ந்து இதே மனநிலையில் இருந்து, தாங்கள் சந்திக்கும் ஒவ்வொருவருக்கும் பிரதிபலன் கருதாமல் நன்மைகளை தாராள மனதுடன் செய்ய வரம் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

அமைதியின் இறைவா, தான் பெற்ற தாலந்தை இவர்கள் பயன்படுத்தி மக்களுக்கு பணி செய்யவும், தங்களுக்கு எதிராக அவதூறு செய்தவர்களை மன்னித்து இறையாட்சியின் விழுமியங்களை முழு மனதுடன் ஏற்கவும், தங்களை நாடி வருவோர்க்கு தூயஆவி அளித்த கொடைகளையும் கனிகளையும் குறைவின்றி வழங்கவும், பிறரன்பு செயல்களில் தொய்வின்றி செயல்படவும் வரம் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

பாடல்

மலர் சொல்லும் நன்றி தேனாகுமே வான் சொல்லும் நன்றி மழையாகுமே......

கர்த்தர் கற்பித்த செபம்

இறுதி செபம்

அம்மையப்பனான இறைவா, உம் மகன் இயேசுவை மானிடராய் இம் மண்ணில் பிறக்கச்செய்து மனிதத்திற்கு அழகு சேர்த்த எம் தலைவா! நாங்கள் இப்புவியில்பிறந்ததன் காரணத்தை நாள்தோறும் உம் அன்புறவில் கண்டுணர்ந்து அதற்கேற்ப வாழவும், பிறந்தநாளான இன்று மீண்டும் ஒரு ஆண்டில் அடி யெடுத்து வைக்கும் (பெயர்)யை, தீமையினின்று விடுவித்து, நன்மை செய்வதில் ஆர்வம் உள்ளவராய், அக்கறைக்கொண்டவராய் செயல்படவும், இந்த சிறப்பு வழிபாட்டில் பங்குகொள்ளும் அனைவரையும் உம் மகன் இயேசு கிறிஸ்து வழியாக கரம் பிடித்து வழிநடத்திட வேண்டுமென்று மன்றாடுகின்றோம்.

ஆண்டவர் நம்மை ஆசிர்வதித்து, தீமை அனைத்தினின்றும் பாதுகாத்து, முடிவில்லா வாழ்வுக்கு அழைத்துச் செல்வாராக. - ஆமென். ஆண்டவரைப் போற்றுவோம். இறைவா உமக்கு நன்றி!

சகோ. திரேசா ஞானமணி FSAG

௨0. தேர்வுக்கு முன் தயாரிப்பு

முன்னுரை

தேர்வு என்றவுடன் 'சோர்வு' மனத்திற்குள் குடி கொள்கிறது. 'பயம்' மனதைக் கவ்விக் கொள்கிறது. பதட்டம், நடுக்கம், இவை ஏன் வருகிறது? நம்மை நம்பவில்லை, நம்மைப் படைத்தவரை நம்பவில்லை. தன்னம்பிக்கை பிறக்க துணை ஒன்று தேவைப்படுகிறது, ஆதரவு நல்கும் துணை தான் ஆண்டவர். ஆண்டவர் இயேசு கூட தேர்வுக்காக தயாரானார். அதனால் கடுமையாய் தயாரித்தார். தேர்ச்சி பெற்றார்.

இயேசு பணிவாழ்வு தொடங்கும் முன் மூன்று சோதனைகள் (லூக் 4:1-11) கேள்வித் தாளாக சாத்தானால் வாசிக்கப்படுகிறது, இயேசு இறைதந்தையின் விருப்பத்தை அறிந்தவராய் தன்னம்பிக்கையோடு பதிலிறுத்தார். வெற்றியடைந்தார் 100%

...ணொலியும் பெற்றார். நீரே என் அன்பார்ந்த மகன் உம்மிடம் நான் ...படைகின்றேன் என்ற வெகுமதியை சான்றிதழாக தந்தையிடமிருந்து பெற்றார்.

தேர்வு' என்பது அச்சத்தைக் கொடுத்தாலும் இறைவன் மீது நம்பிக்கை, நம் ...து நம்பிக்கை, கற்றுக் கொடுத்தவரின் மீது நம்பிக்கை இருந்தால் கட்டாயம் வெற்றி நம் கையில். நம்மை சுற்றி இருப்பவருக்கு, கற்றுக் கொடுத்தவருக்கு, ...து பயணத்தில் துணை நின்றவருக்கு மகிழ்ச்சி. எனவே ஒரு மணி நேரம் ...செப வழிபாட்டில் ஆண்டவரோடு உறவாடி நம்பிக்கை வளர்ப்போம். நம்பிக்கை பெற்றவர்களாய் தேர்வுக்கு நன்கு தயாரித்து வெற்றி பெறுவோம்.

...வொரு இறைவனுக்கு வாழ்த்து

தாயும் தந்தையுமான இறைவா. கார்முகில் உம்மைப்போற்றும் ஆகாய ...கைகள் அனைத்தும் உம்மைப் புகழும். உயிரினங்கள் அனைத்தும் உம்மை ...க்கும். அவைகளோடு இணைந்து படிக்கின்ற மாணவிகளாகிய நாங்கள் ...னைவரும். உமது பேராற்றலையும், பெருமையையும் நினைத்து உம்மை ...றுகிறோம்.

தந்தையின் திருவுளத்தை ஒவ்வொரு நாளும், நிறைவேற்றுகின்ற இயேசுவே ...மை வாழ்த்துகிறோம். எளிமையான உள்ளத்தோடு, ஏழைகளின் மன்றாட்டுக்கு ...வி கொடுத்து எப்போதும் அவர்களின் சார்பாக நின்று செயலாற்றுபவரே உம்மை ...ழ்கின்றோம். தூய்மை ஆக்குபவரும், தூய்மையாக்கப்படுவோருக்கும் உயிர் ...ல் ஒன்றே என்று மொழிந்தவரே உம்மை வணங்குகிறோம். இந்த நாட்களில் ...வுக்காக தயாரித்துக் கொண்டிருக்கும் எங்கள் அனைவருக்கும் ஒவ்வோரு ...ரும் ஞாபக சக்தியையும், உடல் நலத்தையும் தந்து நல்ல முறையில் தேர்வு ...த உதவிக்கரம் நீட்டப் போகின்ற உமது பேரன்பிற்காக உம்மை போற்றுகிறோம்.

அண்டசராசரங்கள் அனைத்தையும் அசைய வைத்துக்கொண்டிருக்கும் தூய ...வியானவரே உம்மை போற்றுகின்றோம். எங்கள் மனதிலுள்ள எண்ணங்களை ...ந்தவரே உம்மை வாழ்த்துகின்றோம். எங்களுக்குத் தூண்டுதல் கொடுத்து ...நல்லது எது கெட்டது என்பதை அறியச் செய்தவரே உம்மை ...ங்குகின்றோம். எங்களுக்கு ஆற்றலை கொடுத்து அவற்றை முறையான விதத்தில் ...டமிட்டு நல்வழியை நோக்கி பயன்படுத்திட ஆற்றல் தந்தவரே உம்மை போற்றுகிறோம்.

அன்பையும், பாசத்தையும், இரக்கத்தையும் அளவுக்கு அதிகமாக எங்களுக்குத் ...து எங்களை நாளும் வாழ வைத்து கொண்டிருக்கின்ற மூவொரு இறைவனே உம்மை போற்றுகிறோம்.

...ஜன்

இறைவா என்னை உன் வீணையாக்கு

வீணையில் மீட்டும் நல் ராகமாக்கு

மனத்துயர்

பதில் : ஆண்டவரே எங்களை மன்னியும்

எங்களின் அன்றாட கடமைகளை மறந்து, காலத்தை வீணடித் நேரத்திற்காக...

பெற்றோரின் பேச்சை மதிக்காமல், பெரியோரின் சொல் கேளாமல் வாழ்ந் நேரத்திற்காக....

பிறரின் தேவையை அறிந்து நன்மை செய்ய வாய்ப்பு கிடைத்த போது நன்மை செய்யாமல், அவர்களை உதாசினப்படுத்தின நிமிடங்களுக்காக..

பல நேரங்களில் செபம் செய்யாமல், உமக்கு நன்றி சொல்லாமல் வாழ்ந் நாட்களுக்காக....

புகழ்ச்சி

ஒவ்வொரு நாளும் எங்களை பாதுகாத்து பராமரித்து வரும் உமது பேரிரக்கத்தை நினைத்து உம்மை புகழ்கின்றோம். நன்றி கூறுகின்றோம்.

பதில் - புகழ்ந்திடு மனமே! புகழ்ந்திடு இயேசுவை, புகழ்ந்திடு நாளெல்லாம் (பாடல்)

ஞானத்தின் ஊற்றாகிய இறைவா, நாங்கள் கல்வி கற்க நல்ல பள்ளியையும் கற்றுக்கொடுக்க நல்ல ஆசிரியர்களையும் கொடுத்து எங்களை வழிநடத்துவதற்காக.....

தந்தையின் திருவுளத்திற்கு கீழ்ப்படிந்தவரான இயேசுவே! எங்களது பெற்றோருக்கும், பள்ளியில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் கீழ்ப்படி கற்றுத்தந்தவரே...

நாங்கள் படிக்கும் பள்ளி எங்களால் பெருமை அடையவும் பள்ளியால் நாங்கள் பெருமை அடையவும் வாய்ப்பு தந்தமைக்காக....

விவிலிய வாசகம்

மத் 25 : 14 — 30

விவிலிய விளக்கம்

அளவற்ற திறமைகளை நம் ஒவ்வொருவருக்கும் இறைவன் கொடுத்திருக்கிறா அவற்றை யாரெல்லாம் தினம் தினம் பயன்படுத்துகின்றார்களோ, அவர்கள் பேறு பெற்றோர். அதனை தனக்கும் பிறருக்கும் பயனுள்ள வகையில் பயன்படுத்துபவர்கள் மிகுந்த ஆசீர் பெறுவர்.

கொடுப்பதில் மகிழ்ச்சி என்ற இறைவார்த்தையை நமது வாழ்வாக்கி, பொருளை மட்டுமல்ல நமது நேரத்தையும் அறிவையும் பிறருக்கு பகிர்ந்து மகிழ்வோமே.....

(சிறிது நேரம் அமைதி)

...ப்பாடல் - [சங் 18]

என் ஆற்றலின் ஆண்டவரை — நான்
எந்நாளும் போற்றிடுவேன் - நல்
அருள் மொழி கேட்க காலமெல்லாம் அவர்
காலடி அமர்ந்திடுவேன்

நான் தரும் அருள் உனக்கு போதும் என்று கூறிய இறைவனிடம் நம் தேவைகளை விண்ணப்பங்களாக எழுப்புவோம்.

மன்றாட்டு

பதில் : இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

அன்பும், பாசமும் மிக்க இறைவா, நாங்கள் எங்களுடைய பெற்றோரை மதித்து, எங்களுக்காக அவர்கள் படும் கஷ்டத்தையும், தியாகத்தையும் உணர்ந்து வாழக் கூடிய நல்ல மனதினை எங்களுக்குத் தர வேண்டும் என்று ....

நீதியின் இறைவா! எங்களை உண்மை வழியில் நடத்தும் ஆசிரியப் பெருமக்கள், பெரியோர்கள் இவர்களின் சொல்லைத் தாரகமந்திரமாகக் கொண்டு, விரிந்த வானில் பறக்கக் கனவு காண்பதைவிட கண்ணில் தெரியும் பாதையை கடக்க அருள்தர ...

வானகத் தந்தையே இறைவா! வளைந்து கொடுத்து பயந்து வாழ்வதைவிட விட்டுக் கொடுத்து துணிந்து வாழ தைரியத்தைத் தர ....

திடப்படுத்தும் இறைவா! கேட்பதிலும், கவனித்தலிலும் எங்கள் சிந்தனையை செலுத்தி தோல்வி தரும் பாடமும், வெற்றித்தரும் பலமும் தொடர்ந்து செயல்படத்தூண்டிட...

அன்பின் இறைவா! எங்களுக்காக முயற்சிகள் எடுத்து எங்களை வழிநடத்தும் நல்ல உள்ளங்களை ஆசிர்வதியும், பொறுமையோடு கூடிய திறமைகளை வெளிக்கொணர்ந்து சான்று வாழ்வு வாழ வரம் தர ....

பாடல்

இதுவரை செய்த செயல்களுக்காக
இறைவா உமக்கு நன்றி -2

கர்த்தர் **கற்பித்த செபம்**

இறுதிச் செபம்

அன்பின் இறைவா! எங்களுடைய உயர்வை, எங்களைவிட அதிகம் எதிர்பார்க்கிற எங்கள் பெற்றோர், உடன் பிறந்தோர், அறிவுப் புகட்டும் ஆசான்கள், நண்பர்கள், ஆகியோருக்கு பெருமையை தேடித் தருபவர்களாக நாங்கள் வாழவும்,

சமூகத்தின் இருப்பையும், போக்கையும் சரிவரப்புரிந்துக்கொண்டு சேர்ந்து நடைப்போடவும், எங்களிடம் இருக்கின்ற தீய எண்ணங்கள், பொறாமை, மனக்குழப்பங்கள், பயம், கோபம், இவற்றிலிருந்து நாங்கள் விடுதலைப் பெற்று பொங்கி வருகின்ற புதுப்புனலாக மாறி, காணும் மனிதர்களில் இறைவனின் உடனிருப்பை உணர்ந்து, ஒவ்வொரு நொடிப்பொழுதும் நம்பிக்கையோடு அடியெடுத்து வைக்க உமதருளை தந்தருள வேண்டுமென்று எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்துவழியாக உம்மை மன்றாடுகின்றோம்.

ஆண்டவர் நம்மை ஆசிர்வதித்து, தீமை அனைத்திலின்றும் பாதுகாத்து முடிவில்லா வாழ்வுக்கு அழைத்துச் செல்வாராக. - ஆமென். ஆண்டவரைப் போற்றுவோம். இறைவா உமக்கு நன்றி!

சகோ. ச. ரபேக்காள் FSAG

உ. இளையோர் நலன்

முன்னுரை

இளையோர் எழுச்சி மிக்கவர்கள். சாதிக்க வேண்டும் என்றத்துணிவை தன்னகத்தே கொண்டு துடிப்புடன் இயங்கிக்கொண்டிருப்பவர்கள். சுவரில் வரிசையாய் ஊர்ந்து செல்லும் எறும்மை தடுத்து நிறுத்தினாலும் அது கலைந்து போகாது. மாறாக வேறு ஒரு வழியைக்கண்டு அங்கு வரிசையை ஏற்படுத்திக்கொள்ளும். இத்தகைய சிறப்பு மிக்கவர்கள் தான் இளைஞர்கள். தடைகள் ஆயிரம் வந்தாலும் அதை ஒரு பொருட்டாக எண்ணாது துணிவுடன் கடப்பவர்கள். துள்ளும் இளமையும் துறுதுறுப்பு இயல்பும் உடையவர்கள். கல்லைப் போட்டால் கரையும் சீறும். ஓடும் பாம்பை கண்டால் எட்டி உதைக்கும் காலும் உடையவர்கள். முன்னெடுக்கும் முயற்சிகள் அனைத்திலும் முழு முத்திரை பதிக்க முனையும் முரட்டு குணம் உடையவர்கள் இளைஞர்களே.

இன்று இந்தியாவில் ஏறக்குறைய 45 கோடி இளையோர் உள்ளனர். சுபாஷ் சந்திரபோஸ், பகத் சிங், வீர வாஞ்சி போன்றோர் வாழ்ந்த சமூகத்தில், இன்று அத்தகைய வீர உணர்வு மிக்கவர்களை அடையாளம் காண்பது அரிதாக உள்ளது. இளையோரை கட்டிப்போட்டிருக்கும் ஒரு உன்னத செயலை விடாமல் செய்து கொண்டிருப்பது ஊடகம். உலகத்தின் அழகை உள்ளங்கையில் வைத்துப் பார்க்க கொடுத்து வைத்திருக்கிறது. ஊடகத்தின் கவர்ச்சிக்கு 80 சதவீத இளைஞர்கள் ஈர்க்கப்பட்டுள்ளார்கள் என்றால் அது மிகையல்ல.

ஊடகத்தின் ஈர்ப்பு, தீய நண்பர்களின் வழி காட்டுதல், பெற்றோரால் கவனிக்கப்படாத நிலை, படிப்பதற்கு வசதியற்ற நிலை, படித்தாலும் வேலை கிடைக்காத நிலை, உழைப்புக்கேற்ற ஊதியம் கிடைக்காத நிலை, தாழ்வு மனது, பாலியல் ரீதியாய் பாவம் செய்யத்தூண்டும் சூழல்கள், திரைப்படமோகம், நடிகர்களையும், நடிகைகளையும் தங்களது மாதிரிகைகளாக கொள்ளும் அவல நிலை, உலகமயமாக்கலால் திட்டமிட்டு திணிக்கப்படும் குறிக்கோளற்ற வாழ்வு, சிரமமில்லாமல் சொர்க்கத்தை எட்டமுடியும் என்ற போலி நம்பிக்கை போன்றவை வலைகளாய் இளைஞர்களை சுற்றிக்கொண்டு வாழ்வில் முன்னேறவிடாமல் செய்கின்றது.

சூழல்கள் எதுவாக இருந்தாலும் அவற்றை எதிர்த்து முன்னேற்றம் கண்ட யாக்கோபின் மகன் யோசேப்பைப்போன்றும், தீர்க்க தரிசனம் கண்டு நீதியை நிலைநிறுத்திய தானியேல் போன்றும், எதிர்ப்பு பல வந்த போதும் இறை நம்பிக்கையில் நிலைத்து நின்ற சூசன்னாவைப் போன்றும், தன் நாட்டு மக்களை காக்க எதிரி பாளையத்திற்கு தைரியத்துடன் சென்று எதிரி தலையைக்கொய்து வந்த யூதித் போன்றும், மக்கள் என்ன கூறினாலும் அதனைப்பொருட்படுத்தாது இறைத்தந்தையின் திட்டம் செயல்பட தன்னை முழுவதும் கையளித்த இறைமகன் இயேசு போன்றும், நேர்மையான பாதையில் இறை கரம் பற்றி, வழி நடக்கும் துணிவு கொண்ட இளைஞர்களும் சமூகத்தில் இருக்கத்தான் செய்கின்றனர். புனித அகஸ்தீனார் போன்று மனந்திரும்பிய வாழ்வு வாழும் இளைஞர்களும், இளம் பெண்களும் இவ்வுலகிற்கு ஒளி விளக்குகளாய் திகழ்ந்து வருகின்றனர். "வேகமும், துடிப்பும் உள்ள பத்து இளைஞர்களைத் தாருங்கள் நான் இந்தியாவை மாற்றி காட்டுகின்றேன்" என்று சுவாமி விவேகானந்தர் கூறினார்.தந்தியலையை செய்தியாக அனுப்பி வானொலியை கண்டு பிடித்த போது மார்கோனிக்கு வயது 23, மின்சாரத்தைக் கண்டுபிடிக்கும் ஆராய்ச்சியைத் தொடங்கி மின்சாரம் தொடர்பான 122 கண்டுபிடிப்புகளுக்கு காப்புரிமை பெறத் தொடங்கிய போது தாமஸ் ஆல்வா எடிசனுக்கு வயது 23. இளையோரை நாட்டின் முதுகெலும்புகள் என்றார் நேரு, நாட்டின் தலைவிதியை மாற்றிப் போட்டவர்களில் பலர் இளைஞர்கள் என்றால் மிகையல்ல. பிலிப்பைன்ஸ் ஸ்பெயினுக்கு அடிமையாயிருந்த போது எதிர்ப்பு குரல் கொடுத்தவர் ஜோஸ் ரிசால். இலத்தீன் அமெரிக்க நாடுகளில் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து குரல் கொடுதவர் சே குவாரா. இத்தகைய சிறப்பு மிக்கவர்கள் இளையோர். கோடிட்டு காட்டப்பட்ட இளைஞர்கள், இளம் பெண்கள் போன்று நம் மத்தியில் வாழும் இளையோர் தம் வாழ்வு சிறப்படைய இந்த செப நேரத்தை செலவிடுவோம்.

ஒவ்வொரு இறைவனுக்கு வாழ்த்து

தாயும், தந்தையுமான இறைவா! இளையோர் எம்மை உம் இருக்கரங்களால் அரவணைத்துக் கொண்டிருக்கும் கிருபைக்காக உம்மை போற்றுகின்றோம்.

ஊதாரித்ததந்தையின் அன்பைப்புறக்கணித்து, சீரழிந்த நிலையில் மனம் வருந்தி திருந்தி வந்த இளையமகனை இருக்கின்ற நிலையில் ஏற்றுக்கொண்ட உன்னத தந்தையை அடையாளப்படுத்திக்கொண்டிருக்கும் அன்பு இயேசுவே உம்மைப்போற்றுகின்றோம்.

இளையோரின் மறைமுகமான நண்பரே, இளையோர், பரம தந்தையின் அன்பிலிருந்தும், மகன் இயேசுவின் வழிகாட்டலிலிருந்தும் பிரிந்து போகாமல் இருக்கவும், உண்மையான சத்தியத்திற்குள் தொடர்ந்து நிலைக்க வைத்து, பலவீனமான நேரங்களில் பலப்படுத்துபவராகவும் இருந்து எங்களைத் தேற்றும் தூய ஆவியே உம்மைப் போற்றுகின்றோம்.

மூவொரு இறைவா உம் சித்தத்தை நாங்கள் புரிந்து அதன்படி நடக்க எப்போதும் எங்களோடு இருந்து வழி நடத்தும் உம் பேரன்புக்காக உம்மைப்போற்றுகின்றோம்.

இளையோர் தம் நலன்களுக்காய் செபிக்கும் இந்த நேரத்தை இறைத்தந்தை ஆசிர்வதித்து செப சூழலை நம் இதயத்தில் ஏற்றிட பாடப்படும் பஜனையை திரும்பிப்பாடி அமைதிபெறுவோம்.

பஜன்

என் இதயம் உன் ஆலயமே என்னில் குடி கொள்ளவா ஓ தேவா என்னில் உயிரூட்டவா(2)

சரணம் தேவா சரணம் தேவா (4)

(சில மணித்துளிகள் அமைதியாய் இருப்போம்)

மனத்துயர்

ஒளி படைத்த கண்களும், உறுதி படைத்த நெஞ்சமும் கொண்ட இளையோர் தம் நேரிய பாதை மறந்து மந்த நிலைக்கும்,மாந்தரீக நிலைக்கும் காரணமாய் இருக்கும் புற, அகத்ததடைகள் அநேகம். அவைகளை நினைத்து ஆண்டவரிடம் மன்னிப்பு வேண்டுவோம்.

உலகமயமாக்கலுக்குட்பட்டு பரப்பப்படும் வன்முறை, பாலுணர்வு போன்றவைகளை வலுவாகத் திணிக்கும் திரைப்படம், வலைப்பின்னல் போன்றவற்றிற்கு அடிமைப்பட்டிருக்கும் எங்கள் தவறான போக்கிற்காக மனம் வருந்துகின்றோம்.

பதில் - மனம் வருந்தி, மனம் திருந்தி வாழ வரம் தாரும் இயேசுவே.

எங்களுக்கு ஏற்படும் தோல்விகள் அல்ல, மாறாக இலட்சியமில்லாத நிலையே பல குற்றங்களுக்கு காரணமாகின்றது என்பதை உணர்ந்து வாழ தவறியதற்காக மனம் வருந்துகின்றோம்.

பெற்றோர், உற்றார், உறவினர், ஆசிரியர், பெரியோர் ஆகியோர் எங்கள் வாழ்வில் அக்கறைக் கொண்டு செயல்பட்ட நேரங்களை எல்லாம் தேவையற்ற நேரங்களாக எண்ணி அவர்களை விரோதிகளாக எண்ணியத் தருணங்களுக்காக மனம் வருந்துகின்றோம்.

இளைஞர்களாகிய நாங்கள் பல நேரங்களில் சீரழிவதோடு, எங்களை சார்ந்த இளையோரும் சீரழியட்டும் என்று குடி, கஞ்சா, புகைப்பிடித்தல், பாலியல் இச்சைகளுக்கு உட்படுத்துதல் போன்ற தீமைகளை செய்வதற்கு காரணமாய் இருந்த எங்களின் துர்மாதிரியான செயல்களை எண்ணி மனம் வருந்துகின்றோம்.

சமூகத்தின் கலாச்சார மாற்றம் என்று கூறிக் கொண்டு ஆடம்பர பிரியராய் அரை, குறை ஆடை அணிந்து பிறர் தவறு செய்வதற்கு கராணமாயிருந்த எங்களின் செயல்களுக்காக மனம் வருந்துகின்றோம்.

மனம் வருந்தி, மன்னிப்பு பெற்று இறைவனுடன் நெருக்கமாகியிருக்கும் நாம் இறைவன் நமக்கு கொடுத்த பல்வேறு வாய்ப்புகள், வசதிகளை நினைத்து அவரை புகழ்வோம்.

புகழ்ச்சி

நான் இந்த புவியில் மனிதனாய் பிறந்திட என் பெற்றோரை உன்னத கருவியாய் கொடுத்த மேலான கிருபைக்காக.

பதில் - உம்மைப் போற்றுகின்றோம், புகழுகின்றோம், நன்றி கூறுகிறோம்

நீர் படைத்த இவ்வுலகம் பெரியது, அதிசயங்கள் நிறைந்தது என்பதை அனுபவத்தால் புரிந்து கொள்ள வாய்ப்பு வழங்கிய உம் மாபெரும் கருணைக்காக....

பிற ஊடகங்களில் ஒவ்வொருவரும் பயனாளிகள் என்றால்,இணையத்தில் எல்லோரும் படைப்பாளிகளாக முடியும் என்பதை உணர்த்தி அதை எண்ணற்ற மக்கள் தொடர்பு கொள்ளும் வெகு மக்கள் தொடர்பாளராக எங்களுக்கு கொடுத்த கொடைக்காக....

திருச்சபையின் புது வாழ்வுக்குள் எங்களை பிறக்க வைத்து, பல்லாயிரம் புனிதர்களை எங்களுக்கு முன் மாதிரிகையாக அளித்து எங்கள் வாழ்வு உமக்கு உகந்ததாக இருக்க அருள் செய்ததற்காக....

சுதந்திரம் என்ற உரிமையை வழங்கி, எல்லையில்லா உம் தூய அன்பை சுவைக்க திரு விவிலியத்தை எங்கள் அன்றாட அப்பமென்று வழங்கிய உம் மேலான நன்மைதனத்திற்காக....

இறைவன் வாழ்வில் செய்த எல்லா நன்மைதனங்களையும் எண்ணி அவரை புகழ்ந்த நாம் அவருக்கு புகழ்ச்சி பண் இசைப்போம்.

பாடல்

அழகிய கவிதையில் பாடிடுவேன்
அவனியில் அவர் புகழ் சாற்றிடுவேன்

விவிலிய வாசகம்

1 பேதுரு 5 : 5-11

விவிலிய விளக்கம்

பணிந்திருத்தல் வாழ்வின் எல்லா நிலையினருக்கும் தேவையான ஒன்று என்பதை சுட்டிக்காட்டுகின்றார். வீண் கவலை எப்போதும் நாம் கொள்ளத்தேவையில்லை.ஏனென்றால் இறைவன் நம் மீது அன்பு கொண்டுள்ளார். எப்போதும் அறிவுத்தெளிவோடு விழிப்பாயிருக்க வேண்டும். ஏனெனில் எதிரியான அலகை யாரை விழுங்கலாமென தேடித் திரிகிறது. அசையாத நம்பிக்கை கொண்டவர்களாய் அலகையை எதிர்த்து நிற்கவேண்டுமென்றும் அறிவுறுத்துகின்றார். துன்பம் இருக்கும் ஆனால் அது நிரந்தரமானதல்ல மாறாக சிறிது காலத்திற்கு பின் மறைந்து போகக்கூடியது. இறைவன் நம்மை சீர்படுத்தி, உறுதிப்படுத்தி, வலுப்படுத்திட நாம் கட்டாயம் துன்பப்படவேண்டும் என்பதை மிக அழகாக எடுத்தியம்புகின்றார் பேதுரு.

இன்றைய சமூக சூழலில் இளையோருக்கு தேவையான உயரிய கருத்துக்களை மிகவும் பாசத்தோடு எடுத்தியம்புகின்றார். தந்தைக்குரிய வாஞ்சையோடு கூறுகின்றார் இறைவன். எனக்கு ஏன் இப்படி நடக்கிறது, எனக்கு மட்டும் தான் இப்படி நடக்கிறது என்று கவலைப்படவே தேவையில்லை, ஏனென்றால் காக்கும் தெய்வம் நமக்காக கவலைப்படுகின்றார். பாலம் ஒன்று உடைந்த நிலையில் உள்ளது. அப்பாவும் அவரது மூன்று வயது குழந்தையும் பாலம் உடையும் ஆபத்தில் இருந்தாலும் பாலத்தின் மேல் நடக்கிறார்கள். அப்போது அப்பா மகளைப் பார்த்து தன் கைகளை பலமாக பிடித்துக்கொள்ளும்படி கூறுகிறார். மகள் உடனடியாக அதை மறுத்து அப்பாவை தனது கைகளை பலமாக பிடித்துக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறாள். சிறிது தூரம் கடந்தபின் அப்பா மகளைப்பார்த்து ஏன் அப்படி சொன்னாள் என்று

மகள். "நான் பிடிக்கும் போது ஏதாவது விபரீதம் நடந்தால் பயத்தில் கையை விட்டு விட நேரிடும். ஆனால் அப்பா நீங்கள் பிடிக்க நேரிட்டால் பத்திரமாக இறுக்கமாக என் கைகளை பிடித்துக்கொள்வீர்கள். எந்த சந்தர்ப்பத்திலும் என் கைகளை விட்டு விட மாட்டீர்கள் என்ற நம்பிக்கையால் தான்" என்று கூறினாள். எத்தனையோ வழிகளில் அலகை யாரை விழுங்கலாமென சுற்றுக்கொண்டிருக்கின்றது என்று கோடிட்டுக் காட்டுகின்றார். தங்கள் பிள்ளைகளை காப்பாற்ற பெற்றோர் விரும்பினாலும். சிறு பிள்ளையாய் இருக்கும்போது பெற்றோர் மீது வைத்திருந்த அதே நம்பிக்கை குறைந்து போய்விடுகிறது. இவைகளிடமிருந்து தப்பித்துக்கொள்ள மிகுந்த எச்சரிக்கைத் தேவை. இயேசு துன்பப்பட்டார். அதனால் மகிமை அடைந்தார் நாமும் துன்பப்பட்டால் சிறப்படைவோம். வாழ்வு சிறப்படைய ஆரம்பத்தில் பெற்றோர். பெரியோர் சொல்வது வேப்பம் பூப்போல் கசப்பாய் இருந்தாலும் பின்னாளில் அது தேனின் இனிமையையும். நம்பின் சுவையையும் பெற்றதாய் வாழ்வை சிறப்பானதாக்கும் என்பதை ஒவ்வொரு இளையோரும் உணர வேண்டும். கிழிக்கப்பட்டத்துணி தான் உடையாகிறது. செயப்படும் வாழ்க்கையே கம்பீரமாகிறது. இருட்டைத் தன் இயக்கத்தால் கிழிப்பவனுக்கு வெளிச்சத்தின் வரவேற்பு கிடைக்கும். இளைஞர்கள் இவைகளை உணர்ந்து செயல்பட்டால் இயேசுவின் மகிமையில் கட்டாயம் பங்கெடுக்க முடியும்.

சில மணித்துளிகள் அமைதி காப்போம்.

பாடல்

சம்மதமே இறைவா சம்மதமே தலைவா — உன்
மாலையிலே ஒரு மலராகவும்....

மன்றாட்டு

பதில் : இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

அன்பு இயேசுவே நீர் இளைஞராய் இருந்த போது. கானாவூர் திருமணம் சென்ற வேளையில் உமது நேரம் வரவில்லை என்பதையுணர்ந்த போதும் உம் தாய்க்கு பணிய வேண்டும் என்பதை உணர்ந்து செயல்பட்ட உமது பணிவை நானும் குறைவின்றி கடைப்பிடிக்க உமது அருளை தந்திட வேண்டுமென்று....

இரக்கமே உருவான இறைவா, திரைப்படம், கிரிக்கெட், தொலைக்காட்சி வலைப்பின்னல், இணையத்தளம், கணினி, போன்றவை என் வளர்ச்சிக்கு உதவும் வகையில் பயன்படத்திட...

நல்லவரான இயேசுவே, அன்று பணக்கார வாலிபன் தான் நிலை வாழ்வு பெற என்ன செய்ய வேண்டும் என்று உம்மிடம் கேட்ட போது நீர் கூறியவாறே நாங்களும் இவ்வுலக செல்வங்கள் மேல் நாட்டம் கொள்ளாமல், உம் மீது மட்டுமே நாட்டம் கொண்டவர்களாய், நல்லவற்றை ஏற்று, அல்லாதவைகளை தவிர்த்து வாழ வரம் தர வேண்டுமென்று....

உங்களை இனி நான் நண்பர்கள் என்று அழைப்பேன் என்று கூறிய அன்பிறைவா, எங்களது நண்பர்களை ஆசிர்வதியும். எங்கள் நண்பர்களிடம் விளங்கும் நல்லப்பண்புகளை பாராட்டி அவைகளை எங்களது வாழ்விற்கு படிக்கற்களாகக்கொண்டு வாழ்ந்திட தேவையான ஆற்றலையும், அருள் வரங்ககளையும் தந்திட வேண்டுமென்று....

பெற்றோருக்கு கீழ்படிந்து நடந்ததால் இறைத்திட்டத்திற்கு முழு வடிவம் கொடுத்த அன்பிறைவா! எங்களது வளர்ச்சியில், எங்கள் பெற்றோர் தங்களையே முழுவதுமாக இழந்துள்ளனர். எங்கள் உயர்வைக்கண்டு மகிழ்ந்தும், நாங்கள் சீறும்,சிறப்புடன் வாழ தியாகங்கள் பல செய்தும், நாங்கள் உலகை கம்பீரமாய் வலம் வர காயங்கள் பல அடைந்தும் வாழ வைக்கும் எங்கள் பெற்றோரை நிறைவாய் ஆசிர்வதியும். இறுதி காலம் வரை அவர்களைத் தாங்கும் விழுதுகளாக நாங்கள் இருக்க எங்களுளுக்கு உமது அருளைத் தர வேண்டுமென்று இறைவா....

ஆண்டவர் நம்மை ஆசிர்வதித்து, தீமை அனைத்தினின்றும் பாதுகாத்து முடிவில்லா வாழ்வுக்கு அழைத்துச் செல்வாராக. - ஆமென். ஆண்டவரைப் போற்றுவோம். இறைவா உமக்கு நன்றி!

சகோ. மோ. திரேசா ஞானமணி. FSAG

உஉ. விவிலிய ஞாயிறு

மூவொரு இறைவனுக்கு வாழ்த்து

தந்தை மகன் தூய ஆவியாம் இறைவா! மூவொரு கடவுளே! முழு முதற் பொருளே! மன்னிக்கும் நல்ல தந்தையே! மனிதம் வளர்க்கும் இயேசுவே! மகிழ்வால்

எம்மை நிறைக்கும் ஆவியே! தாங்கிடும் எங்கள் தந்தையே. தன்னையே தந்த தெய்வமே. நெஞ்சில் திடம் அளிக்கும் தூய ஆவியே! உம்மை வாழ்த்தி வணங்கி ஆராதித்து போற்றுகின்றோம்.

முன்னுரை

உலகம் முடியும் வரை உங்களோடு இருப்பேன் என்று மொழிந்த அன்பு இறைவன் தனது அன்பான வார்த்தையை நமக்குக் கொடையாக அளித்துள்ளார். இறைவார்த்தை உயிருள்ளது. ஆற்றல் மிக்கது. இறைவார்த்தை நம்மை இறைவனுடன் உரையாட வைக்கின்றது. இறைவார்த்தை இறைவனோடு பேச கற்றுத் தருகின்றது.

திருச்சபை தம் வாழ்வின் பல்வேறு கட்டங்களில், வெவ்வேறு வகையில் இறைவார்த்தைக்கு முன்னிடம் கொடுத்து பணியாற்றி வருகிறது. சிறப்பாக இறைமக்களின் அன்றாட வாழ்வு முழுவதும் இறை வார்த்தையின் ஆற்றல் வெளிப்படும் விதத்தில் செயல்படுகின்றது.

படைப்புகள் வழியாகவும். குல முதுவர்கள். நீதித் தலைவர்கள். அரசர்கள். இறைவாக்கினர்கள். ஆகியோர் வழியாகவும் சிறப்பாக தம் வார்த்தைகள் வழியாகவும் கடவுள் தம்மை வெளிப்படுத்தியுள்ளார். அவரது வார்த்தைகள் விவிலியத்தில் முழுமையாக இடம் பெற்றுள்ளன.

இறைவார்த்தை நமக்கு நிலைவாழ்வைக் கொடுக்க வல்லது. இறைவார்த்தை இன்றைய சமூகத்தில் அமைதிக்கும் நல்லிணக்கத்திற்கும் ஊற்றாக அமைகின்றது. "மனித உருவான வார்த்தைகள் கிறிஸ்துவில் அனைத்துலகையும் ஒன்று சேர்க்கவே இறைவன் திருவுளமானார்" என புனித பவுல் அடிகளார் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். பக்தியோடு இவ்வழிபாட்டில் பங்கு கொள்வோம்.

மனத்துயர்

நமது வாழ்வில் இறை வார்த்தையை அறியவும் அதனை அறிவிக்கவும் வாய்ப்புகள் இருந்தும் பல்வேறு சமயங்களில் இதனை செய்ய தவறிய குற்றத்திற்காக மனம் வருந்தி மன்னிப்பு கேட்போம்.

பதில் - வல்லமை நிறைந்த இறைவா - உம்
வார்த்தையால் எம்மை குணப்படுத்தும்

இறைவார்த்தையை அறிவதற்கு, அறிவிப்பதற்கு எத்தனையோ வாய்ப்புகள் அளிக்கப்பட்டிருந்தும் அவற்றைப் பயன்படுத்தாமல் அலட்சியம் செய்து வாழ்ந்தமைக்காக மனம் வருந்துகின்றோம்.

இறைவார்த்தையைக் கேட்டும் அதற்கேற்ற படி வாழாமல் வழியோரமாக. முட்செடிகள் சூழ்ந்த இடமாக. பாறை நிலமாக வாழ்ந்தமைக்காக மனம் வருந்துகின்றோம்.

"படைப்பிற்கெல்லாம் நற்செய்தியை அறிவியுங்கள்" என்ற உமது கட்டளைகளை கடைபிடிக்காமல் எங்கள் வார்த்தையாலும் வாழ்க்கையாலும் இறை வார்த்தைக்கு சான்று பகர்ந்திட தவறியமைக்காக மனம் வருந்துகின்றோம்.

எங்கள் வாழ்வுக்குத் திசைகாட்டும் கருவியாக நீர் எமக்கு கொடுத்துள்ள விவிலியத்தை நாங்கள் உரிய முறையில் வாசிக்காமல், உம் வார்த்தையைப் பின்பற்றாமல் வாழ்ந்த குற்றத்திற்காக மனம் வருந்துகின்றோம்.

விவிலிய வாசகம்

வாசகம் லூக் 8 : 9- 21.

விவிலிய விளக்கம்

மனித உறவுகள் இரத்தத்தாலும், திருமண இணைப்பாலும் ஏற்படுகின்றன. "இதோ உமது அடிமை, உமது வார்த்தையின் படியே எனக்கு ஆகட்டும்" என்று கூறி இயேசுவின் தாயானார் அன்னை மரியாள். பெற்றெடுத்ததால் மட்டுமே அவள் இறைவன் இயேசுவின் தாயாகி விடவில்லை. இறைவார்த்தைக்கு தன்னை அர்ப்பணமாக்கியதாலும் அவள் தாயானாள். சாவால்கள் நிறைந்த உலகில் சாட்சி பகர இறைவார்த்தை அழைப்பு விடுக்கிறது. ஆற்றல் மிகுந்த இறைவார்த்தையை நாம் வாழ்வாக்கும் பொழுது நாமும் ஆற்றலைக் கொடையாகப் பெற்றுக் கொள்கின்றோம்.

இறைவார்த்தையை வாழ்வாக்கும் பொழுது எண்ணற்ற இடர்களுக்கு உள்ளாக நேர்ந்தாலும் இறைவனின் துணையும், பாதுகாப்பும் தொடரும் என்பது உறுதி. இறைவார்த்தைக்கு தனது வாழ்க்கை மூலம் சான்று பகரும் ஒவ்வொருவரும் இயேசுவை மற்றவர்களுக்கு வெளிப்படுத்தும் வாய்ப்பை பெறுகின்றனர். இறைவார்த்தையைக் கேட்பதோடு நின்றுவிடாமல் அதனை வாழ்ந்து காட்டும் போது தான் மனுவுருவான வார்த்தையாம் இயேசுவுக்கு சான்று பகர்கின்றோம்.

பாடல்

இயேசுவே உந்தன் வார்த்தை எனக்கு வாழ்வு
இயேசுவே உந்தன் பார்வை எனக்கு விளக்கு

மன்றாட்டு

பதில் : இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

"கேளுங்கள் கொடுக்கப்படும்" என்று வார்த்தையான ஆண்டவர் நமக்கு வாக்குறுதி கொடுத்துள்ளார். அழியாத அவரது வார்த்தையில் நம்பிக்கை வைத்து நம் தேவைகளை நமது அன்புத் தந்தையிடம் எடுத்துச் சொல்லி மன்றாடுவோம்.

நல்ல ஆயனாம் இறைவா! உமது வார்த்தையை எடுத்துரைக்கவும் அதன் பொருளைக் கண்டறிந்து வாழ்ந்திடவும் உம்மால் ஏற்படுத்தப்பட்ட திருச்சபையை அதனை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள்

துறவியர் அனைவரையும் உமது வார்த்தையின் ஆற்றலால் வழிநடத்த வேண்டுமென்று....

வாழ்வின் வழியே இறைவா! பொது நலப் பணிக்காக தம்மை அர்ப்பணித்துள்ள அனைவரையும் குறிப்பாக எம் நாட்டுத் தலைவர்களையும் உண்மையின் ஒளியினால் அர்ச்சித்து, அவர்கள் மக்களை மதித்து மக்களின் தேவைகளை அறிந்து நிறைவு செய்து தங்களின் பணிக்கேற்றவாறு வாழ்ந்திட வேண்டுமென்று....

பலனளிக்கும் வார்த்தையே இறைவா! விவிலியப் பணியில் ஈடுபட்டுள்ள அனைவரையும் அவர்களோடு ஒத்துழைக்கும் அனைத்து இறைமக்களையும் உமது அருள் வரங்களால் நிரப்பி அவர்களின் முயற்சியை ஆசீர்வதித்திட வேண்டுமென்று....

குணமளிக்கும் வார்த்தையே இறைவா! தீராத நோயினால் வாடுவோரையும், பல்வேறு தீய பழக்கங்களுக்கு அடிமைப்பட்டிருப்போரையும் குணமாக்கி, அவர்களுக்கு மனமாற்றம் தந்து உமக்கு ஏற்புடைய வாழ்வில் நிலைபெற தேவையான ஆசீரை வழங்க வேண்டுமென்று....

கர்த்தர் கற்பித்த செபம்

இறுதி செபம்

வார்த்தை மனுவுருவானார் நம்மிடையே குடி கொண்டார். உயிர் மூச்சை அளித்தவரும் நீரே. உயிர் மூச்சாய் எம்மில் இரண்டறக் கலந்திருப்பவரும் நீரே இறைவா! விவிலிய ஞாயிறு சிறப்பை கொண்டாடி மகிழும் யாம் ஆளுக்கொரு விவிலியம் பெற்று, நாளுக்கொரு அத்தியாயத்தை வாசித்து, தியானித்து, தினந்தோறும் விவிலியம் கூறும் நற்செய்தியை மனதில் ஏற்றுக் கொண்டவர்களாய், சந்திக்கும் அனைவருக்கும் நாங்கள் நற்செய்தியாக மாறிட வரம் தர வேண்டுமென்று உம் மகன் கிறித்து வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.

ஆண்டவர் நம்மை ஆசிர்வதித்து, தீமை அனைத்தினின்றும் பாதுகாத்து, முடிவில்லா வாழ்வுக்கு அழைத்துச் செல்வாராக. - ஆமென். ஆண்டவரைப் போற்றுவோம். இறைவா உமக்கு நன்றி!

சகோ. S மேரி ஸ்டெல்லா FSAG

௨௩. திருமண வார்த்தைப்பாடு

முன்னுரை

திருமணம் என்பது திருச்சபையில் ஒரு மாபெரும் கொண்டாட்டம் ஆகும். இயேசு ஏற்படுத்திய அருட்சாதனங்களில் மிகவும் மாண்புடையது. ஆண்டவர் தம் இருத்தலத்திலிருந்து மணமக்களுக்கு அருள் பொழியும் நாள். இது அன்பின்

அருட்சாதனம். கிறிஸ்துவுக்கும், திருச்சபைக்கும் உள்ள நீடித்த அன்புறவின் அடையாளமாக இறைவன் ஏற்படுத்தியுள்ளார். திருமண உடன்படிக்கை இரு உள்ளங்களிடையே நிகழும் ஒரு மாபெரும் நிகழ்வாகும். மணமக்கள் இருவரும் இயேசு அவர்களுக்கு வழங்கிய அன்பின் கொடைகளை தாராளமாய் பகிர்ந்து கொள்கிறார்கள். திருமண பந்தம் அன்பை வெளிப்படுத்தும் நிகழ்வாக மாறுவதோடு அதன் அடையாளமாய் இறைவன் தரும் பிள்ளைப்பேற்றினை ஏற்று அவர்களை வளமையாய் வாழ வைப்பதில் முழுமை அடைகிறது. இதனால் திருச்சபை அழிவுறாது வளர்ந்து இறையரசின் மதிப்பீடுகள் அனைவரையும் சென்றடையச்செய்யும் ஒரு உன்னத கருவியாய் செயல்பட்டு வருகிறது.

"குடும்பத்தில் கணவரும் மனைவியும் குறிப்பறிந்து நடந்து கொண்டால் அந்த அமைதியை அணுகுண்டாலும் அசைக்க முடியாது".

"இல்லாள் இனியவளாக இருந்தால் குடும்பமே ஒரு கோயிலாகும்"

"நீ மாலையானால் நான் அதில் மலராவேன்

நீ பாலையானால் நான் அதில் மணலாவேன்" என்றும் இன்பத்திலும் துன்பத்திலும், உடல் நலத்திலும் நோயிலும் எழுச்சியிலும், வீழ்ச்சியிலும், வெற்றியிலும், தோல்வியிலும் வெட்டிப்பிரித்தாலும் விட்டுப் பிரியாத நிலைதான் திருமண வாழ்வு.

இனி அவர்கள் இருவர் அல்ல ஒரே உடல். எனவே கடவுள் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கட்டும் (மாற் 10 : 8 – 9) என்ற மனநிலை கொண்டு வாழ்க்கை வாழ்வதுதான் கிறிஸ்தவ அன்பில் நிலைக்கும் திருமணம். இவர்களுக்காக இந்நேரத்தில் ஜெபிப்போம்.

கணவன், மனைவி, பிள்ளைகள் இடையே நிலவும் அன்புறவு மூவொரு இறைவனிடம் காணப்படும் அன்புறவைப் பிரதிபலிக்கிறது. தந்தை, மகன், தூய ஆவி ஆகிய மூவரும் அன்பில் ஒன்றித்திருப்பது போல் ஒருவருக்கொருவர் ஒன்றித்து வாழவேண்டும்.

திருமண பந்தத்தில் ஒன்றிணைய காத்துக்கொண்டிருக்கும் மணவாளன் அன்று நாசரேத்தூரில் கன்னி மரியாளுக்கு மண ஒப்பந்தம் ஆன சூசையிடம் விளங்கிய பண்புகளை கொண்டிருத்தல் இனிமை மிக்கது. சூசை நீதிமானாய் இருந்தார் (மத்:1:19). மரியாள் திருமணம் புரிவதற்கு முன்னரே தூய ஆவியால் கருவுற்றிருப்பது அறிந்தும் ஊராரின் ஏச்சுக்கும், பேச்சுக்கும் கலங்காமல், அஞ்சாமல் இறை விருப்பத்தின் படி ஏற்றுக்கொண்டார்.(மத்:1:2-4), கடின உழைப்பை

கொண்டு பொருள் ஈட்டுவதை தன் வாழ்வு முறையாக கொண்டிருந்தார்(மத்13:55)

திருமணத்தில் தன்னை மணவாளனோடு இணைத்து திருச்சபைக்கு அணி செய்யக்காத்திருக்கும் மணவாளியிடம் நாசரேத்தூர் தூசைக்கு மன ஒப்பந்தம் செய்த மணமகளிமரியிடம் விளங்கிய பண்பு நலன்கள் இருத்தல் மிகச்சிறப்பு. இதோ ஆண்டவரின் அடிமை என்று பணிந்திருந்த மனநிலை (லூக் 1:38). தான் கருவுற்றபோதும் தன் உறவினர் முதிர்ந்த வயதில் கருவுற்றிருப்பது அறிந்து அவளுக்கு உதவ மலைநாட்டிற்கு சென்றார்(லூக்.1:39-42). தன் துணையாளர் பெத்லகேமிற்கு அழைத்தபோது உடன் மறுப்பு தெரிவிக்காமல் உடன் சென்றார்.(லூக்.2:5). மீண்டும் கணவன், மகனோடு எகிப்திற்கு செல்ல இறைத்தூதர் பணித்தார் என்று அழைத்த போது எதிர்ப்பு தெரிவிக்காமல் உடன் பயணித்தார். பக்தியுள்ள யுவதியாய் மகனை எருசலேம் தேவாலயத்திற்கு அர்ப்பணிக்க ஏந்திச்சென்றாள்(லூக்.2:42). மகன் வல்லச்செயல்கள் செய்வதை அறிந்து ஆபத்து நேரத்தில் உதவ வேண்டுமென்ற நல் கருத்தோடு கானாவூர் திருமணத்தில் பரிந்து பேசுகின்றாள். இத்தகைய சிறப்பம்சங்களை மணமக்கள் பெற்று திருமண வாழ்வில் பதினாறு செல்வங்களைப்பெற்று வாழ்ந்திட, பிறரை வாழ வைத்திட அவர்களுக்காய் செபிப்போம்.

மன்றாடு இறைவனுக்கு வாழ்த்து

அனைத்துலகையும் படைத்தாளும் இறைவா! திருமண இணைப்பை ஒரு பெரும் அன்பின் அருட்சாதனமாய் திருச்சபைக்கு வழங்கிய உம் மேலான அன்பை எண்ணி உம்மை புகழ்கின்றோம், துதிக்கின்றோம், ஆராதிக்கின்றோம், வாழ்த்துகின்றோம்.

மகனாகிய கிறிஸ்துவே! உமக்கும், திருச்சபைக்கும் உள்ள உன்னத உறவை திருமண பந்தம் என்ற அருள் அடையாளத்தினால் ஆசீர்வதித்துக்கொண்டிருக்கும் உம் தியாகமிக்க வழிகாட்டுதலை நினைத்து உம்மை போற்றுகின்றோம், துதிக்கின்றோம், வாழ்த்துகின்றோம்.

தூய ஆவியாம் இறைவா மணமக்கள் இறையன்புக்கு சாட்சிகளாய் திகழ்ந்திட உம் வல்லமையால் அருள் பொழிவு செய்து அவர்களை திடப்படுத்தும் மேலான உம் அருட்கொடைகளுக்காக உம்மைப் போற்றுகின்றோம், துதிக்கின்றோம், வாழ்த்துகின்றோம்.

மூவொரு இறைவா மணமக்கள் அன்பினால் பிணைக்கப்படவும், அன்பின் சக்தியால் ஒருவர் மற்றவர் சுமைகளைத்தாங்கும் உன்னத சக்தியை அளிக்கும் உம் வல்லச்செயலுக்காய் உம்மைப்போற்றுகின்றோம், துதிக்கின்றோம், வாழ்த்துகின்றோம்.

(மூவொரு இறைவனை துதித்த நாம் நெற்றி தரையில்பட வணங்கி இடம் அமர்வோம்.)

பஜன்

இனியொரு பொழுதும் உனைப்பிரியாது உறவொன்று என்னில் நிலைப்பெ வேண்டும்

உயர்விலும், தாழ்விலும் வாழ்விலும், வீழ்விலும்
மகிழ்விலும், தயவிலும், வாழ்வின் எந்நிலையிலும்
ஒளியிலும், இருளிலும், வாழ்வின் எந்நிலையிலும்

மனத்துயர்

பதில்: பிழை நீக்கி அருள்வாயே தேவா.

அன்பின் இறைவா பல நேரங்களில் அன்பின் வடிவமாய் இருக்கும் மனிதர்களை மதிக்காமல் அசட்டை செய்த தருணங்களை நினைத்து மனம் வருந்துகிறேன் கோபம் என்ற தீயால் பல நேரங்களில் பலரை மனம்நோக செய்த தருணங்களுக்கா மனம் வருந்தி மன்னிப்பு கேட்கிறேன்.

இயேசுவின் உடலையும் இரத்தத்தையும் பெற நான் சில நேரங்களில் தயாரிப் நிலையில் இல்லாமல் பெற்ற தருணங்களை நினைத்து மனம் வருந்தி மன்னிப் கேட்கிறேன்.

உண்மையான அன்பு எது என்று அறியாமல் அதைத்தேடி அலைந்து திரிந் நேரங்களை நினைத்து உம்மிடம் மனம் வருந்தி மன்னிப்பு கேட்கிறேன்.

என் இளமையில், தெரிந்தும், தெரியாமலும் செய்த பாவங்களை நினைத்து மனம் வருந்தி மன்னிப்பு கேட்கிறேன்.

புகழ்ச்சி

திருமணம் என்ற திருவருட்சாதனத்தை ஏற்படுத்தி மானிட படைப்பை மாட்சிப்படுத்திய....

பதில் : உம்மை புகழ்கின்றோம்.

எங்கோ பிறந்தோம், எங்கோ வளர்ந்தோம் ஆனாலும் எம்மை ஒன்றாக் திருவுளம் கொண்ட உம் மேலான பராமரிப்பிற்காக....

திருமணம் என்ற உன்னத உடன்படிக்கையினை மேற்கொள்ள அநேக பேருக்கு வாய்ப்பளித்து ஆசீர்வதித்த உம் மேலான கிருபைக்காக....

புனிதமான திருமண அன்பை இன்னும் அதிகமாய் புரிந் ஒருவருக்கொருவர் அன்பு, பரிவு, பாசம் கொண்டு வாழ்ந் தி

இறைவார்த்தைகளினால் எங்களை அன்றாடம் திடப்படுத்தும் உம் பாசத்திற்காக....

பாடல்

படைப்புகளே நம் ஆண்டவரைப் பாடுங்களே நீங்கள் பாடுங்களே

அருஞ்செயல் எனக்கு அவர் செய்தார் ஆனந்தமே என்னில் ஆனந்தமே

விவிலிய வாசகம்

கொலோசியர்: 3:12-17

விவிலிய விளக்கம்

மணமக்கள் கடவுளால் தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள். அவரது அன்பின் இறைமக்கள். அதனால் அன்பு, பரிவு, இரக்கம், நல்லெண்ணம், மனத்தாழ்மை, கனிவு, பொறுமை ஆகிய பண்புகளால் அணிசெய்து கொண்டால் வேறு எந்த அணிகலன்களும் தேவையில்லை என்பதை மிக அழகாக எடுத்தியம்புகின்றார். வெளிப்புறத்தில் இருந்து அணிந்து மகிழும் அணிகலன்களை விட, உள்ளத்தில் அணிந்து கொள்பவை தான் நிலை வாழ்விற்கு அழைத்துச்செல்லும் என்பதை எடுத்தியம்புகின்றார். விலையுயர்ந்த தங்கம், வெள்ளி வெளி மனிதர் பார்வையில்பட்டு நிலையற்ற மகிழ்வை விதைக்கும். ஆனால் பண்பு, குணநலன்கள் பழகும் நபரின் நெஞ்சுக்கு நிம்மதியை அளித்து நிலைத்த, நீடிய மகிழ்வை விட்டுச்செல்லும்.

இன்று திருமணம் சொர்க்கத்தில் நிச்சயமாகின்றது என்பதைவிட மணமகள் கொண்டு வரும் பொருட்களின் எண்ணிக்கை, மதிப்பைப்பொறுத்தே நிம்மதி, மகிழ்ச்சி பிறக்கிறது. சிறிது குறைந்து விட்டாலும் கூட பொறுக்காத மனது, ஒருவர் மற்றவர் குறைகளை பெரிது படுத்தாது சுமைகளைத்தாங்கும் மனது குறைவுபடுவதால் குடும்பநல நீதிமன்றங்கள் விவாகரத்து வழக்குகளால் கழுத்திறுக்கி காணப்படும் அவலம். மனைவி கொடுக்கும் தேநீரில் சர்க்கரை குறைந்தாலும், தவறுதலாக உப்பிட்டாலும், அதை பொருட்படுத்தாமல் பருகிவிட்டு நன்றாக இருந்தது என்று பாராட்டும் குணம் மிக சொற்ப பேருக்குத்தான் இருக்கிறது. வெளிச்சம் இருந்தும் விளக்கை ஏற்று என்று கணவன் பணிக்கும் போது மறுப்பு கூறாது விளக்கை ஏற்றும் அமைந்த குணம் கொண்ட மனைவியர் மிக சொற்பப்பேரே. இதனால் நாளெல்லாம் வீட்டுக்கு வீடு போர்க்களம் உருவாகி கொண்டிருக்கின்றது என்பதை நம்மால் மறுக்க முடியாது. ஆனால் மணமக்கள் ஒரே உடலின் உறுப்புகளாய், ஒருவருக்கொருவர் ஞானத்தோடு கற்பித்து அறிவுரை

கூறிக்கொள்ள இறைவன் அழைப்பு விடுக்கின்றார். எனவே மணவாழ்வில் ஒன்றிக்க இருக்கும் நம் மணமக்களுக்காக சிறப்பாய் தொடர்ந்து செபிப்போம்.

(சில நிமிடம் அமைதி)

பாடல்

என்னிறை தேவன் ஏற்றிய தீபமே பாமரன் பாடல்
தன்னிறைத் அன்பால் தான் கண்ட ஜீவனே பரமனின் பாதம் -2

மணவிழா காண இருக்கும் மணமக்களுக்காக இறைபதம் விண்ணப்பங்களை சமர்ப்பிப்போம்.

மன்றாட்டு

பதில் : இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

கடவுள் இணைத்தத்தை மனிதன் பிரிக்காதிருக்கட்டும். இனி இவர்கள் இருவர் அல்லர். ஒரே உடல். இன்பத்திலும். துன்பத்திலும். சுகத்திலும். சோகத்திலும். வறுமையிலும். வளமையிலும். உடலிலும். உள்ளத்திலும் இதயபூர்வமாக எப்போழுதும் இணைந்திருக்க வேண்டும் என்ற எண்ணத்தை கொண்டுவாழ...

அன்பு இறைவா நன்னடத்தையுள்ள மனைவியாகவும். அன்பில் பணிந்திருக்கும் மனைவியாகவும் நல்லறிவோடு மண வாழ்க்கை நடத்தும் கணவனாகவும் மனைவியை உடன் உரிமையாளாராகவும் மதிப்புக் கொடுக்க வேண்டும் என்று....

எல்லாம் வல்ல இறைவா கணவனும் மனைவியும் சுமைகளைத் தாங்கும் ஆணிகளாகவும். குடும்பத்தை உயர்த்தும் ஏணிகளாகவும் கரை சேர்க்கும் தோணிகளாகவும் தங்களை அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதை ஒவ்வொருநாளும் உணர்ந்து செயல்பட....

அன்பின் இறைவா இத்தம்பதியர். வாழ்க்கையைத் தொடங்கி இருக்கும் இந்த வேளையிலே 'கோபம்' என்ற தீயை. தண்ணீர் என்ற பாசமுள்ள வார்த்தைகளாலும். நேசமுள்ள வார்த்தைகளாலும் அணைக்கக் கற்றுக்கொடுத்தருளும். இவர்களிடத்தில் பிரச்சனைகள் வரும்போது ஒருவரை ஒருவர் பொறுத்துக்கொள்ளும் மனநிறைவில் பூத்துக்குலுங்கும் பூந்தோட்டமாக மாறும் வரத்தை தந்தருள வேண்டும் என்று.....

மணக்கும் மனங்கள் இரண்டும் திருச்சபையிலும். சமூதாயத்திலும் குடும்பத்திலும் மல்லிகைப் பூவாக மணம் வீசவும். உண்மையான அன்புக்கும். பாசத்திற்கும். நேசத்துக்கும். உதயமாகும் அழியாத அஜந்தா

ஓவியங்களாக. குறை இருந்தாலும் நிறைவைக் காணும் பண்பு கொண்டு வாழ வரமருளவேண்டும் என்று....

பாடல்

நன்றி பாடி நன்றி பாடி நாதனை போற்றிடுவோம்
நாளும் அவரின் வல்ல செயலுக்கு நன்றிப் பண் பாடிடுவோம்...

கர்த்தர் கற்பித்த செபம்

இறுதி செபம்

எல்லோரையும் உம் அன்புப்பிள்ளைகளாக எண்ணி அரவணைத்து காக்கும் பொருளே இறைவா. திருமண வாழ்வில் இணைந்து உம் அன்புக்கு சாட்சிகளாகிட விரும்பும் இம் மணமகன், மணமகளை நிறைவாய் ஆசீர்வதியும். உலகினைப்படைத்த போது ஆணையும்,பெண்ணையும் படைத்து அவர்கள் குடும்ப வாழ்வில் இணைந்து பிள்ளைப் பேறு பெற்றிட ஆசீர்வதித்தது போல் இவர்களையும் ஆசீர்வதியும். திருநூலில் கூறியுள்ள அனைத்து நற்பண்புகளையும் கொண்டு சிறந்த தம்பதியராய் இவர்கள் இருந்திட எந்நாளும் இவர்களுடன் இருந்தருளும். இருவரும் ஒருவர் மீது மற்றவர் தீர்க்கமான அன்புக்கொண்டிடவும். பொருந்த விதமாய் புரிந்து கொள்ளவும், விட்டுக்கொடுத்து வாழ்ந்திடவும். ஒருவர் மற்றவர் மீது மாறாத நம்பிக்கை. பாசம் கொண்டிருக்க தேவையான அனைத்து வரங்களையும் தந்தருள வேண்டுமென்று எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.

ஆண்டவர் நம்மை ஆசிர்வதித்து. தீமை அனைத்தினின்றும் பாதுகாத்து. முடிவில்லா வாழ்வுக்கு அழைத்துச் செல்வாராக. - ஆமென். ஆண்டவரைப் போற்றுவோம். இறைவா உமக்கு நன்றி!

சகோ. அந்துவான் ரெக்லின். FSAG

௨௪. புதுமனை புகுவிழா

முன்னுரை

புதுமனை புகுவிழா என்பது ஒரு உறவின் சங்கமம். அன்பின் சங்கமம். உயிரின் சங்கமம், ஒற்றுமையின் சங்கமம் ஆகும். உறவுகள் என்பது ஒரு பரிணாம வளர்ச்சி. நம் ஒவ்வொருவருக்கும் புத்துயிரையும் புது மாற்றத்தையும் உற்சாகத்தையும்

தருவது புதுமனை புகுவிழா. நாம் ஒரே குடும்பமாக கூடி வாழும் போது நமக்கு ஒரு அளவில்லா இன்ப மகிழ்ச்சியை தருகிறது. புதுப் பொருள் என்று சொல்லும் போது நம் ஒவ்வொருவருக்கும் புதிய சந்தோஷம். புதிய மகிழ்ச்சி. சமூகத்தில் ஒரு மனிதனின் பொருளாதாரத்தை நிர்ணயிப்பது அவனின் வசதியான வாழ்வு ஆகும். ஆனால் இவற்றையெல்லாம் நாம் கடந்து பார்க்கும் போது புதுமனை புகுவிழா என்ற வார்த்தையில் புது புது நபரின் உறவுகள். பல உள்ளங்களின் மகிழ்ச்சி ஆசிர்வாதங்கள் கிடைக்கிறது. இவற்றையெல்லாம் நாம் ஆராய்ந்துப் பார்த்தால் இறைவனின் துணையும் அவரின் உடனிருப்பும் நம் கண்களில் தெரியும். இறைவனின் துணை மட்டும் இல்லையென்றால் நாம் இந்த இல்லத்தை இவ்வளவு சிறப்பாக கட்டி இருக்க முடியாது. எனவே தான் புதுமனை புகுவிழா என்ற சொல்லை உண்டாக்கிய இறைவனுக்கு நன்றி கூறுவோம். எல்லா சூழ்நிலையிலும் நம்முடன் இருந்து வழிநடத்தி வந்த இறைவனை புகழவும் இவற்றையெல்லாம் சிறப்பாக செய்து முடிக்க பக்க பலமாக இருந்த இறைவனை வாழ்த்தவும். இந்த ஒரு மணி நேர வழிபாட்டில் பக்தியுடன் பங்கேற்று இறை ஆசீர் பெற்று அவரைப்போல் வாழ உங்கள் அனைவரையும் அழைக்கின்றேன். இப்போது நம்முன் பிரசன்னமாக இருக்கும் இறைவனை சிரம் தாழ்த்தி வணங்கி இடம் அமர்வோம்.

மூவொரு இறைவனுக்கு வாழ்த்து

இல்லத்தின் நாயகனே இறைவா! உமது அளவற்ற பேரன்பிற்காகவும் உமது நம்பிகையின் ஒளியில் எம்மை வழிநடத்தி வந்தமைக்காகவும் உம்மை வாழ்த்துகின்றோம்.

அன்பு இயேசுவே! இது என் தந்தையின் இறை வேண்டலின் இல்லம் என்று மொழிந்தவரே நாங்களும் உம்மைப்போல் எங்கள் உள்ளத்தையும். இல்லத்தையும் இன்று இறைவனின் செப வீடாக மாற்றி அமைத்ததற்காக இறைவா உம்மை வாழ்த்துகின்றோம்.

தூய ஆவியாகிய இறைவா! உம் தூய ஆவியின் கனிகளையும். கொடைகளையும் அதிகமாக எம் இல்லத்தில் பொழிந்தமைக்காக உம்மை வாழ்த்துகின்றோம்.

புதுமனை புகுவிழாவில் இந்த இல்லம் முழுவதும் இறைவனின் புது இல்லமாக மாறுவது போல் நாமும் நமது வாழ்வை புதிய வாழ்வாக மாற்றிக்கொள்ள புதுப்பித்துக் கொள்ள இந்த பஜன் வழியாக மூவொரு இறைவனில் இணைந்து சங்கமமாவோம்.

பஜன்

“இனிய நல் இல்லமாய் வாழ்ந்திட மகிழ்ந்திட

அருள் புரிவாய் இறைவா"

(சில நிமிடம் அமைதி)

நம் வாழ்வில் ஏற்பட்ட பிரச்சனைகள், ஏமாற்றங்கள், இழப்புகள், கஷ்டங்கள், துன்பங்கள், விரக்திகள், தோல்வி, இயலாமை இவைகளை எண்ணி மனம்வருந்துவோம்.

மனத்துயர்

இது என் தந்தையின் இல்லம் என்று கூறினீர். ஆனால் அவற்றை நாங்கள் மறந்து உமது இல்லமாக மாற்றிக் கொள்ள மறந்தமைக்காக....

பதில் பாடல் : "மனம் வருந்தி மனம் திருந்தி உம்மை சரணடைந்தேன்
என்னை ஏற்று மன்னித்தருள உம்மை வேண்டுகிறேன்".

மகிழ்வின் ஊற்றே இறைவா! இல்லத்தில் நாங்கள் பெறக்கூடிய நல்ல உறவுகளையும், மகிழ்வுகளையும் எங்களின் மன விரக்தியினாலும் சுய நலத்தினாலும் ஏற்க மறந்தமைக்காக...

அன்பே உருவான இறைவா! உமது அளவற்ற அன்பை எங்கள் அனைவருக்கும் கொடுத்து மகிழ்ச்சியில் திளைக்க செய்தீர் ஆனால் நாங்கள் உம் அன்பை மறந்து உலக ஆசைகளில் எங்கள் மனதை செலுத்தியதற்காக....

புகழ்ச்சி

கருணையின் ஊற்றே எம் இறைவா! எம் இந்த புதிய இல்லத்தை கட்டிமுடிக்க உதவி புரிந்தமைக்காக உம்மை புகழ்கின்றோம்.

அன்பின் இறைவா! இந்த புதிய இல்லத்தில் உம் அருள் ஆசீரை இங்கு உள்ளவர்களின் வழியாக எமக்கும் எம் இல்லத்திற்கும் கொடுத்தமைக்காக உம்மை புகழ்கின்றோம்.

இந்த நவீன காலத்திலும் எத்தனையோ மக்கள் தங்க இடமில்லாமல் தெருக்களிலும் பிற இடங்களிலும் வாழ்கின்றார்கள். ஆனால் நீர் எமக்கு ஒரு புதிய இல்லத்தை கொடுத்தமைக்காக உம்மை புகழ்கின்றோம்.

வாழ்வின் நாயகனே எம் இறைவா! இந்த உம் இல்லத்தை எந்த ஒரு தடைகளுமின்றி கட்டி முடிக்க பலவழிகளில் உதவி செய்தவர்களுக்கு உடல் சுகத்தை தந்தமைக்காக உம்மை புகழ்கின்றோம்.

விவிலிய வாசகம்

மாற் 11 : 16-17

விவிலிய விளக்கம்

"என் இல்லம் இறைவேண்டலின் இல்லம்" என்ற இறை வார்த்தைக்கு ஏற்ப ஒவ்வொரு இல்லமும் இறை வேண்டலின் வீடாக இருக்க வேண்டுமென்பதே இறைமகன் இயேசுவின் விருப்பம். நம் இல்லம் என்பது இதயத்தை ஒன்றிணைப்பது. உறவை ஒன்றிணைப்பது. அன்பையும். பகிர்வையும் வெளிப்படுத்தும் இடம். "என் வார்த்தையைக் கேட்டு அதன்படி நடப்பவன் பாறை மீது கட்டிய வீட்டிற்கு ஒப்பாவான்" என்கிறார் இயேசு. நாம் கட்டும் வீடு பல ஆண்டுகள் உறுதியாக இருக்க வேண்டுமென்று நினைத்து அதற்கு போதுமான கல். மண். சிமெண்ட். ஜல்லி ஆகியவை சேர்த்து கட்டும் போது வீடு மிகவும் உறுதியாக இருக்கும். அதுபோல் நாமும் நம் உள்ளம் என்னும் இல்லத்தை செபம். இறை நம்பிக்கை. விசுவாசம். பகிர்வு. பேரின்பம். அமைதி பிறரை ஏற்றுக்கொள்ளும் மனம் ஆகியவற்றால் கட்டியெழுப்ப வேண்டும். அப்போது தான் இறைவன் வந்து தங்கும் இடமாக மாற்றமுடியும் என்பதை இந்த நற்செய்தி நமக்கு உணர்த்துகிறது.

மன்றாட்டு

இல்லத்தின் நாயகனே இறைவா! திருச்சபையின் தலைமை இல்லத்தில் இருந்து உம்மக்களாகிய எம்மை வழிநடத்தி செல்லும் திருத்தந்தை. ஆயர்கள். குருக்கள். துறவியர் அனைவரையும் ஆசிர்வதிக்க வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

அன்பு தந்தாய்! உம் இல்லத்தை கட்டிய நாங்கள் உமது அன்பு பணியிலும். பிறர் அன்பு பணியிலும் சிறந்து விளங்க வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

தாயும் தந்தையுமான இறைவா! உமது இல்லத்திற்கு பலர் வழியாக உதவி செய்தீர். அதுபோல் உம் இல்லம் எங்கெல்லாம் கட்டப்படுகிறதோ அங்கெல்லாம் அவர்களுக்கு தேவையான உதவியை செய்ய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

கருணையின் தெய்வமே இறைவா! உமது இரக்க பெருக்கத்தினால் இந்த இல்லத்தில் வாழ்பவர் ஒரு குட்டி திருச்சபையை உருவாக்கும் அன்பு உள்ளங்களாக வாழ்ந்து. பிறரையும் அன்பு செய்து அரவணைத்து உருவாக்க உதவி செய்ய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

பாடல்

இறை சமூகமாய் நாங்கள் வாழவே இறைவா இறைவா உன்தன் அருள்புரிவாயே

...யுதி செபம்

வாழ்வும் வழியுமான இறைவா! உமது இல்லத்தை உருவாக்கிய நாங்கள் ...மது நிறைவான அன்பு, அமைதி, மகிழ்ச்சி, இரக்கம், பகிர்வு, பரிவு, இவற்றை ...ழுமையாக பெற்றுக் கொள்ளவும், எங்களிடையே உள்ள வேற்றுமை மனப்பான்மை ...க்கி ஒற்றுமையில் வாழ்ந்திடவும், எங்களுடைய வாழ்வில் நம்பிக்கை, விசுவாசம், இறை அன்பு, பிறர்அன்பு இவற்றில் சிறந்து விளங்கிடவும், உமது இல்லத்தின் ...மையாக மேய்ப்பு பணியை சிறப்பாக செய்திடவும், எங்களுடைய வாழ்வு செயலாக்கம் ...றவும் உமது பணிக்காக தங்களையே அர்ப்பணித்து பணிசெய்வதற்கு தேவையான ...ருளையும் ஆசீரையும் ஆற்றலையும் எங்கள் ஒவ்வொருவருக்கும் தந்தருள ...வேண்டுமென்று எங்கள் ஆண்டவரும் உம்திருமகனுமாகிய இயேசுகிறிஸ்து வழியாக ...மை மன்றாடுகிறோம். ஆமென்.

ஆண்டவர் நம்மை ஆசிர்வதித்து, தீமை அனைத்தினின்றும் பாதுகாத்து, ...டிவில்லா வாழ்வுக்கு அழைத்துச் செல்வாராக. - ஆமென். ஆண்டவரைப் ...ற்றுவோம். இறைவா உமக்கு நன்றி!

சகோ. F. ஜோஸ்பின் மேரி ஸ்டெல்லா FSAG

25. நிதி மேலாண்மை

...ன்னுரை

நிதி மேலாண்மை நமது வாழ்வு மற்றும் பணியினின்று பிரிக்க இயலா ...கமாகும். நிதி மேலாண்மை திறம்படவும் சீராகவும் திட்டங்களை மேற்கொள்ளல் ...ணி சிறப்படைய சிறந்த வழியாகும். கடவுள் இலவசமாக வழங்கிய வளங்களை ...றைவசமாக மேலாண்மை செய்வது ஒரு ஆன்மீகமாகும். கடவுள் நமக்கு ...ழங்கியுள்ள திறமை மற்றும் ஆற்றல் ஆகியவற்றின் வழியாக நிதியை திறம்பட ...மேலாண்மை செய்வதும் ஓர் ஆன்மீகமே. எனவே பக்தியுடன் இவ்வழிபாட்டில் ...கு கொள்வோம்.

...பொரு இறைவனுக்கு புகழ்ச்சி

அருள் இல்லார்க்கு அவ்வுலகமில்லை

பொருள் இல்லார்க்கு இவ்வுலகமில்லை

என்ற நியதியில், நிதியையும் அதற்கான நீதி நெறிமுறைகளையும், இவ்வுலகத்தில் படைத்த தந்தையாகிய இறைவா! யாம் அனைவரும் ஒன்று சேர்ந்து, உம்மை ஆராதிக்கிறோம், உம்மை வணங்குகிறோம், உம்மை புகழ்கின்றோம், உமக்கு நன்றி கூறுகிறோம்

நிதிக்கும், நீதிக்கும் நெறிமுறைகளுக்கும் சான்று பகர, சத்தியமாய் நித்திய பிதாவின் புத்திரனாய், இத்தரணியில் அவதரித்து அவனி வாழ்மக்களை நிதிக்கும், அதன் நெறிமுறைகளுக்கும் எதிரான பாவங்களிலிருந்து மீட்டெடுத்த மகனாகிய இறைவா உம்மை போற்றி, வணங்கி, ஆராதித்து, உமக்கு நன்றி கூறுகிறோம்.

நிதியை நெறிமுறைப்படுத்தவும், நீதியின் வழியில், நிதியை கையாளவும், எம் தலைவர்களுக்கும் எம் ஒவ்வொருவருக்கும் தூண்டுதலையும், துவக்கத்தையும் கொடுத்து வழி நடத்தி வரும், தூய ஆவியாகிய இறைவா! பொருளாதாரத்தின் நெறியாளர்களாகிய நாங்கள் அனைவரும் உம்மை ஆராதித்து, வணங்கி, போற்றி நன்றி கூறுகிறோம்.

எல்லா யுகங்களிலும், எல்லா காலங்களிலும், முப்பொழுதும் மனித மனங்கள் தாம் பயன்படுத்தும், பராமரிக்கும் நிதி வளங்களை நேரிய மனத்தோடு, நிறைவான பணிக்காக, நிதம் நிதம் உருவாக்கவும், வளர்க்கவும், பெருக்கவும் படைப்பாக, பாதுகாப்பாக, வழிநடத்துபவராக இருந்து எம்மில் வாசம் செய்யும் தந்தை மகன் தூய ஆவியின் ஒன்றிப்பின் மூவொரு இறைவா! உம்மை நாங்கள் அனைவரும் வணங்கி, ஆராதித்து அஞ்சலி செய்து, தீபம், தூபம், மலர் என்ற முப்பொருட்களால் ஆரத்தி எடுத்து உமக்கு நன்றி கூறுகிறோம். (ஆரத்தி எடுத்தல்)

இந்த உலகம் என்ற கானான் தேசத்திலே வாழ்வு என்ற ஏதேன் தோட்டத்திலே பாலும், தேனும், மன்னாவும் பெற்றுக் கொண்ட உறுப்பினர்களாகிய நாம் இறைவனிடமிருந்து பெற்றுக்கொண்ட வளங்களான கால நேரங்கள், நமது திறமைகள், வலிமைகள், மூலதனங்கள், நிதி வளங்கள், நில வளங்கள் அனைத்திற்காகவும் இறைவனுக்கு மகிழ்ச்சி நிறை உள்ளத்தோடு நன்றி கூறுவோம்.

பஜன்

பாதமலர்களை தொழுகின்றோம் - நின்
பாதையை நாங்களும் தொடர்கின்றோம்

காலம்

இரவு பகலை, உருவாக்கி பலருக்கு இரவில் ஓய்வையும், சிலருக்கு பகலில் ஓய்வையும் தந்தருளிய இறைவா! எமக்கு நீர் தாராளமாய் வழங்கிய இந்த நேரத்தில், எம்மை அன்பு செய்து அதன் வழி எமது பணியை யாம் அன்பு செய்து, எமக்கும் மக்களுக்கும் பயன்தரும் மக்களாய் வாழ்ந்திட நீர் கொடுத்த கால நேரங்களுக்காக உமக்கு நன்றி கூறுகிறோம்.

பதில் : நன்றி இறைவா - 3 (பாடல்)

நிலம்

கடந்த ஆண்டுகளில் எமக்கு சொந்தமாக நாங்கள் நிலங்களை பெறுவதற்கு துணை புரிந்த இறைவா! எமது நன்றியினை உமக்கு மனமுவந்து சமர்ப்பிக்கின்றோம். நாங்கள் ஏற்கனவே பெற்றுள்ள நிலவளங்களுக்காகவும் உமக்கு நன்றி கூறுகிறோம். இவற்றை எமக்கு சொந்தமாக்கிக் கொள்ள முயற்சிகளை மேற்கொண்ட, உதவிகள் புரிந்த, ஒவ்வொருவரையும், நீர் ஆசிர்வதித்திட, அன்புடன் வேண்டுகிறோம். அவர்களுக்காக உமக்கு நன்றி கூறுகிறோம்.

நாங்கள் உண்ணவும், உறையவும் புகலிடமாக விளங்கும் நிலவளத்திற்காக நன்றி கூறுகின்றோம். அதில் வருந்தியுழைத்து மக்களை வாழவைக்கும் விவசாயிகள், அவர்களின் குடும்பங்களை ஆசிர்வதித்து உழைப்பிற்கேற்ற பலனை பெற உதவி செய்யும் உம்மேலான கருணைக்கு நன்றி கூறுகிறோம்.

திறமைகள்

நிதியை சரிவர கையாளுவதற்காக நீர் கொடுத்துள்ள திறமைகள் கடின உழைப்புகள், நல்ல பண்புகள், மனப்பான்மைகள், ஏழை எளியோர்மட்டில், நலிவிழந்தோர் மட்டில் கொண்டுள்ள அக்கறை இவை அனைத்திற்காகவும் யாம் அனைவரும் கரம் கூப்பி உமக்கு நன்றி கூறுகிறோம்.

மூலதனம் - நிதி

பிறந்த நாள் முதல் இன்று வரை யாம் அனைவரும் உண்ணவும், உடுக்கவும், நிதிவளம் அளித்ததோடு, சார்ந்துள்ள, எமது மக்களின் உயர்வுக்காய், யாம் உழைத்திட, பணிகளில் எமக்கு தேவையான நிதியையும், மூலதனத்தையும், இருப்பிடத்தையும், அளித்து எம்மை அன்பு செய்து வரும் இறைவா உமக்கு எம் இதய நன்றியை செலுத்துகின்றோம்.

பணியின் கோட்பாடுகள் / தலைவர்கள்

எங்களின் தஞ்சமே எம் இறைவா, யாம் மேற்கொண்ட, இந்த பணி வாழ்வில் யாம் நடக்க வேண்டிய பாதைகள், செய்ய வேண்டிய செயல்பாடுகள், அனைத்தையும் கோட்பாடுகளாக ஒழுங்குமுறைகளாக எமக்கு வகுத்தளித்து அவற்றின் ஒளியில் வழியில், எம் வாழ்வை அமைத்துக் கொள்ள, நீர் எமக்கருளிய, அருள் வரங்களுக்காக, மற்றும் எம் தலைவர்கள் அவர்தம் குழுவினர் அனைவருக்காகவும் உமக்கு நன்றி கூறுகிறோம்.

இத்துணை வளங்களையும் பெற்று வாழ்ந்து கொண்டிருக்கும் நாம்.... இறைவன் நமக்கு கொடுத்த வளங்களை அதனதன் வழியில் பெறுவதோடு அதற்குரிய வழியில் வளங்களை பெருக்கிய, தருணங்களை நினைத்துப் பார்த்து நம்மில் சிலர் இறைவனுக்கு நன்றி கூறி செபிப்போம்..... தடம் புறளாமல் நெறிமுறைகளில் நடந்து செல்ல இறைவனின் அருள் வேண்டி செபிப்போம்...

பாடல்

ஆண்டவரே என் உரிமைச் சொத்து நீர் தாமே

மனத்துயர்

நெறிமுறைகளில் தடம்புரண்ட தருணங்களுக்காக இறைவனிடம் மன்னிப்பு வேண்டுவோம்.

பதில் : ஆண்டவரே இரக்கமாயிரும்.

எமக்கு கொடுக்கப்பட்ட காலநேரங்களை முறையாகப் பயன்படுத்தாமல் விரயம் செய்தமைக்காக .....

ஒவ்வொரு மனிதரும் உன்னதமான செல்வம் என்பதை உணராமல் உதாசீனப்படுத்தியமைக்காக.....

வசதி வாய்ப்புகள் எனக்கு மட்டுமே என்ற தன்னலம் கொண்டு வறியோரை விலகி வாழ்ந்தமைக்காக.....

பணியின் கோட்பாடுகளின்படி மூலதனங்களை பயன்படுத்த தவறிய நேரங்களுக்காக.....

பிறரின் திறமைகளை கண்டும் காணாமல் அவர்களின் வளர்ச்சிக்கு உதவ மறுத்தமைக்காக....

விவிலியம் வாசகம்

லூக் 19: 11 – 26

ரிய விளக்கம்

இறைவன் நம் ஒவ்வொருவருக்கும் ஒரு பணியைக் கொடுத்திருக்கின்றார். ...தில் நிதியை கையாளுவதில் நெறிமுறை படுத்துவதில், ஒரு கடமையை நமக்கு ...ளித்திருக்கின்றார். நிதியின் உரிமையாளர்களாக அல்ல பராமரிப்பாளர்களாக நமது ...மை என்ன என்பதனை சிந்திப்போம்.

...றிய நேரங்களுக்காக மனம் வருந்தி மன்னிப்பு கேட்போம்.

...றாத நேரங்களுக்கு அமைதியில் நன்றி கூறுவோம்

(அமைதி 5 நிமிடம்)

...ட்டு

அடைக்கலப் பாறையான இயேசுவே!
அரணும் கோட்டையும் ஆன இயேசுவே!

...ன்றாட்டு

(பங்கு பெறுவோர் செபிப்பர்)

...த்தர் **கற்பித்த செபம்**

...றுதிச் செபம்

எங்களது உரிமை சொத்தாகிய அன்பின் இறைவா.... உமது அன்பின் ...வெளிப்பாடாக நீர் எமக்கு கொடுத்துள்ள அனைத்து வளங்களுக்காகவும் நன்றி ...றுகிறோம். யாம் ஏற்றுள்ள பணியில், கையாளும் பணத்தில், பற்று வைக்காது, ...தை சரிவர பராமரிக்க, உரியகணக்கு கொடுக்க, சரியான திட்டமிடுதலில் பற்றுக் ...ண்டு வாழ எமக்கு உமதருளைத் தாரும். யாம் அனைவரும்

...ல குழும உறவால் - கற்பாறையின் மீது கட்டிய வீடாக இருக்கவும்

...ல முன்மாதிரி வாழ்வால் - விளக்காக இருந்து, விளக்குத்தண்டின் மீது ஒளி வீசவும்

...கடின உழைப்பால் - நல்ல நிலத்தில் விழுந்த விதையாக 100 மடங்கு பலன் தரவும்.

...ரிய திட்டமிடலால் - தாலந்தாக இருந்து 10 தாலந்தை பெற்றுத்தந்த பணியாளனாய் திகழவும் வேண்டுமென்று

எங்கள் ஆண்டவராகிய யேசு கிறிஸ்துவழியாக உம்மை மன்றாடுகிறோம்.

ஆண்டவர் நம்மை ஆசிர்வதித்து, தீமை அனைத்தினின்றும் பாதுகாத்து முடிவில்லா வாழ்வுக்கு அழைத்துச் செல்வாராக. - ஆமென். ஆண்டவரைப் போற்றுவோம். இறைவா உமக்கு நன்றி!

சகோ. F. ஜோஸ்பின் மேரி ஸ்டெல்லா FSAG

உ6. தவக்காலம்

முன்னுரை

தவக்காலம் என்பது ஆண்டவரின் அருளின் காலம். தவக்காலத்தின் செய்தியாக இறைவன் நமக்கு தருவது மனம் திரும்பி நற்செய்தியை நம்புங்கள். மனிதனே நீ மண்ணாக இருக்கிறாய். மண்ணிற்கே திரும்புவாய். யோவேல் இறைவாக்கினர் வழியாக இறைவன் விடுக்கும் அறைகூவல் நம் பாவங்களுக்காய் நம் உடையை மாற்றி, சாம்பலைப்பூசி, கோணியை அணிந்துக்கொள்வோம். நோன்பிருந்து ஆண்டவர் முன் அழுவோம். ஏனெனில் நம் இறைவன் மிகுந்த இரக்கத்துடன் நம் பாவங்களை மன்னிக்கின்றார். (காண்: யோவேல் 2:13)

இறைச்சாயலாய் படைக்கப்பட்ட மனிதன், இறைவன் தன்னை படைத்ததன் நோக்கத்தை மறந்து, இறைவனை புறக்கணித்துவிட்டு, சுயத்தோடு இறைவனை விட "நான்" என்ற நிலைக்கு உள்ளாக்கப்படும் போது அவனுக்கு தீவிர சிகிச்சை தேவைப்படுகிறது. அந்த தீவிர சிகிச்சை பிரிவே தவக்காலம். இது குற்றங்களை கண்ணுற்று தண்டனை வழங்கவிருக்கும் காலம் அல்ல, மாறாக இன்னும் இறைவன் நம் மீது அன்பு வைத்திருக்கிறார் என்பதையும், அவர் ஊதாரித்தந்தையாக நாம் அவரிடம் திரும்புவோம் என்பதை எதிர்நோக்கி காத்துக்கொண்டிருக்கிறார் என்பதையும் வெளிப்படுத்துகிறது. அவர் நாம் திரும்பி வர விரும்புவதைப் போல் நாமும் அவரிடம் திரும்பி வர விருப்பம் கொள்ள வேண்டுமென்பதையே இந்த தவக்காலம் நமக்கு உணர்த்துகிறது. தவக்காலத்தில் நாம் முதலில் இறைவனை விட்டு எவ்வளவு தூரம் சென்று விட்டோம் என்று உணர்தல், அதை உணர்ந்து அதிலிருந்து மனமாற்றம் பெற வேண்டும் என்று தெளிதல், புது வாழ்வை, புது வசந்தத்தை அனுபவிக்க விருப்பம் கொள்ளுதல். விருப்பம் கொண்டவுடன் இறைவனுடன் நெருங்கி வருவதற்கான வாய்ப்புகளை உருவாக்கிக்கொள்ளுதல், தேடி செல்லுதல் இந்தத் தேடலில் வரும் செயல்களே தவம், செபம், நோன்பு, அதாவது தனித்திருத்தல் விழித்திருத்தல், செபித்திருத்தல். பல தவ முயற்சிகளை மேற்கொள்வது இறைவனிடம் அடிக்கடி சென்று அமர்ந்து அமைதியில் செபிப்பது, உண்ணா

தோன்பிருந்து அதைப்பயன்படுத்தி பிறருக்கு உதவுவது. தவறிய தருணங்களை நினைத்து ஒப்புரவு பெறுவது. இந்த காலத்தில் நாம் இயேசுவின் பாடுகளை, அவர் அனுபவித்த அவமானங்களை, அடிகளை, உதைகளை, காயங்களை, சிலுவைச்சாவை அனைத்தையும் நினைத்து செபிக்கையில் உண்மையாகவே நாம் வலுவடைவோம். ஏனென்றால் நாம் வாழ்வடையவே அவர் நொறுக்கப்பட்டார். வதைக்கப்பட்டார். சித்ரவதை செய்யப்பட்டார். நமக்காய் துன்பங்களை துணிவுடன் ஏற்ற நம் இயேசுதெய்வம் போல, இன்று ஒடுக்கப்படும் மக்கள் பிரச்சனைகளை நம் பிரச்சனையாக நாம் மாற்றிப்பார்ப்போம்.

மூவொரு இறைவனுக்கு வாழ்த்து

எல்லாம்வல்ல இறைவா! உம் சாயலாக படைக்கப்பட்ட மக்களாகிய நாங்கள் எல்லாவித அடிமைத்தனத்திலிருந்தும் விடுபட திருவுளம் கொண்டு உம் ஒரேப்பேறான மகனை உலகிற்கு அனுப்பினீர். இந்த உமது எல்லையற்ற தந்தைக்குரிய பாசத்தை நினைத்து, அனுபவித்து உம்மைப் போற்றுகின்றோம்.

கிறிஸ்துவே! மாசற்றவராயிருந்தும் மானிடரான எங்கள் பாவங்களுக்காக பாடுகள் பட்டீர். அநீதி முறையில் தண்டனை பெற்று கழுமரத்தில் கொல்லப்பட்டீர் இந்த உமது விலைமதிப்பில்லா திருஇரத்த உயிர் தியாகத்தை நினைத்து உம்மைப் போற்றுகின்றோம்.

ஆவியாம் இறைவா! தந்தையின் விருப்பத்தை நிறைவேற்ற தன்னை முழுதும் அர்ப்பணித்து இயேசுவுக்கு சோதனைகள் வரும் போதெல்லாம் தேற்றினீர். உடனிருந்து பலம் தந்தீர். வேதனைகளை, அவமானங்களை பொறுமையுடன் தாங்கிக்கொள்ள சக்தி தந்தீர் இத்தகைய உமது உடனிருப்பிற்காக உம்மைப் போற்றுகின்றோம்.

மூவொரு இறைவா நீர் உம் சாயலாய், படைத்த மனிதர் உம் எதிரிலேயே அழிந்து போவதை சகியாது அவனை மீட்க வேண்டுமென்ற பேராவல் கொண்டு மீட்புப்பணியை பலர் வழியாக மேற்கொண்ட உம் இரக்கத்திற்காகவும், கருணைக்காகவும், எங்கள் விசுவாச வாழ்வை நாங்கள் இழந்து விடாமல் இருக்க எங்களை உடனிருந்து காத்துவரும் செயலுக்காகவும் உம்மைப் போற்றுகின்றோம்.

ஆண்டவரின் அருள் தரும் காலத்தை பயன்படுத்தி. இழந்து போன நட விசுவாச வாழ்வை புதுப்பிக்கவிருக்கும் இம் மனமாற்றத்தின் நேரத்தில் இப் பஜனையின் வழி நம்மை இறைவன் முன் சரணாக்குவோம்.

பஜன்

உம் காலடியில் கிடக்கின்றேன் இயேசுவே
உம் ஆசீர் அருள வேண்டுகின்றேன் இயேசுவே

(சில மணித்துளிகள் அமைதி காப்போம்)

அருளின் காலத்தில் நுழையும்முன் தகுதியற்ற நம் நிலையை உணர்ந்து நம் பாவத்தை அறிக்கையிட்டு மனம் வருந்தி மன்னிப்பு கோருவோம்.

மனத்துயர்

பதில்: கருணை இறைவா சரணம் கடைக்கண் பாராய் சரணம்.

அன்பிறைவா என் வாழ்க்கைதரத்தை பெருக்கிக்கொள்ள நான் தேர்ந்தெடுத்த தவறானப்பாதைக்காக..

என்னோடு வாழும் மக்கள் உயர்வதைப்பார்த்து பொறாமை என்ற தீயால் பீடிக்கப்பட்ட நேரங்களுக்காக..

குடும்ப பொறுப்பை உணராது என் மனைவி. பிள்ளைகளை குடித்துவிட்டு துன்புறுத்திய இழிவான செயல்களுக்காக..

பிறரைப்பற்றி அவதூறுகளை பேசி அவர்கள் வாழ்வை கேள்விக்குறியாக்கிய தருணங்களுக்காக....

என் கணவருக்கு பிரமாணிக்கமின்றி நடந்துக்கொண்ட ஒவ்வொரு சூழ்நிலைகளுக்காக...

என் பெற்றோர் வயோதிகத்தை அடைந்துள்ளார்கள் என்பதை உணர்ந்தும் அவர்களை தனிமைப்படுத்திய காலங்களுக்காவும். கவனிக்காத நிலைக்காக...

பிறர் மன்னிப்பு கேட்க வந்த போது அதை ஏற்காமல் அவர்களை புறக்கணித்து சென்றதற்காக..

ஏழைகள். ஒதுக்கப்பட்வர்களின் தேவைகளை நான் நன்கு உணர்ந்திருந்தும் அதை கண்டு கொள்ளாத தருணங்களுக்காக...

என் கடமைகளை செய்யாமல் அதற்கு சாக்குபோக்குகள் சொன்ன நேரங்களுக்காக...

...யற்சி
ஆண்டவரின் பாதத்தில் அமர்ந்து நம் உள்ளத்தை சோதித்து மனக்குறைகளை
...றிக்கையிட்டு அவரோடு ஒப்புரவு செய்துகொண்ட நாம் அவரை போற்றிப்
...ழுவோம்.

பதில் : உம்மை போற்றுகிறோம்.

என் நிலை நான் உணர எனக்கு இந்த அருளின் காலத்தை கொடுத்த உம் கருணைக்காக....

நான் இருப்பது போலவே என்னை ஏற்று, மாறாது அன்பு செய்யும் உம் மேலான தாயன்புக்காக...

நான் இழந்த இறை உறவை புதுப்பித்து, கிறிஸ்தவ விசுவாசத்தில் என்னை பிணைத்துக்கொள்ள தந்த உம் அருளுக்காக...

நீதிமானுக்குரிய வாழ்வு வாழ விவிலிய வார்த்தைகளால் என்னை தூய்மைப்படுத்தும் உம் பரிவுமிக்க செயலுக்காக....

நான் செய்ய மறுக்கும் ஒவ்வொரு நற்செயலும் பாவமாய் உருவெடுத்து உம் அன்பிலிருந்து என்னை பிரிக்கிறது என்பதை எனக்கு உணர்த்திய மாபெரும் ஞானத்திற்காக....

ஆண்டவரின் உண்மை அன்பை உணர்ந்து, புரிந்து, ஏற்று அவரை ...த்தைகளால் புகழ்ந்த நாம் பாடலால் புகழ்வோம்.

...ன் வாழ்வின் முதலே இயேசுவே
...ன் வாழும் காலமெல்லாம்
...மை புகழ்ந்துப்பாடிடுவேன் ஆ.. ஆ..

...விலிய வாசகம்

உரோமையர் 6:11-14

...விலிய விளக்கம்

இத்தவக்காலத்தில் நாம் எவற்றை செய்ய வேண்டும்?, எப்படி செய்ய வேண்டும்?, ...ன் செய்ய வேண்டும்? என்பதை பவுலடியார் வழியாக நமக்கு உணர்த்துகின்றார்.

பாவ வாழ்வை பொறுத்தமட்டில் நாம் இறந்தவர்களாய் இருக்க வேண்டும். ...ன் என்றால் நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் இணைந்து கடவுளுக்காக வாழ்கிறோம். ...தை ஒரு போதும் நாம் மறக்கக்கூடாது. நினைவில் கொள்ள வேண்டும் என்று ...றிவுறுத்துகின்றார். இந்த உலகம் நம்மை தன் மாய வலைக்குள் விழவைக்கும்

கயிறை நம்மை நோக்கி பல்வேறு கவர்ச்சிகளால் வீசுகிறது. அவைகளை நாம் கவனமாய் ஆவியின் உடனிருப்பில் உய்த்துணர கண்டுகொள்ள வேண்டும். மாய உலகில் சிக்கி மோசம் போகாமல் நம்மை நடுநிலையோடு இறை உறவில் வைத்துக்கொள்ள நமக்கு ஆவியின் உடனிருப்பு மிக, மிகத்தேவை. இதற்கு நமக்கு பேருதவியாய் இருப்பது இறை சந்நிதி. அதன் முன் அமர்ந்து நம் மனசாட்சியின் குரலை தினந்தோறும் உற்று நோக்க வேண்டும். உடலின் இச்சைகளுக்கு நம்மை உட்படுத்திக்கொள்ளாமல், பாவம் நம்மை ஆட்சி புரிய விடாமல் நம்மை ஆண்டவரின் அருட்பராமரிப்பில் வைக்க வேண்டும். இதற்கு தந்தையின் பாசக்கயிற்றில் கட்டுண்டு இருக்க வேண்டும். நாம் தந்தை, மகனை பிரியாமலிருக்க ஆவியானவர் நமக்கு உதவிகள் செய்ய எப்போதும் விழிப்பாயிருந்து செபிக்க வேண்டும்.

மனது எப்போதும் நம் சுய ஆசை, இச்சைக்குட்பட்டு செயல்படவே நாட்டம் கொள்ளும். ஏனென்றால் இது ஊனுடல். இதிலிருந்து நம்மை தப்புவித்துக்கொள்ள ஆண்டவர் அருளில் தினமும் நனைந்திருக்க வேண்டும், கரைந்திருக்க வேண்டும். பாவ நாட்டம் வரும் சூழல்களை, அந்த சூழலுக்கு அழைத்துச்செல்லும் நபர்களை, ஊடகத் தாக்கங்களை விலகியிருக்க ஆண்டவரோடு இருக்கும் வாய்ப்புகளை அதிகப்படுத்திக்கொள்ள வேண்டும். தீமை, நன்மை எவை என பகுத்தறிய தூய ஆவி நம்மைத்தூண்ட வேண்டும். நம் உள்ளம் தூய்மையை விரும்ப வேண்டும். நம்மை கடவுளின் காவலில் முழுவதும் ஒப்படைக்க வேண்டும். பாவத்திற்கு மரித்து போக கற்றுக்கொள்ள வேண்டும், அப்போது தான் இயேசுவின் உயிர்ப்பின் மகிமையில் நம்மால் பங்குக்கொள்ள முடியும்.

(சில மணித்துளிகள் அமைதி காப்போம்)

அமர்ந்த நிலையில் நம் மனதின் குறை களைந்து, இறை நோக்கி நம்மை இணைக்க திருப்பாடல் பாடுவோம். அருள் பெறுவோம்.

பாடல்

தயை செய்வாய் நாதா என் பாவங்களை நீக்கி

மன்றாட்டு

அருளின் காலத்தை வழங்கியுள்ள இறைவா, எங்கள் பாவங்களிலிருந்து மனமாற்றம் அடைந்தவர்களாய் உம்மை பற்றிக்கொண்டு வாழ வரம் வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

பதில்: ஆண்டவரே எங்கள் மன்றாட்டை தயவாய் கேட்டருளும்

அன்பின் இறைவா, எங்களுக்கு நீர் வழங்கியுள்ள ஒப்புரவு அருட்சாதனக்கொண்டாட்டத்தில் நாங்கள் விசுவாசத்துடன் பங்கு பெற்று எம்மில் உயிர்த்திட வரம் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

இரக்கமே உருவான இறைவா! எங்களின் பழைய பாவ இயல்பை களைந்து விட்டு, உமக்குள் புது வாழ்வு பெறவும், எங்கள் கோபம், பொறாமை, கட்சி மனப்பான்மை, பிடிவாதம், மன்னிக்காத தன்மை, ஆகிய தீயக்குணங்களிலிருந்து முற்றிலும் விடுபட்டு, புதிய இயல்பை பெற்றவர்களாய் பொறுமை, அன்பு, ஒத்துப்போதல், விட்டுக்கொடுத்தல், பரிவு, பாசம் போன்றவைகளை அணிகலன்களாக்கிகொண்டு வாழ வரம் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

பாவங்களுக்கு இறந்து விடுங்கள் என்று அருளிய இறைவா, ஊனியல்பின் நாட்டத்திற்கேற்ப வாழாது, கிறிஸ்துவாகிய உம்மில் இணைந்து எங்களோடு இருப்பவர்களுக்கும், எங்களை நாடி வருபவர்களுக்கும் கனி கொடுப்பவர்களாய் நாங்கள் இருந்திட வரம் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

தவக்காலத்தில் நாங்கள் ஆன்மீக வாழ்வில் நாட்டம் கொள்பவர்களாய் தபசு செய்யவும், விழித்திருந்து செபிக்கவும், உண்ணா நோன்பிருந்து பிறருக்கு உதவவும், தியாகமிக்க வாழ்வு வாழவும், ஆடம்பரங்களை குறைத்து உம்மைப்போன்று எளிமை வாழ்வு வாழவும் வரம் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

(சில மணித்துளிகள் அமைதி காப்போம்)

பாடல்

இன்று என் வாழ்வில் பொன்னாள்
கண்டேன் நான் கண்டிலா பேறு
நன்றி என் தேவனே கோடி
நவின்றேன் நான் தாள் மலர் தூடி .. ஆ..ஆ..

ஆண்டவர் கற்பித்த செபம்

இறுதி செபம்

அன்பு தந்தையே இறைவா. எங்களை சுய ஆய்வுக்கு உட்படுத்தி எங்க குறைகளை கண்டுகொள்ளவும். அதிலிருந்து திருந்தி, மனமாற்றம் அடைந்தவர்கள நாங்கள் வாழவும் அருள் செய்ததற்காக உமக்கு நன்றி நவில்கின்றோம். மனி பலவீனத்தினால் எங்களில் சில நேரங்களில் பரிசேயர்களின் நிலையும், காயினி நிலையும், தாவீது அரசனின் நிலையும், காட்டிக்கொடுத்த யூதாசின் நிலையு மறுதலித்த பேதுருவின் நிலையும், அநீதியாய் பொருள் சேர்க்கும் வட்டிக்கார நிலையும் மாறி, மாறி வருகின்றன என்பதை நாங்கள் உணர்கின்றோம். ஆனா எவ்வளவு தான் பாவிகளாய் இருந்தாலும் உமது அளவுக்கடந்த இரக்கம், பரிவு மன்னிப்பு எங்களுக்கு தாராளமாய் வழங்கப்படுகின்றது என்பதை அறிகின்றோம் நாங்கள் பெற்றுக்கொள்ளும் இதே கனிவு, பரிவு, மன்னிப்பு, இரக்கம் ஆகியவற்றை எம் சகோதர, சகோதரிகளுக்கு தந்து உம்மில் உயர்ந்திட வரம் தர வேண்டுமென்று எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.

ஆண்டவர் நம்மை ஆசிர்வதித்து, தீமை அனைத்தினின்றும் பாதுகாத்து முடிவில்லா வாழ்வுக்கு அழைத்துச் செல்வாராக. - ஆமென். ஆண்டவரைப் போற்றுவோம். இறைவா உமக்கு நன்றி!

சகோ. மோ. திரேசா ஞானமணி FSAG

27. உயிர்ப்பு பெருவிழா

முன்னுரை

உயிரோடு இருப்பவரைக் கல்லறையில் தேடுவதேன்? .... அவர் உயிருடன் எழுப்பப்பட்டார் (லூக் 24:5-6) கிறிஸ்து உயிர்த்தெழுந்தார். இன்றும் உயிர்க்கிறார் உண்மைதான். தேவையற்றது மடிய வேண்டும். வாழ்வுக்கு தேவையானது பிறக்க வேண்டும். இதுவே உயிர்ப்பு. கிறிஸ்துவின் பாடுகளும் உயிர்ப்பும் ' பாஸ்கா மறைநிகழ்வு என்கிறோம். இந்த மறைநிகழ்வு ஏதோ 2000 ஆண்டுகளுக்கு முன் நடந்து முடிந்த நிகழ்வு அல்ல, மாறாக அன்றாடம் அல்லல்படும் ஒவ்வொரு மனிதரின் வாழ்க்கைப் போராட்டத்திலும் கிறிஸ்துவின் பாடுகளும், உயிர்ப்பும் கலந்துள்ளது. இந்த உண்மையை உணர்ந்தாலே கிறிஸ்துவினுடைய உயிர்ப்பின் பொருள் நமக்கு விளங்கும். போராட்டம் நிறைந்த, துன்பம் சூழ்ந்த இவ்வுலகம் தரும் தீமைகளை, சவால்களை எதிர்கொள்ள கிறிஸ்து நம் உடனிருந்து உயிர்ப்பூட்டுகிறார். எனவே பக்தியுடன் இவ்வழிபாட்டில் கலந்து கொள்வோம்.

மூவொரு இறைவனுக்கு வாழ்த்து

இயேசு கிறிஸ்துவை உயிர்த்தெழச் செய்ததன் வழியாக மூதாதையருக்கு அளித்த வாக்குறுதியை அவர்தம் பிள்ளைகளாகிய எமக்கென நிறைவேற்றிய (தி.பா 13:32) தந்தையாகிய இறைவா உம்மை போற்றுகிறோம்.

வெற்றியின் வாழ்வில் உயிர் இழந்த தோல்வியின் அடையாளம் மறக்கப்படாமல் துன்பத்தின் வழியே இன்பம், தோல்வியின் வழியே வெற்றி, சாவின் வழியே வாழ்வு என்ற அரிய உண்மையை அகிலத்தில் மலரச்செய்த இயேசு இறைவா உம்மை போற்றுகின்றோம்.

இயேசுவின் மரணத்தைக் கண்டு மனம் கலங்கியவர்கள் (தி. ப 2:24, 4:10) அவர் உயிர்த்தார் என்பதை கூரைமீது நின்று அறிவிக்கவும், கோழைகளாக ஓடி ஒளிந்தவர்கள் சாட்சிகளாகவும் திடம்தந்து வழிநடத்திய ஆவியின் இறைவா உம்மை போற்றுகிறோம்.

உயிர்த்தெழச் செய்தவரும், உயிர்தெழுந்தவரும் உயிர்ப்பை அறிவிக்க திடம் தந்தவருமான தந்தைமகன் தூய ஆவியின் ஒன்றிப்பின் மூவொரு இறைவா உம்மை போற்றுகிறோம்

(மூவொரு இறைவனை வணங்கி இடம் அமர்வோம்)

பஜன்

அலைந்திடும் உள்ளம் அமைதியில் காண்பது
இறைவனின் திருவடி சரணாலயம்

மனத்துயர்

பதில் : மனம் வருந்துகிறேன் என்னை மன்னியும் இயேசுவே.

புதுவாழ்வு பெற்றவர்களாய் வாழும்படி திருமுழுக்கின் வழியாய் அவரோடு அடக்கம் செய்யப்பட்டாலும் பழைய வாழ்வை வாழ்ந்து உயிர்ப்பு பெறாத நிலைக்காக....

பாவ வாழ்க்கையை பொறுத்தமட்டில் இறந்தவர்களாய்: கிறிஸ்து இயேசுவோடு இணைந்து கடவுளுக்காக வாழாத தருணங்களுக்காக...

சிலுவைகள் தரும் உயிர்ப்புகளில் நம்பிக்கை வைக்காமல் இயேசுவின் வாழ்வு எங்களில் வெளிப்படுமாறு துன்பங்களை உடலில் சுமந்து செல்லாமல் அழிவின் மீது நம்பிக்கை வைத்தமைக்காக...

உயிரோடு இருப்பவர்களின் மேல் அக்கறைகாட்டாமல் கல்லறைகளுக்கு மரியாதை செய்யும் பொருளற்ற செயல்பாடுகளுக்காய்...

துன்ப அலைகளில் எதிர்நீச்சல் போட முடியாமல் விதி என்ற மாயைவசம் தம்மை ஒப்புவித்து செத்துக் கொண்டிருக்கும் மனிதர்களுக்கு உயிரூட்ட தயங்கிய நேரங்களுக்காய்...

பாடல்

என்னை மன்னியும் - 2 இயேசுவே என்னை மன்னியும்

புகழ்ச்சி

உடல் உயிர்ப்பை எம்மிலோ, பிறரிலோ நிகழ்த்த முடியாது: ஆனால் "உள்ள உயிர்ப்பை" இப்பூமியில் யாம் வாழும் சமூகத்தில் நிகழ்த்த வலிமை தந்ததற்காக....

பதில் : உம்மை போற்றுகிறோம். உம்மை புகழ்கிறோம்.

தேவையிலிருப்போருக்கு எமது கரம், வளருபவனுக்கு யாம் காட்டும் உற்சாகம். இவற்றின் மூலம் இன்னும் உயிர்ப்பை நாங்கள் பிறருக்கு வழங்க முடியும் என்ற நம்பிக்கையை அளித்ததற்காக...

கிறிஸ்துவின் உயிர்ப்பு மனிதருக்கு மட்டுமல்ல: அனைத்து உயிர்கட்கும் சராசரத்துக்கும் பொருந்தும் என்பதால் உருவிழந்து வரும் இயற்கைக்கு உயிர் கொடுக்கும் துணிவினை தந்தமைக்காக...

படைப்பு, உயிர்ப்பு, மீட்பு மூன்றும் ஒன்றோடொன்று தொடர்புடையது இந்த முப்பெரும் பணிகளில் மூவொரு கடவுளுடன் சேர்ந்து நாங்களும் புதிய உடன்படிக்கையின் (2 கொரி 3:6) பணியாளராய் மாற உரம் தந்ததற்காக....

விவிலிய வாசகம்

லூக் 24:1-12

விவிலிய விளக்கம்

தூய ஆவியாரின் வல்லமையால் நிரப்பப்பட்ட (தி.ப 10:38) ஒருவர் நம் நடுவே உயிர்த்துள்ளார். அலகையிடமிருந்து நமக்கு விடுதலை அளிக்கும் (தி.ப 10:38) ஒருவர் நம் நடுவே உயிர்த்துள்ளார். வாழ்வோருக்கும், இறந்தோருக்கும் நடுவராக இருக்கும் (தி.ப 10:42) ஒருவர் நம் நடுவே உயிர்த்துள்ளார். நம்பிக்கை உள்ள அனைவருக்கும் பாவமன்னிப்பு அளிக்கும் (தி.ப 10:43) ஒருவர் நம் நடுவே உயிர்த்துள்ளார். மேலுலகில் வாழும் (கொலோ 3:1) ஒருவர் நம் நடுவே உயிர்த்துள்ளார். நமக்கு மாட்சி பொருந்திய வாழ்வளிக்கும் (கொலோ 3:4) ஒருவர்

நடுவே உயிர்த்துள்ளார். இப்படிப்பட்ட ஒருவரை இயேசு கிறிஸ்துவை நாம் சந்தித்து அவர்தரும் வரங்களை பெற்று வளமுடன் வாழ நாம் என்ன செய்யவேண்டும் என்பதை சிந்திப்போம். இறந்து உயிருடன் எழுப்பப்பட்ட இறைவன் இனிமேல் இறக்கமாட்டார். எனவே நாமும் இனிமேல் பாவத்தின் பொருட்டு இறக்கமாட்டோம். உயிர்த்த இயேசுவின் வழியில் வாழ்வோம் என உறுதியேற்போம்.

பாடல்

உயிர்த்தார் கிறிஸ்து உயிர்த்தார்
இந்த உலகினில் உயிர்த்துவிட்டார்.

மன்றாட்டு

பதில் : இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

நம்பிக்கையின் புகலிடமே இறைவா! உயிர்ப்பு காட்டும் விழுமியம் "கிறிஸ்து நம்மோடு இருக்கிறார்" என்பது தான். கிறிஸ்துவின் மீது கொண்டுள்ள நம்பிக்கையை வாழ்வாக்கி அனுதின துன்பங்களினின்று நாங்களும் உயிர்த்து. எம்மில் வாழ்வது இனி உயிருள்ள கிறிஸ்துவே என்று உணர்ந்தவராய் என்னால் முடியும் என்ற தன்னம்பிக்கையும். இறைவன் துணைநிற்பார் என்ற கடவுள் நம்பிக்கையும் செயல்பாடுகளும் நல்லன நடக்கும் என்ற பொது நம்பிக்கையும் கொண்டு வாழ வரம் தர வேண்டுமென்று....

மாற்றத்தின் மாதிரியே இறைவா! வெளிப்புற மாற்றத்தை அல்ல. உள்மன மாற்றத்தை குறிக்கும் உயிர்ப்பு விழாவினில். பாவத்தில் சிக்குண்டு இருள்வாழ்வில் வாழும் நிலையை அகற்றி ஒளியாம் கிறிஸ்துவில் புண்ணிய வாழ்வு வழ அருள்தர வேண்டுமென்று...

புதுவாழ்வின் புதுப்புனலே இறைவா! முழுமையான வாழ்வுக்கு கிறிஸ்துவின் உயிர்ப்பு நமக்கு அழைப்பு விடுக்கின்றது என்பதை உணர்ந்தவர்களாய் இந்த புதுவாழ்வைப் பெற எமது பழைய வாழ்வையும் இயல்பையும் களைந்திட அருள்தர வேண்டுமென்று...

தியாகத்தின் மொத்த உருவமாகிய இறைவா! கிறிஸ்துவ வாழ்வு தியாக வாழ்வு. துன்பங்களில் இறையருளை தேடும் வாழ்வு. என்பதை உணர்ந்தவர்களாய். கிறிஸ்துவின் தியாகத்தால் உயிர்ப்பை பெற்ற நாங்கள் எமது தியாகத்தால் பிறருக்கு உயிர்ப்பை தரும் சக்திகளாக வேண்டுமென்று....

ஆண்டவர் கற்பித்த செபம்

இறுதி செபம்

சிலுவையின்றி மீட்பு இல்லை என்றெல்லாம் யாம் சொல்லிக் கொண்டு இருந்தாலு துன்பப்படத் தயங்குகிறோம். துன்பம் என்றவுடன் அதை எதிர்கொள்ளாமல் ஓ மறைகிறோம். கிறிஸ்துவால் மீட்கப்பட்டோம் என்று மார்தட்டிக்கொள்ளும் யாம் அந் மீட்பின் இரகசியத்தை அறிந்து, கிறிஸ்துவின் மறைபொருளே துன்பம் என ஏற் அதன் விடையாக நீர் கொடுத்த மீட்பை சுதந்திரமாக்கிக் கொள்ள தொடர்ந்து துணைபுரி வேண்டுமென்று மன்றாடுகிறோம். ஆண்டவர் நம்மை ஆசிர்வதித்து தீமை அனைத்தினின்றும் பாதுகாத்து, முடிவில்லா வாழ்வுக்கு அழைத்துச் செல்வாராக. ஆமென் ஆண்டவரைப் போற்றுவோம். இறைவா உமக்கு நன்றி!.

சகோ. F. ஜோஸ்பின் மேரி ஸ்டெல்லா FSAG

புனித பிரான்சிஸ்குவின் அலோசியஸ் கொன்சாகா சகோதரிகள்
அலோசியஸ் மாநிலம்
T.வாடிப்பட்டி, மதுரை - 625 215.

admedia
96777 33803